ஸ்ரீ:

வேதாந்த தீபிகை.

ஸம்புடம் - 14.

1923-1924

(ருதிரோத்காரி௵ - ரக்தாக்ஷி௵.)

MADURA TAMIL SANGAM.
MADURA

பத்ராதிபர்:— நாடாதூர் ஸ்ரீநிவாஸாசாரியர் B. A. B. L.

கார்யதர்சி:—R. ஸ்ரீநிவாஸராகவ அய்யங்கார் M. A.

சென்னை:

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தஸபையின்

கார்யதர்சியால் ப்ரசுரம் செய்யப்பட்டது.

சென்னை:

கலாரத்நாகரம் அச்சாபீஸ்.

1924.

Copyright Reserved.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

அட்டவணை.

அடிமைத்திரம்:— திருமகள் நிலயம் ஸ்ரீ. உ. வே. ஆ. வ. பத்மநாபாசார்யர் 281

அபியுக்தர்களுக்கோர் விஜ்ஞாபனம்:—சொரையூர் ஸ்ரீ. உ. வே. பெ. வ. ஸ்ரீநிவாஸாசார்யர் 309

அர்த்தபஞ்சகவிமர்சநம்:— ஸ்ரீ. உ. வே. ரகுநாதாசார்யர் 320

ஆபோசன நிர்ணயம்:— நடாதூர் ஸ்ரீ. உ. வே. தி. நரஸிம்மாசார்யர் 218

ஆபோசனமும், ப்ராணாஹுதியும்:—ஸ்ரீ. உ. வே. ர. ஸ்ரீநிவாஸராகவய்யங்கார் 7,50

இம்மையும் மருமையும்:— ஸ்ரீ. உ. வே. ஸ்ரீசைலதாதாசார்யர் 102,124

இயற்பா:— ஸ்ரீ. உ. வே. வை. மு. கோபால க்ருஷ்ணமாசார்யர் 311

உபயவேதாந்தம்:— ஸ்ரீ. உ. வே. காரப்பங்காடு, சிங்கப்பெருமாள் ஸ்வாமி 135,151

ஒரு ஸ்ரீவைஷ்ணவ ப்ரமுகரின் நிர்யாணம்:— பத்ராதிபர் 152

ஓர் மஹோபகாரம்:— கார்யதர்சி

ஓர் விஜ்ஞாபனம்:— கார்யதர்சி 125

கடிதங்கள்:— 230,250,296,324

கடிதஸங்க்ரஹம்:— ஸ்ரீ. உ. வே. திருமாலி, ஸ்ரீநிவாஸாசார்யர் 147

குருகுலவாஸம்:— புத்தங்கோட்டகம், ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸாசார்யர் 17

குருபரம்பரைகளின் பராமர்சம்:— ஸ்ரீ. உ. வே. அ. ரங்கஸாமி ஸரஸ்வதி 13

குருபரம்பரைகளின் விமர்சம்:— பண்டிதபூஷணம், ஸ்ரீ. உ. வே. சே. நரஸிம்மாசார்யர் 63

குருபரம்பரைகளின் விமர்ச சோதனம்:— வளாகம், ஸ்ரீ. உ. வே. சே. ர. நரஸிம்மாசார்யர் 181

கோபத்தைப் போக்கும்வழி:— ஸ்ரீ. உ. வே. ரகுநாதாசார்யர் 198

ச்ராத்தம்:— காடாந்தேத்தி, ஸ்ரீ. உ. வே. கோபாலாசார்யர் 238,255,301,33

ச்ருதிப்ராமாண்யம்:— ஸ்ரீ. உ. வே. ஸ்ரீசைல சக்ரவர்த்தி 214,274,305,32

ஜீவன்களும் மோக்ஷமும்:— ஸ்ரீ. உ. வே. வே. க்ருஷ்ணமாசார்யர் 37,2

தாதாசார்யர்:— ஸ்ரீ. உ. வே. ர. ஸ்ரீநிவாஸராகவய்யங்கார்

திவான்பஹதூர் தி. த. ரங்காசார்யரின் நிர்யாணம்:— பத்ராதிபர்

துளஸீ:— நெடுந்தெருவு ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸாசார்யர் 85,1

நம்மாழ்வார் வைபவமும் திருவாய்மொழியின் பெருமையும்:— பண்டிதபூஷணம், ஸ்ரீ. உ. வே. சே. நரஸிம்மாசார்யர்
நீதிச்லோகங்கள்:— 25,61,100,132,221,345
நீறு:— சருக்கை, ஸ்ரீ. உ. வே. S. K. பார்த்தஸாரதி அய்யங்கார் 45
பஞ்சமகாயஜ்ஞங்கள்:— ஸ்ரீ. உ. வே. வி. க்ருஷ்ணமாசார்யர் 80
பண்டராபுரம்:— ஸ்ரீ. உ. வே. ர. ஸ்ரீநிவாஸராகவய்யங்கார் 294
பத்ராதிபரின் குறிப்புகள்:—
இறைவன் அருளும், ஜீவனின் முயற்சியும் 273
சாற்றுப்பாக்கள் 45
ஜாதியும் ஒழுக்கமும் 250
ஜீவதசைக்குப் பிறகு நமது ஸ்திதி 241
தக்ஷஸ்ம்ருதியின் சிலதர்மங்கள் 285
தீபிகையின் பதினுன்காவது ஆண்டு 2
தீபிகையின் வசன நடை 226
நமது அத்யக்ஷருக்கு ஸபையின் ஸத்காரம்:— 317
நமது புது அத்யக்ஷர் 265
நமது ஸபாத்யக்ஷரின் பரமபதகதி 225
நமது ஸபையின் பதின்மூன்ருவது வார்ஷிகமஹாஸங்கத்தின் வ்ருத்தாந்தங்கள் 105
நல்லொழுக்கம் 285
ப்ரணயகலஹோத்ஸவம் 41
மதப்ரஷ்ட ப்ராயச்சித்தம்:— 141
மோக்ஷ உத்ஸவம் 73
ஸ்ரீவைஷ்ணவமதத்தின் சில ஆகாரங்கள் 137
ஸம்மதியோக்ய வயதை நிர்ணயிக்கும் மசோதா 267
ஹிந்துதேசத்தின் நவீன மதங்கள் 169
ஹிந்துமதஸ்தாபன மசோதா 201
வேதாந்த மதமும் இதர ஸேச்வரநிரீச்வர மதங்கள் 271
பத்ரிகாவிமர்சம்:— பத்ராதிபர் 200
பதின்மூன்ருவது வார்ஷிகமஹாஸங்கத்தின் தினசரி க்ரமங்கள் 97
புஸ்தகவிமர்சம்:— பத்ராதிபர் 149
பூததயை:— புத்தங்கோட்டகம், ஸ்ரீ. உ. வே, ஸ்ரீநிவாஸாசார்யர் 21,53
ப்ராணுக்நிஹோத்ர நிர்ணயம்:— நடாதூர், ஸ்ரீ. உ. வே. தி. நரஸிம்மாசார்யர் 142
புரஞ்ஜநோபாக்யானம்:— பண்டிதபூஷணம், ஸ்ரீ. உ. வே. சே. நரஸிம்மாசார்யர் 1-10
மதப்ரஷ்ட ப்ராயச்சித்தம்:— வாஜபேயம், ஸ்ரீ. உ. வே. வீரராகவதாதாசார்யர் 161-195
மதப்ரஷ்டவிஷயம்:— ஸ்ரீ. உ. வே. கே. எஸ். ஸ்ரீநிவாஸாசார்யர் 298
மதப்ரஷ்ட ப்ராயச்சித்தமும், தர்மசாஸ்த்ரங்களும் 1,17
மதாபிதாக்களிடத்திலிருக்கவேண்டிய முறை:—ஸ்ரீ. உ. வே. ரகுநாதாசார்யர். 252

விஜ்ஞாபனம்:— கார்யதர்சி 1
ஸ்ரீ. உ. வே. வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமியின் உன்னத பதவி:— கார்யதர்சி
ஸ்ரீபாகவத தனிச்லோகி:— பண்டிதபூஷணம் ஸ்ரீ. உ. வே. சே. நரஸிம்மாசார்யர் 33-67,91,129
ஸ்ரீபெரும்பூதூர் ஆதிகேசவப்பெருமாள்:— ஸ்ரீ. உ. வே. ர. ஸ்ரீநிவாஸராகவய்யங்கார் 89
ஸ்ரீமத் ராமாநுஜ மதாபிவ்ருத்தி:— ஸ்ரீ. உ. வே. தி. ஈ. சடகோபாசார்யர் 153,192
ஸ்ரீராமாயண தத்வார்த்தம்:— ஸ்ரீ. உ. வே. காடாந்தேத்தி கோபாலாசார்யர் 76,114
ஸ்ரீவிஷ்ணு பக்தி:— ஸ்ரீ. உ. வே. என். ரங்காசார்யர் 235
ஸ்ரீவிஷ்ணு ஷட்பதி:— பத்ராதிபர் 145
ஸ்ரீவைஷ்ணவர்களும் அவர்களின் லக்ஷணங்களும்:— பண்டிதபூஷணம் ஸ்ரீ. உ. வே. சே. நரஸிம்மாசார்யர் 28,55
ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயமும், ஸ்ரீபாஷ்யகாரரின் உபகாரமும்:— பண்டித ரத்னம் லக்ஷ்மீபுரம் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸாசார்யர் 174, 209
ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்த ஸபையின் பதின்மூன்றுவது வருஷத்திய அறிக்கை:—
ஸ்ரீஸச்சரித்ர ரக்ஷை:— தமிழ்மொழி பெயர்ப்புடன், பண்டிதபூஷணம் ஸ்ரீ. உ. வே. சே. நரஸிம்மாசார்யர்
ஸபையின் அங்கத்தினர்களின் வார்ஷிக மஹாஸங்கம்:— 121
ஸம்வத்ஸரமுடிவில் விஜ்ஞாபனம்:— கார்யதர்சி 324
ஸர்வேச்வரகாருண்யம்:—வங்கிபுரம் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீராமதேசிகாசார்யர் 236,261,341

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:— நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர், பி. ஏ., பி. எல்.

கார்யதர்சி:— ஆர். ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர், எம். ஏ.

ஸம்புடம் 14.] ருதிரோத்காரி௵, ஐப்பசி௴. [ஸஞ்சிகை 1.

“ த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே.

வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா”।

[ஸ்ரீபாகவதம்-1-9-23.

விஜ்ஞாபனம்.

தீபிகையின் பதின்மூன்றாவது வயது சென்ற புரட்டாசியுடன் முடிவாகி இந்த ஐப்பசிமுதல் பதினான்காவது வயது ஆரம்பமாகிவிட்டது. இந்தத் தீபிகை சென்ற வருஷத்தில் திவ்யப்ரபந்தத்தின் பெருமையை எடுத்துக் காட்டியும், ஆழ்வார்கள் பகவானை அனுபவித்த விதத்தைப் பிரதிபாதித்தும், ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தின் ஸ்வரூபத்தை உபதேசித்தும், ஸ்ரீ பகவத்கீதையில் மேனாட்டுக் கல்வியாலுண்டாகும் குயுக்திகளை நிராகரித்தும், புத்தி மோகத்தால் மதத்தைவிட்டு மாறி மறுபடி திரும்புகிறவர்களுக்கு உஜ்ஜீவிக்கும்படி உபாயம் கல்பித்தும், மனுதர்மசாஸ்த்ரம் விசிஷ்டாத்வைதத்தையே கருத்தாகக்கொண்டு ஏற்படுத்தப்பட்டது என்று காட்டியும், கீர்வாண த்ராவிட வால்மீகிகளுக்குப் பரஸ்பர விஷயஸ்வாரஸ்யத்தை எடுத்துக்கூறியும், ஆராய்ச்சியில் அபேக்ஷை உள்ளவர்களுக்கு ப்ரஸாதம் உண்டாகும்படி விஷயப்ரதானம் செய்தும், கீர்வாணபாஷையில் பரிசயமில்லாதவர்களுக்கு அதிலிருக்கும் அம்ருதத்தின் ருசியை அனுபவிக்கும்படி தமிழில் அதை மொழிபெயர்த்தும், ஸஹ்ருதயர்களுடைய மனதை ரஞ்ஜிக்கும்படி செய்து கொண்டு தன்னுடைய பதின்மூன்றாவது வயதை ஸார்த்தமாய்க் கழித்தது.

இப்போது பதினான்காவது வயது பிறந்ததும், தன்னை அபிமானிப்பவர்கள் பலருமுண்டாவார்கள் என்ற எண்ணத்தால் ஆக்ருதிபூரித்து, தோற்றம் மாறி மேனியுண்டாகி சோபையுடன் ஸர்வ ஜனங்களுக்கும் ஆகாங்க்ஷகமாய்த், தான் லோகத்துக்கு உபயோகமாக இருக்கவேணுமென்று வேதாந்த விஷயமான வ்யாஸங்களுடன் இதிஹாஸ புராணங்களிலுள்ள நீதியையும், ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்ட தர்மம், ஆசாரம், ஸம்ஸ்காரம், முதலியவைகளின் ஸ்வரூப ஸ்வாரஸ்யங்களையும், குருபரம்பரையின் பராமர்சங்களையும், மற்ற மத விஷயமான ஆராய்ச்சியையும் ப்ரகடனம் செய்து கொண்டு ஸஹ்ருதயர்களுக்கு ப்ரியமுண்டாகவேணுமென்று அவதரணம் செய்கிறாள்.

(1) ருசியுள்ள பதார்த்தத்தை ஒருவராகச் சாப்பிடக்கூடாது, என்னும் நியாயப்படி இந்த ஆனந்தத்தை மெம்பர்கள் மாத்ரம் அனுபவிக்காமல் தங்களுடைய ஸ்நேகிதர்களையும் இன்னும் தெரிந்தவர்களையும் தூண்டித் தீபிகையை க்ரஹித்து அனுபவிக்கும்படி செய்யவேணுமாய் ப்ரார்த்திக்கப்படுகிறது.

இந்த ப்ரயத்னத்தை மெம்பர்களனைவரும் ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

கார்யதர்சி.

பத்ராதிபரின் குறிப்புக்கள்.

தீபிகையின் பதினான்காவது ஆண்டு.

'ஏதி ஜீவந்த மாநந்தோ நரம் வர்ஷசதாதபி' (உயிருடன்பிழைத்திருப்பவனுக்கு நூறுவர்ஷங்களுக்குப் பிறகாவது ஆநந்தமுண்டாகும்) என்று சிறியதிருவடி அசோகவநத்தில் பிராட்டியைத் தேற்றினார். இந்த மங்களகரமான புராதனப்பேச்சை யவலம்பித்தே நமது தீபிகையும் அநந்யப்ரயோஜனராய் உழைத்த அதன் அத்யக்ஷர்களால் வெகு உபரோதங்களுக்கிடையே ப்ராணன்மட்டும் மிகுதியாம் நிலையிலும் இப்பதின்மூன்று வர்ஷங்களாகக் காப்பாற்றப்பட்டு வந்துவிட்டது; தற்போதிருக்கும்நிலைமையில் இனி இதற்குப் போஷணமும் கொஞ்சம் விசேஷமாக ஏற்பட்டு, இது தன் கைங்கர்யத்தை முன்னிலும் அதிக ஊக்கத்துடன் நடத்தி, பகவத்க்ருபையால் ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்தின் சாச்வதமான நன்மைகளைப் பெருக்குவதற்கு முக்கிய ஸாதனமாகுமென்று எதிர்பார்க்கின்றோம்.

---

(1) ஸ்வாத்வேகோ ந புஞ்ஜீத

இக்காலத்தில் ஸமூஹபலந்தான் ப்ரயோஜனப்படக்கூடியது. மனிதன் ஸ்வபாவத்தில் பிறரோடுகூடியல்லது வாழமுடியாதவன். பழைய பாரதவர்ஷத்தைப் போலன்றியே நாநாதேசத்தவரும் பலவிதமதஸ்தர்களும் பலவிதஆதிக்யங்களையுடையவரும் இக்காலத்தில் நமதுநாட்டிற்சேர்ந்து வஸிக்கவேண்டியிருக்கிறது. காலவசத்தால் வைதிகமதஸ்தர்களுக்குள்ளும் நம்மவர்களுக்குள்ளும் வைமனஸ்யங்களும் வித்யாஸங்களும் பெருகிக்கொண்டே வந்துவிட்டதைப்பற்றி வருந்தாதவரில்லை. ஆனால் அதற்குப் பரிஹாரம் நம்மிடமேயுள்ளதென்றறிந்து அநுஷ்டிப்பவர் இன்னமுஞ் சிறியதொகையினரே. தம்மளவிலும் தம்மைச்சேர்ந்த ஆசார்ய, சிஷ்ய, புத்ரபித்ராதிகளளவிலும், பாதிரியார் பார்க்குஹார் Farquhar போன்ற ஐரோப்பியராலும் வியப்புடன் ச்லாகிக்கப்பட்ட ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயானது குன்றாமல் விகஸிக்கவேண்டுமென்று விரும்புகிறவர்கள் யாவரும், தமது உஜ்ஜீவனம் ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்தின் உஜ்ஜீவனத்தைப்பற்றியேயுள்ளதென்பதைக் கணிசிக்கக் கடவர்கள். எனவே ‘ தஸ்மிந்ரக்ஷண வ்யாஜே ஸ்வாத்மாநமபி ரக்ஷதி’ (அந்த வ்யாஜத்தினால் தன்னையும் ரக்ஷித்துக்கொள்ளுகிறான்) என்கிற ந்யாயப்படி, ஆசார்யஸ்தாநாதிகளை வஹிக்கும் மடாதிபதிகள் பரமைகாந்திகள், லௌகிகச்ரேஷ்டர்கள், ஸாதாரண ஸ்ரீவைஷ்ணவர்கள் உட்பட யாவரும் ஏகோபித்து நமது ஸமூஹத்தின் பொது அபிவ்ருத்தியின் பொருட்டுத் தங்கள் தங்கள் அளவில் முன்வந்து ஒன்றுசேர்ந்து உழைத்தாலல்லது தந்தாமுடைய ப்ரத்யேகமான ச்ரேயஸ்ஸுக்கும் க்ருஷிபண்ணவராகார். இந்த நீதியானது ப்ரணவம்முதலியவற்றின் அர்த்தத்தை அறிந்து அநுஷ்டிப்பவர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்குமேயாயினும், அத்தகைய அநுபவமுள்ளவர்கள் இப்போது வெகு துர்லபராய்விட்டார்கள். இம்மந்த்ராதிகளைக் கற்றதின் ப்ரயோஜநம் ஸ்வகார்ய ப்ரவ்ருத்தியிலும் தம்பெருமையிலும் மட்டும் முடிவதென்று ஏசுகிறவர்களுக்கு இடம் நிரம்பக் கிடைத்துவிட்டது. ஐச்வர்யவான்களும் லௌகிகப்ரபுக்களும் தமக்குச் சிலகாலம் நடக்கும்செல்வாக்குக்களில் பரவசராய்த் தாம் ஒருஸமூஹத்தைச்சேர்ந்தவரேயென்பதையும், ஸமூஹபலம்தான் நிலையுள்ள உண்மையான பலமென்பதையும் மறந்துவிடுகிறார்கள். மற்றைச்சாதியாரும் கூட்டத்தவரும் அவரவர்களுடைய ஸமூஹத்தைப் பலப்படுத்தி அதன் வழியாய் ஸகலத்தையும் ஸாதித்துக் கொள்ளுகிறதைக் கண்டும் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆலஸ்யம் விடாமலிருப்பது ச்லாகிக்கத்தக்கதல்ல. தான் பிறந்து வளர்ந்தஜாதியையாவது ஸமூஹத்தையாவது விடுத்துப் பிறர்கூட்டத்திற்போய்ச் சேர்ந்து பெருமையடையலாமென்று நினைப்பதும் பலனற்றதென்பதைக் காலவ்ருத்தாந்தங்களைக் கவனிப்பவர்கள் நன்றாயறிவார்கள். எந்த முகத்தால் ஆராய்ந்தாலும், ந்யாயமான மார்க்கங்களில் நாம் நமது ஸமூஹபலத்தையும் ஸமூஹ உணர்வையும் பெருக்கவேண்டியது இன்றியமையாத கடமையாயிருக்கிறது. ஸர்வபூதங்களையும் பகவானுடைய உடைமையாகக் காணவே

ண்டுமென்று முதற்பாடமாகப் படிப்பிக்கும் ஸ்ரீவைஷ்ணவதர்மம் இக்கார்யத்துக்கு எவ்வளவு உன்னதமான லக்ஷ்யத்தைக் காட்டிக்கொடுக்கிறதென்பதை நம்மவர் நன்குணர்வாராக.

இந்த லக்ஷ்யத்தைப் பலமுகங்களால் இடைவிடாமல் நம்மவர் முன் உலாவச் செய்வதும், இதன் பெருமைஉள்ளபடி தோன்றுவதற்காகப் பிறர் கூற்றுக்களையும் ப்ரவ்ருத்திகளையும் அநுவதித்துச் சீர்தூக்குவதும், நம்மவர்களுடைய அபிப்ராயாதிகளை நம்மவர் பரஸ்பரம் அறியச்செய்வதும், பலவிடங்களில் நடக்கும் நமது ஸமூஹ ஸம்மேளனங்களின் ப்ரவ்ருத்திகளைப்ரகாசப்படுத்துவதும், பொதுநன்மைக்கும் நமது ச்ரேயஸ்ஸுக்கும் விரோதிகளான தடைகள்நேரிடும்போது அவற்றைக் கண்டித்துப் பரிஹாரமுறைகளைக் கையாடத் தூண்டுவதும், நம்மவர்க்குள்ளேயே பொறுப்புள்ள ஸ்தாநங்களை வஹிப்பவர்களின் கடமைகளை அவர்களுக்குப் பொது நன்மையை உத்தேசித்து உசிதஸமயங்களில் ஜ்ஞாபிப்பதும் அபூர்வங்களான ஸம்ப்ரதாயக்ரந்தங்களை யாவரும் அறியும்படி ப்ரகாசப்படுத்துவதும் இவை முதலான ஸமூஹ கைங்கர்யங்களைத் தீபிகை சென்ற வர்ஷத்திலும் சோராமல் நடத்திவந்திருக்கின்றது. இதை மஹாஜநங்களும் இப்போது முன்னைவிட அதிகமாய்த்தெரிந்து உகக்கிறார்கள் என்பதினால் தீபிகையும் இன்றும் அதிகஉத்ஸாகத்துடன் தன் கர்த்தவ்யங்களில் ஈடுபட்டுழைக்கத்தட்டில்லை. ஸ்ரீவைஷ்ணவர் யாவரும் இதன் போஷணம் தமது கடமையா யிருப்பதைமாத்திரமேயன்றி தமது நன்மைக்கு இன்றியமையாத ஸமூஹபல அபிவ்ருத்திக்குத் தீபிகையின் ஸம்ரக்ஷணம் ஒரு சிறந்த ஸாதநமென்பதையும் நன்றாய் நினைக்கும்படி வேண்டுகின்றோம்.

॥ஸ்ரீ:॥

தா தா சா ர் ய ர்.

சென்ற ஸஞ்சிகையில் காஞ்சீபுரத்திலிருக்கும் அருளாளப்பெருமாள் கோவிலிலும், யதோக்தகாரி ஸந்நிதியிலுமிருக்கும் சிலாசாஸனங்கள் ஸ்ரீலக்ஷ்மீகுமாரதாதாசார்யரைப்பற்றி எவ்வளவு தூரம் தெரிவிக்கிறது என்பதை எழுதினோம். இப்போது அவர் எவர்? விஜயநகரம் மகாராஜாக்களுக்கு இவருடைய பூர்வர் எப்படி குருவானார்? அந்த விஜய நகரம் ராஜாக்கள் எப்போது எப்படி வைஷ்ணவர்களாக மாறினார்கள், என்பதை இங்கு விசாரிப்போம்.

ப்ரபந்நாம்ருதம் என்னும் க்ரந்தத்தில் இந்தத் தாதாசார்யருடைய சரித்திரம் எழுதப்பட்டிருப்பதை இங்கு ஸங்க்ரஹிப்போம்.

இவர்கள் ஸ்ரீசைலபூர்ணர் அல்லது பெரிய திருமலைநம்பி என்பவருடைய வம்சத்தில் பிறந்தவர்கள். இந்தப் பெரிய திருமலை நம்பி என்பவர் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகரான பாஷ்யகாரருடைய மாதுலர்; ஸ்ரீயாமுனாசார்யருடைய ஐந்து முக்கிய சிஷ்யர்களில் ஒருவர். இந்தப் பெரியதிருமலை நம்பி அல்லது ஸ்ரீசைலர் என்பவருடைய வம்சத்தில் நரஸிம்மாசார்யர், ரங்காசார்யர் என்ற இரண்டு சகோதரர்கள் பிறந்தார்கள். ஸ்ரீ பெரியதிருமலைநம்பி, ஸ்ரீமத் ராமாயணப்ரவசநத்தில் அதிக பாண்டித்யத்தை உடையவராயிருந்ததால் ஸ்ரீபாஷ்யகாரருக்கு அவர் ஸ்ரீமத் ராமாயணத்தை உபதேசித்தார். அந்த மஹானுடைய வம்சத்தில் பிறந்தவர்கள் ஸ்ரீமத் ராமாயணப்ரவசநத்தில் அதிக பாண்டித்யத்தை உடையவர்களாயிருந்தார்கள். அதுபோலவே இந்த நரஸிம்மாசார்யரும் ரங்காசார்யரும் ஸ்ரீமத் ராமாயணப்ரவசனத்தில் அதிக தேர்ச்சியை அடைந்திருந்தார்கள். ஸரஸ்வதி விலாஸமிருப்பவர்களுக்கு லக்ஷ்மீ கடாக்ஷம் இராதது ஸ்வாபாவிகமானதால் இந்த இரண்டு ஸகோதரர்களும் தாரித்ரயதசையால் தங்களுடைய ஊரைவிட்டு வெளியூருக்குப்போய் ராமாயணப்ரஸங்கம்செய்து பணம் ஸம்பாதிக்கவேண்டுமென்று ஏட்டூர் என்னும் கிராமத்திற்குச் சென்றார்கள். அந்த ஊரில் கொஞ்சநாள் தங்கியிருந்து காலக்ஷேபம் சரிவர நடவாததனால் கர்நாடராஜ்யத்தின் ராஜதானியான விஜயநகரம் என்னும் பட்டணத்தை அடைந்தார்கள்.

இவர்கள் போனதருணத்தில் விருபாக்ஷன் என்ற ராஜா அரசாட்சி செய்துவந்தார். அவருடைய பந்துக்கள் அவரிடத்தில் அஸூயையினால் அவரைக் கொலைசெய்ய யத்தனித்தார்கள். இதுதெரிந்து அரசன் வெளியூருக்குத் தப்பி ஓடி, வேண்டிய படைகளைச்சேர்த்து ஓரிரவு விஜயநகரத்துக்குத்திரும்பிவந்து எல்லா பந்துக்களையும் நடுநிசியில் படுத்துத்தூங்கிக்கொண்டிருக்கும்போது கத்தியால் வெட்டிவிட்டார். இப்படி, திடீரென்று கொன்று ப்ரேதகார்யம் ஒன்றும் செய்யாததினால் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் பிசாசங்களாக மாறி அவர்கள் முன்னிருந்த இடத்திலேயே ஸஞ்சாரம் செய்துகொண்டிருந்தார்கள். இந்தப் பிசாசங்களின் உபத்திரவம் ஸஹியாமல் விருபாக்ஷன் அரண்மனையை விட்டுவிட்டு வேறு ஒரு அரண்மனை வேறு ஸ்தலத்தில் கட்டிக்கொண்டு அதில் வாஸம் செய்துகொண்டு வந்தார். அப்படிச்செய்தும் அந்தப் பிசாசங்களுடைய உபத்திரவம் அவரை விடவில்லை. எவ்விதமான சாந்திசெய்தும் அவர் மனதுக்கு ஸமாதானம் ஏற்படவில்லை.

இந்த ஸந்தர்ப்பத்தில் அந்த இரண்டு ப்ராதாக்களும் விஜயநகரத்துக்குச் சென்றது. பிசாசங்கள் ஸஞ்சாரம் செய்துகொண்டிருந்த பழைய அரண்ம

னையை இவர்கள் ராஜா வாஸம்செய்யும் ஸ்தலமென்று நினைத்து அதற்குள் தெரியாமலே ராஜாவைப் பார்க்கும்பொருட்டுப்பிரவேசித்தார்கள். அரண்மனை யானது தீபங்களால் அலங்கரிக்கப்பட்டுப் பிசாசரூபமாக இருந்த அரசனும் தர்பாரில் வீற்றிருந்தான். இவ்விரு ஸகோதரர்களையும் பிசாசவேலைக்காரன் ராஜஸமூஹத்திற்கு அழைத்துக்கொண்டுபோனான். அரசன் இவர்களைப்பார் த்து நீங்கள் யார்? இவ்விடம் வந்த காரணம் யாது? என்று வினவ, அப் போது இளையவர் அரசனைப்பார்த்து, நாங்கள் ஸ்ரீ பெரியதிருமலைநம்பி வம் சத்தில் பிறந்தவர்கள். என் தமையனுக்கு ஸ்ரீமத் ராமாயணப்ரவசனத்தில் அஸாதாரணமான பாண்டித்யம், எங்களுடைய தாரித்ர்யதசையால் ஊரை விட்டுத் தங்களுடைய ஸந்நிதானத்துக்கு எங்களுடைய தாரித்ர்யத்தை நிவர்த்தி செய்துகொள்ளலாமென்று வந்தோமென்று சொன்னதும் அந்த அரசன் சந்தோஷப்பட்டு ப்ரதிதினம் நம்முடைய அரண்மனையில் ஸ்ரீமத் ராமாயணம் வாசித்து வாருங்கள். நாம் உங்களுக்குத் தினத்துக்கு ஒரு தீநாரம் கொடுத்துவருவோம் என்றும், பட்டாபிஷேகத்தின்போது பூரித்ர வ்யம் கொடுப்போமென்றும் வாக்குத்தத்தம் செய்தான். இவ்விரு ஸகோதரர்க ளும் உத்திரவுப்படி ஸ்ரீமத் ராமாயணத்தை வாசித்து அர்த்தம் சொல்லி ப்ரதி தினம் ஒரு தீநாரம் வாங்கிக்கொண்டு போனார்கள். (ஒரு தீநாரம் என்பது ஒரு தங்க நாணயம்; பிரகிருதம் ஒரு பவுனுக்குச் சமானமாக இருக் கும்.) இப்படி பட்டாபிஷேகமும் முடிந்தது. பிசாசங்களும் ஸ்ரீமத் ராமா யண ஶ்ரவணமஹிமையால் பிசாசத்வம் நீங்கி ஸாந்தாநிகலோகம் அடைந் தன. அரண்மனையிலும் பிசாச உபத்திரவம் நீங்கிற்று. ஸ்ரீசைல வம்சத்தில் பிறந்த இந்த இரண்டு ஸகோதரர்களின் கார்யத்தால் விரூபாக்ஷமஹாராஜ னுக்கு உண்டாகியிருந்த பிசாச உபத்திரவம் நீங்கிற்று.

இவ்விருவர்களும் தன் ராஜ்யத்துக்கு வந்திருப்பதையும் அவர்கள் செய் துவரும் ஸத்கார்யத்தையும் கர்ணகர்ணிகையாகக்கேட்டு விரூபாக்ஷன் இவ் விருவர்களின் பழைய அரண்மனையில் ராமாயணப்ரவசனம் செய்தது தனக்கு உபகாரமானதை உணர்ந்து க்ருதஜ்ஞதையுடன் அதிக விஶ்வாஸமாய் அவர்க ளைத் தன்னிடம் வரவழைத்து ஸ்ரீமத் ராமாயணத்தை வாசித்து அர்த்தம் சொல்லும்படி பிரார்த்தித்தான். அவர்களும் அப்படியே ராமாயணப்ரவச னம் செய்து பட்டாபிஷேகம் செய்து முடித்தவுடன் யதேஷ்டமாக ஸம்மா னம் செய்து தமையனான நரஸிம்மாசார்யருடைய சிஷ்யனாக ஆகிவிட்டார். அந்த விரூபாக்ஷமஹாராஜா வேங்கடேசனென்று கையெழுத்தை மாற்றிக் கொண்டு ஸ்ரீவைஷ்ணவனாகிவிட்டார். இந்த நரஸிம்மாசார்யரென்பவர் அங்

நாளில் எட்டூர் சிங்கராசார்யரென்ற பெயரால் வழங்கப்பட்டு வந்தார். இந்த ஸ்வாமியின் ஸந்ததியில் ஒன்பதாவது தலைமுறையில் தாதார்யரென்று ஒரு ஸ்வாமி உண்டானூர். இந்தத் தாதார்யர் அந்தக்காலத்தில் ராஜாவான ராமதேவராயருடன் சந்த்ரகிரிக்கு வந்துவிட்டார். இவர் அப்பைய தீக்ஷித ருடைய அத்வைத க்ரந்தத்துக்குக் கண்டனமாகச் சண்டமாருதமெ ன்னும் க்ரந்தத்தைச் செய்த சோளஸிம்ஹபுரம் வாதூல தொட்டையா சார்யருக்கு ஸமகாலீனர். இந்தத்தாதாசார்யர் பஞ்சமதபஞ்சனம்என்ற ஒரு க்ரந் தத்தைச்செய்திருக்கிறூர். ஆகையால் "பஞ்சமதபஞ்சனதாதாசார்ய" ரென்ற பெயர் பிரஸித்தியடைந்தது. இந்தத் தாதார்யர், தொட்டையாசார்யர், அப் பையதீக்ஷிதர் இம்மூன்றுபேர்களும் ஒரே காலத்தில் இருந்தவர்கள்.

இந்தத் தாதாசார்யருடைய குமாரர்தான் "லக்ஷ்மீகுமாரதாதாசார்ய" ரென்றும் "கோடிகன்னிகாதானம்தாதாசார்ய" ரென்றும் காஞ்சீபுரம் சாஸ னங்களில் ப்ரஸித்திபெற்றவர்.

இந்த ப்ரபந்நாம்ருதம் என்னும் க்ரந்தம் லக்ஷ்மீகுமாரதாதாசார்யரு டைய பேரனுன ரங்கநாதன் என்பவருடைய சிஷ்யரும், வடுகநம்பி அல் லது ஆந்த்ரபூர்ணர் என்பவருடைய வம்சத்தில் பிறந்த ஒரு ஸ்வாமியால் செய்யப்பட்டது.

ஆர். ஸ்ரீநிவாஸராகவய்யங்கார்.

ஆபோசனமும், ப்ராணாஹுதியும்.

ப்ராம்மணர்கள் ஆஹாரம் சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் ஜலத் தால் சில க்ரியைகளைச்செய்து ஜலத்தை உட்கொள்வது வழக்கம் இது. இப் பொழுதும் அநுஷ்டானத்திலிருக்கிறது. சிலர் மந்த்ரத்தைச்சொல்லாமல் க்ரி யைகளைச் செய்துவருவதைப் பார்க்கிறோம். ஸாதாரணமாய் இவைகளை ஏன் செய்யவேணும்என்ற சோத்யமேஉண்டாவதில்லை. அப்படிஉண்டானுலும் அதை அறிந்துகொள்ள யத்னம் செய்வதுமில்லை. இங்கிலீஷ்படிப்பில்லாதவர்கள் பெரி யோர்கள் செய்வதைத் தாங்களும் செய்யவேண்டுமென்று நினைத்துச் செய்துவ ருகிறூர்கள். இங்கிலீஷ் படிப்பில் தேர்ச்சி அடைந்தவர்களில் சிலர் இவைகளை ஏன் செய்யவேண்டும், அர்த்தமில்லாமல் ஏன் அநுஷ்டிக்கவேண்டும், என்று அவர்களுக்குத் தோன்றினுலும், அதைத் தெரிந்தவர்களிடம்போய் அறிந்து கொள்ளப் பொறுமைஇல்லாமல் முக்காலத்து ருஷிகள் காட்டில்வாஸம் செய்து

கொண்டிருந்தார்கள், அப்போது தரையில் இலையைப்போட்டு அன்னம் முதலியவைகளை வைத்துக்கொண்டு ஸாப்பிடும்பொழுது எறும்பு முதலிய ஸர்வ ஜந்துக்கள் இலையில் வந்து தொந்தரவுசெய்யாமலிருக்கும்பொருட்டு ஜலத்தை இலையைச்சுற்றித்தெளிப்பது வழக்கமாயிருக்கலாம், வேறு எவ்விதமிருக்கக் கூடும்? என்று தாங்களாக ஊஹித்துக்கொண்டு இதை உபத்திரவமாக நினைத்தாலும், இதை அநுஷ்டிக்காமலிருப்பது அவர்கள் மனஸ்ஸாக்ஷிக்கு விரோதமாகத் தோன்றுகிறபடியால், என்னவோ செய்துவைப்போம் என்று எண்ணங்கொண்டு, சிலர் சோம்பலினாலேயோ, அல்லது தெரியாததினாலேயோ மந்த்ரத்தை உச்சரிக்காமலே க்ரியைகளைமாத்ரம் அநுஷ்டித்து வருகிறார்கள். அவர்கள் ஊஹிப்பது புத்திசாதுர்யத்தைக் காட்டக்கூடியதே தவிர எந்தக்காரணத்தை முன்னிட்டுஅவைகள் அநுஷ்டிக்கப்படுகின்றன என்பதை அறியவில்லை. இதன் ஸ்வரூபம் இன்னதென்று தெரிவிக்கும்பொருட்டு இந்த வியாஸம் எழுதப்படுகிறது.

இந்த ஆசாரத்தை ஏற்படுத்தின மஹர்ஷிகள் ஆஹாரத்தை, மிருகங்கள், பசிக்குக் கண்டதை வயிற்றில்போட்டு நிரப்புவதைப்போல், பசி அடங்கும்பொருட்டு உட்கொள்வதற்கு என்று நினைக்கவில்லை. அதை அவர்கள் ப்ராணதாரணத்துக்கு ஆதாரமான தேவதைகளுக்குச் செய்யப்பட்ட யாகமாக எண்ணியிருந்தார்கள். இந்தத்தேவதைகள் ப்ராண; அபாந; வ்யான; உதாந; ஸமான; என்றுஐந்து உள்ளன.

ப்ராண தேவதை:—1. உயிரிருக்கிறது என்பதற்கு அடையாளமான மூச்சுக்காற்றுக்கு அதிஷ்டான தேவதை; ஹ்ருதயம் ஶ்வாஸாசயம் இவைகள் அதின் வாஸஸ்தானம், இந்தத்தேவதை தேஹத்தில் ரத்தஓட்டத்தையும், மூச்சைஉட்கொள்வது, மூச்சை வெளியே விடுவது என்கிற வேலைகள் சரியாய்நடந்துவருவதையும் பார்த்துக்கொள்ளுகிறது. ஆகையினால்தான் ஹ்ருதி ப்ராண: என்று சொல்லப்படுகிறது.

அபாநதேவதை:—2. சரீரஸுகத்துக்காகச் சரீரத்தில் உண்டாகி ப்ருஷ்டபாகம் வழியாய்க்கீழ்நோக்கி வெளியேபோகும் வாயுவின் அதிஷ்டானதேவதை. பாயு: என்று சொல்லப்பட்ட ப்ருஷ்டபாகம் இதின் வாஸஸ்தானம்.

(1) ஹ்ருதி ப்ராண:.

(2) ஸ்வநயநாந்த்ரிது வர்ஷீஷாம்ஶ: ஸ்வாந: ஸ்யோவர்த்தி: வாயவ:.

இந்தத் தேவதை சரீரத்தில் இருக்கும் குடல் என்று சொல்லப்படும் ஜீரணம்செய்யும் அவயவத்தினுடையவும், மூத்ராசயத்தினுடையவும் காரியங்கள் சரிவர நடந்துவரும்படி பார்த்துக்கொள்ளுகிறது. சரீரத்துக்கு வேண்டிய அம்சங்களை எடுத்துக்கொண்டு பாக்கியிருக்கும் சக்கைகளை வெளிப்படுத்துகிறது.

வ்யாநதேவதை:—3. சரீரத்தில் எங்கும் வ்யாபிக்கக்கூடிய ஒரு காற்றின் அதிஷ்டானதேவதை. இதற்கு ஹ்ருதயம் ஸ்தானம். நடத்தல், கைதூக்கல், கால்தூக்கல், இமைகொட்டுதல் முதலான எல்லாவ்யாபாரங்களும் சரியாய் நடக்கும்படி பார்த்துக்கொள்ளுகிறது. வெகு வேகமாய் ஸஞ்சரிக்கக்கூடியது.

உதாநதேவதை:—4. தொண்டையிலிருந்து மேல்நோக்கித் தலைக்குப் பிரவேசிக்கும் வாயுவின் அதிஷ்டான தேவதை. மர்மஸ்தலங்கள் (sensory organs) என்று சொல்லப்படும் அவயவங்களை ஸ்தானமாக உடையது. இது மர்மஸ்தானங்கள் தம்தம் வேலையைச் சரிவரச் செய்து வருகின்றனவா என்று பார்த்துக்கொள்ளுகிறது.

ஸமாநதேவதை:—5. இது ஜீர்ணசக்திக்கு ஆதாரமாக இருக்கும் வாயுவின் அதிஷ்டானதேவதை. இது தொப்புள் என்று சொல்லப்படும் பள்ளத்துக்கு ஸமீபத்திலுள்ள பாகத்தை ஸ்தானமாக உடையது. இது சரீரத்தில் ஜீர்ணம் என்னும் வ்யாபாரத்தைச் சரிவர நடத்திக்கொள்ளுகிறது.

ஆகையால் ஒவ்வொரு அவயவத்தின் வேலையைச் சரிவரநடத்தி ப்ராணதாரணம் செய்யும்படிக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் அதிகாரிகளுக்கு ப்ராணவாயவ: என்றுபெயர். இந்த வாயு ஒன்றாயிருந்தாலும், இருப்பிடம் வேறு

---

(3) व्यानो हृदि स्थितः, कृत्स्नदेहचारी, महाजवः; गत्यप-
क्षेपणोत्क्षेपणनिमेषोन्मेषणादिकाः । प्रायः
सर्वाः क्रियास्तस्मिन् प्रतिबद्धाः शरीरिणाम्॥

(4) स्पन्दयत्यधरं वक्त्रं गात्रनेत्रभ्रुवाननः।
उद्वेजयति मर्माणि उदानो नाम मारुतः॥

(5) समानः ज्वलनसमीपस्थः कोष्ठे चरति सर्वतः ।
अन्नं गृह्णाति पचति विवेचयति मुञ्चति ॥

பட்டிருப்பதால், அதற்குத் தகுந்தபடி பெயரும் மாற்றிவைக்கப்பட்டிருப்ப தால் அவைகள் ஐந்து என்று வ்யவஹாரம். தர்க்கஸங்க்ரஹத்தில் அன்னம் பட்டரும் "ப்ராணவாயு ஒன்றாயிருந்தாலும் இருப்பிடத்தின் பேதத்தாலே ப்ராண, அபான என்று வெவ்வேறாக வ்யவஹரிக்கப்படுகிறது" என்று சொல்லி யிருக்கிறார். நாம் ஆஹாரம் உட்கொள்ளுமுன்னமே செய்யும் க்ரியைகள், இந்த ஐந்து தேவதைகளும் நமக்குச் செய்யும் உபகாரத்துக்கு க்ருதஜ்ஞதாநு ஸந்தானமாய்ச்செய்யும் யாகம், அந்தந்தத் தேவதைகளின் திருப்திக்காகச் செய்யப்படுகிறது.

ஜகத்காரணமான பகவான் நம்முடைய சரீரத்தை நடத்திவைக்கிறார் என்று சொல்லும்போது, இந்த ஐந்து தேவதைகள் சரீரத்தை நடத்தி வைக்கி ன்றன என்று சொல்லுவது சரியா? என்னும் சோத்யத்துக்கு ஸமாதானம் என் னவென்றால், பகவான் எஜமானன், இந்த ஐந்தும் வேலைக்காரர்கள். பகவான் இந்த ஐந்து தேவதைகளிலும் அந்தர்யாமியாக இருந்துகொண்டு, அவைகளுக்கு ச்சக்தியைக்கொடுத்து, சரீரத்தைச் சரிவர நடத்திவரும்படி ஆஜ்ஞாபித்திருக் கிறார். ஆகையால்சரீரதாரணம் பகவான் என்பதில் யாதொரு விரோதமுமில்லை. அப்படியே இந்த ஐந்து தேவதைகளைக் குறித்துச்செய்யும்யாகமும் அவைகளு க்கு அந்தர்யாமியான பகவானைக்குறித்தே செய்யப்பட்டதாகும்.

ஆகையால் சாப்பிடுவது ஒரு யாகமாகச்சொல்லப்பட்டபடியால் அது நிய மமாகச் செய்யவேண்டியதாய்விட்டது. முதலில் சரீரம் சுத்தமாக இருக்க வேணும். போஜனம் பண்ணுமுன் ஸ்நானம் செய்து மடிகட்டிக்கொள்ள வேண்டியது அவஶ்யம். வடதேசங்களில் ஸ்நானமில்லாமல் எவனும் ஆஹார த்தை உட்கொள்ளமாட்டான். ஸ்நானம் செய்யமுடியாவிட்டாலும் மடிவஸ்த் ரத்தையாவது கட்டிக்கொண்டுதான் போஜனம் செய்வார்கள். எல்லாவைதிக கார்யங்களுக்கும் காலலம்பி ஆசமநீயம் செய்வது எப்படி அவஶ்யமோ, அப் படியே போஜனத்துக்குக் கால் அலம்பி ஆசமநீயம் செய்துவிட்டுத்தான் உட்காரவேண்டும். (1) ப்ருஹதாரண்யக உபநிஷத்திலும் ஆஹாரத்துக்குமுன் னும் பின்னும் ஆசமனம் செய்யவேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருக்கிறது. யாகத்தில் பலிக்குப்பீடம் போட்டுவைப்பதுபோல இந்தயாகத்துக்கும் பீடத் துக்காக ஒரு இடம் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். இதற்காகத்தான் சாப்பி டும் இடத்தைக் கோமயம் கரைத்த ஜலத்தால் சுத்திசெய்வது வழக்கம். பிராம் மணனுக்குச், சதுரமாயும், க்ஷத்ரியனுக்கு முக்கோணமாயும், வைச்யனுக்கு

(1) [Grantha script text] - ப்ருஹதாரண்யக 8-1-14.

வர்த்துலமாயும், சூத்ரர்களுக்கு வர்த்துலத்தில் சரிபாதியான உருவமாயும் மண்டலத்தை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். இந்தச் சுத்தமான இடத்தில் தான் பின்னுடிச் செய்யப்போகிற யாகமானது செய்யப்படவேண்டும். ஆபஸ்தம்பரும் தன்னுடைய தர்மஸூத்ரத்தில் கோமயத்தால் மெழுகப்பட்ட இடத்தில் உட்கார்ந்துகொண்டு சாப்பிடவேண்டுமென்று சொல்லியிருக்கிறார். இப்படிச் சுத்தம் செய்யப்பட்ட இடத்தில் ஒரு பாத்ரத்தை வைக்கவேண்டும். பராசர ஸ்ம்ருதிக்கு வ்யாக்யானம் செய்த மாதவாசார்யர், தங்கம், வெள்ளி அல்லது வெண்கலத்தால் செய்யப்பட்ட பாத்ரமாவது, அல்லது ஒரு தாமரை இலையையாவது உபயோகிக்கலாம் என்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார். (2)ஆபஸ்தம்பரும் உலோஹத்தால் செய்யப்பட்டபோஜனபாத்ரத்தைச் சாம்பல் முதலிய வஸ்துக்களால் சுத்தம்செய்யவேண்டுமென்றும் மரப்பாத்ரத்தைச் சுரண்டுவதால் சுத்திசெய்யவெண்டும் என்றும் கூறியிருக்கிறார். தத்காலம் வாழை இலை பெரும்பாலும் உபயோகித்து வரப்பட்டு வருகிறது. இப்பேர்ப்பட்ட பாத்ரத்தில் பகவானுக்கு நிவேதனம் செய்யப்பட்ட ஆஹாரத்தை வைக்கவேண்டும்.ஸ்வீகரிக்கக்கூடிய ஆஹாரம் இன்னது, நிஷித்தமான ஆஹாரம் இன்னது என்று விஸ்தாரமாய் ஸூத்ரகாரரான மஹர்ஷிகளும், நமதுபூர்வாசார்யர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இதைப்பற்றிப் பின்னுடி விசாரிப்போம். ஸ்வீகரிக்கக்கூடிய ஆஹாரத்தைப் பகவானுக்கு நிவேதனம் செய்து, அதைப்போஜன பாத்ரத்தில் வைத்துக்கொண்டு ஜலத்தால் ப்ரோக்ஷித்து வ்யாஹ்ருதிகளுடன் கூடின (3)காயத்ரீ மந்த்ரத்தை மனஸால் சொல்லிக்கொண்டு பகவானை த்யானம் செய்யவேண்டும். அந்த மந்த்ரத்தின் அர்த்தம் என்னவென்றால், "எந்தப்பகவான் நமக்குள் அநுப்ரவேசித்து நம்முடைய புத்தியை ஸதா ப்ரேரணம் செய்கிறாரோ அப்பேர்ப்பட்டவரும், ஸகலலோகங்களுக்கும் காரணபூதராயும், ஸ்வயம்ப்ரகாசராயும், எல்லோராலும் தங்களுடைய இஷ்டஸித்தியின்பொருட்டு ப்ரார்த்திக்கப்படவேண்டியவராயும், ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் உண்டான ஸம்ஸாரபந்தத்தை எரித்துப்போக்கக்கூடியவராயுமுள்ள (அந்தப்) பரமாத்மாவை த்யானம்பண்ணுகிறோம்" என்று இந்த மந்த்ரத்தைச்சொல்லி த்யானம் செய்தவுடன்ஜலத்தை யெடுத்துக்கொண்டு அன்னத்தைச்சுற்றி ப்ரோக்ஷித்து, அதைஅநுக்ரஹித்து அதற்கு ஆயுப்ரதமான சக்தியைக்கொடுக்கவேண்டும் என்று 'தேவ

(2) ஆபஸ்தம்ப தர்ம ஸூத்ரம் 1—5—17

(3) ஓம் பூர்புவஸ்ஸுவ: । ஓம் தத்ஸவிதுர்வரேண்யம், பர்கோ தேவஸ்ய தீமஹி, தியோ யோ ந: ப்ரசோதயாத் ।

ஸவிதஃ ப்ரஸுவ’ என்னும் மந்த்ரத்தைச்சொல்லிக்கொண்டு, பகவானை ப்ரார்த்திக்கவேண்டும். அதன் அர்த்தம்— எல்லாவஸ்துக்களுக்கும் காரணபூதரான ஹேபகவானே! உம்முடைய சக்தியை இந்த அன்னத்துக்குள் அநுப்ரவேசமாகும்படி செய்யும். என்பது இப்படி ப்ரார்த்தித்தவுடன் அன்னசுத்தியாகியநெய்யைக்கொஞ்சம் சேர்த்தவுடன் ‘ஸத்யம் த்வர்தேந பரிஷிஞ்சாமி’ என்கிற மந்த்ரத்தைச்சொல்லிக்கொண்டு ஜலத்தால் அன்னத்தை ப்ரோக்ஷிக்கவேண்டும். அதன் அர்த்தம்— ஹே ருதமான அன்னமே உன்னை ஸத்யமாகிற ஜலத்தால் தெளிக்கிறேன் என்பது. இது பகலில் சொல்லவேண்டியது. ராத்ரிவேளைகளில் இந்தமந்த்ரமானது ருதம் த்வா ஸத்யேந பரிஷிஞ்சாமி(ஹே ருதமான அன்னமே உன்னை ஸத்யமாகிற ஜலத்தால் தெளிக்கிறேன்)- என்று சொல்லப்படவேணும். (1)ஸத்யமாவது வாயால் உள்ளது உள்ளபடிசொல்லுதல். அதாவது நிஜத்தைப்பேசுவது.(2)ருதம் என்பது மனஸால்வஸ்துவை உள்ளபடி அறிகிறது. மநோவாக்காயங்களாலே ஸத்யத்தை அவலம்பிப்பது ஸர்வஜநங்களுக்கும் முக்யமானகடமையானதாலும், அன்னமும்ஜலமும்ப்ராணதாரணமான வஸ்துக்களானதாலே, அவைகளை ஸத்யத்தின் ஸ்வரூபம் என்று சொல்லுவதைக் காட்டிலும் மேலான வேறு உத்தமமான பதவி அதற்குக் கல்பிக்க முடியாததனுல், அவைகளை ஸத்யத்தின் ஸ்வரூபம் என்று அநுஸந்தானம் செய்யவேணும். ஏன் என்றுல் ஜலமும் ஆஹாரமும் ப்ராணனைக் காப்பாற்றுகின்றன. இப்படிக்காப்பாற்றப்பட்ட ப்ராணனை ஸத்யத்துக்கு அர்ப்பணம் செய்யவேணும் என்று கருத்து.

இவ்வளவு பூர்வாங்கமானபிறகு ஆபோசனம் என்னும் க்ரியை செய்யப்படவேணும்— அன்னம் வைக்கப்பட்டிருக்கும் இலையையோ பாத்திரத்தையோ இடதுகை விரல்களால் பிடித்துக்கொண்டு, வலது கையைக் குழித்துக்கொண்டு அதில் பகவானுக்குத் திருமஞ்சனம் செய்யப்பட்ட தீர்த்தத்தில், அது இல்லாவிட்டால் சுத்த ஜலத்தில் கொஞ்சம் சேர்த்துக்கொண்டு அந்த ஜலத்தை ‘அம்ருதோபஸ்தரணமஸி’ என்னும் மந்த்ரத்தைச் சொல்லிக்கொண்டு சாப்பிடவேணும், இப்படிச் சாப்பிடுவதற்கு ஆபோசனம் (ஜலத்தைச் சாப்பிடுகிறது) என்று பெயர் மந்த்ரத்தின் அர்த்தம் என்னவென்றுல், ஹே அம்ருதமான ஜலமே, நீ மெத்தையாயிருக்கிறுய்.

(இன்னும் வரும்)

ஆர். ஸ்ரீநிவாஸராகவய்யங்கார்.

---

(1) வாசா யதார்த்தபாஷணம் ।

(2) மனஸா யதார்த்த வஸ்துசிந்தநம் ॥

ஸ்ரீ:

குருபரம்பரைகளின் பராமர்சம்.

பல்லக்யாம் யஸ்ய முகுந்ததேவ விபுநா ஸ்கந்தே த்ருதாரோஹிதஃ
ப்ராப்தஃ ஸ்ரீபுருஷோத்தமம் ப்ரதிஷ்டிதவாந் பக்தவ்ரஜ திவ்யாலயஃ ।
ஸ்வேதச்சத்ர சாமரத்வந்த்வ சிபிகா ஹஸ்த்யஶ்வவ்ருதோ
அந்வாதீநி யயௌ ஸ்வதேஶம் விஜயீ கர்ணாடஸிம்ஹாஸநம் ॥

இதன் அர்த்தம்,

முகுந்ததேவன் என்ற அரசனால் தனது தோளில் தரிக்கப்பட்ட பல்லக்கில் வீற்றிருந்து புருஷோத்தமம் என்ற திவ்யதேசத்திற்கு எழுந்தருளி, அவ்விடத்தில் பக்த விக்ரஹங்களை ப்ரதிஷ்டை செய்வித்து, யானை, குதிரை ரத்நப் பல்லக்கு, இரண்டு குடைகள், இரண்டு சாமரங்கள் முதலிய பிருதுகளையடைந்து ஜயத்துடன் மீண்டும் கர்நாட தேசத்தை அடைந்தார் என்பது.

இந்த ஸ்லோகத்தை ஸ்ரீ அஹோபிலமடத்தின் ஸ்தாபகரான ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் விஷயமானதென்று ஸாதாரணமாய் இப்போது ஸந்நிதி சிஷ்யர்கள் அநுஸந்தித்து வருகிறார்கள். புருஷோத்தமம் என்பது பூரி அல்லது ஜகந்நாதம் என்று ப்ரஸித்திபெற்ற ஸ்வயம்பூ ஸ்தலத்தின்வேறு ஒரு பெயர். இந்த ஜகந்நாதம் என்ற ஊருக்கு ஸமீபத்திலுள்ள தேசத்தை முகுந்ததேவன் என்ற ஒரு அரசன் ஆண்டுவந்ததாகவும், அவன் இந்த ஸ்லோகத்தினால் காட்டப்பட்ட ஆசார்யரை அடைந்தான் என்றும், அந்த ராஜாவே, தன் ஆசார்யனிடம் பக்தியால் தானே அவருடைய பல்லக்கை எழுந்தருளப் பண்ணினதாகவும், அந்த ஜகந்நாதம் என்ற க்ஷேத்ரத்தில் நம்மாழ்வார், எம்பெருமானார் முதலிய பக்தவிக்ரஹங்களைப் பிரதிஷ்டை பண்ணிவைத்து, அந்த ராஜாவால் கொடுக்கப்பட்ட யானை குதிரை முதலிய பிருதுகளுடன் கர்நாட ராஜ்யத்தில் தன் ஆஸ்தானத்துக்கு அந்த ஸ்வாமி எழுந்தருளினார் என்று கருத்து.

ஆனால் இந்த ஸ்லோகம் ஸ்ரீ ஆதிவண் சடகோபஸ்வாமியைக் குறித்து ப்ரவர்த்தித்தது அல்லவென்றும், ஆறாவது பட்டத்தை அலங்கரித்த ஸ்ரீபராங்குச ஸ்வாமியைப் பற்றின பிருதபத்யம் என்றும் வ்யக்தமாக ஏற்படுகிறது. இதற்கு அநேக காரணங்களிருக்கின்றன. சில க்ரந்தங்களிலிருந்தும், சில சிலா சாஸனங்களிலிருந்தும், சில காலத்தின் பௌர்வாபர்யத்தினாலும் இதை நிரூபிக்கலாம்.

க்ரந்தமுகமாவது:—ஸ்ரீ அஹோபிலமடத்தின் ஏழாவது பட்டத்தை அலங்கரித்த இளங்காடு வங்கீபுரம் ஸ்ரீ சடகோப ஸ்வாமியால் செய்தருளப் பட்ட "வாஸந்திகாபரிணயம்" என்ற நாடகத்தின் பூர்வரங்கத்தில் ஆதி வண் சடகோப ஸ்வாமியைப்பற்றிச் சொல்லிவிட்டு பின்வருமாறு கூறப்பட் டுள்ளது:—

நட:— நாராயணோ முநிவரோ(அ)த பராங்குஶாக்ய:
ஸ்ரீஸ்ரீநிவாஸ முநிரப்யத வண் ஶடாரி: ।
பஶ்சாத் பராங்குஶ மஹாமுநிராவிராஸீத்
இத்யஞ்ஜநா ஜகதி ஹந்த ந ஜாநதே கிம் ॥

நடன்—ஸ்ரீ நாராயணஸ்வாமி, பிறகு பராங்குசஸ்வாமி, பிறகு ஸ்ரீநி வாஸஸ்வாமி, பிறகு வண்சடகோபஸ்வாமி, பிறகு பராங்குசஸ்வாமி அவத ரித்தார், என்று ஜனங்களெல்லாரும் அறியமாட்டார்களா என்ன?

அஸ்ய பராங்குஶமுநேர் நிகிலலோகவிதிதவ்ருத்தாந்தம் ஜாநீஹி

இந்தப் பராங்குசஸ்வாமியினுடைய எல்லா லோகங்களிலும் ப்ரஸித்த மான ஸமாசாரத்தைத் தெரிந்துகொள்.

"பரிவர்த்யமயஸ்ய...................................
....................................கண்டாடி ஸிம்ஹாஸநம் ॥

இந்த ஶ்லோகத்தின் அர்த்தம் முதலிலேயே சொல்லப்பட்டிருப்பதைக் காண்க.

கர்ணாடவிஷயே விஹிதாஶ்சர்யே ஸபாமத்யே ஸ்திதஸ்ய ஸ்வாமிந: தஸ்ய ஸூரி விபஶ்சித்கவிஶ்ரேஷ்டேந வாஹிநீபதிநா ப்ரதிதஶ்லோகமவேஹி விரசிதவத்யம் ॥

கர்நாட தேசத்தில் ஆச்சரியகரமான ஸபையில் முன் நின்ற இந்த ஸ்வாமி விஷயமாகப் பண்டிதர்களிலும் கவிகளிலும் ச்ரேஷ்டரான வாஹிநீ பதி என்பவரால் சொல்லப்பட்ட பிருதஶ்லோகம் என்று தெரிந்துகொள்.

இன்னும் இவரைப்பற்றி,

வ்யாஸஸ்ய பராங்குஶ: ஶ்ருதீநாம்
ஃபணிராஜஸ்ய பராங்குஶோ த்விதீய: ।
ஶாக்யார்ஹதயோ: பராங்குஶஸ் த்ருதீய:
ஶிவவிஷ்ண்வைக்யவாதிநாம் துரீய: ॥

இவர் ஸந்யாஸாச்ரமத்திலிருப்பவர்களுக்குள் முதல்வர், ஆதிசேஷனுக்கு இரண்டாவதானவர், ப்ருஹஸ்பதி சுக்ரர்களுக்கு மூன்ருவதானவர், சிவ விஷ்ணுப்ரும்மாக்களுக்கு நான்காவதானவர், என்றும் ப்ரஸித்திபெற்றவர்.

இந்த க்ரந்தத்தில் ஸ்பஷ்டமாய் இந்த பிருதபத்யம் வாஹீநீபதி என்பவரால் செய்யப்பட்டது என்றும், ஸ்ரீ ஷஷ்டபராங்குச ஸ்வாமியைக் குறித்துச் செய்யப்பட்டது என்றும், ஸ்பஷ்டமாகிறது.

இந்த ஶ்லோகத்தின் அர்த்தத்தையுடைய மற்ருெரு ஶ்லோகம் ஆத்ரேய அஹோபிலகுரு என்பவரால் செய்யப்பட்ட பெரியவாச்சான்பிள்ளை ராமாயண தனிச்லோகியின் ஸம்ஸ்க்ருத மொழிபெயர்ப்பாகிய 'ப்ரத்யேகஶ்லோகவிஸ்தாரம்' என்னும் க்ரந்தத்தில் காணப்படுகிறது. அது என்னவென்ருல்:—

ஐக்தவுர திஷ்டா நீலாத்ரௌ கல்பிதா யேநஸ-ஞ்லிணா ।
ஸவ-ர்தஞ்ஸ்வதஞ்ரம் பராங்குஶ முநிம்ஹஜெ ॥

"நீலாத்ரி என்னும் திவ்யதேசத்தில் பக்தவிக்ரஹப் பிரதிஷ்டை செய்து அருளின ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர் என்று பிருது உள்ள பராங்குசமுனிக்குத் தண்டம் ஸமர்ப்பிக்கிறேன்" என்று.

நீலாத்ரி என்பது ஜகந்நாதத்துக்கு இன்னொரு பெயர். இந்த ஶ்லோகத்தின்படி ஜகந்நாத க்ஷேத்ரத்தில் பக்த விக்ரஹங்களை ப்ரதிஷ்டை பண்ணினவர் ஸ்ரீ பராங்குச ஸ்வாமி என்று ஸ்பஷ்டமாயிருக்கிறது. இந்தப் பராங்குச ஸ்வாமி ஷஷ்டபராங்குச ஸ்வாமியே.

ஆகையால் மேலே குறிக்கப்பட்ட இரண்டு க்ரந்தங்களிலிருந்தும் இந்த ஶ்லோகம் ஸ்ரீ ஆதிவண் சடகோபஸ்வாமியைப் பற்றினது அல்லவென்று தெளிவாகிறது.

சிலாசாஸனங்கள்:— துலுக்கர்களுடைய உபத்ரவத்தால் கர்நாட ராஜ்யத்தின் ராஜதானி விஜயநகரத்திலிருந்து பெனுகொண்டா என்னும் பட்டணத்துக்கு 1565ஆல் மாற்றப்பட்டது. அப்போது வீரப்ரதாப ஸ்ரீரங்கராய தேவமஹாராயர் கர்நாட ராஜ்யபரிபாலனம் பண்ணிக்கொண்டிருக்கும் ஸமயத்தில், வைஷ்ணவமதத்துக்குச் சத்துருவான அநந்தப்புரத்தில் (Anantapur) ஆண்டுகொண்டிருந்த ஹண்டேவாரு என்னும் பெயர் கொண்ட சைவசிற்றரசனின் ஸஹாயத்துடன் கோல்கொண்டா என்னும் ராஜ்யத்தை ஆண்டுவந்த துலுக்க அரசனை இப்ராஹீம் Ibrahim II அஹோபிலத்தைப் பிடித்துக்கொண்டு வெகு உபத்திரவம் செய்துகொண்டிருந்தான். இந்த விஷயம் கீழ் அஹோபிலத்தில் கஞ்சுகும்பாகோபுரத்துக்கு வெளியிலிருக்கும் ஒரு

ஸ்தம்பத்தில் வெட்டப்பட்டிருக்கிறது. அந்த ஸமயத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீவண் சடகோப (ஜீயஐயங்கார்) ஸ்வாமி ஸ்ரீரங்கராயரிடம் சொல்லி அவரும், கொண்டராஜா வெங்கிடதிம்மராஜன் என்று ஒரு சிற்றரசனை அனுப்பி, அந்தச் சிற்றரசன் சத்ருக்களை அஹோபிலத்தை விட்டு வெருட்டிவிட்டான். இந்தச் சிற்றரசன் செய்த உபகாரத்திற்கு அடையாளமாக அந்த வம்சத்தார்களுக்குக் கோவிலில் சிலமரியாதைகள் ஏற்படுத்தப்பட்டன. இந்தச்சிற்றரசன் பேரனுன வெங்கடராஜ தேவ சோடமஹாராஜா தங்கள் வம்சத்தாருக்கு ஏற்பட்ட மரியாதையைப் பெற்றுக்கொள்ள இந்த அஹோபிலம் ஸந்நிதிக்கு வந்தான். இந்த ஸமாசாரம் கீழ் அஹோபிலத்தில் ஸ்ரீநரஸிம்மஸ்வாமிகோவிலில் கஞ்சுகும்பாகோபுரத்துக்கு வலது பக்கத்தில் நாட்டப்பட்டிருக்கும் நாலாவது ஸ்தம்பத்தில் தெலுங்கு பாஷையில் தெலுங்கு அக்ஷரத்தில் வெட்டப்பட்டிருக்கிறது. இது ஸ்ரீரங்கராய தேவமஹாராயருடைய ஆளுகைநாளில் சகஷு 1506 (கி. பி. 1584) க்குச்சரியான தாரணஷு வைகாசிமீ சுத்த சதுர்த்தசி தினம் ஏற்பட்டது. இந்த ஸ்தம்பத்தின் சாஸனத்தில் வண்சடகோபஜீயரைப்பற்றி எழுதும்போது பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது; தமிழில் அதன் சரியான மொழிபெயர்ப்பு:—“ஸ்ரீ அழகிய சிங்கர் ஸந்யாஸம் ப்ரஸாதித்த ஆதிவண்சடகோபஜீயருக்கு ஏழாவதாயும், ஸ்ரீபுருஷோத்தமத்தில் ஆழ்வார்களைப் பிரதிஷ்டை செய்வித்து முகுந்த தேவனல் பூஜையைக்கொண்ட ராமாநுஜ தர்சனேத்தாரகரான ஸ்ரீபராங்குச மஹாமுனியின் சிஷ்யரான ஸ்ரீசடகோபஸ்வாமி”— என்பது.

இந்த சாஸனத்தால் ஜகந்நாதத்தில் ஆழ்வார்களை ப்ரதிஷ்டை செய்வித்தவர் ஸ்ரீஷஷ்டபராங்குசஸ்வாமி என்று விசதமாய் ஏற்படுகிறது.

காலத்தின் பௌர்வாபர்யம்:— ஸ்ரீ ஆதிவண்சடகோப ஸ்வாமி, ஸ்ரீதேசிகனுக் குப்ரசிஷ்யரான “ கடிகாசதம் அம்மாள் ” என்று ப்ரஸித்திபெற்ற வாத்ஸ்ய வரதாசார்யரின் சிஷ்யர், ஸ்ரீதேசிகன் காலம் 1268—1369 கி. பி. ஸ்ரீதேசிகன் ப்ரசிஷ்யரான கடிகாசதம் அம்மாள் அக்காலத்துக்கு நூறுவருஷங்களுக்குப்பின்பு இருத்தல்முடியாது. அவர் சிஷ்யரான ஸ்ரீஆதிவண்சடகோப ஸ்வாமி அவர் காலத்திலேயே இருந்திருக்கவேண்டும். ஆகையால் இவர் காலம் கி. பி. 1470-க்கு முன்னிருக்கவேண்டும். சரித்ர விமர்சத்தின்படி அவர் கி. பி. 1379-முதல் 1459-வரை எழுந்தருளியிருந்ததாக ஏற்படுகிறது. இந்தக்காலத்தில் ஜகந்நாதக்ஷேத்ரத்துக்கு ஸமீபத்தில் முகுந்ததேவன் என்று ஒரு ராஜன் இருந்ததாக ஒரு தஸ்தாவேஜியிலிருந்தும் ஏற்படவில்லை. ஆனல் முகுந்தபாஹுபலேந்த்ரன் என்று ஒரு அரசன் பதினரு

வது நூற்றுண்டில் அந்த ப்ரபந்தத்தில் இருந்ததாகச் சில 1-சிலாசாஸனங்களால் ஏற்படுகிறது. இப்பெயர்கொண்ட வேறு ஒரு அரசன் ஆதிவண்சடகோப ஸ்வாமி காலத்திலிருந்ததாக ஏற்படவில்லை. முகுந்த தேவனை, ஸ்ரீ ஆதிவண்சடகோபஸ்வாமியினுடைய பல்லக்கை எழுந்தருளப்பண்ணினவனுகச் சொல்லுவதில் நூறுவருஷத்துக்குப் பிறகு ஆண்ட ஒரு அரசனை நூறுவருஷங்களுக்கு முன்னிருந்ததாகச் சொல்லவேண்டிவருகிறது. இது சரித்ரரீதியிலும் ஸ்வபாவத்திலும் அஸங்கதமாகக்காணப்படுகிறது.

ஸ்ரீஷஷ்டபராங்குசஸ்வாமியோ கி. பி. 1565-ல் தலிகோடா என்னும் ஊரில் நடந்தயுத்தத்தில் மடிந்த அளியராமராயருக்கும் அவர் மைத்துனனை விஜயநகர சக்ரவர்த்தி ஸதாசிவராயருக்கும் ஆசார்யராயிருந்ததாகச் சிலசிலாசாஸனங்களிலிருந்து வெளியாகிறது. இன்னும் சிலசாஸனத்தாலும் இந்த ஷஷ்டபராங்குசஸ்வாமி கி. பி. 1564-ல் வஸித்திருந்ததாகத் தெரியவருகிறது.

இந்தக்காலத்தில் முகுந்ததேவன் அல்லது முகுந்தபாஹுபலேந்த்ரன் என்ற ஒரு அரசன், ஜகந்நாதக்ஷேத்ரத்துக்கு ஸமீபத்திலுள்ள தேசத்தில் ஆண்டுவந்தது சில சிலாசாஸனங்களால் ப்ரஸித்தம். ஆகையால் ஆதியில் சொல்லப்பட்ட ஶ்லோகத்தில் குறிப்பிட்ட முகுந்ததேவன், ஸ்ரீஷஷ்டபராங்குச ஸ்வாமியின் பல்லக்கை தான் எழுந்தருளப்பண்ணி இருக்கக்கூடும் என்பதில் ஸந்தேஹமில்லை. ஆகையால் வ-ஹெவ-ஃ௦ யஜூ-என்று முதலில் குறிக்கப்பட்ட ஶ்லோகத்தால் ப்ரதிபாத்யரான ஆசார்யன் ஸ்ரீஷஷ்ட பராங்குசஸ்வாமியே என்பது நிச்சயம்.

இந்த ஸ்வாமிகளைப்பற்றியும், அவர் காலங்களைப்பற்றியும், அவர்கள் செய்த கார்யங்களைப்பற்றியும் பிறகு விசாரிப்போம்.

ஆ. ரங்கஸாமி ஸரஸ்வதி.

குருகுலவாஸம்.

குரு குலவாஸம் என்பது ஆசாரியன் வீட்டிலிருந்து கொண்டு நியமத்தோடு பணிவிடைகள் செய்வது என்று பொருள்தரும். நம் முன்னோர்கள் தங்கள் தங்களுக்கு வேண்டிய ஜ்ஞானத்தைப் பெறுவதற்காகத் தங்கள் தங்கள் ஆசாரியர்களிடத்தில் சென்று பலபலநாள் பலபல வகைப்பட்ட கஷ்டங்களோ

(1) ஸ்ரீகூர்மத்தில் பெருமாள் கோவிலில் ஆஸ்தானமண்டபத்தின் முதல் வரிசையில் 3-வது ஸ்தம்பத்தில் வெட்டப்பட்ட சிலாசாஸனம், சகஸ்ரு 1526 (1604). ஸிம்மாசலத்தில் பெருமான் கோவிலில் ஆஸ்தானமண்டபத்தில் ஒரு உருண்டைத் தூணில் வெட்டப்பட்ட சிலாசாஸனம் சகஸ்ரு 1526. (கி. பி. 1604.)

டுகூடப் பலபல வகைகளாகப் பணிவிடைகள் (சுஸ்ரூஷைகள்) செய்து ஆசாரியர்கள் திருவுள்ளம் உகக்கும்படி செய்து அவர்களிடத்தில் உபதேசம் பெற்று ஞானவான்களா யிருந்தார்கள்.

ஸ்ரீகிருஷ்ணபகவான் பகவத்கீதையில் "சாஸ்திர முறைப்படி அடைக்கலம் புகுந்தவர்களுக்கும், கிரமமாகக் கேட்டவர்களுக்கும், திருப்திகரமாகப் பணிவிடை செய்தவர்களுக்கும் தத்வம் அறிந்த ஞானிகள் கிருபைசெய்து ஜ்ஞானோபதேசம் செய்வார்கள்" என்று (அத்தியாயம் ச, சுலோகம் ௩௪) அருளிச் செய்திருக்கிறார்.

"வித்யையைப் பெறுவதற்கு மூன்று வழிகள்தான் உண்டு. முதலாவது ஆசாரியன் உகக்கும்படி பணிவிடைகள்செய்தல் ஆசாரியனுக்குத் திருப்தியாகும்படி பொருள் கொடுப்பது. இரண்டாவது வழி. அவர்களுக்கு வேண்டிய வித்தையைக் கொடுத்தல், என்றால் அவர்களுக்குத் தெரிந்துகொள்ளவேண்டிய வித்தையைத் தங்களிடமிருந்தால் அதை அவர்களுக்குச் சொல்லிக்கொடுத்து, தங்களுக்குவேண்டியது அவர்களிடமிருந்தால் அதைப்பெறுதல், இது மூன்றாவது வழி. இம் மூன்று தவிர நாலாவது வழியில்லை" என்று கூறப்பட்டிருக்கிறது.

இங்கு ஆசாரியனுக்குப் பொருள் கொடுப்பதென்பதுவேறு, குருதக்ஷிணையென்பது வேறு. இங்கு, பொருள்கொடுப்பதென்பது எதுவென்றால், பணிவிடை செய்ய ஸௌகர்யமில்லாதவர்கள் ஆசாரியர்கள் மனமிரங்கும்படி அவர்களுக்குத் திருப்தியாகப் பொருள் கொடுக்கவேண்டுமென்பதே, குருதக்ஷிணை யென்பது வித்யோபதேசம் பெற்று முடிவுற்றபிறகு ஆசாரியன் உகக்கும்படி பொருள் கொடுப்பதாகும். இங்கேபொருள் என்பது பணம் என்பது மாத்திரமேயல்ல, எல்லாவிதமான வஸ்துக்களையும் குறிக்கும். ஆசார்யன் இஷ்டப்பட்டுக் கேட்கும் எதையும் கொடுக்கவேண்டும். அதுவே குருதக்ஷிணையாகும். இப்படி ஆசாரியனுக்கு ஸமர்ப்பிக்கும் குருதக்ஷிணையானது இவனது ஸந்தானம் நசியாமல் மேல் மேல் வளருவதற்கு ஹேதுவாகும் என்று தைத்திரீய உபநிஷத்தில் (சீக்ஷாவல்லி அநு-கக வாக்கியம்-ரு) கூறப்பட்டிருக்கிறது. ஆகவே குருதக்ஷிணை ஸமர்ப்பிக்கப்படாவிட்டால் ஸந்தானம் விச்சேதமில்லாமல் பெறுகாதென்று ஏற்படுகிறது.

நம் முன்னோர்களில் பலர் (பெரும்பாலோர்) ஸந்ததிதழைப்பதே முக்கியமான விஷயமென்று கருதி அதற்கேற்றவாறு நடந்துவந்திருக்கிறார்கள். அதற்காகப் பலர் பலபலபாடு பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மனிதனும் இதில் அக்கரைப் படவேண்டுமென்று நயமும் பயமும் காட்டிக் கிரந்தங்களிலும் கதைகளிலும் எழுதியிருக்கிறார்கள். இதைப்பற்றிப் பின்னேவிரிவாய் வெளியிடுவோம். நம்மவர்கள் இம்மை மறுமையிரண்டில் மறுமையையே முக்கியமாகக் கைக்கொண்

டவர்கள். அதற்கே ஆமுஷ்மிக மென்றும் பாரலௌகிகம் என்றும் பெயர். ஆமுஷ்மிகத்திற்கு விரோதமாகுமானால் எந்த இம்மை (ஐஹிக) ப்பயன்களையும் கைவிட வேண்டுமென்பதே நம்மவர்களின் கொள்கை. இம்மைப் பயன்களுக்கு விரோதமாவதானாலும் மறுமைப்பயன்களுக்கு அநுகூலமானவழியில் நடந்து கொள்ளவேண்டியதே அவசியம் என்பதுதான் அவர்களின் ஆழ்ந்த கருத்து.

ஆசாரியர்களில் சிலர், சிஷ்யன் வித்யோபதேசம் பெறுவதற்குமுன்னே செய்த பணிவிடைகளே போதுமென்று நினைத்துக் குருதக்ஷிணை வேண்டா மென்று மறுத்துவிட்டிருக்கிறார்கள். அப்படி மறுத்தும் சில சிஷ்யர்கள் ஆசாரியர்களை நிர்பந்தித்துக் குருதக்ஷிணை கேட்கும்படிசெய்து அதைக் கொடுத்து ஸந்தோஷமாய் விடைபெற்றுப் போவதுமுண்டு.

இப்படிக் கீழ்ச்சொன்ன மூன்று வழிகளில் மூன்றாவது வழி அதாவது வித்தியாவிநிமயம் (தங்களிடம் இருப்பதை அவர்களுக்குச் சொல்லி அவர்களிடம் இருப்பதைத் தாங்கள் பெறுதல்) வேதாந்த வித்யை விஷயத்தில் ஸம்மதமன்று. மற்ற வித்யைகளைக் கிரஹிக்கும் விஷயத்தில் மாத்திரமே ஸம்பந்திக்கும்.

அப்படிப்பட்ட மூன்று வழிகளில் பணிவிடையே முக்கியமானது. அது பற்றியே அதுமுதலில் கூறப்பட்டிருக்கிறது. தர்மாதர்மங்களைப் பகுத்தறிந்து கொள்ளுவதற்குக் கருவியாகச் சொல்லப்பட்ட காரணங்களில் பெரியோர்களின் அநுஷ்டானமும் ஒன்று. நம்போல்பவர்களுக்கு அதுவே முக்கியமென்றும், அவர்களுக்கு (பெரியோர்களுக்கு) வேதஸ்மிருதிகளும் பிரமாணமென்றும் காட்டப்பட்டிருக்கிறது. ஆசாரியர்களின் ஸமீபத்திலேயே பலநாள் பழகுவதால் அநேக தர்ம ஸூக்ஷ்மங்கள் ஸுலபமாகத் தெரிந்துகொள்ளக் கூடியனவாகின்றன.

முக்கியமாக உபதேசம் செய்யவேண்டிய விஷயங்களே அநேகமாய் இருக்கிறபடியால் ஒவ்வொரு ஸூக்ஷ்மமும் உபதேசம் செய்ய முடியாதன்றோ? நித்யப்படி அநுஷ்டான (ஆந்ஹிக) விஷயத்தில் பலபல நுணுக்கங்கள் தெரியவேண்டியிருக்கின்றன. அவற்றில் சிலவற்றின் சிறுசிறு மாறுதல்களுக்கும் விரோத பலன்கள் சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றன. நம் நண்பர்களில் பல புத்திமான்கள் ஒவ்வொரு விதமான விதிக்கும் தங்கள் புத்தியால் காரணம் கண்டு பிடித்துச் சொல்ல வல்லவர்களா யிருக்கிறார்கள். நமக்கு அவ்விதப் பழக்கமில்லை. அதை நாம் கௌரவிப்பதுமில்லை. பெரியோர்கள் தீர்க்காலோசனையோடும் தீர்க்க தர்சனத்தினாலுந் தான் விதி நிஷேதங்களை (இது செய் என்கிற ஏவல் விதி, செய்யாதே என்கிற ஏவல் நிஷேதம்.) ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

எது எப்படியானாலும் பெரியோர்களின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டியது நமது கடமையே யன்றி, அதற்குக் காரணம் கேட்கவாவது, அதற்கு மாறுபாடாக நடக்கவாவது நமக்கு அதிகாரமில்லை. நம்முன்னோர்கள் அரிய தவங்கள் செய்தவர்கள். அந்தத் தபோபலத்தினால் ஜ்ஞான த்ருஷ்டி பெற்றவர்கள். ஜ்ஞானதிருஷ்டியாவது வெகு நாள் முன்னே பின்னே வெகு தூரத்தோ கிட்டவோ நடந்த, நடைபெறப் போகிற, நடக்கிற எல்லா விஷயங்களையும் தெளிவாக அறிந்துகொள்ளும் சக்தியாகும்.

அப்படிப்பட்ட ஞானதிருஷ்டியின் வலிவால் நம்பூர்விக ருஷிகள் இம்மை மறுமைகளில்பின்னால் நேரிடக்கூடிய ஸுகதுக்க பலன்களை முன்னமே அறிந்து கொள்ளச் சக்தியுள்ளவர்களா யிருந்தார்கள். பொறாமையாவது மோசம் செய்யவேண்டு மென்கிற எண்ணமாவது கெடுதியுண்டாக்கவேண்டு மென்கிற எண்ணமாவது அவர்களுக்குக்கொஞ்சமும் இல்லாமலேயிருந்தது. அயலார் வாழுவதே தங்கள் வாழ்வாக நினைக்கும் தயாள குணம் அவர்களிடம் குடி கொண்டிருந்தது. சுயநலம் பாராட்டல் பிடிவாதம் முதலிய கெட்டகுண மொன்றும் அவர்களுக்கில்லாம லிருந்தது. ஆகவே அவர்கள் இம்மையில் செய்யப் படும் ஒவ்வொரு கிருத்தியங்களுக்கும் இம்மை மறுமைகளில் நேரிடக்கூடிய பலன்களை நன்கு அறிந்து விதி நிஷேதங்களை யேற்படுத்தி யிருக்கிறார்கள்.

பிள்ளைகளின் நன்மையைக் கோரியிருக்கும் தாய்தந்தையர்களைப் போலே நம்பூர்வ ருஷிகள் நமது நன்மையை நாடி சாஸ்திரங்களைச் செய்திருக்கிறார்கள். அதற்கு முரண்பட (விரோதமாக) நடப்பது நமக்குப் பெருத்த தீங்கையே விளைக்குமென்று நாம் திடமாய்ச் சொல்லுவோம். சிறு பிள்ளைகள், அறியாமை மேலிட்டுநன்மையைக்கோரித்தாய்தந்தையர்கள் தமக்குச்செய்யும் காரியங்களைப் பழிப்பதும் அழிப்பதும் செய்தாலும் தாய்தந்தையர்கள் பிள்ளைகளைப் பலவந்தம் செய்தோ, நல்வார்த்தை பேசியோ வழிக்குக்கொண்டு வருகிறார்களென்பது யாவராலும் மறுக்க முடியாத விஷயம். அதுபோலவே நம்பூர்விக ருஷிகள் சாஸ்திர மூலமாக நம் நன்மையைக் கோரி நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார்கள்.

நல்லபிள்ளையான ஒவ்வொருவனும் தாய்தந்தையர்கள் எப்போதும் நம் நன்மையையே நாடுவார்கள் என்று நம்பி அவர்கள் கட்டளைப்படி நடக்கவேண்டியது கடமையானதுஅல்லவா? அதுபோலவே நாமும் நம் முன்னோர்களின் தவம் அறிவு தயைமுதலியகுணங்களில் பரிபூரணமான நம்பிக்கைவைத்து அவர்கள் கட்டளையிட்ட (சாஸ்திரப்) படி நடந்துகொள்ள வேண்டியது கடமையாகும். அதை மீறி நடக்கவாவது, காரணம் கேட்கவாவது நாம் அதிகாரம் பெற்றவர்களல்ல. அதைமாற்றி வேறுவிதம் செய்யவும் இப்போதையநம்மவர்களில் யாருக்கும் யோக்கியதையில்லை. பத்து நூறு ஜனங்கள் கூடி அகாரணமாகப் பேர் வைத்து அபிமானிப்பதால் மாத்திரமே எவனும் ருஷியாக மாட்டான்.

ஆகவே நாம் அறிந்து கொள்ளவேண்டிய ஸூக்ஷ்மாநுஷ்டானங்களை எளிதில் அறியும்படிக்குச் சாதனமாகிறபடியால் குரு குலவாஸம் வெகு முக்கியமா

னது. இவ்விஷயமாக முராரியென்னும் கவியைப்பற்றிச் சொல்லியிருக்கும் சுலோகத்தின் தாத்பரியத்தை நாம் இங்கே யெடுத்துக் கூறுகிறோம். அதாவது:—'ஸரஸ்வதிதேவியை உபாஸிப்பவர்கள் பலபேர்களுண்டு. ஆனாலும் வாக்தேவதையின் ஸாரமான விலாஸமென்பதைக் குரு குலத்தில் சிரமப்பட்டமுராரியொருவரே யறிவர். வானரவீரர்கள் அனைவரும் ஸமுத்திரத்தைத் தாண்டிச்சென்றார்கள் என்றாலும், அதன் ஆழத்தை அவர்கள் அறிவார்களோ, பாதாளம் வரையில் முழுகியிருந்துகடைந்த மந்தரபர்வதத்திற்கல்லவோ அது தெரியும்" என்பதாம்.

ஸர்வேசுவரனாகிய பகவான் துஷ்ட நிக்ரஹம், சிஷ்டபரிபாலனம், தர்மஸம்ரக்ஷணம் இவைகளுக்காகப் பூலோகத்தில் அவதாரம்செய்தவை விபவரூபங்களென்று சொல்லப்படும். அந்த விபவாவதாரங்களில் முக்கியமானதும் ஆழ்வார்கள் அதிகமாக ஆழ்ந்து அநுபவித்ததும் ஸ்ரீ கிருஷ்ணாவதாரமேயாம். அந்த அவதாரத்தில் பகவான் குருகுலவாஸம் செய்ததும் சிரமப்பட்டுப் பணிவிடை செய்து ஆசாரியன் ஸந்தோஷிக்கும்படி நடந்துகொண்டதும் முக்கியமாகக் கவனிக்கத் தக்கன.

ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா ஸர்வஜ்ஞன். (எல்லா மறிந்தவன்.) ஒருவரிடம் போய்த் தெரிந்து கொள்ளவேண்டியது அவருக்கு யாதொன்றும் இல்லை. அப்படியிருந்தும் தர்மங்களை, தான் அநுஷ்டித்துக் காட்டினாலல்லது ஜனங்கள் அவற்றை ஆதரிக்கமாட்டார்களென்பதற்காகவே தவறாமல் தாம் செய்யவேண்டிய ஒவ்வொருமுக்கிய தர்மத்தையும் அநுஷ்டித்தவர். ஸாந்தீபினி என்னும் மஹரிஷியே ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்குக் குருவாக அமைந்தவர். குசேலர் என்று மறுபெயர் பெற்ற ஸுதாமா என்பவர் ஸதீர்த்தியர்; என்றால் கூட அத்தியயனம் செய்தவர். அத்தியயனம் முடிவுபெற்றுக் கிரமப்படி விவாஹம் நிறைவேறிய பிறகு அவருக்கு (குசேலர்க்கு) அனேகம் பிள்ளைகள் பிறந்தன.

இன்னும்வரும்.

ஸ்ரீசைலதாதாசாரியர்.

பூததயை.

தயை என்பது பிறர் வருந்துவதைப்பார்த்து மனம் சகிக்காமை என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

பிறர் வருந்துவதைப்பார்த்துத் தாமும் வருந்துவது தயை என்றுசிலர் சொல்லுகிறார்கள்.

தாம் ஒரு பயனை எதிர் பாராமல் பிறர் வருத்தத்தைப்போக்க முயலுவது தயை என்பது இன்னும் சிலர் கொள்கை.

இது இவ்வாறு மூன்றுவிதமாகச் சொல்லப்படுமானாலும், பிறருடைய துயரத்துக்குச்சமமான துயரமுண்டாவதும், பிறகு அதைப்போக்கிவிடவே

ண்டுமென்கிற முயற்சியும் உண்டாவதால், பிஞ்சு, காய், பழம் என்று ஓரே வஸ்துவின் மேல்மேல் அவஸ்தைகளை வெவ்வேறாகச் சொல்லுவது போல இம்மூன்றையும் தயை என்று சொல்லத்தடையில்லை.

கௌதமருஷி இந்தத் தயை முதலான (1). எட்டுக்குணங்களையும், பிராம்மணனுக்குவேண்டிய நாற்பது ஸம்ஸ்காரங்களையும் சொல்லி, ஒருவனுக்கு நாற்பது ஸம்ஸ்காரங்களிருந்தும் தயை முதலான எட்டுக்குணங்களில்லாவிட்டால் அவன் மோக்ஷத்தையடையமாட்டானென்றும், நாற்பது ஸம்ஸ்காரங்களுக்குள் சிலமட்டுமிருந்து தயை முதலானஎட்டுக் குணங்களுமிருந்தால் அவன் மோக்ஷமடைவான் என்றுஞ் சொன்னார். ஆகையினால் கர்ப்பாதானம் முதலிய ஸம்ஸ்காரங்களைக்காட்டிலும் எட்டுக் குணங்களே முக்யமானவையென்று ஆயிற்று.

அவ்வெட்டுக் குணங்களுக்குள்ளும், மஹர்ஷியினால் முதலில் அருளிச் செய்யப்பட்ட தயை என்னும் குணமே மற்ற எல்லாக் குணங்களுக்குள்ளும் பிரதான தவமாகும். ஏனென்றால், ஒருவனுக்கு மிகவும் சூக்ஷ்மமான விஷயங்களை உள்ளபடி அறிவதாகிய ஞானமும், இஷ்டமான கார்யத்தை நினைத்தபடி முடித்துக்கொள்ள வலிமையாகிய சக்திமுதலான குணங்கள் பலவிருந்தாலும், இந்தத்தயை என்னும் ஒருகுணமில்லாவிட்டால் அந்த ஞானசக்திகள் பிறருடைய தோஷங்களை நன்கு அறிவதற்கும், பிறருக்கு விசேஷமான சிக்ஷை செய்வதற்கும் உபயோகப்படுமேயல்லது பிறருக்கு உபகாரகமாக மாட்டா. தயை என்னும் குணமிருக்குமானால் அப்பொழுது அந்த ஞானம் பிறரிடமிருக்கும் நற்குணங்களை நன்குணரவும், சக்தி அதற்காகப் பிறருக்கு விசேஷமாக அனுகூலிக்கவும் உபயோகப்படுவதால், இந்தத் தயையே மற்றக் குணங்களுக்கும் நல்ல தன்மையைக் கொடுத்துத் தானும் பரோபகாரார்த்தமாவதால் மற்ற ஏழு ஆத்ம குணங்களைக்காட்டிலும் இது பிரதானமென்பதைத்தெரிவிப்பதற்காக இதை யெல்லாவற்றிற்கும் முதலில் அருளிச்செய்தார்.

இக்காலத்தில் பரோபகாரத்திற்காகவே பிறந்த பாஸ்சாத்திய வேதாந்திகளின் பிரதானசிஷ்யர்களான சிலர்மனதில், இந்தத்தயாபிரவாகம் உண்டாகிக்கரைபுரண்டு பிரவஹிப்பதால் இது தயையின்விபரீதபலத்தை விளைவிப்பதுமன்றி, வைதிகமதத்தை வேருடன் ஒழிக்கவும் காரணமாகிறது.

இவர்கள் தங்களுடைய தயையின் மிகுதியினால் யாவரையும் தம்மைப்போலவே கஷ்டப்படாமலும் சுகிகளுமாகச் செய்யவேண்டுமென்று கருதி, ஸர்வப்பி

(1) தயா ஸர்வபூதேஷு - க்ஷாந்தி: - அநஸூயா - ஶௌசம் - அநாயாஸ: - மங்கலம் - அகார்பண்யம் - அஸ்ப்ருஹா - இதி.

ராணிகளையும் சமமாகப்பாவிக்கவேண்டியது அவசியமென்றும், இதற்குவிருத்தமான ஜாதிபேதம் முதலானவற்றால் உண்டாகும் பேதபுத்தியை விட்டுவிடவேண்டுமென்றும் தமதிஷ்டப்படி ஆங்காங்கு உபதேசிப்பதோடு தம்உபதேசத்திற்குப் பிரமாணமாக ஸ்ரீ கீதைமுதலான க்ரந்தங்களி*லிருந்து பல ஸ்லோகங்களை எடுத்து அதற்கு விபரீதார்த்தங்களைச்சொல்லி, சாமான்யஜனங்களை மோஹிக்கச் செய்வதால் இவர்கள் அபிப்ராயத்தை மாற்றவேண்டியது சர்வரக்ஷகனை ஈசுவரன் கடமையாயும், இவர்கள்சொல்லும் ஸ்லோகத்தின்விபரீதார்த்தத்தை விலக்கி வாஸ்தவார்த்தத்தை வெளியிடவேண்டியது ஸாதுக்களின் கடமையாயும் முடிகிறது.

அதில் முதலில் இவர்கள் சொல்லும்தயையின் ஸ்வரூபத்தை விசாரித்துப்பிறகு இவர்கள்சொல்லும் ஸ்லோகார்த்தங்களை விசாரிப்போம்.

பிறர் துயரத்தைத் தீர்க்க முயலுவது தயையானாலும் கஷ்டப்படுபவன் மனதில் துக்கமென்று தோன்றுவதைத் தயையுள்ளவன் போக்கமுயலுவதா? அல்லது துக்கத்தைப் போக்கடிப்பவன் அபிப்பிராயப்படி துக்கமென்று தோன்றுவதைப்போக்கடிப்பதா? கஷ்டப்படுபவன் மனதின்படி துக்கத்தைப் போக்கடிப்பதனால் அவனுக்கு உள்ளபடி அனுகூலமே பிரதிகூலமாய்த் தோன்றினால் அந்த அனுகூலத்தைத் தயையுள்ளவன் நிவர்த்தித்து விடவேண்டிவரும். உதாரணமாக, வாழ்க்கைப் பட்ட ஒரு ஸ்திரீ தன்னிஷ்டப்படி யாருடனும் கலந்திருப்பது தனக்குச் சுகமாகவும் கணவன் ஒருவனையே விரும்பியிருப்பது துயரமாகவும் எண்ணினால், தயையுடைய பர்த்தா, தனது பத்னியைப் பரபுருடர்களைப் பேணும்படி செய்விப்பதும் தயையின் கார்யமாகிவிடும். பிறர்பொருளை அபகரிக்கும் திருடர்களைத் தண்டிப்பது அவர்களுக்குத் துயரமாய்த்தோற்றுவதால், அவர்களை, அன்னியர்கள்சொத்தை அபகரிக்கும்படி செய்விப்பதும் தயாவானான அரசன் கடமையாகும். புத்திரர்களுக்குப் பிதாசெய்விக்கும் ஞானானுஷ்டான உபதேசாதிகள் அவர்களுக்குத் துயரமாய்த்தோன்றினால் அவர்களை அஜ்ஞர்களாகவும், பதிதர்களாகவும் விட்டுவிடவேண்டியதும் பிதாவின் கடமையாகமுடியும்.

இது நிற்க துக்கத்தைப் போக்கடிப்பவன் அபிப்பிராயப்படி துக்கமென்று தோன்றுவதைப்போக்கடிப்பது தயையானால் முன் சொன்னதுபோலவே பிறரிடம் அநுகூலமாக இருக்குமவை ஒரு தயாவானுக்குப் பிரதிகூலமாய்த் தோற்றினால், பிறருடைய க்ஷேமத்தைக்கெடுப்பதும் தயாகார்யமாய்

---

* 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌨𑌯𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑍇 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇 𑌗𑌵𑌿 𑌹𑌸𑍍𑌤𑌿𑌨𑌿 ।
𑌶𑍁𑌨𑌿 𑌚𑍈𑌵 𑌶𑍍𑌵𑌪𑌾𑌕𑍇 𑌚 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌾𑌃 𑌸𑌮𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃 ॥
𑌆𑌤𑍍𑌮𑍌𑌪𑌮𑍍𑌯𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌸𑌮𑌂 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌯𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨 ।
𑌸𑍁𑌖𑌂 𑌵𑌾 𑌯𑌦𑌿 𑌵𑌾 𑌦𑍁𑌃𑌖𑌂 𑌸 𑌯𑍋𑌗𑍀 𑌪𑌰𑌮𑍋 𑌮𑌤𑌃 ॥

முடியும். உதாரணமாக விதவையின் துயரத்தைத்தீர்க்க வேண்டுமென நினைத்து அவளுக்கு நெடுங்காலம் நரகஸாதனமான விவாஹத்தைச் செய்விப்பதும், பஞ்சமர்கள் வருத்தப்படுவதாக நினைத்து அவர்களைப் பிராம்மணனுக்கமுயன்று பெருநரகத்தில் ஆழ்த்துவதும் தயையாய் முடியும்.

ஆகையினால் அந்தந்த அதிகாரிகளைக்குறித்துச் சாஸ்திரங்கள் நிஷேதிக்காதவிஷயங்களில் துக்கமென்று தோன்றினதை நிவர்த்திக்க முயலுவது தயையாகும்.

இதனால் அந்தந்த அதிகாரிகளைக்குறித்துச் செய்யவேண்டியதாய்ச் சாஸ்திரம் விதித்த கார்யங்களில் நடுவில் ஸம்பாவிதமான துக்கங்களைப்பிறர் போக்கடிக்கமுயலுவது தயையாகாது. அப்படி முயலுவது அவர்களுக்குத் தீங்கைவிளைவிப்பதாகவே முடியும். இதை நினைத்து ஸ்ரீகீதாசாரியன் செய்து தீரவேண்டிய காரியங்களில் நடுவில் சம்பவிக்கும் துக்கங்களைப்பொறுப்பதே கடமையென்று 2-வது அத்தியாயத்தில் சொல்லி, 18-வது அத்தியாயத்தில் * கஷ்டத்துக்குப்பயந்து கடமையை விடுவதை ரஜோகுணத்தின் காரியமென்றுந் தூஷித்தருளினார்.

இப்படி, தயைக்கு உபயோகம் துயரப்படுபவன்மனதில் நினைக்கிறபடியா? அல்லது துயரத்தைத்தீர்க்க எண்ணங்கொண்டவன் மனதில்தோன்றினபடியா? அல்லது சாஸ்திரம் காட்டினவழியா? என்றுநிச்சயிக்காமலே மேற் கூறிய முதலிரண்டுவிதத்தை மட்டில் மனதிற்கொண்டு அதற்குச்சாஸ்திரத்தில் எந்த மூலையிலாவது எங்கப்பதமாவது இடங்கொடுக்குமாஎன்று தேடிப்பார்த்து, ஏதோசில ஸ்லோகங்களைக்கொண்டு தங்கள்கருத்தை நிலைநிறுத்தவேண்டுமென்று சிலர் வெகுபிரயாசப்படுகிறார்கள். தன்மனதில் எதைச்சாதிக்கவேண்டுமென்று பிடிவாதமிருக்கிறதோ, அதற்குச் சற்றேறக்குறைய அந்த அர்த்தத்தைக் கொடுக்கக்கூடிய ஒருவார்த்தை அல்லது ஒரு ஸ்லோகம்மாத்திரம் தப்பித்தவறிக் கிடைத்துவிட்டால், அதைக்கொண்டு எதையும் சாதித்துவிடலாமென்று பூரணமாய் நம்பியும் விடுகிறார்கள். ஒரு ஸ்லோகத்திற்கோ அல்லது சிலபதங்களுக்கோ கருத்துரைக்கவேண்டுமானால் கேவலம் நிகண்டுகளிலுள்ள யாதாலும் ஒரு பொருளைக் கொள்ளுதல் சரியல்ல என்பதை மறந்தோ அல்லது தன் கருத்தை சாதிக்கவேண்டிய பிடிவாதத்தாலோ அந்த ஸ்லோகத்திற்கு முன்பின் சந்தர்ப்பத்தை அனுசரித்து அர்த்தம் சொல்லாமல் இதைமாத்திரம் துண்டாய் எடுத்து வியவகரித்து தன்வாஸ்தவார்த்தத்தை யறியாதவர்களின் மனதைக்குழப்பி, தவறான அர்த்தங்களை நிலைநாட்டித் தாங்கள் அறிவில்லாதவர்கள் என்பதைப் பண்டிதர்கள் புத்தியில் தோன்றச் செய்துவிடுகிறார்கள். (இன்னும் வரும்)

புத்தங் கோட்டகம். ஸ்ரீநிவாஸாசாரியர்.

---

* [illegible]
[illegible] ॥
𑌦𑍁𑌃𑌖𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌵 𑌯𑌤𑍍𑌕𑌰𑍍𑌮 𑌕𑌾𑌯𑌕𑍍𑌲𑍇𑌶𑌭𑌯𑌾𑌤𑍍𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍 ।
𑌸 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌰𑌾𑌜𑌸𑌂 𑌤𑍍𑌯𑌾𑌗𑌂 𑌨𑍈𑌵 𑌤𑍍𑌯𑌾𑌗𑌫𑌲𑌂 𑌲𑌭𑍇𑌤𑍍 ॥

ஸ்ரீ:

நீதிச் லோகங்கள்.

𑌹𑌸𑍍𑌤𑍌 𑌦𑌾𑌨 𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑍌 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌪𑍁𑌟𑍌 𑌸𑌾𑌰𑌶𑍍𑌰𑍁𑌤𑌦𑍍𑌰𑍋𑌹𑌿𑌣𑍌
𑌨𑍇𑌤𑍍𑌰𑍇 𑌸𑌾𑌧𑍁𑌵𑌿𑌲𑍋𑌕𑌨𑍇𑌨 𑌰𑌹𑌿𑌤𑍇 𑌪𑌾𑌦𑍌 𑌨 𑌤𑍀𑌰𑍍𑌥𑌂 𑌗𑌤𑍌 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌯𑌾𑌰𑍍𑌜𑌿𑌤𑌵𑌿𑌤𑍍𑌤𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑍁𑌦𑌰𑌂 𑌗𑌰𑍍𑌵𑍇𑌣 𑌤𑍁𑌙𑍍𑌗𑌂 𑌶𑌿𑌰𑌃
𑌰𑍇 𑌰𑍇 𑌜𑌮𑍍𑌬𑍁𑌕 𑌮𑍁𑌞𑍍𑌚 𑌮𑍁𑌞𑍍𑌚 𑌸𑌹𑌸𑌾 𑌨𑍀𑌚𑌸𑍍𑌯 𑌨𑌿𑌨𑍍𑌦𑍍𑌯𑌂 𑌵𑌪𑍁𑌃 ॥

இதன் அர்த்தம்—“கைகள் தானம் கொடுத்தறியா, காதுகள் ஸாரமான நல்ல வார்த்தைகளைக் கேட்பதில் த்வேஷபுத்தியையுடையனவாயிருந்தன, கண்கள் நல்ல மனிதர்களைப் பார்ப்பதில் பராங்முகமாயிருந்தன, கால்கள் தீர்த்தயாத்ரை போனதில்லை, வயிறு அந்யாயமாய் ஸம்பாதிக்கப்பட்ட த்ரவ்யத்தால் நிறைந்தது, தலை கர்வத்தால் உயரத்தூக்கப்பட்டிருந்தது, ஆகையால் ஹே! சகோதர நரியே, இந்த நீசனுடைய தாழ்ந்த சரீரத்தை உடனே விட்டுவிடு”—என்பது.

ஒருபட்டணத்தில் ஒருவன் விசேஷ த்ரவ்யங்களை ஸம்பாதித்து எந்தவிதமாகவும் தர்மத்தில் செலவுசெய்யாமல், பகவானை ஒரு நிமிஷத்திலும் ஸ்மரியாமல், இரவும் பகலும் திரவ்யத்தை ஸம்பாதித்தால் அதுவே புருஷார்த்தம் என்று நினைத்து, காலை எழுந்திருந்து வட்டி வசூல்பண்ணுவதும், குடும்ப பரணம் செய்வதுமே முக்யமானதாக நினைத்து, பகவானுடைய நாமத்தைக் கனவிலும் நினையாமல் ஸுகமாய்க் காலம் கழித்துவந்தான். ஒருநாள் வட்டிப்பணத்தில் பாக்கி இருந்ததொகையை வசூல்செய்யப் பக்கத்து ஊருக்குப் போய்த் திரும்பி ஒருகாட்டுவழியாய் வருகையில் வெய்யிலால் இளைப்புற்று நடுவழியில் ஒரு மரத்தடியில் இளைப்பாற உட்கார்ந்தான். மரத்தின் பின் பக்கத்திலிருந்த புற்றிலிருக்கும் பாம்பு ஒன்று பின்புறமாய்வந்து இவனைக்கடிக்க மயக்கங்கொண்டு அவ்விடமே இறந்துவிட்டான். இப்படியிருக்கும் ஸமயத்தில் ஜன்மாந்தரத்தில் ருஷிகளாக இருந்தவர் இருவர் ஏதோபாபவசத்தால் நரியாகப்பிறந்து காட்டில்ஸஞ்சரித்துக்கொண்டு இந்த இடத்துக்கு வரும் ஸமயத்தில் இந்த மரத்தடியில் கிடக்கும் பிணத்தைப் பார்த்து, ஒரு நரி ஆவலாக ஓடிக் கையைக் கடித்துத் தின்னப் போகும்போது, இன்னொரு நரி, ஹே தோழனே! அந்த ப்ரேதத்தின் கையைச் சாப்பிடாதே. அவைஒருவிதமான தானத்தையும் எவனுக்கும் பண்ணியறியாதவை, அவைகளை நீசாப்பிடுவது தகுதியல்லஎன்று சொன்னதும், உடனே அந்த நரி, சரி என்று கைகளைவிட்டு விட்டுக் காதுகளைக்கடிக்கப் போகுமுன் இன்னொருநரி, அந்தக் காதுகளிரண்டும் நல்லவிஷயங்களை (பகவந்நாமங்களை) ச்சொல்லிக் கேளாதவை. ஆகையால் அவைஉன்னால் சாப்பிடத்தகுந்தவையல்ல என்

றுசொல்லிற்று. பிறகு அந்த நரி, கண்கள் இரண்டையும் பிடுங்கித்தின்னச் செல்லும்போது, மற்ற நரி, அந்த இரண்டு கண்களும் நல்லபாகவதர்களையும், பகவானுடைய திவ்யமங்களவிக்ரஹத்தையும் எக்காலத்திலும் பார்க்காதவை, ஆகையால் அவை நீ சாப்பிடத்தக்கவையல்ல என்றுசொன்னதும் அந்தநரி கால்களைப்பிடுங்கித்தின்ன எத்தனிக்குமுன், மற்ற நரி, அந்தக் கால்கள் புண்யஸ்தலத்துக்காவது தீர்த்தயாத்ரைக்காவது போயறியாதவைகள். ஆகையால் அவைகள் உன்னால் சாப்பிடத்தகாதவைகள் என்று சொன்னதும், வயிறுபெரிதாய்த் தொங்கியும் தொப்பையுமாயிருந்ததால் அதுநல்ல ஆகாரமாகும் என்று அதை அந்தநரி கடிக்கப்போகுமுன், மற்ற நரி அந்தவயிறு அந்நியாயமாய்க் கெட்டவழியில் ஸம்பாதித்த த்ரவ்யத்தால் நிரப்பி வளர்க்கப்பட்டது; ஆகையால் அது உனக்குத்தகுதி அல்லஎன்று சொன்னதும், அந்தநரி தலை பருமனாயிருந்ததால் அதைத் தின்போம் என்று அதனண்டை போனதும், மற்ற நரி, அந்தத்தலை அளவில்லாதகர்வத்தால் ஒருநாளும் ஒருவரையும் வணங்காதது; ஆகையால் அதுஉனக்குத்தகுந்தது அல்ல. ஹே ஸஹோதரனே! இந்த மஹாபாவியின் சரீரத்தின்கிட்டவேபோகாதே உடனேவிட்டு விலகிவிடுஎன்று சொல்லித் தன்தோழனைக் கூட்டிக்கொண்டு போய்விட்டது.

ஆகையால் ஐஹிகஸுகத்தையே மேலானது என்று கருதி அதிலே புத்தியைச் செலுத்திக்கொண்டு பரலோகத்துக்கு ஸாதனமாக எந்தக் கார்யத்தையும் செய்யாமலிருப்பதுமிகவும் கீழ்ப்பட்டது என்பது இந்தஸ்லோகத்தின் கருத்து.

பகவான், அபாரகருணையால் ஜீவாத்மாக்களுக்குக் கைகால்முதலிய அவயவங்களைக்கொடுத்து, தத்வத்தை அறிந்து, ஹிதத்தை அநுஷ்டித்துப் புருஷார்த்தத்தை அடையட்டும் என்று எண்ணி ஒத்தாசைசெய்தும், அவைகள் எதற்காக நமக்குக் கொடுக்கப்பட்டவையென்பதை அறியாமல், அந்நியாய வழிகளில்அவைகளை உபயோகப்படுத்துமவர்களைப் பார்த்துத் தண்டிக்கும்பொருட்டு யமதர்மராஜன் தன் தூதர்களைப்பார்த்து, “1 எவர்களுடைய வாய்கள் பகவானுடைய நாமத்தைச் சொல்லவில்லையோ, எவர்களுடைய மனஸ்ஸானது பகவானுடைய தாமரைப்புஷ்பம்போலிருக்கிற திருவடிகளை நினைக்கவில்லையோ, எவர்களுடைய தலைகள் ஸ்ரீக்ருஷ்ணனை உத்தேசித்து ஒருதரமாயினும் வணங்கவில்லையோ, எவர்கள் விஷ்ணுவினுடைய பூஜையைச்செய்யவில்லையோ அப்பேர்ப்பட்ட கெட்டவர்களை என்னிடம் கொண்டுவாருங்கள்” என்று ஆஜ்ஞாபிக்கிறான். ஆகையால் பகவந்நாமஸ்மரணம் முதலிய ஸாதுக்ருத்யங்களில்லாவிட்டால் இந்த ஸம்ஸார பந்தம் நிவிர்த்தி ஆகாது என்று நினைத்துக் குலசேகர ஆழ்வார் ஐந்து இந்திரியங்களையும் குறித்துப் பின்வருமாறு சொல்லுகிறார்.—

---

1 ஜிஹ்வா ந வக்தி பகவத்குணநாமதேயம் சேதச்ச ந ஸ்மரதி தச்சரணாரவிந்தம் । க்ருஷ்ணாய நோ நமதி யச்சிர ஏகதாபி தாநாநயத்வமஸதோ க்ருதவிஷ்ணுக்ருத்யாந் ॥

(2) ஹே வாயே! கேசவனுடைய நாமத்தைக் கானம்பண்ணு,
ஹே மனதே! முராரிபுவான பகவானைச் சரணமாக அடை,
ஹே கைகளே! ஶ்ரிய꞉பதியினுடைய பூஜையைச் செய்யுங்கள்,
ஹே காதுகளே! பகவானுடைய புண்யகதைகளைக் கேளுங்கள்,
ஹே கண்களே! பகவானுடைய திவ்யமங்கள விக்ரஹத்தைப் பாருங்கள்,
ஹேகால்களே!பகவான்எழுந்தருளியிருக்கும் கோவில்களுக்குப் போங்கள்,

ஹே மூக்கே! பகவானுடைய பாதத்தில் ஸமர்ப்பிக்கப்பட்ட துளஸியின் வாஸனையை மோந்து பார்.

ஹே தலையே! பகவானை வணங்கு,

இப்படியே பொய்கை ஆழ்வாரும் எம்பெருமானிடம் தமது பஞ்சேந்திரியங்களும் ஈடுபட்டிருப்பதைப் பின்வரும் பாசுரத்தால் காட்டுகிறார்.

வாயவனை யல்லது வாழ்த்தாது கையுலகம்
தாயவனை யல்லது தான்தொழா—பேய்முலைநஞ்
சூணாக வுண்டா னுருவொடு பேரல்லால்
காணாகண் கேளா செவி.

முதல் திருவந்தாதி 11-பாசுரம்.

இதன் அர்த்தம்,

என்னுடைய வாயானது அந்த எம்பெருமானை அல்லாமல் வேறொன்றையும் புகழாது; என் கைகள் உலக முழுவதையும் தாரதம்யம் பாராமல் எல்லார் தலைகளிலும் தனது திருவடிபடும்படி அநாயாஸமாய்த்தாவி அளந்துகொண்ட த்ரிவிக்ரமனை அல்லது வேறொருவரையுந் தொழமாட்டா; பூதனையினுடைய ஸ்தநங்களில் தடவப்பட்ட விஷத்தை உணவாக விரும்பி அமுதுசெய்த ஸ்ரீ க்ருஷ்ணனுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தை அல்லாமல் வேறொன்றையும் என் கண்கள் பார்க்கமாட்டா, அவருடைய திருநாமத்தை அல்லாமல் வேறொருவருடையதையும் என் காதுகள் கேட்கமாட்டா—என்பது.

ஆகையால் க்ருஹக்ருத்யங்கள் எவ்வளவு இருந்தாலும் பகவானைக் காலை ஸாயங்காலங்களிலாவது ஒரு க்ஷணமாவது தியானித்து ஸ்தோத்ரம் செய்தால் நாம் நல்ல கதியை அடைவோம் என்பதில் ஸந்தேஹமேயில்லை.

ஆர். ஸ்ரீநிவாஸராகவய்யங்கார்.

---

1 𑌜𑌿𑌹𑍍𑌵𑍇 𑌕𑍀𑌰𑍍𑌤𑌯𑌕𑍇𑌶𑌵𑌂 𑌮𑍁𑌰𑌰𑌿𑌪𑍁𑌂 𑌚𑍇𑌤𑍋 𑌭𑌜 𑌶𑍍𑌰𑍀𑌧𑌰𑌂
𑌪𑌾𑌣𑌿𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵 𑌸𑌮𑌰𑍍𑌚𑌯𑌾𑌚𑍍𑌯𑍁𑌤𑌕𑌥𑌾𑌃 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌦𑍍𑌵𑌯 𑌤𑍍𑌵𑌂 𑌶𑍃𑌣𑍁 ।
𑌕𑍃𑌷𑍍𑌣𑌂 𑌲𑍋𑌕𑌯 𑌲𑍋𑌚𑌨𑌦𑍍𑌵𑌯 𑌹𑌰𑍇𑌰𑍍𑌗𑌚𑍍𑌛𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌯𑍁𑌗𑍍𑌮𑌾𑌲𑌯𑌂
𑌜𑌿𑌘𑍍𑌰 𑌘𑍍𑌰𑌾𑌣 𑌮𑍁𑌕𑍁𑌨𑍍𑌦𑌪𑌾𑌦𑌤𑍁𑌲𑌸𑍀𑌂 𑌮𑍂𑌰𑍍𑌧𑌨𑍍𑌨𑌮𑌾𑌧𑍋𑌕𑍍𑌷𑌜𑌮𑍍 ॥

ஸ்ரீ:

ஸ்ரீ வைஷ்ணவர்களும் அவர்களின் லக்ஷணங்களும்.

இவ்வுலகத்தில் ஜீவாத்மாக்கள், எடுக்கும் ஜன்மங்கள் அவரவர்கள் ஜன்மாந்திர கர்மத்துக்கேற்றபடி நான்கு விதங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன:— தேவதைகள், மனிதர்கள், ம்ருகபக்ஷ்யாதிகள், கொடி செடி முதலிய ஸ்தாவரங்கள். அவைகளுக்குள் மனுஷ்ய ஜன்மம் பகுத்தறிவு உள்ளதாகையினால் மிகவும் சிறந்தது என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயமே. அந்த மனிதர்களுக்குள் வைஷ்ணவ ஜன்மம் மிகவும் சிறந்தது. ஏனெனில் ஒரு குலத்தில் (1) ஒருவைஷ்ணவன் ஜனித்தானேயானால் அவனால் நாம் உஜ்ஜீவிப்போமென்று அவனுடைய பித்ரு, பிதாமஹர் எல்லாரும் ஸந்தோஷப்படுகிறார்கள் என்றும், எந்த ஜன்மத்திலும் விஷ்ணு பக்தனாயிருக்கையே நான் விரும்புகிறேனென்று ருஷிகளாலும் "வன்மையாவது உன் கோயிலில் வாழும் வைஷ்ணவனென்னும் வன்மைகண்டாயே" என்றும் அநேக இடங்களில் ஆழ்வார்களால் கொண்டாடப்பட்டிருப்பதனால் அப்படிப்பட்ட வைஷ்ணவர்கள் எப்படி இருப்பார்கள்? எந்த விதமான லக்ஷணங்களால் அவர்கள் வைஷ்ணவர்களென்று நாம் அறியமுடியுமென்பதையும் இங்கு விமர்சிப்போம்.

பாத்மோத்தர புராணத்தில் (2) அறுபத்தொன்பதாவது அத்யாயத்தில் சங்கு, சக்கரம், கதை, பத்மம், இவைகளை எவன் தரிக்கிறானோ, துளசிக்கட்டையினால் செய்யப்பட்ட மாலையை எவன் கழுத்தில் எப்போதும் அணிந்துகொண்டிருக்கிறானோ, பன்னிரண்டு திருமண் காப்புக்களைச் சரீரத்தில் எவனொருவன் தரிக்கிறானோ, எவர்களுடைய ஆஹாரம் பரிசுத்தமா

---

(1) ஆஸ்போடயந்தி பிதர: ப்ரந்ருத்யந்தி பிதாமஹா: ।
வைஷ்ணவோ ந: குலே ஜாத: ஸ ந: ஸந்தாரயிஷ்யதி ॥
காமயே வைஷ்ணவத்வம் து ஸர்வஜந்மஸு கேவலம் ।

(2) ஶங்கம் சக்ரம் கதாம் பத்மம் நித்யம் வை தாரயேத்து ய: ।
துலஸீகாஷ்டஜாம் மாலாம் கண்டே வை தாரயேத்து ய: ॥
திலகாந் த்வாதஶாநேவ நித்யம் வை தாரயேத்து ய: ।
யமாயமம் து ஜாநாதி ஸ வை வைஷ்ணவ உச்யதே ॥

னதோ, பொறுமை, தயை, ஸத்யம், முதலிய குணங்கள் எவர்களுக்கு இருக்கிறதோ, எவனுடைய புத்தி விஷ்ணுவினிடத்தில் ஸ்திரமாக ஊன்றி நிற்கிறதோ, பரஹிம்ஸையினின்றும் விலகினவன் எவனோ, அப்படிப்பட்டவர்கள் வைஷ்ணவர்கள். வேதமான சாஸ்த்ரத்தை நம்பினவர்களாயும், அதில் சொல்லிய யஜ்ஞம் முதலிய காரியங்களைச் செய்து கொண்டிருப்பவர்களாயும், பகவானுக்கு விசேஷகாலங்களில் உத்ஸவங்கள் செய்துகொண்டிருக்கிறவர்களும் எவர்களோ அப்படிப்பட்ட வைஷ்ணவர்கள் விஷ்ணுவுக்கு ஸத்ருசர்களாக அறியத்தக்கவர்கள். தானம் முதலியவைகளை அவர்களுக்கேசெய்ய வேண்டும். வைஷ்ணவன் ஒருவனுக்கு அன்னமளித்தால் ஆயிரம் ப்ராஹ்மணர்களுக்கு அன்னதானம் செய்ததாக ஆகும். வைஷ்ணவர்கள் கண்ணுக்கு இலக்கான வஸ்துக்களெல்லாம் பாபங்களினின்று விடுபட்டுப்போகும். வைஷ்ணவர்களை ஆராதிப்பதனால் விஷ்ணுவே ஆராதிக்கப்பட்டவராகிறார்.

சங்கு, சக்ராங்கனம்.

சங்குசக்ராதிகளைத் தேகத்தில் தரிக்கும் ப்ரகாரங்களும் அந்தப் பாத்மோத்தரத்திலேயே 251, 252, அத்யாயங்களிலும், ஊர்த்வபுண்ட்ரம் தரிக்கும் ப்ரகாரம் 253-வது அத்யாயத்திலும் விஸ்தாரமாய் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளையும் ஸங்க்ரஹமாய் எடுத்துக் குறிப்பிடுகிறோம்.

சங்கம், சக்ரம் இவைகளைத் தங்கத்தினாலாவது, வெள்ளியினாலாவது, தாம்ரத்தினாலாவது, வெண்கலத்தினாலாவது செய்விக்கவேண்டும். பஞ்சாம்ருதங்களினால் திருமஞ்சனம் செய்து, சந்தனம், புஷ்பம், தூபதீபம், முதலியவைகளால் ஸுதர்சன, பாஞ்சன்ய, மந்த்ரங்களைக் கொண்டு ஆராதனம் செய்ய வேண்டும். தங்கள் தங்கள் க்ருஹ்ய ஸூத்திரத்தில் சொல்லியபடி அக்நியை ஸ்தாபித்துக்கொண்டு ஆசார்யன்மேல் சொல்லப்போகிற மந்த்ரங்களைக் கொண்டு ஹோமம் செய்யவேண்டும். த்வயம் என்கிற மந்த்ரத்தினால் 1008

[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥

அல்லது 108 தடவையும் அப்படியே மற்றும் சில வைஷ்ணவ மந்த்ரங்களா லும் ஹோமம் செய்யவேண்டும். புருஷஸூக்தங்களுடைய மந்த்ரங்களால் நெய்யையாவது, பாயஸத்தையாவது ஹோமம் செய்யவேண்டும். அந்த அக் நியில் சங்கத்தையும், சக்ரத்தையும், எழுந்தருளப்பண்ணி ஷடக்ஷரம் என் கிற மந்த்ரத்தால் இருபது தடவை ஹோமம் செய்யவேண்டும். நன்றாய்க் காய்ந்திருக்கிற சக்ரத்தைக் கையிலெடுத்துக்கொண்டு ஸுதர்சனமந்த்ரத்தி லும், அப்படியே சங்கத்திலும், வலது இடது தோள்களில் அங்கனம் செய்யவேண்டும். பிறகு மீதி ஹோமத்தை முடித்துவிட்டு ஸுதர்சன, பாஞ் சஜன்யங்களுக்கு முன்போல் ஆராதனம் செய்து ஒரு கலசத்தில் ஜலத்தை நிறைத்துக்கொண்டு அதில் மந்த்ரங்களை ஜபித்து சிஷ்யனை அன்று ஸ்நா னம் செய்வித்துப் பரிசுத்த வஸ்த்ரம் தரித்துக்கொண்டு வணக்கத்துடன் வந்து ஊர்த்வபுண்ட்ரம் தரித்துக் கொண்டிருக்கும் அந்த சிஷ்ய னுக்கு ஆசார்யன் மந்த்ரோபதேசம் செய்யவேண்டும். மந்த்ரத்தின் அர்த் தத்தையும் உபதேசம் செய்யவேண்டும். இப்படி ஆசார்யனிடத்திலிருந்து மந்த்ரத்தைப் பெற்றுக்கொண்ட சிஷ்யன், அந்த ஆசார்யனுக்குத் தன் சக் திக்குத் தகுந்தபடி த்ரவ்யங்களை ஸமர்ப்பிக்கவேண்டும். இப்படி விதிப்ரகா ரம் வைஷ்ணவனை ஆசார்யனிடத்திலிருந்து மந்த்ரத்தை எவன் பெறுகிறானோ, அவன் விஷ்ணுவின் ஸ்தானத்தை அடைகிறான். மற்ற எவ்விதத்திலும் அடையமாட்டான். அந்த மந்த்ரமாவது எதுவென்னில், சரணாகதி மந்த்ரமா கிய த்வயம். இப்படி ப்ரும்மாவுக்கு ச்ரியஃபதி அங்கனம் செய்வித்து உபதே சித்தார். எனக்கு ப்ரும்மா அங்கனம் செய்து உபதேசித்தார். நீங்களும் அப்படியே செய்தால் பகவானுடைய பதவியை அடைவீர்களென்று ருஷிக ளுக்கு நாரதர் உபதேசித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறதென்று நிரூபித்து த்வயத்துக்கு மேற்பட்டமந்த்ரம் இல்லையென்று ஸத்யமாகச்சொல்லுகிறே னென்றும் சொல்லுகிறார்.

மற்றொரு இடத்தில் 252-வது (3) அத்யாயத்தில் பகவானுடைய சின்னங்களால் அடையாளம் செய்யப்பட்டவனாய், பகவானையே தியானம் செய்துகொண்டிருப்பவன் பகவானை அடைகிறான். ப்ராஹ்மணன் தோள் களில் சங்கு சக்கரங்களினால் அங்கனம் செய்து கொள்ளவேண்டும். ஹோ மம் செய்யப்பட்ட அக்னியில் சக்ரத்தையாவது சங்குசக்ரங்களையாவது தப் தம் செய்து ஸர்வபாபங்களும் போகவேண்டியதற்காகத் தாங்கள் அங்கனம் செய்துகொள்ளவேண்டும். இப்படி அங்கனம் பண்ணிக்கொண்டவன் யம

---

(3) தஹிதெஹெ நாஂகிதஸ்ரீ ஶ வஹஂவாவெ நாத்ரு ஸஂஶயஃ।

ஶஂவசக்ராஂகநஂ கூயா ஹூாஹ்மணொ பாஹமூலயொஃ।

லோகத்தைக்கடந்து பகவானுடைய பரமபதத்தை அடைகிறான். சக்ரத்தால் சின்னம் செய்துகொள்ளாதவன் பகவானைப் பூஜைசெய்வானேயானால் அந்தப் பூஜை, அவன் உச்சரிக்கும் மந்த்ரம் முதலியவைகளெல்லாம் வ்யர்த்தமாய்விடுகின்றன. ஶ்ராத்தகாலத்தில் சக்ராங்கனம் இல்லாதவனைப் போஜனம் செய்வித்தால் அந்த ஶ்ராத்தம் நிஷ்ப்ரயோஜனமாகிறது. பித்ருக்கள் நிராசர்களாய்ப் போய்விடுகிறார்கள். ஆதலால் ச்ராத்தகாலங்களில் சக்ராங்கனம் செய்துகொண்டவர்களையே போஜனம் செய்விக்கவேண்டும். சக்ராங்கனம் இல்லாதவனுக்குக் கொடுப்பதெல்லாம் அஸுரர்களுக்கு ப்ரீதியாகிவிடுகின்றன. எவனுடைய சரீரம் ஹோமம் செய்யப்பட்ட அக்நியில் தப்தமான சக்ரத்தினால் அடையாளம் செய்யப்பட்டிருக்கிறதோ அவனுடைய சரீரத்திலேயே எல்லாப் புண்யதீர்த்தங்களும், எல்லா யக்ஞங்களும் வஸிக்கின்றன. எல்லா வேதங்களையும் அறிந்தவனும், எல்லாசாஸ்த்ரங்களையும் கற்றறிந்தவனும் அநேக யஜ்ஞங்களைச் செய்தவனுமிருந்தபோதிலும், சக்ராங்கனம் செய்துகொள்ளாமற் போவானேயானால் அவன், ஸாமன்ய ஜனமாவான். அவனிடத்தில் தெரிந்தவர்கள் ஒன்றையும் வாங்கிப் போஜனம் செய்யக்கூடாது. அப்படிப்பட்ட ப்ராஹ்மணன் பதிதனேயாவான். சாஸ்த்ர விதிப்படி சக்ரத்தை தரிக்காதவனும் திருமண் காப்புக்களைத் தரிக்காதவனும் பதிதனாவான். அவனை ராஜா கழுதையில் ஏற்றி ராஜ்யத்தினின்று துரத்திவிடவேண்டும். ஶ்ருதிகளில் சொல்லப்பட்டதும், ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்டதுமாகிய கர்மங்களில் அதிகாரம் உண்டாவதற்கும், மந்த்ரங்களில்

ஹுதாக்நி [illegible] ।
சக்ரம் வா ஶங்கசக்ரம் வா [illegible] ।
த்ருத்வா [illegible] ஸம்ஸாரம் [illegible] யாதி விஷ்ணோ꞉ பரம் பதம் ।
சக்ரசிஹ்நவிஹீநஸ்து ய꞉ பூஜயதி கேஶவம் ।
வைபல்யம் தஸ்ய [illegible] பூஜா [illegible] ஜபாதிகம் ।
விஷ்ணுசக்ரவிஹீநம் து ய꞉ ஶ்ராத்தே போஜயிஷ்யதி ।
வ்யர்த்தம் பவதி தத்ஸர்வம் நிராஶா꞉ பிதரோ கதா꞉ ।
விஷ்ணுசக்ராங்கிதம் விப்ரம் பூஜயேச்ச்ராத்தகர்மணி ।
யத்தத்தம் சக்ரஹீநாய தத்ஸர்வம் ஆஸுராய வை ।
ஹுதாக்நிதப்தசக்ரேண ஶரீரம் யஸ்ய சிஹ்நிதம் ।
தஸ்ய தீர்த்தாநி யஜ்ஞாஶ்ச வஸந்தி நாத்ர ஸம்ஶய꞉ ।
ந தஸ்ய கிஞ்சிச்ச்ரேயோ [illegible] ஸஹஸ்ரிண꞉ ।
ஸர்வவேதவிதோ வாபி ஸர்வஶாஸ்த்ரவிஶாரத꞉ ।

அதிகாரம் உண்டாவதற்கும், பகவானுடைய ஆராதனத்தில் யோக்யதை உண்டாவதற்கும், வைஷ்ணவத்வம் ஸித்திப்பதற்காகவும், உண்மையான தத்வஜ்ஞானம் உண்டாவதற்காகவும் சாஸ்த்ரமுறைப்படி ஹோமம் செய்யப்பட்ட அக்நியில் காய்ச்சப்பட்ட சங்க சக்ரங்களால் அங்கனம் செய்துகொள்ளவேண்டும். பகவானுடைய சின்னங்களாகிற சங்குசக்ரங்களைத்தவிர மற்ற எந்த அடையாளத்தாலேயும் தேஹத்தில் அங்கனம் செய்துகொள்ளக்கூடாது. அப்படி மற்றொன்றினால் அங்கனம் செய்துகொண்டவன் எவ்வித வைதிககாரியங்களிலும் அதிகாரியாகமாட்டான். அப்படியே சக்ராங்கனம் தரியாத ப்ராஹ்மணனும் அவைஷ்ணவனானதால் அவனைத் தூரத்தில் பரிஹரிக்கவேண்டும். எல்லா ஆச்ரமங்களில் இருப்பவர்களுக்கும் ச்ருதியில் சொல்லியிருப்பதால் சக்ராங்கனம் செய்துகொள்ளவேண்டியது அவசியம். அப்படியே மஹோபநிஷத்திலும், யஜுர்வேதத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. "உம்முடைய சக்ரம் மிகவும் ப்ரஸித்தமானது, எங்களுடைய சரீரத்தை முழுவதும் வ்யாபரிக்கத்தக்கது. அப்படி தாபம் செய்யப்படாத சரீரத்தை உடையவன் பச்சையான சரீரம் உடையவன். ஆமன் என்று பெயர்கொண்டவன். அவன் பரமாத்மாவை அடையமாட்டான். அப்படி தாபம் செய்யப்பட்டவன் எப்பொழுதும் அந்தப் பகவானை அநுபவிக்கிறான்" என்று அர்த்தமுள்ள வாக்யம் ஸாமவேதத்தில் காணப்படுகிறது. அப்படியே யஜுர்வேதத்திலும் மிகவும் ப்ரகாசித்துக்கொண்டிருக்கிற சக்ரத்தினால் பரிசுத்தம் செய்யப்பட்டவர்களாய்ப் பாபத்தைத் தாண்டிவிடுவோம்.

யஸ்யாக்நௌ விதிநா சக்ரம் ப்ராஹ்மண: ப்ரதிதாபிதஸ் ।
ஊர்த்வபுண்ட்ரவிஹீநஶ்ச ஶங்கசக்ரவிவர்ஜித: ॥
தம் த்ருஷ்ட்வா ஸேவகோ பாப்ய பஹி: குர்யாத் ஸ்வவர்த்தநாத் ॥
தஸ்மாதேவம் ப்ரயத்நேந ப்ராஹ்மண: ஸ்ரவியாநத: ।
ஶ்ருதிஸ்ம்ருத்யாதி ஸித்த்யர்த்தம் தந்த்ரஸித்த்யை ததைவ ச ।
ஹரே: ப்ரஜாதிகாரார்த்தம் சக்ராங்காயார்த்தம் விதாநத: ।
வைஷ்ணவத்வஸ்ய ஸித்த்யர்த்தம் ஜ்ஞாநஸித்த்யை விஶேஷத: ।
ப்ரதப்தஶங்கசக்ராப்யாம் ஹோமகுண்டே விதாநத: ।
ஸர்வேஷாமாஶ்ரமஸ்தாநாம் ப்ராஹ்மணோ ஹரிரக்ஷணாத் ।
ஶங்கசக்ரத்ருதாவஶ்ய ஶாஸ்த்ரார்த்த நித்யஹோமவித் ।
ந ரக்ஷணே சதுர்ஹோம நாந்ய: ஶ்ரௌதஹோமாதி க்ரியாஸு ।
சக்ரபாணிநம் விப்ரம் ச சரிதம் பரிவர்ஜயேத் ।

(இன்னும்வரும்)

சே. நரஸிம்மாசார்யர்.

ஸ்ரீ:

ஸ்ரீபாகவத தனிச்லோகீ.

ஸ்ரீக்ருஷ்ணாய வாஸுதேவாய நம:.

ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ ராமாநுஜ மஹாதேசிகாய நம:.

க்ருஷ்ணஸ்யாஸீத் ஸகா கஶ்சித் ப்ராஹ்மணோ ப்ரஹ்மவித்தம:।
விரக்த இந்த்ரியார்த்தேஷு ப்ரசாந்தாத்மா ஜிதேந்த்ரிய:।

[ஸ்ரீபாக-தசமம்-அ. 80, ச்லோ - 6.]

ஸ்ரீகுசேலருக்கு கண்ணன் அனுக்ரஹம் செய்த திவ்ய சரித்ரத்தை சொல்ல உபக்ரமித்து அந்தக் குசேலருடைய ஜ்ஞான வைராக்யங்களின் பெருமையை நிருபிக்கிறார் மஹர்ஷி.

க்ருஷ்ணஸ்யாஸீத்:— உலகத்தில் தரித்ரனாய் ஒருவன் இருந்தானேயாகில் "பொருள்கையுண்டாய்ச் செல்லக்காணில் போற்றியென்றேத்தெழுவர் இருள்கொள் துன்பத்து இன்மைகாணில் என்னே என்பாருமில்லை" என்கிறபடியே இவனை ஒரு வஸ்துவாக நினைப்பாரில்லை. உலகத்தாருக்கு அப்படிப்பட்டவராக இருந்தபோதிலும் ஸ்ரீ கண்ணனுடைய திருவுள்ளத்தில் இவர் ஒருவரே உளர் என்று நினைக்கக்கூடியவராயிருந்தார், பக்தியின் மிகுதியாலே. அன்றிக்கே.

'மயி ஸர்வாணி பூதாநி ஸர்வம் ச மயி பஶ்யதி।
தஸ்யாஹம் ந ப்ரணஶ்யாமி ஸ ச மே ந ப்ரணஶ்யதி ॥'

என்கிற ஸமதர்சன யோகத்தில் நிஷ்டையை உடையவரானபடியாலே ஸர்வ வஸ்துக்களையும் பகவதாத்மகமாக அறிந்தவரானபடியால் பகவானுக்கு எப்பொழுதும் திருவுள்ளத்தில் மறக்காமல் நினைக்கக்கூடியவராயிருந்தார் ஒருவர். அன்றிக்கே,

"க்ருஷ்ணஸ்ய ஹி க்ருதே லோகம்" என்கிறபடியே கண்ணனுக்குச் சேஷபூதராய் அவனுடைய ப்ரயோஜனத்துக்காகவே நாம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறோம் என்ற ஞானத்தை உடையவொருவர், 'உனக்குப்பணி செய்திருக்கும் தவமுடையேன்' என்றிருந்தார் என்று தாத்பர்யம்.

க்ருஷ்ணஸ்ய ஸகா, :—'மித்ரபாவேந ஸம்ப்ராப்தம்' என்று சரணாகதரை தன்னில்தாழ்ந்தவராகநினைக்க கூசிஇருக்கிற கண்ணனுடையதிருவுள்ளத்தில் மித்ரராகக்கருதப்பட்டவர். இவருடைய திருவுள்ளத்திலோ அவருடையதாஸபூதன் அவரை ஆச்ரயித்தவன்என்று எண்ணிக்கொண்டிருந்தவர்.

'அஹமஸ்யாவரோ ப்ராதா குணைர்தாஸ்யமுபாகத:'

என்றாரிறே இளையபெருமாள். அதாவது திருவடி ரிஶ்யமூகபர்வதத்தில், நீர் இவருக்கு யார் ஆகிறீர் என்று கேழ்க்க அப்போது இளையபெருமாள்,பெருமாள் என்னை ஒருபடி நினைத்திருப்பர், நான் ஒருபடிநினைத்திருப்பேன் என்றார் இருவரும்நினைத்திருப்பதுஎன்னவென்று வினவ, அவர் நினைத்திருக்குமாகாரம்தோள் தீண்டியான ஆகாரம், நான்நினைத்திருப்பது தாள் தீண்டியான ஆகாரம், அவர் என்னை உடன்பிறந்த தம்பிஎன்றுநினைத்திருப்பர் நான் அவருடையகுணங்களுக்குத்தோற்று ஸ்வயம்போக்யமான அடிமையை அங்கீகரித்தவன்என்று நினைத்திருக்கிறேன். இப்படியே இவ்விடத்திலும் க்ருஷ்ணஸ்யஸகா என்கிறார் ஸகா என்பது இவ்விடத்தில் அனுகூலமாகநடப்பது. பிரதிகூலமாக இருப்பதைத்தவிர்த்தல் பரிபூர்ணமானவிச்வாஸம், முதலியசரணாகதியின் அங்கங்களைச்சொல்லிக் கொண்டு சரணாகதன் என்றே சொல்லுகிறதாகவுமாம், ஸ்ரீராமாவதாரத்தில் ஸ்ரீகுஹப்பெருமாள் உஹந்ததோழரானதுபோலே இந்த அவதாரத்தில் ஸ்ரீ குசேலர்.

க்ருஷ்ணஸ்யஸகா ஸுதீ: —. ஸ்ரீக்ருஷ்ணனுக்குதான்தாஸபூதரென்கிற தாஸ்யரஸானுபவத்தினாலே தரித்துக்கொண்டிருந்தவர். இந்த ஜ்ஞானமில்லாதபோது இவனும் அவஸ்துபூதன், "அன்று நான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்" என்றிறே பெரியோர்கள் பாசுரம். இப்படி பகவானுக்கு அந்தரங்கராயிருப்பவர் ஒருவர் ப்ரும்மாதிதேவர்களோ என்னில், அல்ல. கச்சித் தனித்து ஒரு பெயர் இட ஒண்ணாதபடியாதாமொருவர். இத்தால் இவருடைய ஆகிஞ்சந்யத்தில் உயர்ந்தநிலை சொல்லப்பட்டது. இத்தாலும் பகவானுடைய க்ருபைககு விஷயமாகாதார் ஒருவருமில்லை, எவ்வளவேனும் ஞானம் சக்தி முதலியவைகளில் குறைந்தவராயிருந்தபோதிலும் தன்னை ஆச்ரயித்தவர்களிடத்தில் அவனுடைய க்ருபையின் பெருமை சொல்லப்பட்டது. அன்றிக்கே இவ்வளவுபக்தி ஞானவைராகயங்களில் சிறந்தவரான இவருக்கு ஸத்ருசமாய் சொல்லக்கூடியவர் ஒருவருமில்லை. என்று சொல்லப்பட்டதாகவுமாம், இத்தால்,

'ஜயதி ஸஹிதா தைவாத் கச்சித் விஹாரஸிதஸம் ஸ்ருதி:'

இவ்வுலகத்தில் பகவானுடைய ஸங்கல்பத்தினுல் எவனுவது ஒருவன் ஸம்ஸாரத்தைவிடவேண்டுமென்று எண்ணமுடையவனுக இருப்பான், என்பது இவர் விஷயத்தில் பொருத்தமுடையதாயிருந்தது—அதற்குக்காரணம் ப்ராஹ்மணஃ என்றது.

'விஷ்ணும் க்ராந்தம் வாஸுதேவம் விஜாநந்
விப்ரோ விப்ரத்வம் கச்சதே தத்வதர்சீ ॥'

இவ்வுலகளந்த பகவானையே பரதேவதையாய் அறிந்தவன், உண்மையை அறிந்தவனுனபடியினுல், விப்ரஃ அதாவது ப்ராம்மணன், ஆகயிருக்கும் தன்மையை அடைகிறுன் என்று சொல்லுகிறபடி பகவானுடைய தத்வத்தை அறிந்ததினுல் உண்டான பரிபூர்ணமானப் ப்ராஹ்மண்யத்தை உடையவர்.

ப்ரஹ்மவித்தமஃ— ப்ரும்மவித்துக்களுக்குள் மிகவும் சிறந்தவர். அதாவது தனக்குண்டான ப்ரும்மஞானத்தை தன்னுடைய அனுஷ்டானபர்யந்தமாக நடத்தினவர். அனுஷ்டாநபர்யந்தமாக இல்லாதபக்ஷத்தில் அந்த ஜ்ஞானம் நாய்க்கு வால் முளைத்ததுபோல் உபயோகமில்லாமல் அயலார் பரிஹாஸம் செய்யக் கூடிய நிலைமை உடையதாகும், என்றல்லவோ பெரியோர்களின் அபிப்ராயம். அப்படிஇல்லாதவர் என்று தாத்பர்யம். அன்றிக்கே யோகிகள் எல்லாரையும் காட்டிலும் 'ச்ரத்தாவாந் பஜதே யோ மாம் ஸ மே யுக்ததமோ மதஃ' என்று மிகுந்தச்ரத்தையுடன் என்னிடத்தில் பக்திசெய்பவன் சிறந்தவன் என்று ஸ்ரீகீதையில் சொல்லியிருப்பதைப்போல, 'நாஹம் சிவஸ்ய ப்ரஹ்மணஸ்ய காருண்யம் கோடி தமீமபி' என்கிறபடியே பக்தியோகநிஷ்டர் எல்லாரும் சரணுகதி செய்தவனுடைய கோடியில் ஒருபங்கு பெருமையை உடையவனுக மாட்டான் என்று சொல்லியிருப்பதினுல் அப்படி எல்லாவற்றிலும் சிறந்த சரணுகதிவித்யையை கைப்பற்றினவரானபடியாலே ப்ரஹ்மவித்தமஃ என்றது. இப்படி இவருடையஞானத்திலும் பக்தியிலும் விசேஷம்நிருபிக்கப்பட்டது. இனி இவருடைய வைராக்யத்தின் பெருமையை நிருபிக்கிருர்.

விரக்தஃ இந்த்ரியார்த்தேஷு கண்முதலியஇந்திரியங்களால்அனுபவிக்கப்படுகிற ரூபம்முதலிய விஷயங்களில் வைராக்யத்தை உடையவர் இவர் ப்ருஹ்மவித்தமரானபடியினுல் 'கண்டு கேட்டு உற்று மோந்துஉண்டுழலும் ஐங்கருவி கண்டவின்பம் தெரிவரிய அளவில்லாச் சிற்றின்பம் ஒண்டொடியாள் திருமகளும் நீயுமேநிலாநிற்பக்கண்ட சதிர்கண்டொழிந்தேன்,' என்கிறபடி பகவானை எப்

போதும் அநுஸந்திப்பதிலுண்டான ஆனந்தத்தினுல் மற்ற விஷயங்களை த்ருணவத்கரித்தவர். இத்தால் மேலான ஸுகத்தைப்பார்த்து உண்டான வைராக்யமானபடியினுல் இது ஸ்திரமாய் ஊன்றியிருக்கும் என்பது தெரிவிக்கப்படுகிறது.—இந்திரியங்கள் ஜயிக்கப்பட்டபோதிலும் மனது சஞ்சலமாயிருந்ததேயானுல் வைராக்யம் அழிந்துவிடுமேஎன்னில் “ப்ரஶாந்தாத்மா என்கிருர்” அந்த விஷயங்களில் ப்ரவர்த்திப்பதிலிருந்து மிகவும் சாந்தியை அடைந்த மனதை உடையவர்.—

ஜிதேந்த்ரியஃ. இப்படிமனதுமுதல் ஸ்திரமான வைராக்யத்தை உடையவராயிருந்தபடியினுல் இந்திரிய ஜயம் ஸித்தித்துவிட்டது. இவ்விடத்தில் கடவல்லியில் விஷயங்களை ஜயிப்பதர்ற்கு உபாயமாக ஜயிக்கவேண்டியவைகளில் இந்திரியங்கள் பிரதானங்கள். அவைகளைக்காட்டிலும் விஷயங்கள் ஜயிக்கவேண்டியதில் முக்யம். அதைக்காட்டிலும் மனது முக்யமானது. அதைக்காட்டிலும் புத்தி முக்யமானது. புத்தியைக்காட்டிலும் ஆத்மா முக்யமானது. அதைக்காட்டிலும் இந்த சரீரம் அடக்கவேண்டியதில் முக்யமானது. அதைக்காட்டிலும் வசப்படுத்திக் கொள்ளவேண்டியவைகளில் முக்யமானவன் பரமாத்மா, அவனுக்கு மேற்ப்பட்டது ஒன்றுமில்லை, என்கிற ச்ருதியின் வரிசைக்ரமம் தெரிவிக்கப்படுகிறது. எப்படிஎன்னில், ப்ரஹ்வவித் பரமாத்மாவை வசப்படுத்திக்கொண்டவர் பரமாத்மாவை வசப்படுத்துவதற்க்குக்காரணம் “ தஸ்ய வஶீகரணம் தச்சரணாகதிரேவ” என்று ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்தபடியே அவரிடத்தில் சரணுகதி செய்வதேயொழிய வேறில்லை. ஆகையினுல் அப்படிப்பட்டதன்மை அந்தப்பதத்தினுல் சொல்லப்பட்டது —

விரக்த இந்த்ரியார்த்தேஷு என்கிறஇடத்தில் இந்த்ரியங்களிலும் அதன் விஷயங்களிலும் வைராக்யமுடையவர், என்றும் அர்த்தம் சொல்லலாமாதலால் இந்திரியங்கள் முக்யமானவைகள் விஷயங்கள் முக்யமானவைகள் என்று தெரிவிக்கப்பட்டன. ப்ரஶாந்தாத்மா என்கிற இடத்தில் ஆத்மா என்றும் பதம் ஜீவாத்மாவையும் மனதையும் சரீரத்தையும் சொல்லுமாதலால் அவைகளின் வரிசையும் சுருக்கிச் சொல்லப்பட்டது. ஜிதேந்த்ரியஃ என்பது இவைகளின் ப்ரயோஜனமான இந்த்ரிய ஜயம் ஸித்தித்தமையை காட்டுகிறது. ஆக உத்தரார்த்தத்தினுல் ஸ்ரீ குசேலருடைய வைராக்யத்தின் பெருமையும் நிருபிக்கப்பட்டது.

சே. நரஸிம்மாசாரியர்.

ஸ்ரீமதே ஹயக்ரீவாய நம:.

ஜீவன்களும் மோக்ஷமும்.

இவ்விஷயம் இவ்வுலகிலுள்ள ஒவ்வொருவரும் அவசியம் தெரிந்து கொள்ளவேண்டியவைகளில் முக்கியமானது. உண்மையில் நம்முடைய ஆத்மாவின் ஸ்வரூபம் யாது, ஸ்வபாவத்தில் நாம் எந்த நிலையில் இருக்கவேண்டும், அந்த நிலைமையை யிழந்து ஜநநம் மரணம் முதலிய துக்கங்கள் நிறைந்த இந்த ஸம்ஸாரக் கடலில் நாம் மூழ்கிக் கஷ்டப்படவேண்டிய காரணம் என்ன, இந்த ஸம்ஸாரக்கடலைக் கடந்து கரையேறுவதற்கு உபாயம் யாது, இது முதலிய விஷயங்களை உள்ளபடி தெரிந்துகொண்டால் நாம் இவ்வுலகில் வாழும் நாட்களில் காமம் க்ரோதம் முதலான சத்துருவர்க்கங்களை யொழித்து ஒருவர்க்கொருவர் த்வேஷ புத்தியில்லாமல் மிகுந்த ஸௌஹார்த்தத்துடன் வாழ்வதோடு பரத்திலும் பரமாநந்தத்தை யடையலாம்.

ஆத்ம ஜ்ஞாநம் மோக்ஷத்திற்கு மூலகாரணமென்பது எல்லா மதஸ்தர்களும் ஒப்புக்கொண்டவிஷயம். ஶ்வேதாஶ்வதர உபநிஷத்தில் "[1] ஜீவனுடைய ஸ்வரூபத்தையும் ஈச்வரனுடைய ஸ்வரூபத்தையும் தனித்தனியே நன்றாகத் தெரிந்துகொண்டு ஈச்வரனுடைய கிருபையால் அம்ருதமென்ற மோக்ஷத்தையடைகிறான்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் ஆத்மஜ்ஞாநம் எல்லோருக்கும் அவசியமானது. இந்த ஆத்மஸ்வரூபத்தை விவேசனம் பண்ணும்போது அனேக மதஸ்தர்கள் அனேக விதமாய் அபிப்பிராயப்படுகிறார்கள்.

சார்வாகமதம்.

முதலில் சார்வாகர்களுடைய மதத்தை விசாரிப்போம். அவர்கள் சொல்லுவதாவது.—

ப்ரத்யக்ஷம் ஒன்றுதான் ப்ரமாணம். கண் மூக்கு முதலிய இந்திரியங்களால் தேகத்தைத்தவிர வேறாக ஆத்மா காணப்படவில்லை, அநுமானத்தை ப்ரமாணமாகவே ஒப்புக்கொள்ளமுடியாது. அப்படியே ஒப்புக்கொண்டு விசாரித்தாலும் ஆத்மாவை அநுமானத்தால் ஸாதிப்பதற்குத் தகுந்த ஹேது கிடையாது. சொல்லுவதாயிருந்தால் எல்லோருக்கும் ஜ்ஞானம் அநுபவஸித்தமாகையால் அந்த ஜ்ஞாநத்திற்கு ஆச்ரயமாக ஆத்மாவை ஒப்புக்கொள்ளவேணும் என்று 2 ஜ்ஞானஸம்பந்தத்தை ஹேதுவாகச்சொல்லவேணும்.

---

1. पृथगात्मानं प्रेरितारं च मत्वा जुष्टस्ततस्तेनामृतत्वमेति । श्वेता 1-6.

2. [illegible] 1-1-10.

தேகமே ஜ்ஞானத்திற்கு ஆச்ரயம் என்று சொல்லிவிடுகிறோம். 2 பூமி ஜலம், தேஜஸ், வாயு என்ற நான்கு பூதங்களும் சேர்ந்து தேகமாகிறது. அந்தத் தேகத்தில் சைதந்யம் (ஞானம்) என்ற ஒரு சக்தியானது புதிதாக உண்டாகிறது. ஆகையால் ஜ்ஞானத்திற்கு ஆச்ரயம் தேகம்தான். வேறு ஆத்மா என்பது கிடையாது.

பூமி முதலான நான்கு பூதங்களும் தனித்தனியே இருக்கையில் அவைகளில் சைதந்யம் இல்லாமலிருக்கும்போது, ஒன்றாய்ச் சேர்ந்தால் மாத்திரம் சைதந்யம் என்ற குணம் எப்படி புதியதாய் உண்டாய்விடும்? அப்படி உண்டாவதானால் நெல்விதைகளுக்குத் தனித்தனியே கோதுமைப்பயிரை விளைவிக்கும் சக்தியில்லாவிட்டாலும் கும்பலாய்ச்சேர்ந்து கோதுமையை விளைவிக்கும் சக்தியை யடைவதற்கு என்னதடை என்று சந்தேகிக்கக்கூடாது. சில வஸ்துக்கள் ஒன்றாய்ச் சேர்ந்தால் சிலகுணங்கள், தனித்தனியே இல்லாவிட்டாலும், புதியனவாக ஸமுதாயத்தில் உண்டாகின்றன.

எங்கேயென்றால் குடம், பிஷ்டம் முதலியவைகளில் தனித்தனியே மதத்தையுண்டுபண்ணும் சக்தியில்லாவிட்டாலும் ஒன்றாய்ச்சேர்ந்து ஸுராயாக ஆகும்போதுபுதியதாக மதசக்திஉண்டாவதைக் கண்டிருக்கிறோமல்லவா. மேலும் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு இவைகளில் தனித்தனியே சிவப்புஎன்றகுணம் இல்லாவிட்டாலும் இம்மூன்றையும் ஒன்றாகச்சேர்த்துமென்றால் சிவப்புநிறம் உண்டாவதையும் பார்க்கிறோமல்லவா. அதே மாதிரிபூமி ஜலம் தேஜஸ் வாயு என்ற பூதங்களில் தனித்தனியே சைதந்யமில்லாவிட்டாலும் நான்கும் ஒன்றாய்ச்சேர்ந்து தேகரூபத்தையடையும்போது சைதந்யம் என்றகுணம்உண்டாவதில் ஒன்றும் ஆக்ஷேபமேகிடையாது.

வெற்றிலைபாக்கு சுண்ணாம்புகளில்தனித்தனியே சிவப்புநிறமானது ஸூக்ஷ்மமாக இருக்கிறது. மூன்றும் ஒன்றாய்ச்சேர்ந்தால் சிவப்புநிறம் ப்ரகாசிக்கிறது என்று சொல்லுவது சரியல்ல. ஒருகேசம் தனியாகக்கண்ணுக்கு ப்ரகாசமாகத்தெரியாவிட்டாலும் அனேக கேசங்கள் சேர்ந்து கண்ணுக்குத் தெரிவதுபோல் ஒரு வெற்றிலையிலுள்ள சிவப்புநிறம் ப்ரகாசமாகத்தோன்றாவிட்டாலும் ஆயிரம்வெற்றிலைகளை ஒன்றாய்ச்சேர்த்துமென்றாலும் கசக்கினாலும் சிவப்புநிறம் ப்ரகாசமாகத் தோற்றவேண்டுமே. அனுபவத்திலோ காணப்படவில்லை. இதேமாதிரி பாக்குக்களிலும் சுண்ணாம்புகளிலும் கண்டுகொள்வது.

---

2. ப்ருதிவ்யாப்தேஜோவாயவ இதி தத்வானி தேப்யச்சைதந்யம் கிண்வாதிப்யோ மதசக்திவத் இதி பார்ஹஸ்பத்யஸூத்ரம் ॥

மேலும் சிலவஸ்துக்கள், ஒன்றுசேர்ந்து ஒருவஸ்துவாக ஆகும்போது அந்த அவயவியானவஸ்துவில் அவயவ வஸ்துக்களை விடத்தனியாக ஒருரூபம் ஒப்புக்கொள்ளவேணும். இல்லாவிட்டால் அந்த அவயவியானது ரூபமில்லாமல் போய்விடும். அப்படியானல் வாயுவைப்போல் கண்ணுக்குப் புலப்படாத வஸ்துவாக ஆய்விடும். அனுபவத்திலோ கண்ணால்காண்கிறோம் அனேகவிதமான நிறத்தையுடைய நூல்களால் ஒரு துணியை நெய்கிரோம். அந்தத்துணியில் சித்திரரூபம் என்று அவயவரூபங்களைவிடவேருக ஒருரூபத்தைப்பார்க்கிறோம். பிறகும் அந்த சித்திரரூபம் என்ற எண்ணம் மாருமல் தொடர்ந்தே வருகிறது. ஆகையால் அவயவகுணங்களைவிட விலக்ஷணமாக அவயவியில் ஒரு குணத்தை ஒப்புக்கொள்ள வேணும். அதேமாதிரிதேகத்தில் சைதந்யம் என்ற ஒருகுணம் புதியதாக உண்டாகிறது.

தேகமே ஆத்மா என்று ஒப்புக்கொண்டால் தன் தேகத்தைத் தானே பார்த்துக்கொள்ளமுடியாது. ஒரு வஸ்துவே ஒரு கார்யத்தில் கர்த்தாவாயும் கர்மாவாவாயும் இருக்கமுடியாது. அனுபவத்திலோ நம் தேகத்தை நாமே பார்த்துக்கொள்கிறோமே என்ற ஆக்ஷேபம் சரியானதல்ல. தேகத்தைவிட வேருக ஒரு ஆத்மாவை ஒப்புக்கொள்ளுகிறவர்களும் "நான் என்னை அறிந்துகொள்ளுகிறேன்" என்ற அனுபவத்தால் ஏற்பட்ட ஜ்ஞானத்தில் ஆத்மாவையே கர்த்தாவாயும் கர்மாவாயும் ஒப்புக்கொள்ளவேண்டியது அவசியமானதால் அவர்கள் சொல்லும் யுக்தியைக்கொண்டே நாமும் ஒரே தேகத்திற்குப் பார்ப்பதில் கத்ருத்வமும் கர்மத்வமும் ஒப்புக்கொள்ள என்னதடை இருக்கிறது.

ஶ்ருதிம் என்ற ஒரு ப்ரமாணத்தை ஒப்புக்கொண்டு அதற்கு வ்யாக்யானம் சொல்லுவதும் தங்களுடைய ஸ்வாதந்த்ர்யமாகுமேயல்லாமல் யுக்திக்கும் வாதத்திற்கும் அது நிற்காது. அப்படி ஆகமத்தை ப்ரமாணமாக ஒப்புக்கொண்டு ஶ்ரவணாதி ந்யாயத்தாலே விசாரித்தாலும் தேகம்தான் ஆத்மா என்று வேதத்தால் ஏற்படுகிறது.

1 "இந்தப் பூதங்களெல்லாம் ஒன்ருய்ச் சேர்ந்து விஜ்ஞானகனமாக அதாவது சைதந்யத்துடன் கூடிய வஸ்துவாக ஆகிறது. இந்தப் பூதங்கள் அழிந்தவுடன் சைதந்யத்துடன் கூடிய அந்தவஸ்துவும் அழிந்துவிடுகிறது, பிறகு சைதந்யம் கிடையாது" என்ற ப்ருஹதாரண்யகோபநிஷ

---

1 விஜ்ஞானகன ஏவைதேப்யோ பூதேப்ய: ஸமுத்தாய தாந்யேவாநு விநஶ்யதி ந ப்ரேத்ய ஸம்ஜ்ஞாஸ்தி -ப்ருஹ. 2-4-12.

த்தைக் கவனித்துப்பார்த்தால் தேகம் தான் ஆத்மா என்று ஏற்படுகிறது. ஆகையால் ஆகமத்தால் தேகத்தைத் தவிர வேருக ஆத்மாவை ஸ்தாபிக்கலாமென்ற வீண் ஆசை ப்ரயோஜனப்படாது. ஆகையால் தேகத்தைத் தவிர வேறு ஆத்மாவை ஒப்புக்கொள்வதற்குத்தகுந்த ப்ரமாணம்கிடையாது. அப்படி ஆத்மாவை ஒப்புக்கொள்வதாயிருந்தாலும் தேகமே தான் ஆத்மா. வேறு இடையாது. ஆகையால்தான் " நான்பருமன் " நான் கருப்பு " நான்சிவப்பு " என்று பருமன், கருப்பு, சிவப்பு முதலிய குணங்களுக்குஆதாரமாகியதேகமே " நான் " என்ற ஜ்ஞாநத்திற்கு விஷயமாகிறது.

தேகமே ஆத்மாவாக இருக்கும்பக்ஷத்தில் "என்னுடையதேகம்" என்று ஞாநம் வரக்கூடாதே. வஸ்து ஒன்ருக இருக்கும் பக்ஷத்தில் "உடைய" என்ற ஷஷ்டீவிபக்தி ஸங்கதமாகாதே. குடத்தினுடையகுடம் என்ற ப்ரயோகத்தைக் கண்டதில்லையே. ஆகையால் "என்னுடையதேகம்" என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளும்படி ப்ரதீதிஉண்டாகிறபடியால் ஆத்மாவேறு தேகம்வேறு என்றுதானே ஒப்புக்கொள்ளவேண்டும் என்ற ஆக்ஷேபிப்பதுசரியல்ல. 'என்' என்றசப்தத்தின் அர்த்தமும் "ஆத்மா" என்று சப்தத்தின் அர்த்தமும் ஒன்ருயிருந்தாலும் " என்னுடைய ஆத்மா " என்ற ஞாநத்தை நீங்கள் எந்த யுக்தியைக்கொண்டு ஒப்புக்கொள்ளுகிறீர்களோ அதேயுக்தியைக்கொண்டு நாங்களும் " என்னுடையதேகம் " என்ற ப்ரதீதியை ஸாதிக்கிரும் என்ருல் நீங்கள் என்னஆக்ஷேபஞ் சொல்லமுடியும்?

இந்த வாவ—ாகர்களுக்குள்ளேயே ஸ்வய—பெகலஹம் கொஞ்சம் உண்டு அதாவது தேகமே ஆத்மா என்று ஒப்புக்கொண்டால் பால்யாவஸ்தையில் இருந்த தேகமானது யௌவநாவஸ்தையில் இல்லாமையால் பால்யத்தில் இருந்தஆத்மாவேறு, யௌவநத்தில் இருக்கும் ஆத்மாவேறு, என்று ஒப்புக்கொள்ளவேண்டியதாகவரும். அப்படியானுல் " பால்யத்தில் சாஸ்த்ரங்களைப்படித்த நான் இப்போது பண்டிதனுக இருக்கிறேன் " என்ற ஜ்ஞாநம் உண்டாவது ஸங்கதமாகாது. ஏனெனில் பால்யத்தில் இருந்த ஆத்மா வேறு இப்போது இருக்கும் ஆத்மா வேறு அல்லவோ? ஒரு ஆத்மா செய்த காரியத்தை மற்ருெரு ஆத்மா, தான் செய்ததாக நினைத்துக்கொள்ளுகிறது என்ருல் தேவதத்தன் செய்த காரியத்தை யஜ்ஞதத்தன் தான் செய்ததாக நினைத்துக்கொள்ள வேண்டியதாகவரும். ஆகையால் தேகம் உள்ளவரையில் ஒரே ஆத்மாவைத் தேகத்தைத் தவிர வேருக ஒப்புக்கொள்ளவேண்டியது அவசியம்.

(இன்னும்வரும்.)

வி. க்ருஷ்ணமாசாரியர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஹயக்ரீவபரப்ரஹ்மணே நம:

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:— கடாதுர் ஸ்ரீநிவாஸாசார்யர், பி. ஏ., பி. எல்.

கார்யதர்சி:— ஆர். ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர், எம். ஏ.

ஸம்புடம் 14.] ருதிரோத்காரிஸூ, கார்த்திகைமீ. [ஸஞ்சிகை 2.

“ த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே।

வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா” ॥

ஸ்ரீபாகவதம். 1-9-23.

பத்ராதிபரின் குறிப்புக்கள்.

ப்ரணய கலஹோத்ஸவம்.

ஸ்ரீபாஞ்சராத்ரஸம்ஹிதைகளில் ஸ்ரீப்ரச்நஸம்ஹிதை என்பது முக்கியமான தொன்று. அதில் பகவத்பிம்ப நிர்மாணம், ப்ரதிஷ்டை, பகவதாராதனம், பகவதுத்ஸவங்கள் முதலியன நன்ருய் விளக்கப்பட்டிருக்கின்றன. சரணாகதியின் அங்காங்கிகளை ப்ரதிபாதிக்கும் ப்ரமாணங்கள் இதில் விஸ்தாரமாய்க் காணப்படும்.

தேவாலயங்களில் நடைபெறும் உத்ஸவங்கள் எல்லா ஜநங்களுடையவும் நன்மைக்காகவே செய்யப்படுகின்றன. அதற்கென்றே ஆலய நிர்மாணங்கள் ஏற்பட்டன. நதீதீரத்திலாவது, தடாகக்கரையிலாவது, க்ராமத்துக்குள்ளாவது, சோலை முதலியவிடங்களிலாவது, பட்டணத்திலாவது, மலையுச்சியிலாவது ஸ்வயம் வ்யக்தம் முதலிய திருநாமங்களுடன் அர்ச்சாரூபியாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவாஸுதேவனை 1 ‘பரார்த்தர்’ என்பது. அப்படி எழுந்தருளியிருப்

1. உத்க்ருஷ்ட: பார்த்திவோயம் ஸர்வலோகாதிலக்ஷண: ।
பஹுதா த்ருஶ்யதே ஸோயம் பார்த்திவ: பரிகீர்த்தித: ॥
ஸ ஏவ ஸர்வ ஸர்வேஷாம் உத்க்ருஷ்டாயக: ॥
ஸ்ரீ - ப்ர - ஸ. II. அத் 54. 152 - 153.

பது ஜகத்தின் க்ஷேமலாபங்களுக்காகவும், துஷ்டர்களின் நிரஸநத்தின் பொருட்டாகவுமே. இந்தப் பர சப்தத்துக்கு உயர்ந்தது என்றுபொருள்; அர்த்தமென்றது மோக்ஷம் முதலியவைகளைக்குறிக்கிறது. இந்த எம்பெருமானைஸேவித்து அவைகளையடையலாமானது பற்றிப் பரார்த்தர் என்று திருநாமம். அவரே எல்லோர்க்கும் எல்லாபலத்தையும் முக்தியையும் அளிப்பவர் என்னப்பட்டது. ப்ராம்மண க்ஷத்ரிய வைச்ய சூத்ராதிகள்,தமது தமது க்ருஹங்களில் ஸ்தாபித்து ஆராதனம்செய்யும் எம்பெருமானுக்கு ஸ்வார்த்தர்என்று திருநாமமென்றும், அவ்வாராதனத்தினால் அவரவர்களுக்குப் பசுதோட்டம் க்ருஹம் விளைநிலம் புத்ரர் முதலிய ஸம்பத்துக்கள் கிடைக்கின்றனவென்றும் அடுத்தாப்போல் கூறப்பட்டது. 2 ‘ பரார்த்த விக்ரஹம் ஸூர்யனுக்கு ஸமானம்; ஸ்வார்த்தவிக்ரஹம்வீட்டு விளக்குக்குச் சமான மென்றார்.

இதனால் பகவதாலயங்களில் உத்ஸவாதிகளை ஸேவிக்கவேண்டிய ஆவச்யகதையும், மோக்ஷார்த்த பரந்யாஸத்தைப் பகவத் ஸந்நிதிகளில் எம்பெருமான் திருவடிகளிலேயே செய்யவேண்டு மென்னும் ஸம்ப்ரதாயமும் தெரிவிக்கப்பட்டன.

இவ்வுத்ஸவங்களில் ப்ரதானமான தொன்று ப்ரணயகலஹ உத்ஸவம். இதைப் பங்குனி உத்தரமென்று பொதுவாய்ச் சொல்லுவார்கள். 3 தைமீ முதல் பங்குனி முடிவதற்குள் இதைச் செய்யலாமென்னப்பட்டது. இதன் ஐதிஹ்யம்:—முன் கல்பத்தில் க்ஷீர ஸமுத்ர மத்தியிலுள்ள ச்வேதத்வீபத்தில் ஓர் ரமணீயமான தடாகத்தின் பெரியமடுவில் ஒரு கஜராஜன் தாஹசாந்தியின்பொருட்டுத் தண்ணீர் பருகுகையில், அதன்காலைப் பெரிய முதலைபொன்று கவ்விக் கஜத்தை மடுவிலிழுக்க, அதனினின்று மீளமுடியாமல் கஜேந்திரன் 4 ‘ இந்தஜகத்துக்கு எவன் காரணமோ, எவனை இந்த ஜகத்து ஆதாரமாக உடையதோ, எவனிடத்தில் லயத்தை அடைகிறதோ அந்த ஜகத்காரணமாகிய மூல ஜ்யோதிஸ்ஸை நமஸ்கரிக்கிறேன் ’ என்று கதறிற்று. இதைச் செவியுற்ற இந்திரன் முதலியதேவர்கள் ‘நானல்லன், நானல்லன்’(நாஹம் நாஹம்)என்று வெறுமனேயிருந்துவிட்டார்கள். பகவானோவென்றால், ஸ்ரீ லக்ஷ்மீயிடத்திலும் விடைகொள்ளாமல்கருடாரூடராய் அதிவேகத்துடன் கஜேந்திரனிடம்வந்து முதலையைச்சக்ரத்தால் ஸம்ஹரித்துக்கஜத்தை மீட்டார். இவ்வவதாரத்தில் பக்தரக்ஷணைத்துக்

---

2 ‘பராயஸ்ஸூர்ய ஸத்ருசஸ் ஸ்வாயஸ்து க்ருஹ தீபவத்।’ ஷை 156.

3. ஆரப்ய தைஷமாஸாத் பௌஷ்யமாஸாந்தமேவ ச।
ஸுக்ருதார்த்தி கிமேஷ ப்ரணயாக்லவ மேவசா॥’ ஷை அ.48-23

4. யத்காரணம் யதாதாரம் யஸ்மிந் லீநமிதம் ஜகத்।
தஸ்மை ஜகத்காரணாய மூலாய மஹஸே நம:॥

ஷை ஷை 10-11.

காக ஸர்வேச்வரன் காட்டிய பரபரப்பி லீடுபட்ட பூர்வாசார்யர், அதையே ‘ஸமவததஸாமெய நமஃ’ என்று நமஸ்கரித்தார். கஜமும் முதலையும் சாபத்தி லிருந்து தம்பழையதேவத் தன்மையை யடைந்து, பகவானைச் சரணம் புக்கு அவனுடை யலோகத்தை யடைந்தார்கள். பகவான் திரும்பி வந்தபோது பிராட்டி கோபங்கொண்டு அவனை வாசலிலேயே தடுத்துவிட்டாள். அவ்விரு தேவர்களும் தடாக வ்ருத்தாந்தத்தைப் பிராட்டிக்கு விண்ணப்பம்செய்ததும், அதையுகந்து அவள் பகவானுக்கு விசேஷ உபசாரங்களைச் செய்தாள். இதைப்பகவானுடைய அர்ச்சையில் கொண்டாடுவதுதான் ப்ரணயகலஹ உத்ஸவமென்பது. இதற்குப் பலமும் விசேஷமாகக் கூறப்பட்டிருக்கிறது. அவதாரங்களில் பகவானும் பிராட்டியும் காட்டும் ஸந்தோஷம், துக்கம், கோபம் முதலியவை வெறும் அபிநயங்களென்றும், பக்தர்களிடம் தமது அன்பைக்காட்டச் செய்யப்படுமவையென்றும் ஸம்ப்ரதாயஜ்ஞர்கள் அறிவார்கள். அவ்வர்த்தத்தையே இங்கும் கண்டு கொள்வது. கருணைவடிவான பிராட்டியே 1. ‘இவ்வுத்ஸவத்தை ஸேவிப்பதினால் ஸம்ஸாரமாகிற முதலையினால் பிடிக்கப்பட்ட சேதனர்கள் அதனினின்றும் கஜேந்திரன்போல் சரண்யனால் விடுவிக்கப்படட்டும்’ மென்று அநுக்ரஹித்தாள்.

இவ்வுத்ஸவத்தன்று, முதலில் அதிகாலையில் பகவானைப் பல்லக்கில் எழுந்தருளப்பண்ணி வீதிகளில் உத்ஸவம் செய்விக்கவேண்டுமென்பதும் ஜகந்மாதாவாகிய பிராட்டியின் கட்டளை. 2 வ்யாதிமுதலியவற்றாலோ, சாஸ்த்ரம் தடுப்பதினாலேயோ கோயில்களுக்குள் புகக்கூடாத பக்தர்களும், தந்தாமிடங்களிலிருந்தே பகவானை ஸேவித்து உஜ்ஜீவிக்கவேண்டுமென்பதற்காகவே பாபங்களையெல்லாம் நசிக்கச் செய்வதும் ஆநந்தமயமுமான பகவதர்ச்சையை இப்படி வீதிகளில் எழுந்தருளப்பண்ணி உத்ஸவம் செய்யவேண்டுமென்று ஸ்ரீ லக்ஷ்மீயின் இந்த நியமனம். இவ்வுத்ஸவங்களில் ஸேவார்த்திகளாய் வரும் தாழ்ந்த ஜாதியாரின் ஸ்பர்சத்தால் தீண்டல் கிடையாதென்றும், ஸ்பர்சம் நேர்ந்தாலும் ஸ்நாநம் செய்யக்கூடாதென்றும், (ஸூரக்ஷா ந ஸ்நாநாவரோஹ) அப்படிச் செய்வது தோஷமென்றும் சாஸ்த்ரம் கூறிற்று. தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்று கூக்குரலிடும் திருத்தக்காரர்கள் இதைக் கவனிக்கட்டும்.

---

1. ‘ஸம்ஸாரக்ராஹ ஸம்ஶ்லிஷ்டாந் மோசயந் தீவசேதநாந்।’ ஷை ஷை 22.

2. யத்ர யத்ராலயே தேவஸ்ஸேவிதும் நசக்யதே। வ்யாதிவசாத்வா தேஷாம் வ்ருத்தித்வஜாமதே॥ சாஸ்த்ரேண வ்யாபிஷீத்யா வா தேஷாம் ஸர்வேஷாம் விக்ஷயே। ப்ரஹ்மசிபிகாம் தேவஸ்ய ஸஞ்சாரயேத் கேசவ॥ ஸர்வதீர்த்த ஸ்நாநம் ஸர்வதீக்ஷாவிக்ஷயே। ஸர்வேஷாம் ஸ்ப்ருஷ்டா ந தோஷம் ஸர்வபாப ப்ரணாசநம்॥ ஷை ஷை 19. 20 - 21.

அருணோதயத்துக்குமுன் பகவானுடைய நித்ய பூஜைகளை முடிந்து, இவ்வுத்ஸவம் கண்டருளவேண்டுமென்றும், அதற்காக உத்ஸவ பிம்பத்தில் ஸாந்நித்யம் பண்ணவேண்டுமென்றும், பக்தரக்ஷணதீக்ஷிதனுயக் க்ருபாநிதியாகிய பகவானை ப்ரார்த்திக்கவேண்டும். இப்படி ப்ரார்த்தித்து மூலவிக்ரஹத்தினின்றும் உத்ஸவபிம்பத்தில் பகவானை ஆவாஹநம்செய்து ஆராதனம் கண்டருளப் பண்ணவேண்டும். அதன்பிறகு பல்லக்கில் வீதி உத்ஸவம் நடப்பிப்பது. ஸாயங்காலத்தில் கோவிலுக்கு வெளியில் மண்டபத்தில் பகவானுக்கு ச்ரமசாந்தியின்பொருட்டு அர்க்யம் முதலியவைகளாலும் பக்ஷணங்களாலும் ஆராதித்து வாஹனத்திலெழுந்தருளப்பண்ணி வாத்யம், வீணை, காநம், நர்த்தனம் முதலியவைகளுடன் பிராட்டி ஸந்நிதிக்கு எழுந்தருளப் பண்ணுவதும், அங்கு, பிராட்டி கட்டளையினால்பகவானைவாயிற்படியிலேயே தடுப்பதும், பக்தரக்ஷணார்த்தமாகப் பகவான் வெளியிலெழுந்தருளினபடியேயன்றி வேறல்ல வென்று பிராட்டிக்கு விண்ணப்பம்செய்வதும், அதன்பிறகு மங்களஹாரத்தி கண்டருளிப்பகவானும்பிராட்டியும் சேர்த்தியில் எழுந்தருளியிருப்பதும், ராத்ரி பூஜை நடந்து மறுநாள் பெருமாள் ஸந்நிதிக்கு எழுந்தருளி மூலபிம்பத்தில் சக்தியைச் சேர்த்து கஜார்த்திஹாரணை ச்ரியப்பதியிடத்தில் உத்ஸவத்தில் நேர்ந்த அபசாரங்களுக்காக க்ஷமைகொள்வதும் இந்த உத்ஸவத்தின் மற்ற வைபவங்கள்.

இவ்வளவுதான் இவ்வுத்ஸவத்தைப்பற்றி இந்த ஸம்ஹிதையில் சொல்லப்பட்டுள்ளது. சில ஸந்நிதிகளில் அதிகப்படியாய்ச் செய்யப்படும் சில கார்யங்கள் அபசாரங்களாகவே ஆகலாம். அவைகளுக்கு சாஸ்த்ரங்களில் ஆதாரங்காண்பது அரிது. புதுக்கல்விபயின்ற இக்காலத்தவர்க்கு அவை விபரீதங்களாகவே தோற்றலாம். எப்படியிருந்தாலும் இந்த உத்ஸவத்தின் தத்வத்தை விவேகிகள் அறியவேண்டியது அவச்யம். ஸ்ரீ ரங்கநாதனுடைய இவ்வுத்ஸவமொன்றில் பிராட்டிசேர்த்தியில் ஸ்ரீ பாஷ்யகாரர் சரணாகதி செய்து கத்யம்அருளிச்செய்ததை ஆஸ்திகர்களான ஸ்ரீ வைஷ்ணவர்கள் மனத்தில் வைக்கக்கடவர்கள். இதனாலும் இவ்விழாவின் பெருமை விளங்குகிறது.

யாத்ரையாகப் பெருமாள், ஸந்நிதியிலிருந்து எழுந்தருளும்போது மூலபிம்பத்திலிருந்து உத்ஸவபிம்பத்தில் ஸாந்நித்யம் பண்ணிவிடுவதினால், பெருமாள் திரும்பி ஸந்நிதிக்கு எழுந்தருளுகிறவரையில் மூலஸ்தாநத்தில் ஸேவிப்பதை அபசாரமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். அதுவும் கீழ்க்கூறிய ப்ரமாணங்களால் விளங்குகிறது. கோவில்களில் காணப்படும் சாஸ்த்ர அதிக்ரமங்கள் பலவுள. அவற்றைப் பரிஹரிப்பது எவர்கடமை?

ஸம்ஸ்க்ருத த்வேஷம்.

ஐக்யமலாய்நாடு கோலாலம்பூரில் ப்ரசுரமாகும் தமிழகம் என்னும் பத்திரிகையின் (ஸமீபத்தில் நமக்கெட்டிய) பிரதியொன்றில், சிவாலயங்களில் ப்ராம்மணகுருக்கள் ஸம்ஸ்க்ருதத்தில் அர்ச்சனை ஆராதனம் முதலியவற்றைச் செய்வதும், பித்ரு ச்ராத்தாதிகளையும வடமொழிகளிலேயே புரோஹி

தர்களடத்துவதும் தமிழ்ப் பாஷையின் அபிவ்ருத்திக்கும் தமிழரின் முற்பாட்டுக்கும் இடையூறுகளா யிருக்கின்றவென்றும் 'ஐயர் என்ன சொல்லுகிறரோ என்பது தெரியாமல் ஊமையாண்டிகள்போலக்கையைநீட்டிநின்று சந்தனம் புட்ப மாதியானவற்றைப் பெறும் பாமரத்தமிழர்களினுல் தமிழினருமை குன்றிவருகிறதென்றும், 'பிராமணர்களே குருவென்று நினைத்து அவர்கள்வழிநிற்பதால் தமிழ்ப்பாஷை வளரும் வகை காணேம்' என்றும் பலவாறுகப் பத்ராகிபர் பதிப்பில் தீட்டியதைப்படித்து விலவறச் சிரித்திட்டோம்! ஸம்ஸ்க்ருத ஸம்பந்தமே தமிழின் அபிவிருத்திக்குச் சாதனமென்பதை அறிஞர்கள் அறிவார்கள். வைதிக ஆகமங்களின்படி ப்ரதிஷ்டைசெய்யப்பட்ட ஆலயங்களில் ஸம்ஸ்க்ருதங்களான வைதிக மந்த்ரங்களைக் கொண்டே பூஜை முதலியவை நடைபெறவேண்டுமென்பதை எந்த ஆஸ்திகர்களும் மறுக்கமாட்டார்கள். தமிழ் ப்ரபந்தங்களும் ஸாதாரணமாய் எல்லா ஆலயங்களிலும் படிக்கப்படுகின்றன. விஷ்ணு ஆலயங்களில் திவ்யப்ரபந்தச் சாற்றுமுறைகளில் புஷ்பம்முதலிய ஸமர்ப்பிக்கப்படுவதும் ப்ரஸித்தம். இப்பத்திரிகையின் மனப்பான்மைக்கு யாம் மிகவும் வருந்துகின்றேம். தமிழை வளர்ப்பதற்கு இதுவா வழி?

சாற்றுப்பாக்கள்.

செந்தமிழ்ப் பத்ரிகையின் ஆடிமீ"த்திய பகுதியில், இவ்விஷயத்தைப்பற்றி முதலில் எழுதிய ஸ்ரீமான் கிடாம்பி அநந்தனுக்கு, மதுரைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் அ. ரங்கராமானுஜப்பிள்ளை ஓர் மறுமொழி வரைந்துள்ளார். ஏற்கனவே தீபிகையில் வெளிவந்த ஸமாதானங்களுடன், அவைகளுக்கு ஆதாரவாகச் சைவக்ரந்தங்களினின்றும் கூடப் பிள்ளையவர்கள் நிருபித்திருக்குமவற்றை நோக்கத்தகும். "தம்மைப் புகழ்வதும் தகும் புலவோர்க்கே" என்னும் நன்னூல் சூத்திரத்தையும் காண்க.

நீறு.

ஏறிய பித்தினேடு எல்லாவுலகுங் கண்ணன் படைப்பென்னும்
நீறு செவ்வே யிடக்காணில் நெடுமாலடியா ரென்றேடும்
நாறுதுழாய் மலர்காணில் நாரணன் கண்ணி ஈதென்னும்
தேறியும் தேறாதும் மாயோன் திறத்தனளே இத்திருவே"—

(திருவாய்மொழி 4-ம் பத்து, 4-திரு, 7-பா.)

ஏறிய பித்தினேடு - அதிகமாக ஏறின ப்ரமத்தையுடையவளாய், எல்லா உலகு - ஸகலலோகங்களும், கண்ணன் படைப்பு என்னும் - ஸ்ரீக்ருஷ்ணனுடைய ஸ்ருஷ்டி என்று சொல்லுகிறுள், நீறு - வெண்மையான சூர்ணத்தை, செவ்வேயிடக்காணில் - ஊர்த்வமுகமாக இட்டுக்கொண்டிருப்பாரைப்பார்த்தால், நெடுமாலடியார் - பகவானுடைய தாஸர்கள், என்று ஓடும்-என்று நினைத்து அவர்களோடு ஓடாநிற்கிறுள், நாறு - வாஸனையோடுகூடிய, துழாய் மலர் - திருத்துழாய் புஷ்பங்களை, காணில்-கண்டால், ஈது - இது, நாரணன் கண்ணி - பகவான் ப்ரஸாதமாகிய மாலை, என்னும் - என்று சொல்லுகிறுள், இத்திரு - லக்ஷ்மீயைப்போன்ற இவள், ஏறியும் - ஜ்ஞானத்தை அடைந்திருந்தும், ஏறாதும் - ப்ரமதசையிலும், மாயோன் திறத்தினளே - பகவான் விஷயத்திலேயே ஆஸக்தி உடையவளாயிருக்கிறுள்.

இப்பாசுரத்தின் இரண்டாம் பாதத்தின் முதலில் பிரயோகிக்கப்பட்டுள்ள "நீறு" என்ற பதத்தின் பொருள் ஆராயத்தக்கது.

இப்பாசுரத்திற்கு ஸ்ரீபாஷ்யகாரர் நியமனப்படி திருக்குருகைப்பிரான் பிள்ளான் ஸாதித்தருளின ஆறுயிரப்படி என்னும் வ்யாக்யானம் பின்வருமாறு உளது:—

"எத்தனையேனும் பித்தேறினாலும் எல்லா உலகும் கண்ணன் படைப்பென்னும். இதொன்றும் தப்பாமல் சொல்லும். த்ரவ்யமேதேனுமாகிலும் ஊர்த்வமாக இடக்காணில், நெடுமாலடியார் என்றோடும். ததீய வஸ்து ஸாத்ருச்யத்தாலே ததீய மல்லாதவற்றையும் ததீயமாகக் கருதிப் பிதற்றுகிற இவள், அவனுக்கு அஸாதாரண சேஷபூதமான திருத்துழாயைக்கண்டாலென்படும்? பலசொல்லென்னினி, தேறியும் தேறாதும் மாயோன் திறமல்லது அறியாள் இத்திரு என்கிறாள்."

பிள்ளான் 'த்ரவ்யமேதேனுமாகிலும்' என்றும் 'ததீயமல்லாதவற்றையும்' என்றும் கூறியுள்ளதால் 'நீறு' என்பதை 'பஸ்மம்' என்று பின் வ்யாக்யர்தாக்கள் அர்த்தம் பண்ண இடங்கொடுத்தாராயிற்று. மேலும் 'இதொன்றும் தப்பாமல் சொல்லும்' என்றும், 'பிதற்றுகிற இவள்' என்றும் அவள் புத்தி கலங்கி மயங்கியதாகக் கூறியிருக்கிறபடியால் பிள்ளான் அபிப்ராயத்திலும் 'நீறு' என்பது 'பஸ்மம்' என்று ஏற்பட்டதாகக்கொள்ளலாம். அவ்விதம் அர்த்தம் கொள்ளவேண்டியது அவச்யமில்லை. 'நீறு' என்பதற்கு (1) 'பஸ்மம்', 'விபூதி', 'சாம்பர்' என்றும், (2) 'பராகம்', 'மகரந்தப் பொடி', 'பூந்தாது' என்றும், (3) 'துகள்', 'பொடி' என்றும் அகராதிகளில் பொருள்கள் காணப்படினும், அவற்றுள் இங்கு ஸந்தர்ப்பத்துக்கு ஒத்ததை எடுத்துக்கொள்ளவேண்டியது நம் கடமை. ஆழ்வாரே மூன்றாவது பொருளை உட்கொண்டு 4-ம் பத்து, 6-வது திருவாய்மொழி, 6-வது பாசுரத்தில் "மாயன் தமரடி நீறு' என்றருளியிருக்கிறார். அல்லது இரண்டாவது பொருளைக்கொண்டு பாதத்தைப் பங்கயத்தோடு உவமித்துக் கூறினார் என்னலுமாம். இருவிதத்திலும் பாகவத பாதரேணுவைக் கூறுகிறார் என்னல் அமையும். ஆனால், இங்குப் பாகவதபாதரேணுவு மாகலாம். அல்லது கோவில்களில் நமக்கு ப்ரஸாதமாகக்கொடுக்கும் பச்சைக் கற்பூரத்தாலாகிய ஸ்ரீபாதரேணுவுமாகலாம். இதற்கேற்க, நம்மாழ்வாரே 5-ம் பத்து 9-ம் திருவாய்மொழி 2-ம் பாசுரத்தில் "என்று கொல்............திருவல்லவாழ் நகருள் நின்ற பிரான் அடிநீறு அடியோம் கொண்டு சூடுவதே" என்று மொழிந்திருப்பதும், அங்கு 'பிரான் அடிநீறு' என்பதற்கு "மஹோபகாரகனுடைய பாதரேணு" என்று திருக்குருகைப் பிரான்பிள்ளான் பொருள்கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கவை.

அல்லது 'நீறு' என்பது 'பொடி'யாக அது தவளப்பொடி என்று 4-ம்பத்து 6-ம்திருவாய்மொழி 5-ம் பாசுரத்தில் உள்ளபடி 'ச்வேதம்ருத்திகை' (திருமண்)

ஆகவுமாம். அப்பாட்டிலும் பிள்ளான் 'தவளப்பொடி' என்பதை வெண்பொடி' என்னுது, வெண்மை என்பதனுல் த்வனித்த 'பரிசுத்தமான சூர்ணம்', அதாவது 'பாகவதபாதரேணு' என்று பொருள்கொண்டிருக்கிறுர். அங்ஙனன்றியே பெரியாழ்வார் திருமொழி 4-ம்பத்து 8-ம் திருமொழி 6-ம் பாசுரத்தில் " தவளவண்ணப்பொடி" என்றிருப்பதை மேற்கொண்டு 'தவளம்' என்பது வர்ணத்தைக்குறிப்பது எனல் நலம். மேலும் " கவளக் கடாக்களி றட்டபிரான் திருநாமத்தால் தவளப்பொடிக்கொண்டு நீரிட்டிடுமின் " என்றிருப்பதாலும் அதற்குப் பிள்ளானே " கவளக் கடாக்களிறட்டபிரான் திருநாமத்தைச் சொல்லி......பொடியைக்கொண்டு நீங்கள் இடுங்கோள்" என்றுரைசெய்திருப்பதாலும், சாஸ்திரப்படி பகவான் திருநாமத்தைச் சொல்லி நீர்விட்டுக்குழைத்து இடப்படுவது 'ஸ்வேதமிருத்திகை' யாகையாலும், 'தவளப்பொடி' என்பதற்கு 'ஸ்வேதமிருத்திகை' (திருமண்) என்று பொருள் கொள்ளுதலே மேல். ஸ்ரீ கேசவாதி நாமத்தைச்சொல்லியிடப் படுவதாலல்லவோ ஊர்த்வபுண்டரத்துக்குத் 'திருநாமம்' என்று பெயராயிற்று. பெரியாழ்வாரும் 3-ம்பத்து 4-ம் திருமொழி 8-ம் பாசுரத்தில் 'திருநாமமிட்டு' என்பதால் ஊர்த்வ புண்ட்ர தாரணத்தை யல்லவா கூறியிருக்கிறுர்.

இனி 'நீறு செவ்வே' என்பதை ('நீறு செவ் ஏ 'செவ்வு நீறு ஏ='செம்பொடியே'=) 'சிந்துரமே' என்றும் பொருள் கொள்ளலாம். அதாவது "சிந்துரப்பொடியிட்டிருப்பதைக் கண்டமாத்திரத்தில் நெடுமாலடியாரென்றோடும்" எனலாம். பெரியாழ்வார், தம் திருமொழியில் 3-ம்ப, 4-ந்திரு, 6-ம்பாவில் 'சிந்தூர மிலங்கத் தன் திருநெற்றிமேல் என்றும், 8-ம் பாவில் 'சிந்துரப்பொடிக் கொண்டு சென்னியப்பி' என்றும், 4-ம்ப, 9-ந்திரு, 9-ம்பாவில் 'செம்பொடிஆடி' என்றுமருளியிருப்பது கவனிக்கற்பாலது.

மேலும் 'நீறு' என்பதை 'பஸ்மம்' என்று கொண்டால் பஸ்மம் ஊர்த்வமாக இட ப்ரருத்யாதிப்ரமாணம் ஏதும் காணும். அங்ஙனன்றிக்கே ஸ்ம்ருதிகளில் 'பஸ்மம்', நகம் மயிர் முதலியவைகளோடு ஒக்க அசுத்தநிஷித்தபதார்த்தம் என்று படிக்கப்பட்டுள்ளது. ஆகையால் பஸ்மத்தை ஊர்த்வமாக இடுவது அசாஸ்த்ரீயம். 'அருள்கொண்டாடும் அடியவர் இன்புற அருளினுன். அவ்வருமறையின்பொருள்' என்றும், 'மிக்க வேதியர் வேதத்தின் உட்பொருள் நிற்கப்பாடி என் நெஞ்சுள் நிறுத்தினுன்' என்றும் மதுரகவியாழ்வார் (கண்ணிநுண் சிறுத்தாம்பு; 8, 9,) மனமுருகிச் சொல்லும்படி வேதஸாரமாய்த் திருவாய்மொழியை அருளவந்த நம்மாழ்வார் ஸ்ருதி ஸ்ம்ருதி முதலியவற்றிற்கு எள்ளளவேனும் முரண்பாடாய் அசாஸ்த்ரீயமானதைக் கூறியிருக்கமாட்டார் என்று உறுதியாய்ச் சொல்லலாம்.

அன்றியும், லோகப் பதத்திற்கு அர்த்தம் இருக்க, யுக்தியைக் கொண்டு பொருள் உரைத்தல் கூடாது. மேலும், அதற்காக அவள் புத்தி தவறிய

தாகக் கொள்ளவேண்டியதும் அனுவசியம். பஸ்மத்தை ஊர்த்வமாக இடுவது யாருக்கும் எங்கும் வழக்கமின்மையால் நாயகிகண்டு மயங்குவதற்குப் பிரஸக்தி யேயில்லை. 'நீறு' என்ற பதத்தை ஆழ்வாரே வேறு இடத்தில் எந்த அர்த்தத்துடன் ப்ரயோகித்திருக்கிறாரோ, அப்பொருளைக் கொள்ளாது இவ்விதம் யுக்தியால் உரை கூறி அதற்கேற்க அவள் ஸ்திதியை வேறாக்கிவிடுவது அனுசிதம். "ஏறியபித்தினோடு" என்பது முன்பாட்டிறுதியில் "பேய்முலை சுவைத்தார்க்கு ஏறிய பித்து" வுடன் என்பதே; அதாவது பக்திப் பித்துதான், புத்திமயக்கமல்ல. "ஏறியபித்தினோடு" என்பதற்கு "இப்படி பகவத் பக்தி அதிகரித்து இருப்பதால்" என்றர்த்தம். "தேறியும் தேறாதும்" என்பதற்கு "அவன் பிரிவினின்று இவ்வாறு தேறியுள்ளபோதும் அவன் பிரிவாற்றாது தேறாத நிலையிலும் எப்பொழுதும்" (மாயோன் திறத்தனளே) என்று பொருள். இத்திருவாய்மொழியில் நாயகிச்செயல்கூறும் பத்துப்பாசுரங்களில், இதற்கு முன்னும் பின்னுமுள்ள ஒன்றிலும் ஸாதாரணமாய்ப் புத்தி நெறி பிறழ்ந்ததாய்த் தோற்றவில்லை; அவள் சொற்களிலும் செயல்களிலும் அஸம்பத்த அஸம்பாவிததோஷங்கள் ஏதும் காணப்படவில்லை. பகவத்பக்திவிஞ்சிய விலக்ஷணரான பித்தர்க்குண்டாகும் விவகாரங்களை நாரதபக்தி ஸூத்ரத்தில் (55) கூறியுள்ளபடியே, (1) நாயகனவனையே யடைந்து அவனாகவே எதையும் காண்கிறாள். எதையும் அவன் பேச்சாகவே கேட்கிறாள்; நினைவெல்லாம் அவனிடத்தே நிற்கும் படியிருக்கிறாள் என்னும் நிலைகளில் காண்டல் பொருந்தும். இப்பாதத்தில் மாத்திரம் "நீறு" என்பதற்கு "அங்யத்ரவ்யம்" என்ற பிள்ளான் வார்த்தைக்கு 'ச்வேதம்ருத்திகை தவிர்ந்த வேறு சாஸ்ரீய த்ரவ்ய' மென்று கொள்ளாது பஸ்மம் என்று பாவித்தால் தான் புத்தி பிறழ்வு சொல்லவேண்டிவருகிறது. அங்ஙனன்றி மேற்கூறியவாறு பொருள் கொண்டால் இக்குற்றஞ் சாற்றவேண்டியதில்லை.

இதைத் திருவுள்ளம்பற்றியே ஸ்ரீமங்நிகமாந்த மஹாதேசிகனும் 'ஸச்சரித்ர ரக்ஷை'யில் பின்வருமாறு கூறியுள்ளார்:—

" 2 ஸகல பாகவதர்களுக்கும் கூடஸ்தரான வகுளதரமஹர்ஷியினாலே ஸாக்ஷாத்கரிக்கப்பட்ட திராவிடவேதத்தில் பகவத் கிங்கரர்களுக்கடையாளமாகப் பஸ்ம ஊர்த்வபுண்ட்ரம் சொல்லப்பட்டது எப்படி என்றால், அதனர்த்தம் இதுவே; அதாவது, அவ்வாக்யத்தில் ஒரே உருவமாக இருப்பதனால்

---

1. 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌤𑌦𑍇𑌵𑌾𑌵𑌲𑍋𑌕𑌯𑌤𑌿, 𑌤𑌦𑍇𑌵 𑌶𑍃𑌣𑍋𑌤𑌿, 𑌤𑌦𑍇𑌵 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌤𑌿'

2. 𑌸𑌕𑌲 𑌭𑌾𑌗𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] 𑌭𑌗𑌵𑌤𑍍𑌕𑌿𑌙𑍍𑌕𑌰 [illegible] [illegible]

ப்ராந்தி உண்டானதாகச் சொல்லப்பட்டிருக்கிறபடியால் அது குற்றமாகாது. அல்லது அங்கு, பஸ்மத்தைச் சொல்லும்பொதுவானசப்தம் பிரயோகிக்கப் படவில்லை என்னலாம். அங்குப் பிரயோகிக்கப்பட்ட சப்தமானது, பகவத் பக்தர்களுடைய பாததூள்கள் என்னும் அர்த்தத்தில் ஆழ்வாராலேயே உபயோகிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் 'நீறு' என்றது திவ்ய சூர்ணவிஷயமென்று நிர்வஹிக்கமுடியும். அங்கு, தவளப்பொடியைப் பற்றிப்பேசுவதால் பகவானிடம் காமங்கொண்ட தலைவியின் பித்துத் தெளிவதாகச் சொல்வது எப்படி என்று கேட்கவொண்ணாது; இதன் முந்திய வாக்கியத்தைப் பராமர்சித்தால் தவளப்பொடியைக்கொண்டு அதற்குச் சாந்தி என்று வாக்யார்த்தம் ஏற்படுவதால் என்க; அடுத்தபாட்டிலும் பகவத் பாததூளியினால் அதற்குச் சாந்தியும் ஸித்தாந்திக்கப்பட்டிருக்கிறது. 'தவள' சப்தத்திற்கு 'தவள மனதையுடையவன்' என்பதைப்போல இங்கு "பரிசுத்தமான' என்ற அர்த்தத்தில் பிரயோகிக்கப்பட்டதாயும் சொல்லலாம். இதனால் பகவத் சூர்ணத்தைப்போலே தவளப்பொடியைத் தரித்தலைச்சொல்லும் வசனத்தையும் நிர்வஹிக்கலாம்..................வகுளதரமஹர்ஷி (நம்மாழ்வார்) ச்ருதி ஸ்ம்ருத்யாதிகளை விளக்க ப்ரவர்த்தித்தவராகையால் அவற்றிற்கு விரோதமாக அவர் மொழிகளுக்கு அர்த்தம் செய்யவொண்ணாது"—என்று.

பாம்ஸு தூ⁴ளிபாத³நம்? உச்யதே—ஸாத்³ருஶ்யேந ஹ்யஸ்தி தூ⁴ளி பாத³ந பாம்ஸ்வாத்மஸ்ய வாக்யஸ்ய. யதா²நந்தரம் ஸ்வஸா ஸாமாந்ய ஶப்³த³: ப்ரயுக்த: । அதோ தி³வ்யசூர்ணவிஷயதயாபி நிர்வாஹ்யம். நநு ஸந்த³ர்ப⁴தயா ப⁴க³வச்சூர்ணாபா⁴வே ப⁴க³வத்காமிநீ உந்மாத³ ப்ரஶமநாஹீயா நம் கத²மிதி சேத் । பூர்வவாக்ய பராமர்ஶாத் ப⁴க³வச்சூர்ணாபா⁴வே ப⁴க³வத³ந்தி வாக்யார்த² ப்ரஸக்தே:. அநந்தரகா³தா²யாம் ப⁴க³வத் பாத³ரஜஸா தச்சா²ந்தி ஸித்³தா⁴ந்திதா. ப⁴க³வச்சூர்ணஸ்யேவ ஸிதப⁴ஸ்மதி⁴ஶேஷஸ்யாபி ஶுத்³த⁴த்வாத் தத்³தா⁴ரண ப்ரத்யக்ஷ ப⁴க³வத் ஸதோ ஸங்கல்ப்ய ப⁴க³வச்சூர்ணஸ்யேவ வசநம் விநிர்வாஹ்யம் । .... வகுளாப⁴ரண மஹர்ஷே: ஶ்ருதி ஸ்ம்ருத்யாத்³யர்த² ப்ரகாஶந ப்ரவ்ருத்தஸ்ய தத்³விரோதே⁴ந ந வசஸாம் அர்த²: கல்ப்ய: ॥'

சருக்கை-கி. பார்த்தசாரதி.

ஆபோசனமும், ப்ராணாஹுதியும்.

(முன் தொடர்ச்சி)

ஏற்கெனவே சொல்லப்பட்ட ஐந்து ப்ராணதேவதைகளுக்கும் முதலில் ஆஸனம் ஸமர்ப்பிக்கும்பொருட்டு இந்த ஆபோசனம் செய்யப்படுகிறது. நம்ம ஹிந்துக்களுக்கு அதிதிகள் எவர்வந்தாலும் அவர்களை உபசரிக்க முதலில் ஆஸனம் கொடுப்பதுபோல இந்த ப்ராணதேவதைகளுக்கு முதலில் ஆஸனம் ஸமர்ப்பிக்கப்படுகிறது. ஹவிஸ்ஸை ஸமர்ப்பிக்குமுன் அந்தத் தேவதைகள், கொடுக்கப்பட்ட ஆஸனத்தைப்பெற்றுக்கொண்டு ஹவிஸ்ஸை ஸ்வீகரிக்க ஸித்தமாக இருக்கிறார்கள் போலும். ப்ராணதாரணம் செய்யும்சக்தி ஜலத்துக்கு இருப்பதால் இது ப்ராணதேவதைகளுக்குத் தகுதியான ஆஸனமாக ஆகிறது. (1) ஒருமனிதன் தூங்கும் படுக்கைமேல் ஒருவஸ்தரம் எப்படி விரிக்கப்படுகிறதோ அப்படியே ப்ராணதேவதைகளுக்கு இந்தஜலம் விரிப்பாக ஆகிறது; ஆகையாலே சுக்லயஜுர்வேதத்தில் ப்ராணவித்யா ப்ரகரணத்தில் ப்ராணதேவதைகளுக்கு ஜலம் வஸ்திரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மேலே சொன்னது வித்யாரண்யஸ்வாமியின் அபிப்ராயம்; பட்டபாஸ்கராசாரியர் ஆபோசனம் பண்ணப்பட்டஜலத்தை அன்னத்துக்கு ஆஸனமாக அபிப்பிராயப்படுகிறார்.

பிறகு ப்ராணாஹுதி செய்யப்படுகிறது. ப்ராணதேவதைகளின் த்ருப்தியின் பொருட்டு ஸமர்ப்பிக்கப்படுகிற ஹவிஸுக்குத்தான் ப்ராணாஹுதி என்றுபெயர். விரல்களால் கொஞ்சம் அந்நத்தை எடுத்துக்கொண்டு, ப்ராணாய ஸ்வாஹா என்னும் மந்த்ரத்தைச்சொல்லிககொண்டு ருசிபார்க்காமல் விழுங்கிவிடவேணும், இதின்அர்த்தம் ப்ராணதேவதையின் பொருட்டு இந்த ஹவிஸ்ஸைஸமர்ப்பிக்கிறேன்-அது ப்ராணதேவதையின் பொருட்டு ஹோமம் பண்ணப்பட்டதாக ஆகட்டும் என்பது. தேவதைகளுக்கு ஹவிஸ்ஸாக அந்த

---

1. 𑌯𑌥𑌾 𑌶𑌯𑌾𑌨𑌸𑍍𑌯 𑌪𑍁𑌂𑌸𑌃 𑌤𑌲𑍍𑌪𑌸𑍍𑌯 𑌉𑌪𑌰𑌿𑌸𑍍𑌥𑌂 𑌪𑌟𑌾𑌦𑌿𑌕𑌂 𑌉𑌪𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌯𑌤𑍇, 𑌤𑌦𑍍𑌵𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌣𑌦𑍇𑌵𑌤𑌾𑌯𑌾𑌃 𑌉𑌦𑌕𑌮𑌾𑌸𑍍𑌤𑌰𑌣𑌂, 𑌯𑌥𑌾 𑌚 𑌵𑌾𑌜𑌸𑌨𑍇𑌯𑌿𑌨𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌦𑍇𑌵𑌤𑌾𑌯𑌾𑌃 𑌜𑌲𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌸𑌮𑌾𑌮𑌨𑌨𑍍𑌤𑌿 ॥

அன்னம் உள்ளேபோவதால் அதை நாம் ருசிபார்க்கக்கூடாது. இதேமாதிரி, கொஞ்சம் கொஞ்சம் அன்னத்தை எடுத்துக்கொண்டு அபாநாய ஸ்வாஹா, வ்யாநாய ஸ்வாஹா, உதாநாய ஸ்வாஹா, ஸமாநாய ஸ்வாஹா என்று மந்த்ரங்களைச் சொல்லிக்கொண்டே ஹவிஸ்ஸை உள்ளே ஹோமம்பண்ணிவிடவேணும். அதாவது விழுங்கிவிடவேணும். பிரதிதினம் ஸௌகரியத்தை உத்தேசித்துச் சிறியதாய் இந்த ஐந்துமந்த்ரங்களைச் சொல்லி ப்ராணாஹுதி செய்கிறோம். பூர்ண மந்த்ரம் பின் வருமாறு காண்க.

1. ச்ரத்தாயாம் ப்ராணே நிவிஷ்டோம்ருதம் ஜுஹோமி ।
ஶிவோமா விஶாப்ரதாஹாய ப்ராணாய ஸ்வாஹா ।
ச்ரத்தாயாம் அபானே நிவிஷ்டோம்ருதம் ஜுஹோமி ।
ஶிவோமா விஶாப்ரதாஹாய அபானாய ஸ்வாஹா ॥
ச்ரத்தாயாம் வ்யானே நிவிஷ்டோம்ருதம் ஜுஹோமி ।
ஶிவோமா விஶாப்ரதாஹாய வ்யானாய ஸ்வாஹா ॥
ச்ரத்தாயா முதானே நிவிஷ்டோம்ருதம் ஜுஹோமி ।
ஶிவோமா விஶாப்ரதாஹாய உதானாய ஸ்வாஹா ॥
ச்ரத்தாயாம் ஸமானே நிவிஷ்டோம்ருதம் ஜுஹோமி ।
ஶிவோமா விஶாப்ரதாஹாய ஸமானாய ஸ்வாஹா ।
ப்ரஹ்மணிம ஆத்மாம்ருதத்வாய ॥

இதன் அர்த்தம்.

வைதிககார்யங்களில் ச்ரத்தையுள்ளவனாய், ப்ராணனைக்காப்பாற்ற யத்னம் செய்துகொண்டிருக்கிற அல்லது ப்ராணதேவதைக்கு ஆதரத்துடன்கூடினவன், மரணமில்லாமல் என்னைக் காப்பாற்றக்கூடிய இந்த அன்னத்தை ஆத்மஜ்யோதிஸ்ஸில் அதாவது ஜாடராக்னியில் ஹோமம் செய்கிறேன். ஹே அன்னமே! என்சரீரத்துக்கு உபத்திரவத்தை உண்டுபண்ணாமல், என்சரீரம் ஜாடராக்னியால் கொளுத்தப்படாமலிருக்கும்பொருட்டு எனக்கு உள்ளே பிரவேசி. ப்ராணதேவதையின்பொருட்டு ஹோமம்பண்ணதாக ஆகட்டும். இந்த அன்னத்தாலே வ்ருத்தி அடைவாயாக என்பது. இதுபோலவே, அபான, வ்யான, உதான, ஸமான தேவதைகளுக்கும் கண்டு கொள்க.

---

1 தைத்தரீய ஆரண்யகம் 10 ப்ரபாடகம் - 34 அநுவாகம்.

இந்த ஐந்து ஆஹுதிகளும் ஆனவுடன் இந்த மந்த்ரத்தின் கடைசி பாகமாகிய ப்ரஹ்மணி ம ஆத்மா அம்ருதத்வாய என்னும் மந்த்ரத்தைச்சொல்லிக்கொண்டே, இடதுகை விரல்களை யிலையையோ பாத்திரத்தையோ விட்டுவிட்டு, ஜலத்தை விடச்சொல்லி அலம்பிக்கொண்டு, அவைகளை ஹ்ருதயத்தின்மேல், அதாவது மார்பில்வைக்கவேணும். இந்த மந்த்ரத்துக்கு அர்த்தம் என்னவென்றால், என்னுடைய ஆத்மா பரப்ருஹ்மத்தினிடத்தில் ஸமர்ப்பிக்கப்பட்டதாய்க் கொண்டு பேரானந்தத்தை அடையட்டும் என்பது. இப்படி ரங்கராமாநுஜஸ்வாமிவ்யாக்யானம்செய்திருக்கிறார். பட்டபாஸ்கரஸ்வாமி மூன்றுவிதமாக அர்த்தம் பண்ணுகிறார். அதாவது:—

(1) இப்போது செய்யப்பட்ட அன்னஹோமத்தாலே என்னுடைய ஆத்மா (சரீரம்) ப்ருஹ்மத்தினிடத்தில் வைக்கப்பட்டதாய், எனக்கு சாவில்லாமலிருக்குகைக்கு ஆகிறது.

(2) இந்த அன்னஹோமத்தாலே என்னுடைய ஆத்மா சாகாதிருப்பதின் பொருட்டு ப்ருஹ்மத்தினிடம் இருக்கட்டும்.

(3) இந்த என் சரீரம் ப்ருஹ்மமாகிற அன்னத்திலிருப்பதால், அதாவது அன்னாதீனமாயிருப்பதால், இந்த சரீரத்துக்குக் கெடுதல் நேராமல் இந்த அன்னஹோமம் செய்கிறேன் என்பது.

பட்டபாஸ்கரருடைய இரண்டாவது அர்த்தமும் ரங்கராமாநுஜஸ்வாமியினுடைய அர்த்தமும் ஒன்றாயிருக்கிறது. இதை இந்த ஜீவாத்மாவைப் பரப்ருஹ்மத்தினிடம் ஸமர்ப்பிக்கும் அடையாளமாக இடதுகைவிரல்களை ஹ்ருதயத்தின்மேலேவைத்துக்கொள்வது.

பிறகு ஆஹாரத்தை யதாக்ரமம் சாப்பிடும்போது கபளத்துக்குக்கபளம் கோவிந்தஸ்மரணம் செய்துகொண்டே சாப்பிட்டு, முடிந்தவுடன் வலதுகையைக்குழித்துக்கொண்டு கொஞ்சம் ஜலம்சேர்த்து, அதை 'அம்ருதாபிதாநமஸி' என்னும் மந்த்ரத்தைச் சொல்லிக்கொண்டே சாப்பிட்டுவிடவேணும். இதன் அர்த்தம் ஹே ஜலமே! நான் உட்கொண்ட அன்னத்தை நீபோற்றி அழிவில்லாமல் காப்பாற்றிக்கொடுக்கவேணும் என்று ப்ரார்த்தனைசெய்தல். இப்படி ஆஹாரம்உட்கொள்ளுவதற்கு முன்னும் பின்னும் மந்த்ரோச்சாரணபூர்வகமாய்த் தீர்த்தப்ராசனம்செய்வதுதான் ஆபோசனம் என்றுசொல்லப்படுகிறது.

இவ்வளவு அர்த்தம் அடங்கிய இம்மந்த்ரங்களைச்சரிவர அர்த்தத்தை அநுஸந்தானம்பண்ணி வாயால்சொல்லி ஆஹாரத்தை உட்கொண்டுவந்தால் ப்ராண

பிமோனிதேவதைகள் நம்மைக்காப்பாற்ருமல் எப்படி விட்டுவிடும்? இதைத்தெரிந்துகொள்ளாமல் அந்தத்தேவதைகளைத் திரஸ்காரம் செய்வதால் வரவர வ்யாதிகள் முதலிய உபத்திரவம் உண்டாகிச் சரீரத்துக்கு ஆயுஸ்ஸும் குறைந்துவிடுகிறது. வேதநூல் பிராயம் நூறு என்று சொல்லப்பட்ட மனுஷ்யாயுஸ் இப்போது பாதி கூட ஏற்படுவது கஷ்டமாகிவிட்டது. நம்முடைய அநுஷ்டானத்தைச் சரிவர நடத்தி வந்தால் வேதத்தில் சொல்லியபடி ஆயுஸ் வ்ருத்திஅடையும் என்பதில் ஸந்தேகமேயில்லை.

ஆர். ஸ்ரீநிவாஸராகவன்

ஸ்ரீ:

பூ த த யை.

(முன் தொடர்ச்சி)

இப்படி இவர்கள் கையில் அகப்பட்டுத் தபிக்கும் க்ரந்தங்களில் முதன்மையானது ஸ்ரீகீதையே; இதில் பதங்கள் ஸரளமாய் இருப்பதால் அவைகளின் பொருளும் அவ்வளவேதான் என்றும், தங்களுக்கு மேலோடு தோற்றும் பொருளே அவற்றின் கருத்தென்றும் நம்பி, ஆழ்ந்துஆராயாமலே விட்டுவிடுகிருர்கள். தவிரவும், ஒரு இடத்தில் சாஸ்திரம் சொல்லுவதை மற்ற இடங்களில் அதே விஷயத்தைப்பற்றிச் சாஸ்திரங்கள் சொல்லுவதோடும் பொருந்தும்படி பொருள் கொள்ளவேண்டுமே யொழிய, தோன்றியபடியெல்லாம் சொல்லுவது பொருந்தாது. இப்படித் தடுமாறும் ஶ்லோகங்களில் ஸ்ரீ கீதையில் முதன்மையானவை * 5-வது அத். 18-வது ஶ்லோகம், 6-வது அத். 32-வது ஶ்லோகமும் முதலியவைகளே. இவைகளில் சமயமாய்ப் பாவிக்கச் சொன்னதைக்கொண்டு நம்மவர்களில் சிலருக்குத் தயை கரைபுரளுகிறது. இங்கு, சீரிய பிராம்மணன், பசு, யானை, நாய், சண்டாளன் இவ்வைவரையும் சமமாய்ப்பார்க்கச் சொல்லியிருக்கிறது. இவர்கள் சொல்லுகிறபடி பசுவையும் நாயையும் சமமாகப் பாவிக்கவேண்டிவருவதால் கோதானத்துக்கும் கோப்ரதக்ஷிணத்துக்கும் பதிலாய் நாயை ப்ரதக்ஷிணம் பண்ணுவதும் நா

---

* மஹான்களாய்ப் பிரம்மஞானமுள்ளவர்களான வியாஸ பராசராதிகளும் இவ்வாறு விபரீதத்தைச் செய்ததாகக் காணேம். சாஸ்திரத்தில் சிறந்ததான மநுஸ்மிருத்யாதிகளிலும் இவ்விபரீதங்களைச்செய்ய வாக்கியங்களில்லை.

யையே தானம் செய்வதும் தகுமா? சிரிய பிராம்மணனையும் சண்டாளனையும் சமமாய்ப்பாவிக்கச் சொன்னதற்காகச் ஶ்ராத்தாதிகளில் பிராம்மணர்களுக்குப் பதிலாய்ச் சண்டாளனை நிமந்த்ரணத்துக்குவைத்து விடலாமா?

இவை இரண்டுந்தான் இதுவரையில் நமது நாகரிகர்களிடம் அநுஷ்டானத்திற்கு வரவில்லை. மற்றவைகளைப்பற்றி இன்ன விபரீதங்கள்தான் இவர்கள் அநுஷ்டிக்கிறார்கள் என்று சொல்லியேமுடியாது. நவீன நாகரிகர்கள் நாயை நீராட்டி நடுக்கூடத்தில் நாற்காலியில் நல்ல பஞ்சணையிலமர்த்தி அதன்பசிக்குப்பரிசுத்தமான பசும்பாலைப் புசிப்பிக்கவில்லையா? பிரபுக்கள், வண்டிகளில் சாரதிகளும் தாமுமாய் ஸ்தலம்மாறி உட்கார்ந்து சந்தோஷமாய்ச் செல்லவில்லையா? பிராம்மணக்கன்னிகையை, புருடனாய்த்தோற்றுவதே பிரதானமென்று கருதிப் பஞ்சமனுக்குத் தானம்செய்து பார்க்கவில்லையா? பசுக்களை ஹிம்ஸித்துப் பிறர்பசி தீர்ப்பதையும் பரோபகாரமாய் நினைக்கவில்லையா?

ஆகையினால் ஸாம்ய சப்தத்தின் பொருளாவது ஒரு வஸ்துவிலிருக்கும் தன்மை மற்றொருவஸ்துவிலிருப்பதேயாம். ஒரு வஸ்துவிலிருக்கும் எல்லாத் தன்மைகளும் மற்றொரு வஸ்துவில் காணப்படுமாகில் அவ்விரண்டும் ஒன்றாகவே நினைக்கப்படுமாதலால் ஏதோ ஒரு அம்சத்தினால்மட்டும் சமம் என்கிற வ்யவகாரம் உலகத்தில் ஏற்பட்டுள்ளது.

உதாஹரணமாக, ஒருவன் யானையைப்போலிருக்கிறானென்றால் பருத்திருப்பதில் மட்டும் அவனிடம் ஸாம்யம் கொள்ளலாமேயொழிய மற்றப்படி துதிக்கை, வால் இவைகளினால் ஸாம்யம் கொள்வது தகுதியாமோ? ஆகையினால் ஷை ஶ்லோகங்களின் தாத்பர்யத்தை முன்பின் ஸந்தர்ப்பங்களையும் ஶப்தஸ்வாரஸ்யங்களையும் அநுசரித்தும், உள்ளேயிருக்கும் ஜீவர்கள் யாவரும் ஜ்ஞானானந்தஸ்வரூபிகளாய் ஸமமாக இருக்கிறார்கள் என்று ஸ்ரீ பாஷ்யகாரர் வியாக்யானம் பண்ணியருளினார்.

* பாகவதத்தில் யானை, ஒட்டகம், கழுதை, குரங்கு, எலி, பாம்பு, ஈ இவைகளைத் தன்னைப்போலும் புத்திரனைப்போலும் பார்க்கச்சொன்னதும்,

---

* 𑌮𑍃𑌗𑍋𑌷𑍍𑌟𑍍𑌰𑌖𑌰𑌮𑌰𑍍𑌕𑌾𑌖𑍁𑌸𑌰𑍀𑌸𑍃𑌪𑌖𑌗𑌮𑌕𑍍𑌷𑌿𑌕𑌾𑌃 । 𑌆𑌤𑍍𑌮𑌨𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌵𑌤𑍍𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍𑌤𑍈𑌰𑍇𑌷𑌾𑌮𑌨𑍍𑌤𑌰𑌂 𑌕𑌿𑌯𑌤𑍍 ॥

தன்னுடைய ஹிம்ஸை தனக்குஸஹிக்கமுடியாததுபோல அவைகளையும் ஹிம்ஸிக்கக்கூடாதென்றும், தாம் சுகித்திருக்கநினைப்பதுபோலவே அவைகளும் சுகித்திருக்க நினைக்கவேண்டுமென்றும் சொன்னபடியல்லது, அப்பிராணிகள் யாவும் வெவ்வேறு குணமுள்ளனவாயும், வெவ்வேறு ஆகாரமுள்ளனவாயும், சுகங்களிலும் வேறுபாடுள்ளனவாகவும் இருப்பதால், அவைகளை ஒருவிதத்தாலும் சமமாக நினைப்பது சாத்தியப்படமாட்டாது.

* மற்ருேரிடத்தில், சண்டாளன், நாய், பசு, கழுதை இவைகளை வணங்கச்சொன்னதும் இவற்றுள்ளிருக்கும் ஸர்வேச்வரனைத் தத்வ ஜ்ஞானத்திஞல் நன்குணர்ந்து ஈச்வரனை வணங்கச்சொன்னதேயல்லாது நாய், கழுதை முதலியவைகளையே வணங்கச்சொன்னதல்ல.

ஆகையினுல் கௌதமருஷியினுல் சொல்லப்பட்ட பூததயையானது, மற்றைய சாஸ்த்ரங்களுக்கும், கீதை முதலானதின் பூர்வோத்தர வாக்கியங்களுக்கும் விரோதமில்லாதபடி அநுஸந்திக்கப்படுமாஞல் அது மோக்ஷத்தைக்கொடுக்கும். இவ்வாருகச்சொல்லப்படும் தயையானது கேவலம் பரலோகத்துக்கு மாத்திரம் சாதனமல்ல. சரங்கள் அசரங்கள் எனப்படுகிற ப்ராணிவர்க்கங்களிடம் ஈசுவரவனுடைய தேகத்திற்போல் அன்பு பாராட்டி அநுகூலித்திருக்கச்செய்வதால் இத்தயையுடையவன் ஸர்வஜனங்களுக்கும் விசேஷப் பிரியத்திற்கு விஷயமாய் இருப்பதால் ஸ்ரீராமாதிகளைப்போல இவ்வுலகிலும் யாவராலும் கொண்டாடப்படும்படியான மேன்மையையடைவான் என்பது நிச்சயம்.

---

* உஶுவசு ஶூணெசு ஹ-ஸ்ரீ கூஶ்வஊாஉ ெம.வாா. । ஶூவிஷொ ஜீவகுமயா தெஷுஷ ஐமவாநிதி॥

புத்தங்கோட்டகம்—ஸ்ரீநிவாஸாசாரியர்.

ஸ்ரீ:

ஸ்ரீ வைஷ்ணவர்களும் அவர்களின் லக்ஷணங்களும்.

(முன் தொடர்ச்சி.)

சொல்லப்படுகிற சக்ரத்திஞல் தேவதைகள் தங்கள் சரீரங்களை எப்போதும் பரிசுத்தம் செய்து கொள்ளுகிருர்களோ அப்படிப்பட்ட ஆயிரம் நுனிகளையுடைய சக்ரத்திஞல் "பாவமாணி" என்கிற மந்த்ரங்கள் என்னைச் சுத்தம் செய்யட்டும் என்று அநேகம் ஸ்ம்ருதிகள் சொல்லுகின்றனவோ, அப்படியே இதி

ஹாஸங்களிலும், புராணங்களிலும் சொல்லப்படுகின்றன. ப்ராஹ்மணர்களுக்கு அதிலும் அவசியமாய் வைஷ்ணவர்களுக்குச் சங்குசக்ரங்கள் தரிக்கத்தக்கவை. ஊர்த்வபுண்ட்ரம் தரித்துக்கொண்டு சக்ராங்கனம் செய்துகொண்டு இருக்கிற எந்த மஹாத்மா, ஹ்ருதயகமலத்துக்குள்ளிருக்கிற நாராயணனை அஷ்டாக்ஷரம் என்னும் மந்த்ரத்தால் த்யானம் செய்கிறானோ, அவன் அந்த பரமாத்மாவை அடைகிறான். எவர்கள், கழுத்தில் தொங்கிக்கொண்டிருக்கிற துளசிமணி, தாமரைமணி மாலைகளை யுடையவர்களாயும், தோள்களில் அங்கனம் செய்யப்பட்ட சங்கசக்ரங்களை யுடையவர்களாயும், நெற்றியில் ப்ரகாசித்துக்கொண்டிருக்கிற திருமண் காப்புக்களையுடையவர்களாயுமிருக்கிற வைஷ்ணவர்களோ அவர்கள் உலகத்தை அதிசீக்கிரம் பரிசுத்தம் செய்கிறார்கள். எவன் கையில் சங்குசக்ரங்களால் தாபம் செய்யப்படவில்லையோ அவனால் செய்யப்படும் வைதிக கர்மங்களெல்லாம் தாங்களே துக்கிக்கின்றன. தன்னுடைய பத்நி, பிள்ளைகள், வேலைக்காரர்கள், பசு முதலியவஸ்துக்கள் எலலாவற்றையும் சங்குசக்ரங்களால் அங்கனம் செய்துவைக்க வேண்டும். சங்குசக்ராங்கனம் இல்லாதவனுக்கு வைஷ்ணவத்வம் ஸித்திக்காது.

ஸர்வேஷாமேவ வர்ணாநாம் ப்ராஹ்மணாநாம் விசேஷத: ।
விதிநா வைஷ்ணவம் சக்ரம் தார்யம் ஹி ச்ருதிசோதநாத் ।
ஏவம் தேஹே ச நிஷ்டப்தே ப்ரோக்தம் சக்ராதிதாரணம் ।
தமேவ ஸாம்நி யஜுஷி ருஷிப்ரோக்தம் மஹாத்மநே ।
ஏவம் ப்ரஹ்மஸ்ய ஸர்வா: குர்வந்தி யாதநே ।
தமேவ ஸம்ஹிதாவேதேஷு ப்ராமாணேஷு விவக்ஷதி ।
யஸ்மாத் தாபம் ப்ரதாப்யேந ஹ்ருதி சக்ரயாஸீ
விஷ்ணும் ஸநம் த்யாயதி யோ மஹாத்மா ।
ஸ்வரேண மந்த்ரேண ஸதா ஹ்ருதிஸ்தம்
பராத்பரம் யாதி விசுத்தசேதா: ॥
யே கண்டலக்நதுலஸீநலிநாக்ஷமாலா:
யே பாஹுமூலபரிசிஹ்நித சங்கசக்ரா: ।
யே வா லலாடபலகே லஸதூர்த்வபுண்ட்ரா:
தே வைஷ்ணவா புவநமாசு பவித்ரயந்தி ॥
ஶங்கோ தப்தசக்ராசிஹ்நௌ ந பாஹுமூலயோ: ।
க்ருதாஷ்டோ ஶ்ருதிஸ்ம்ருத்யுக்தேஷு ஸர்வேஷு ச கர்மஸு.
சக்ராதி சிஹ்நஹீநஸ்ய வைஷ்ணவத்வம் ந ஸித்யதி.

திருமண்காப்பு.

பரத்மோத்தரபுராணத்தில் 253-வது அத்யாயத்தில் ருத்ரன் பார்வதிக்குச் சொல்லுவதாக எழுதப்பட்டிருக்கிறது. ஊர்த்வ புண்ட்ரத்தினுடைய மஹிமையைச் சொல்லுகிறேன். ஊர்த்வபுண்ட்ரங்களை ப்ராம்மணன் தரிப்பதினாலேயே ஸம்ஸார பந்தத்தினால் விடப்படுகிறான். ஊர்த்வபுண்ட்ரங்களின் நடுவில் லக்ஷ்மீயோடுகூட நாராயணன் வஸிக்கிறார். ஆதலால் எவனுடைய சரீரத்தில் திருமண்காப்புக்கள் தரிக்கப்பட்டிருக்கின்றனவோ அவனுடைய தேஹம் பகவானுக்குப் பரிசுத்தமான திருக்கோவில். எவன் திருமண்காப்பைத் தரிக்கிறானோ அவன் எல்லாப்புண்யதீர்த்தங்களிலும் ஸ்நாநம்செய்தவனாவான். எல்லா யஜ்ஞதீக்ஷைகளும் செய்துகொண்டவனாவான். திருமண்காப்புக்களைத் தரித்துக்கொண்ட ப்ராம்மணன், எல்லா லோகங்களிலும் பூஜிக்கப்பட்டவனாய் விமானத்தில் ஏறிக்கொண்டு பகவானுடைய பரமபதத்தை அடைவான். எல்லாப்பாபங்களும் நிவர்த்தி அடைவதற்காகவும், யாகம்முதலியபுண்யகர்மங்களின் பலன்களை அடைவதற்காகவும் ப்ராம்மணன் மூன்று ஸந்த்யா காலங்களிலும் திருமண்காப்புக்களைத் தரிக்கவேணும். திருமண்காப்பைத் தரித்துக்கொண்டிருக்கும் ப்ராம்மணனைப் பார்ப்பவன் எல்லாப் பாவங்களாலும் விடப்படுகிறான். பக்தியுடன் அவனை நமஸ்காரம்செய்தால் எல்லாத் தானங்களையும் செய்ததின்பலனை அடைவான். யஜ்ஞம், தானம், ஜபம், ஹோமம், தபஸ் முதலிய கர்மங்களை ஒரு திருமண்காப்பைத் தரித்துக்கொண்டு செய்வானேயானால் அவனுக்கு அளவில்லாத

𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌸𑍍𑌯 𑌮𑌾𑌹𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌶𑍃𑌣𑍁 𑌷𑌡𑌾𑌨𑌨𑍇 ।
𑌧𑌾𑌰𑌣𑌾𑌦𑍇𑌵 𑌮𑍁𑌚𑍍𑌯𑍇𑌤 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑌾𑌦𑍍 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 ॥
𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌸𑍍𑌯 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑍁 𑌵𑌿𑌶𑌾𑌲𑍇 𑌸𑍁𑌮𑌨𑍋𑌹𑌰𑍇 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾 𑌸𑌾𑌰𑍍𑌧𑌂 𑌸𑌮𑌾𑌸𑍀𑌨𑍋 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑍋 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨𑌃 ॥
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 𑌶𑌰𑍀𑌰𑍇 𑌤𑍁 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑍋 𑌧𑍃𑌤𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌤𑌸𑍍𑌯 𑌦𑍇𑌹𑌂 𑌭𑌗𑌵𑌤𑍋 𑌵𑌿𑌮𑌲𑌂 𑌮𑌨𑍍𑌦𑌿𑌰𑌂 𑌶𑍁𑌭𑌮𑍍 ॥
𑌸 𑌸𑍍𑌨𑌾𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌤𑍀𑌰𑍍𑌥𑍇𑌷𑍁 𑌸𑌰𑍍𑌵𑌯𑌜𑍍𑌞𑍇𑌷𑍁 𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌃 ।
𑌧𑌾𑌰𑌯𑍇𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌂 𑌯𑍋 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌃 ॥
𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌧𑌰𑍋 𑌵𑌿𑌪𑍍𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌪𑍂𑌜𑌿𑌤𑌃 ।
𑌵𑌿𑌮𑌾𑌨𑌵𑌰𑌮𑌾𑌰𑍁𑌹𑍍𑌯 𑌯𑌾𑌤𑌿 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑌰𑌂 𑌪𑌦𑌮𑍍 ॥
𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌧𑌰𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌪𑌾𑌪𑍈𑌃 𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌥𑌵𑌾 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾𑌨𑌫𑌲𑌂 𑌲𑌭𑍇𑌤𑍍 ॥

புண்யம் உண்டாகும். திருமண்காப்பைத் தரித்துக்கொண்டு எவன் ச்ராத்தம் செய்கிறானோ, அவனுக்கு அநேகமாயிரம் கல்பகாலம் கயையில் ச்ராத்தம் பண்ணினால் எந்தபலனோ அது உண்டாகும். எவன் திருமண்காப்பைத்தரித்துக் கொள்ளாமல் யஜ்ஞம் முதலிய புண்யகர்மங்களைச் செய்கிறானோ அவைப்ரயோஜனமற்றனவாகும். எந்தமனிதர்களுடைய சரீரம்திருமண்காப்பு இல்லாமலிருக்கிறதோ அது கொஞ்சம்கூடப்பார்க்கத்தக்கதல்ல. அதுஸ்மசானஸத்ருசமேயாகும். ப்ராம்மணன்வெளுத்தமண்ணினால் ஊர்த்வபுண்ட்ரங்களை தரிக்கவேண்டும். புண்ட்ரத்தைக்குறுக்காக ஆபத்காலத்திலுங் கூடதரிக்கவேகூடாது. ப்ராம்மணர்கள் ஊர்த்வபுண்ட்ரங்களைத்தரிக்கவேண்டும். க்ஷத்ரியர்கள் திலகத்தைத்தரிக்கவேண்டும். வைச்யர்கள் ஒரேபட்டையாய்த் தரிக்கவேண்டும். சூத்ரர்கள் குறுக்காகத்தரிக்கவேண்டும். எல்லாவர்ணத்தாருக்கும் ஊர்த்வபுண்ட்ரம் நிஷித்தமாகாது. ஆதலால் க்ஷத்ரியர்முதலியவர்களும் விஷ்ணுபக்தர்களாகஇருந்தார்களேயானால் ஊர்த்வபுண்ட்ரத்தையேதரிக்கவேணும். பரமைகாந்திகளான மஹான்கள் விஷ்ணுவினுடைய பாதம்போல் நடுவில் இடமுள்ளதாய் இடுகிறார்கள். அப்படித் தரிப்பதுதான் விஷ்ணுவின் வாஸஸ்தலமாகும்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

மலையின் உச்சியிலாவது, நதியின்கரையிலாவது, வில்வமரத்தின் அடியிலாவது, ஜலாசயங்களிலாவது, ஸமுத்ரக்கரையிலாவது, புற்றிலாவது, விசேஷமாக பகவானுடைய க்ஷேத்திரத்திலாவது, பகவானுக்கு அபிஷேகம்செய்த தீர்த்தம் எந்தஇடத்தில் ஓடுகிறதோ அந்தஇடத்திலாவது திருமண்காப்புக்களை இடவேண்டியதற்காக மண் எடுத்துக்கொள்ளவேண்டும். கறுத்தநிறமுள்ளமண் சாந்தியைஉண்டுபண்ணும். சிவந்தநிறமுள்ளது வச்யம் உண்டாக்கும். மஞ்சள் நிறமுள்ளது ஸம்பத்தைக்கொடுக்கக்கூடியது. வெளுப்பு நிறமுள்ளது மோக்ஷத்தைக்கொடுக்கக்கூடியது. மூக்கின் அடியிலிருந்து நெற்றியில் புருவங்கள் நடுவில் சந்தைவிட்டு இடவேண்டும். நெற்றியில் கேசவனையும், வயிற்றில் நாராயணனையும், மார்பில் மாதவனையும், உள்கழுத்தில் கோவிந்தனையும், வயிற்றின்வலது பாகத்தில் விஷ்ணுவையும், வலதுகையில் மதுஸூதனனையும், வலக்கழுத்தில் த்ரிவிக்ரமனையும், வயிற்றின் இடதுபாகத்தில் வாமனனையும், இடதுகையில் ஸ்ரீ தரனையும், இடதுகழுத்தில் ஹ்ருஷீகேசனையும், முதுகின் அடிப்பாகத்தில் பத்மநாபனையும், பிடரியில்தாமோதரனையும் அந்தந்தத்திருநாமங்களைச்சொல்லிப்புண்ட்ரங்களை இடவேண்டும். மிகுதியை ஜலத்தைவிட்டு அலம்பி வாஸுதேவனுடைய திருநாமத்தைச்சொல்லி, சிரஸில் தரிக்கவேண்டும். நெற்றியிலும்

வநஸ்தாநே மஹாராஜா: ஸர்வபூதஹிதே ரதா: ।
ஸாத்விகாநாம் ப்ரகர்ஷேண வர்ணம் ஹரிபதாக்ருதி: ॥
ஹரே: பாதாக்ருதிம் தாரயேதூர்த்வபுண்ட்ரம் விதாநத: ।
அஸ்யோத்தரேண ஸம்யுக்தம் தத்பதம் ஸ்ரீமதோ ஹரே: ॥
யத்ர திவ்யம் ஹரிக்ஷேத்ரம் தத்ரஸ்தாம் ம்ருதமாஹரேத் ।
பர்வதாக்ரே நதீதீரே பில்வமூலே ஜலாசயே ।
ஸிந்துதீரே ச வல்மீகே ஹரிக்ஷேத்ரே விசேஷத: ॥
விஷ்ணோ: ஸ்நாநோதகம் யத்ர ப்ரவாஹயதி நித்யச: ।
புண்ட்ராணாம் தாரணார்த்தாய க்ருஹ்ணீயாத்தத்ர ம்ருத்திகாம் ॥
ச்யாமம் சாந்திகரம் ப்ரோக்தம் ரக்தம் வச்யகரம் ததா ।
ஸ்ரீகரம் பீதமித்யாஹு: ச்வேதம் மோக்ஷகரம் சுபம் ॥
ஆரப்ய நாஸிகாமூலம் லலாடாந்தம் லிகேந்ம்ருதா ।
ஸமாரப்ய ப்ருவோர்மத்யமந்தராலம் ப்ரகல்பயேத் ॥
லலாடே கேசவம் த்யாயேந்நாராயணமதோதரே ।
வக்ஷஸ்ஸ்தலே மாதவம் து கோவிந்தம் கண்டகூபகே ॥
விஷ்ணும் ச தக்ஷிணே குக்ஷௌ பாஹௌ ச மதுஸூதநம் ।
த்ரிவிக்ரமம் கந்தரே து வாமநம் வாமபார்ச்வகே ॥

கழுத்தின் நாற்புறங்களிலும் முதுகிலும் நாலு அங்குலம் நீளமுள்ளவைகளாயும், வயிற்றின் மூன்று பக்கங்களிலும் பத்து அங்குலம் நீளமுள்ளவைகளாயும், மார்பிலும் இரண்டுகைகளிலும் எட்டு அங்குலம் நீளமுள்ளவைகளாயு மிருக்க வேண்டும். பிறகு அந்தந்த மந்த்ரங்களை உச்சரித்து அந்தந்தவர்ணங்களையும் அந்தந்தஆயுதங்களையுடைய அந்தந்தமூர்த்திகளையும் த்யானம்செய்யவேண்டும். அதன்விதங்கள் '[illegible]' என்னும் த்யானச்லோகங்களிலும். ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த பன்னிருநாமம் என்கிறப்ரபந்தத்திலும் விஸ்தாரமாகச்சொல்லி யிருப்பதை அவைகளைக்கொண்டுவிவரமாகஅறிந்துகொள்க. அவைகள் சக்ராங்கனம்செய்துகொள்ளும்ஸமயத்தில் அந்தந்த ஆசார்யர்களால்உபதேசிக்கப்படவேண்டிய மந்த்ரங்களாதலால் இங்கு எழுதப்படவில்லை. அந்தத் திருமண்காப்புக்களின் நடுவிலிருக்கும் சந்துகளில் லக்ஷ்மீஸ்வரூபமானமஞ்சள் காப்பைத்தரிக்கவேண்டும். அதாவது மஞ்சள்காப்பைத் தரித்துக்கொண்டு லக்ஷ்மியை அதில் ஆவாஹனம் செய்யவேண்டும். சக்ரத்தினால் அங்கனம் செய்யப்பட்ட தோள்களைஉடையவர்களாகவும், அப்படியே திருமண்காப்புக்களை அணிந்துகொண்டிருக்கும் சரீரங்களை உடைவர்களாகவும், தாமரைமணி மாலையைத் தரித்துக்கொண்டவர்களாகவும் இருப்பவர்கள், தாங்களும் பரிசுத்தர்களாய் உலகங்களையும் பாபஸமூஹங்கள் சேரவொட்டாமல் காப்பாற்றுகிறார்கள். அப்படியே அந்தப் புராணத்தில் 251-வது அத்யாயத்தில் த்வயமந்த்ரத்தின் பெருமையும் 254-வது அத்யாயத்தில் திருவஷ்டாக்ஷரத்தின் பெருமையும் சொல்லப்பட்டிருக்கின்றன.

[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

(இன்னும் வரும்) சே. நரஸிம்மாசார்யர்.

ஸ்ரீ:

நீதிச்லோகங்கள்.

𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌯𑍇 𑌸𑌤𑌿 𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌾 𑌪𑍁𑌰𑍁𑌷𑌤𑌾 𑌪𑍁𑌂𑌸𑍍𑌤𑍍𑌵𑍇 𑌪𑍁𑌨𑌰𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑌤𑌾
𑌵𑌿𑌪𑍍𑌰𑌤𑍍𑌵𑍇 𑌬𑌹𑍁𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑌾 𑌗𑍁𑌣𑌵𑌤𑌾 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌤𑍋𑌽𑌰𑍍𑌥𑌜𑍍𑌞𑌤𑌾 ।
𑌅𑌰𑍍𑌥𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌵𑌾𑌕𑍍𑌯𑌪𑌟𑍁𑌤𑌾 𑌤𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌲𑍋𑌕𑌜𑍍𑌞𑌤𑌾
𑌲𑍋𑌕𑌜𑍍𑌞𑌸𑍍𑌯 𑌸𑌮𑌸𑍍𑌤𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌦𑍁𑌷𑍋 𑌧𑌰𑍍𑌮𑍇 𑌮𑌤𑌿𑌰𑍍𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌾 ॥

மனுஷ்ய ஜன்மம் உண்டானாலும் ஆணாகப்பிறக்கிறது மிகவும் அரிது. ஆணாகப்பிறந்தானேயாகிலும் ப்ராஹ்மணனாகப் பிறப்பது இன்னும் மிகவும் அரிது. ப்ராஹ்மணனாகப் பிறந்தாலும் அநேக வித்யைகளை ஸம்பாதித்து ஸாமர்த்தியத்துடனிருப்பது மிகவும் அரிது. அப்படியே அநேக வித்யைகளை ஸம்பாதித்தாலும் ஸரியான அர்த்தத்தை அறிவது மிகவும் அரிது. அப்படியே அர்த்தம் தெரிந்தவனாகஇருந்தாலும் வார்த்தைகள்பேசுவதில் ஸாமர்த்யத்துடனிருப்பது இன்னும் அரிது. அப்படியிருந்தாலும் லோகஜ்ஞானமிருப்பது மிகவும் அரிது. அப்படியே லோகஜ்ஞான முள்ளவனாகவும் எல்லா சாஸ்த்ரங்களிலும் நல்ல வித்வானாகவுமிருந்தபோதிலும் அவனுக்குத் தர்மத்தில் புத்தி உண்டாவது மிகவும் அரிது

இந்த ஸ்லோகத்தால் லோகத்தில் மனுஷ்யஜன்மம்எடுப்பது மிகவும் கஷ்டம். 1 எவ்வளவோபுண்யம்செய்து இத்தஸம்ஸாரக்கடலைத்தாண்ட இந்தச்சரீரமாகிற ஓடத்தைவாங்கிஇருக்கிறோம். அப்படிப்பகவானுடைய க்ருபையாலும் ஜன்மாந்தரபுண்யத்தாலும் இந்த மனிதஜன்மம் கிடைத்திருந்தாலும் தர்மத்தில் புத்தி செலுத்திக் காலம் கழிப்பது மிகவும் துர்லபம். இந்தத் தர்மத்தின் ஸூக்ஷ்மமறிந்த விபீஷணாழ்வான் தபஸ்செய்து, ப்ரும்மாவும் ப்ரத்யக்ஷமாகி, வேண்டியவரங்களைக்கேள் கொடுக்கிறேன் என்று சொல்லவும், அவர்

𑌪𑌰𑌮𑌾𑌪𑌦𑍍𑌗𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌧𑌰𑍍𑌮𑍇 𑌮𑌮 𑌮𑌤𑌿𑌰𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌯𑌾 𑌯𑌾 𑌮𑍇 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌯𑍇𑌷𑍁 𑌯𑍇𑌷𑍍𑌵𑌾𑌶𑍍𑌰𑌮𑍇𑌷𑍁 𑌚 ।
𑌸𑌾 𑌸𑌾 𑌭𑌵𑌤𑍁 𑌧𑌰𑍍𑌮𑌿𑌷𑍍𑌠𑌾 𑌤𑌂 𑌤𑌂 𑌧𑌰𑍍𑌮𑌂 𑌚 𑌪𑌾𑌲𑌯𑍇 ।
𑌏𑌷 𑌮𑍇 𑌪𑌰𑌮𑍋𑌦𑌾𑌰𑌃 𑌵𑌰𑌃 𑌪𑌰𑌮𑌕𑍋 𑌮𑌤𑌃 ।

என்றுகேட்டார். உத்தரகாண்டம் 10. ஸ. 30. 31. 32. ஶ்லோகங்கள். இதன் அர்த்தம்:—எப்போர்க்கொத்த பெரியஆபத்திலும் என்னுடையபுத்தி தர்மத்தி

1. 𑌮𑌹𑌤𑌾 𑌪𑍁𑌣𑍍𑌯𑌪𑌣𑍍𑌯𑍇𑌨 𑌕𑍍𑌰𑍀𑌤𑍇𑌯𑌂 𑌕𑌾𑌯𑌨𑍌𑌸𑍍𑌤𑍍𑌵𑌯𑌾.

லேயே இருக்கவேணும். எந்த எந்த ஆச்ரமங்களில் எனக்கு எந்தெந்தபுத்தி உண்டாகிறதோ அது அவ்வளவும் தர்மத்தை விட்டுவிலகாமலிருக்கவேணும். அந்தந்த ஆச்ரம தர்மத்தை நான் செய்துவரவேணும். இதுதான் நான்மிகவும் உயர்ந்ததாக நினைத்துக் கொண்டிருக்கும் வரம். இதைக்கொடுத்தால் போதும் என்றுகேட்டார். இப்படி இவர் கேட்டதை ப்ரும்மாகொடுத்ததினால் அல்லவோ, ராவணனால் அவமரியாதையாய் நடத்தப்பட்டகாலத்தில் அவனுடைய அன்னத்தை ஸாப்பிட்டுக் கொண்டிருந்தவராக இருந்தாலும், பெண்டாட்டி பிள்ளை, லங்கை எல்லாவற்றையும் விட்டு விட்டு ஸர்வலோகசரண்யனை ஸ்ரீராமனை அடைந்தார். இந்தத் தர்மபுத்தியாலே அவர் மஹத்தான ச்ரேயஸ்ஸை அடைந்தார். அதர்மத்தில் ப்ரவர்த்தித்த அவருடைய ஸஹோதரனை ராவணன் எந்தக்கதியைஅடைந்தான் என்பது எல்லோருக்கும் தெரிந்ததல்லவா.

ஆகையால்தான் ஸர்வலோகத்துக்கும் க்ஷேமத்தை உண்டுபண்ணுவது தர்மம் என்று எண்ணி அதைப்பரிபாலனம் செய்யவேணும் என்று பின்வருமாறு அர்ச்சுனன் ஸ்ரீ கிருஷ்ணபகவானிடம் விண்ணப்பஞ் செய்துகொள்கிறான்.

> த⁴ர்மே நஷ்டே குலம் க்ருத்ஸ்நமத⁴ர்மோ(அ)பி⁴ப⁴வத்யுத ॥
> அத⁴ர்மாபி⁴ப⁴வாத் க்ருஷ்ண ப்ரது³ஷ்யந்தி குலஸ்த்ரிய꞉ ।
> ஸ்த்ரீஷு து³ஷ்டாஸு வார்ஷ்ணேய ஜாயதே வர்ணஸங்கர꞉ ।
> ஸங்கரோ நரகாயைவ குலக்⁴நாநாம் குலஸ்ய ச ।
> பதந்தி பிதரோ ஹ்யேஷாம் லுப்தபிண்டோ³த³கக்ரியா꞉ ।
> தோ³ஷைரேதை꞉ குலக்⁴நாநாம் வர்ணஸங்கரகாரகை꞉ ।
> உத்ஸாத்³யந்தே ஜாதித⁴ர்மா꞉ குலத⁴ர்மாஶ்ச ஶாஶ்வதா꞉ ॥
> உத்ஸந்நகுலத⁴ர்மாணாம் மநுஷ்யாணாம் ஜநார்த³ந ।
> நரகே நியதம் வாஸோ ப⁴வதீத்யநுஶுஶ்ரும ॥

இதன் அர்த்தம்—

தர்மம் இல்லாவிட்டால் குலத்தை அதர்மம் வ்யாபரித்துவிடும். அதர்மம் வ்யாபரித்தால் குலஸ்த்ரீகளுக்கு பாதிவ்ரத்யபங்கம் உண்டாகும். ஸ்த்ரீகள் கெட்டுவிட்டால் வர்ணஸாங்கர்யம் அதாவது கலப்பு உண்டாய்விடும். ஜாதிக் கலப்பானது குலத்தைக்கெடுத்தவர்களுக்கும், அந்தக்குலத்துக்கும் நரகத்துக்குக்காரணமாகும். இவர்களைச்சேர்ந்தபித்ருக்கள் தங்களுக்குப் பிண்டம் தர்ப்பணம் இல்லாமல்நரகத்தில்விழுவார்கள். வர்ணக்கலப்பால் சாச்வத்தாய் அழியாத ஜாதி குலம் இவைகளின் ஆசாரம் வ்யவஹாரம் எல்லாம் மாறிப்போய்ப் பாபமே மேலிட்டு லோகம்முழுவதும் கெட்டுப்போய்எல்லோரும் நரகத்தை அடைவார்கள்.

ஆகையால் தர்மம் முக்யமானது. நான்கு புருஷார்த்தங்களிலும் தர்மம் எல்லாவற்றிற்கும் காரணமாதலால், முதலில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆர். ஸ்ரீனிவாஸராகவன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

குருபரம்பரைகளின் விமர்சம்.

வைஷ்ணவ ஸித்தாந்தத்தில் ஆசார்யர்களையும், அவர்கள் செய்த உப
காரங்களையும், அவர்களுடைய சரித்திரங்களையும்பற்றி ஒவ்வொரு வைஷ்ண
வர்களும் அனுஸந்திக்கவேண்டியது அவச்யமென்பது, ச்ருதிகளிலும், அவை
களை அனுஸரித்த இதிஹாஸ புராணங்களிலும், இவைகள் எல்லாவற்றின்
ஸாராம்சங்களை விசாரித்து அருளிச்செய்திருக்கும் பூர்வாசார்யக்ரந்தங்களி
லும், கடைசியாக ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த குருபரம்பரா
ஸாரத்திலும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்குள் முக்யமான ஆசார்
யராகிய ஸ்ரீ பாஷ்யகாரருடைய அவதாரங்களையும் திவ்யசரித்ரங்களையும்பற்றி
நாம் நிஷ்கர்ஷமாய் அறியவேண்டியதாதலால் அதை விசாரிப்போம்.—

இவ்வாசார்யர் ஆதிசேஷனுடைய அவதாரமென்று சிலர் அபிப்ராயப்
படுகிறார்கள். அதற்கு ப்ரமாணம், முதலில் ஆதிசேஷனாகியரூபம் இரண்
டாவது இளையபெருமாளாகியரூபம், மூன்றாவது பலராமனாகியரூபம், கலியு
கத்தில் இன்னுமொருவர் அவதரிக்கப்போகிறார் என்று அர்த்தமுள்ள வச
நத்தில் "கலௌ கஶ்சித் பவிஷ்யதி" என்கிற பாகத்தை எடுத்துக் காட்டுகி
றார்கள். அப்படியே அவருடைய சரித்திரத்திலும் திருவேங்கடமுடையானை
ப்பற்றி, சுப்ரமணியனா அல்லது விஷ்ணுவா என்று விவாதம் வந்தகாலத்தில்,
மான் மழுவையும், சங்கு சக்ரங்களையும் செய்து ஸந்நிதிக்குள் கொண்டுவந்து
வைத்துவிட்டு மறுநாள் காலையில் பார்க்கும்பொழுது எந்தச் சிஹ்நங்களைத் தரி
த்துக்கொண்டிருக்கிறாரோ அந்த சிஹ்நங்களுக்கேற்றபடி தீர்மானம் செய்கிறது
என்று,ஒருஏற்பாடு செய்தார்களாம். அப்படியே செய்து ராஜாவின் அரக்குமுத்
ரை முதலியதைப்போட்டு இருகக்ஷிக்காரர்களும் வந்தபிறகு ஸ்ரீ பாஷ்யகாரர்
கோமுகைவழியாக ஆதிசேஷரூபத்துடன் நுழைந்து சங்குசக்ரங்களைத் தரிக்கும்
படி செய்துவிட்டுத் திரும்பிவந்ததினால் மறுநாள்காலையில் ராஜாஉள்பட எல்
லா ஜனங்களும் பார்த்து விஷ்ணுவென்று தீர்மானித்தார்கள் என்று ஒரு
சரித்திரம். மற்றொன்று மைஸூரில் ஸ்ரீ பாஷ்யகாரர் எழுந்தருளி யிருக்குங்
காலத்தில் ஜைனர்கள் அநேகம்பெயர்களோடு விவாதம் செய்ய ஆரம்பித்து,
தான் திரைக்குள்ளிருந்து ஆயிரம் முகங்களுடன் அவர்களுக்குப் பதில் சொன்
னதை அவர்களுக்குள் சிலர் பார்த்தார்களாம். இதில் புத்திசாலிகளாயிருப்ப
வர்கள் ப்ரமாணங்களின் பலாபலங்களையும் சரித்திரங்களில் யுக்தாயுக்தங்களை
யும் விசாரித்து அறியவேண்டும். அதில்ப்ரமாணங்களை யோஜிக்குமிடத்தில்

பெரியநம்பிகள் திருவடியை ஆச்ரயித்து ஸ்ரீ பாஷ்யகாரருக்கு ஸதீர்த்யராய் சற்றேறக்குறைய ஸமகாலத்திலிருந்தவருமான திருவரங்கத்த முதனார் அருளிச் செய்ததாக ப்ரஸித்தமானதும், ப்ரபன்னகாயத்ரீயென்று கொண்டாடப்பட்டதும், ஸ்ரீ பாஷ்யகரர் மஹிமையை ப்ரதிபாதிக்கும் க்ரந்தங்கள் எல்லாவற்றிலும் முற்பட்டதாயும், ஸ்ரீ பாஷ்யகாரரால் தம்முடைய ஸ்தோத்திரமாகிய இப்ரபந்தம் வேண்டியதில்லை என்று நிராகரிக்கப்பட்டிருந்தபோதிலும், பிள்ளான் ஆண்டான் முதலிய ப்ரியசிஷ்யர்களால் தேவரஹஸ்யத்தை வெளியிட்டு ஆழ்வாருக்கே இவ்விதப்ரபந்தம் உண்டாகவேண்டுமென்று திருவுள்ளமிருந்ததாகவும், ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு யோகதசையில் ஆழ்வார் ப்ரத்யக்ஷமாக ஸேவை ஸாதித்தபோது, தம் திருவடிகளின்கீழே த்ரிதண்டகாஷாயங்களுடன் கூடிய ஒரு திருமேனியையும், தத்விஷயமாக அவதரிக்கப்போகிற இப்ரபந்தத்தையும் உபதேசித்ததாகத் தங்கள் பெரியோர்கள் சொல்லிய வ்ருத்தாந்தத்தையும், ஆசையினாலேயே கோயிலில் ஸ்ரீமந்நாதமுனிகளால் ப்ரதிஷ்டைசெய்விக்கப்பட்ட நம்மாழ்வார் விக்ரஹத்தின் பீடத்தில் திருவடியின்கீழே த்ரிதண்டத்தைத் தரித்துக்கொண்டிருக்கும் ஆசார்யனுடைய திருமேனி நாளதுவரையில் ஸேவையாகிறவிசித்ரத்தையும் விண்ணப்பம் செய்து ப்ரார்த்திக்கத்தமக்கு ஸதாசார்யர்களின், ஸம்பந்தமுண்டான பெருமையைச் சொல்லுகிற இப்பரபந்தம் இருக்கட்டும் என்று திருவுள்ளம்பற்றித் தாமே தம் சிஷ்யர்களுக்குப்ரவசனம் செய்தருளினர் என்பது ஸ்ரீ ப்ரபந்தஸார வ்யாக்யானத்தில் அருளிச் செய்திருக்கிறபடியே விசேஷ மஹிமையுடைய நூற்றந்தாதி என்னும் ப்ரபந்தத்தில் "அடையார் கமலத்து அலர் மகள் கேள்வன், கையாழி என்னும் படையோடு நாந்தகமும் படர்தண்டும் ஒண்சார்ங்க வில்லும் புடையார்புரிசங்கமும் இந்தப் பூதலம் காப்பதற்கென்று இடையே இராமாநுச முனியாயின இந்நிலத்தே" என்கிற பாட்டில் ஸ்ரீ பாஷ்யகாரர் பஞ்சாயுதங்களின் அவதாரமென்று ஸ்பஷ்டமாய் அருளிச்செய்யப்பட்டிருக்கிறதே தவிர ஆதிசேஷனுடைய அம்சம் என்று எவ்விடத்திலும் ஏற்படவில்லை.

ஸ்ரீமத் ராமாயணத்தில் கதைக்கு ப்ரதிபாத்யனாகிய சக்ரவர்த்தித் திருமகன் தானே கேட்டு உகந்தாற்போல் இப்ரபந்தத்தை இதற்குப்ரதிபாத்யரான ஸ்ரீ பாஷ்யகாரர் தாமே உகந்து அருளினபடியால் இதை ப்ரமாணமாய் ஒப்புக்கொள்ளவேண்டியது நிஸ்ஸம்சயம். அப்படியே அதற்குப்பிறகு ஸ்ரீ பாஷ்யகாரருடைய மஹிமையை நிரூபித்த நிகமாந்தமஹாதேசிகன் அருளிச் செய்த யதிராஜஸப்ததி என்னும் க்ரந்தத்தில் மேற்குறித்த அமுதனார் ப்ரபந்தத்தை அநுஸரித்து,

[illegible]

இதன் அர்த்தமாவது:—

'ஒன்ருய்ச்சேர்ந்து எந்த பாஷ்யகாரர் ரூபத்தை அடைந்த பகவானு டைய ஐந்து ஆயுதங்களுடைய அம்சங்களாலும் வ்ருத்தியை அடைந்தாரோ' என்பது, மற்றேரிடத்தில் "விஷ்வக்ஸேனர் ஸ்ரீ பாஷ்யகாரரானுர், அவர் கையில் வைத்திருக்கும் பிரம்பு த்ரிதண்டமாயிற்று" என்று அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. விஷ்வக்ஸேனர் பகவானுடைய இரண்டுவிதமான விபூதிகளேயும் நியமிக்கும் தன்மை உடையவராதலால் அதைப்போல ஸ்ரீ பாஷ்யகாரரும் பகவானுடைய உபய விபூதி நிர்வாஹத்தை அங்கீகரித்து, அதனுல் உடையவர் எம்பெருமானுர், என்கிற அஸாதாரண திருநாமத்தோடு விளங்கிவந்தமையால் அப்படி விஷ்வக்ஸேனராக உத்ப்ரேக்ஷித்திருக்கலாம். ஆதலால் பஞ்சாயுதங்களின் அவதாரம் என்பதே ஆப்ததமர்களான பூர்வாசார்யர்களால் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது.

பிற்பட்டவர்களுடைய வார்த்தை இதற்கு விருத்தமாக இருந்தால் பூர்வர்கள் செய்திருக்கும் ஸித்தாந்தத்துக்கு விருத்தமாதலால் அபஸித்தாந்தம் என்னும் தோஷத்துக்கு உள்ளாகும். முன்பு குறித்த 'கூஉளகஸ்ரீஜ ஹவிஷ)்தி' என்னும் வசனம் புராணத்தில் இருப்பதாக வைத்துக்கொண்டபோதிலும் பொதுவாயிருக்கிறபடியினுல் அது ஸ்ரீபாஷ்யகாரரைத்தான் குறிக்கும் என்று நிச்சயிக்கமுடியாது. உடையவரைப்போல் அநேகம் ஆசார்யர்களே ஆதிசே ஷனுடையஅவதாரம் என்று அவரவர்கள் குறிக்கிறபடியினுல் 'கூஸ்ரீஜ' என்பது யாரைக்குறிக்கிறது என்று நம்மால் அறியமுடியவில்லே. அப்படி நம்முடைய ஸ்ரீ பாஷ்யகாரரை 'கூஸ்ரீஜ' ஆக்குவதற்கு நமக்கு ஸம்மதமில்லே. மேலும் ஆதிசேஷாவதாரம் என்று காட்டக்கூடிய ப்ரமாணம் மேற்குறித்த நூற்றந்தாதிகளேப்போல வேறுகதி சொல்லமுடியாததாயும் ப்ரமாணதமமாயுமிருந்ததேயானுல் அப்பொழுது இந்த ஐந்து அம்சங்களுடன் ஆருவதம்சமாக இருக்கட்டுமே என்று சொல்லலாம். துர்ப்பலமானப்ரமாணத்தைக் கொண்டு அப்படிச்செய்வது உசிதமாகாது. மேலும் குருபரம்பரை முதலிய க்ரந்தங்களில் இந்தப் பஞ்சாயுதாம்சம் என்பதைக்கொஞ்சமேனும் ப்ரஸ்தாவிக்காமல் விட்டுவிட்டு ஆதிசேஷாம்சம் என்பது ஒன்றையே ஸ்தாபித்திருப்பது அஸங்கதமே யாகும்.

மேலும் திருவேங்கடமுடையான் ஸந்நிதியில் நடந்த சரித்ரம் கீழே விவரிக்கப்பட்டிருக்கிறதே! அதை விசாரிப்போம். இப்பொழுது எழுந்தருளியிருக்கும் திருவளர்த்தியைப் பார்க்குமிடத்தில் அவரைப்பற்றி மேற்குறித்த ஸந்தேஹம் உண்டாக இடமேயில்லே. ஏனெனில் சிவஸ்தலங்கள் 1008-ல் இது கணக்கிடப்பட்டுப் பாடல்பெற்றதாகக் காணப்படவில்லே. கலியுகத்துக்கு முன்னே அவதரித்தவர்களான முதலாழ்வார்கள் திருவேங்கடத்தை விஷ்ணுஸ்தலமாக அநேகம் பாட்டுக்களில் மங்களாசாஸனம் செய்திருக்கிருர்கள். அதை விரித்துரைக்கில் இங்குக் காலதாமதமாகுமென்று நாம் அதை விட்டுவிட்டோம். குறிப்பாக "ஓணவிழவில் ஒலி அதிர பேணிவருவேங்கடவா மண்ணளந்தசீரான் திருவேங்கடம்" என்றிவைமுதலியவைகள் காணத்தக்கவைகள். தமிழர்களில்

புராதனமாக ஒப்புக்கொள்ளப்பட்ட சிலப்பதிகாரம் என்னும் க்ரந்தத்தில் திருவேங்கடம் விஷ்ணுஸ்தலமாகவே கூறப்பட்டிருக்கிறது. இந்தப் பாஷ்யகாரருக்கு முன்னிட்ட எல்லா ஆழ்வார்களும் விஷ்ணு ஸ்தலமாக மங்களாசாஸனம் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. பெரிய திருமலைநம்பி என்ற பாஷ்யகாரருடைய அம்மானும் ஆசார்யனுமாகிய மஹான் ஒருவர், அவ்விடத்தில் புஷ்பகைங்கர்யம் முதலிய சில கைங்கர்யங்கள் செய்துவந்தார் என்று, அவர் ஸந்நிதியில் பிற்பட்டவர்கள் நாளதுவரையில் அந்தக் கைங்கர்யங்களைச் செய்து அதற்கேற்பட்ட மரியாதைகளைப்பெற்று வருவதைக் காண்கிறோம். இப்படி தொன்றுதொட்டு நாளதுவரையில் தொடர்ச்சியாக வருகிற விஷயத்தில் நடுவில் ஸந்தேஹமுண்டானதாகக் கல்பிப்பது ஸந்தேஹிக்கத்தக்கதே.

அப்படியிருந்தபோதிலும் ஸ்ரீபாஷ்யகாரர், ஒருவருக்கும் தெரியாமல் கோமுகை வழியாய் நுழைந்து விஷ்ணு சிஹ்னங்களைத் தரிக்கும்படி ஏற்பாடு செய்தார் என்னில், வாஸ்தவத்தில் எதிரிகள் சொன்னது ஸரி, பாஷ்யகாரர் நிர்ப்பந்தம் செய்து விஷ்ணுவாக மாற்றினார் என்று ஏற்படுமாதலால் பாஷ்யகாரருக்கும், திருவேங்கடமுடையானுக்கும் அவரை விஷ்ணுவாக மங்களாசாஸனம் செய்த ஆழ்வார்களுக்கும், அவரை அப்படியே நம்பி ஸேவிக்கும் வைஷ்ணவர்களுக்கும் எப்படி கௌவம் ஏற்படும். அப்படியாயின் இந்தப் பாஷ்யகாரர் எல்லா ஸ்தலங்களையும் இப்படி விஷ்ணு ஸ்தலங்களாக மாற்றி இருக்கலாமே. ஒன்றோடு நின்றுவிட்டதற்குக் காரணம் ஒன்றும் தெரியவில்லையே.

மைஸூரில் நடந்த சரித்ரத்தையும் விசாரிப்போம். அநேகம் ஆயிரம் கணக்கான ராக்ஷஸர்களையும் அஸுரர்களையும் ஒவ்வொன்றே நாசம் செய்தவைகளான ஐந்து ஆயுதங்களும் சேர்ந்த ஒரு அவதாரத்துக்கு ஆயிரம் வாதிகளுக்கு ஏககாலத்தில் பதில் சொல்லுவது அஸாத்யமான கார்யமாகுமோ? இதற்கு ஆதிசேஷராகவே வரவேண்டுமோ? ஸ்ரீசக்ரத்துக்கு ஸ்ரீஸஹஸ்ராரம் என்று திருநாமம் இல்லையோ? ஆயிரம் நுனிகளையுடையது; ஆதலால் ஒவ்வொரு நுனியும் ஒவ்வொரு முகமாயிருந்து பதில் சொல்லியிருக்கலாம். மூலபலயுத்தத்தில் ஸ்ரீசக்ரவர்த்தித்திருமகனால் ப்ரயோகிக்கப்பட்ட அமானவாஸ்த்ரம் ஒவ்வொரு ராக்ஷஸனுக்கும் ஒவ்வொரு அஸ்த்ரமாய்த் தலையை அறுத்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி ஒவ்வொரு ஆயுதமும் ஆச்சர்யமான சக்தியை யுடையது என்று கத்யத்திலும் ஸ்ரீகீதாபாஷ்யத்திலும் ஸ்ரீபாஷ்யகாரர் அநேகம் தடவை அருளிச்செய்திருக்கிறார். ஆதலால் இந்தச் சரித்ரங்களைக்கொண்டு ப்ரமாணங்களாகிற ஆசார்ய ஸூக்திகளுக்கு விரோதமாய் அர்த்தம் சொல்லுவது அநுசிதம் என்பதை இவ்விடத்தில் சிற்றறிவுக்கு எட்டினவரையில் விமர்சித்தேன். இதில் த்ருப்திகரமான ஸமாதானம் எவரேனும் க்ருபை பண்ணுவரேயானால் அதை மிகுந்த க்ருதஜ்ஞதையுடன் அங்கீகரிக்க ஸித்தனாயிருக்கிறேன்.

சே. நரஸிம்மாசாரியார்.

ஸ்ரீ:

ஸ்ரீக்ருஷ்ணாய வாஸுதேவாய நம:

ஸ்ரீ பாகவத தனிச்லோகீ.

“ தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ” என்கிறபடியே தம்முடைய உபதேசங்களாலும் அநுஷ்டாநங்களாலும் தர்மத்தை ஸ்தாபிப்பதற்காகவே அவதாரம்செய்த ஸ்ரீக்ருஷ்ணன், அர்ஜுனன் என்கிற வ்யாஜத்தை முன்னிட்டு வேதாந்த சாஸ்த்ர ஸாரங்களான கர்மயோகம் ஜ்ஞாநயோகம் பக்தியோகம் ப்ரபத்தி ஆகிய இவைகளை ‘ அறிவினால் குறைவில்லா அகல் ஞாலத்தவரறிய நெறியெல்லாம் எடுத்துரைத்த நிறைஞானத்து ஒரு மூர்த்தி ’ என்று பரமாசார்யர்கள் கொண்டாடும்படி எல்லா ஜனங்களும் அறியும்படி ஸுலபமான நடையில் கீதோபநிஷத்தை வெளியிட்டாற்போல் ஜ்ஞான பக்தி வைராக்யங்கள் நிறைந்தவராய் தமக்குப் பரமஸுஹ்ருத்தான குசேலரென்கிற ஒரு மஹாத்மாவை வ்யாஜமாக வைத்துக்கொண்டு பரமதர்மமாகிய ஆசார்யோபஸத்தியின் பெருமையையும், மற்ற நான்குவிதங்களான ப்ருஹ்மசர்ய, கார்ஹஸ்த்ய, வானப்ரஸ்த்த, ஸந்யாஸங்களாகிய ஆச்ரம தர்மங்கள் எல்லாவற்றிலும் ஆசார்யோபஸதனம் தமக்கு மிகவும் ஸந்தோஷத்தை உண்டாக்கக்கூடியதென்று அடுத்த ச்லோகத்தில் அருளிச்செய்யப்போகிறவராய் இந்த ச்லோகத்தில் ஆசார்யர்கள் மூன்றுவகைப்பட்டவர்கள் என்பதையும் அவர்களுக்குள் ஜ்ஞாநோபதேசம் செய்தவர் மிகவும் உத்க்ருஷ்டர் என்பதையும் பிரித்து அருளிச்செய்கிறார்.

ஸவை ஸத்கர்மணாம் ஸாக்ஷாத் த்விஜாதேரிஹ ஸம்பவ: ।
ஆத்யோங்க யத்ராச்ரமிணாம் யதாஹம் ஜ்ஞாநதோ குரு: ॥

பா - 10 - 80 - 29.

த்விஜாதே: ப்ராம்மணனுக்கு, இஹ-இந்த லோகத்தில், யத: - எவனிடத்தில், ஸாக்ஷாத் - நேராக, ஸம்பவ: - உத்பத்தியோ, ஸவை குரு: - அவன் ஒரு குரு; அதாவது எவனொருவன் பிதாவென்று சொல்லப்படுகிறானோ அவன் முதலாவது குரு; அவன் பகவானைப்போலே பூஜிக்கத்தக்கவன். ‘பித்ருதேவோ பவ’ இத்யாதி ப்ரமாணங்களை இங்கே அநுஸந்திப்பது. பிறகு, உபநயனம் செய்து காயத்ரீ உபதேசத்தைச்செய்யும்குருவை அருளிச்செய்கிறார்— ‘த்விஜாதே: ஸத்கர்மணாம் யத: ஸம்பவ:’என்றும்.

எல்லாக்கர்மாநுஷ்டாநங்களும் எந்த ஆச்ரமம் முதலாக உண்டாகிறதோ அதாவது "𑌪𑍍𑌰𑌾𑌗𑍁𑌪𑌨𑌯𑌨𑌾𑌤𑍍 𑌕𑌾𑌮𑌚𑌾𑌰𑌵𑌾𑌦𑌭𑌕𑍍𑌷𑌃" என்று தர்மசாஸ்த்ரங்களில் சொல்லியிருக்கிறபடி பேசத்தகுந்த வார்த்தை பேசத்தகாத வார்த்தை, நல்ல நடவடிக்கை, கெட்ட நடவடிக்கை, சாப்பிடத் தகுந்தது சாப்பிடத்தகாதது ஆகிய இவைகளில் வ்யத்யாஸம் ஒன்றுமில்லாமல்தன்னிஷ்டப்படி நடந்துகொண்டிருந்தவன் உபநயநம் செய்து காயத்ரீ உபதேசம் ஆனவுடன் ஸ்நாநம், ஸந்த்யை, ப்ருஹ்மயஜ்ஞம், ஸமிதாதாநம், பிக்ஷாசரணம், பகவதாராதநம், பித்ருதேவார்ச்சநங்கள், உபாகர்மம்முதலிய வ்ரதங்கள், ஸாங்கமாக வேதங்களை அத்யயநம் செய்தல் இப்படிப்பட்ட தர்மங்களை அநுஷ்டிக்க யோக்யதை உடையவனாகிறான். மேலும் அங்கங்களோடு கூட வேதங்களை அத்யயனம் செய்ததினால் மேலெழுந்தவாரியாகச் சில அர்த்தங்கள் தோன்றுகிறபடியினாலே அதை நன்றாய் விசாரிக்கவேண்டுமென்கிற ஆசையினால் கர்ம ப்ருஹ்மமீமாம்ஸைகளை விசாரித்து, அவைகளில் நிச்சயித்தபடி நிவ்ருத்தி தர்மங்களை அநுஷ்டித்து, பகவானுடைய அநுக்ரஹவிசேஷத்தினால் மோக்ஷபர்யந்தமான உத்க்ருஷ்ட பலத்தை அடைகிறான். இப்படி மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடிய ஸத்கர்மங்களை அநுஷ்டிக்கக்காரணமாகிய ஸாங்கங்களான வேதங்களை அத்யயநம் செய்வதற்குக் காரணம் ப்ருஹ்மசர்யாச்ரமம். 'ஏழாவது வருஷத்தில் ப்ராம்மணனுக்கு உபநயநம் செய்யவேண்டும். அவனுக்கு வேதங்களைக் கற்றுக் கொடுக்கவேண்டும்' என்று அர்த்தமுள்ள ச்ருதிவாக்யம் முதலியவை இங்கு அநுஸந்திக்கத் தக்கவை. அப்படி உபநயநம் செய்து வேதாத்யயநம் செய்தவனும் குரு என்று சொல்லப்படுகிறான் என்பது (1) "𑌉𑌪𑌨𑍀𑌯 𑌤𑍁 𑌯𑌃 𑌶𑌿𑌷𑍍𑌯𑌂 𑌵𑍇𑌦𑌮𑌧𑍍𑌯𑌾𑌪𑌯𑍇𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑌃 । 𑌸𑌕𑌲𑍍𑌪𑌂 𑌸𑌰𑌹𑌸𑍍𑌯𑌂 𑌚 𑌤𑌮𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌚𑌕𑍍𑌷𑌤𑍇 ॥" என்கிற வசநத்தினால் ஏற்படுகிறது. இந்த விஷயத்தை ஸ்ரீபாஷ்யகாரரும் (2) '𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑍇𑌣𑍋𑌪𑌨𑍀𑌤𑌸𑍍𑌯' என்றும், (3) '𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑍋𑌚𑍍𑌚𑌾𑌰𑌣𑌾𑌨𑍂𑌚𑍍𑌚𑌾𑌰𑌣𑌰𑍂𑌪𑌂 𑌅𑌕𑍍𑌷𑌰𑌰𑌾𑌶𑌿𑌗𑍍𑌰𑌹𑌣𑌫𑌲𑌂' என்றும் அருளிச்செய்தி

---

(1) 𑌮𑌨𑍁 2. 140.

எவர் (ப்ராமணர்) சிஷ்யனுக்கு உபநயனம்செய்வித்துக் கல்பஸூத்ரங்களுடனும் உபநிஷத்துக்களுடனும் வேதத்தை அத்யயனம் செய்விக்கிறாரோ, அவரை ஆசார்யனென்று முன்னோர்கள் சொல்லுகிறார்கள்.

(2) 𑌶𑍍𑌰𑍀𑌭𑌾𑌷𑍍𑌯𑌂 1-1-1.

(3) அத்யயனமாவது - வேதத்தையறிந்த ஆசார்யனால் உபநயநம்செய்யப்பட்ட சிஷ்யன் அக்ஷரஸமூகத்தை (வேதத்தை) க்கற்றுக்கொள்ளுதற்காக ஆசார்யன் சொன்னதை அநுசரித்துப் பிறகு திருப்பிச்சொல்லுவதுதான் -

ருக்கிறார். இந்தக்குருவும் ஜ்ஞாநத்துக்கு உபகாரம் செய்தவரானதால் பகவா னைப்போல் பூஜிக்கத்தக்கவர்.

பிறகு ஜ்ஞாநோபதேசம் செய்த ஆசார்யனை நிரூபித்தருளுகிறார். ஸர்வாச்ரமிணாம் - எல்லா ஆச்ரமத்தாருக்கும், ஜ்ஞாநோபதேஷ்டா - ஜ்ஞாநத்தை உப தேசம் செய்த ஆசார்யன், யதா - உண்மையாகவே, அஹம் - நானே. ஸ்ம்ரு திகளிலும் (4) " ஆசார்ய: ச்ரேஷ்டோ குரூணாம், ஸ ஹி வித்யாம் தம் ஜநயதி தச் ச்ரேஷ்டம் ஜந்ம " என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. எல்லாக்குருக்களிலும்ஆசார்யன் சிறந்தவன். ஏனெனில், தாயார் தகப்பனார்கள் புண்யபாபங்களைச்செய்தவற்கும், ஸுக துக்கங்களை அனுபவிப்பதற்கும், மோக்ஷஸாதநங்களைச் செய்வதற்கும் பொதுவான காரணமாகிய இந்த ப்ரக்ருதியின் பரிணாமமான சரீரத்தைமாத் திரம் உண்டுபண்ணுகிறார்கள். ஜ்ஞாநோபதேசம் செய்யுமாசார்யன் வித்யா ஜன்மத்தைச் செய்கிறான். அது விசேஷ புருஷார்த்தமான மோக்ஷத்தை யே அடைவதற்குக் காரணமானபடியால் அது உயர்ந்த ஜன்மம். அப்ப டிப்பட்ட ஜன்மத்தைத் தரும் ஜ்ஞானத்தை உபதேசிக்கும் ஆசார்யன் மிக வும் சிறந்தவன். மேலும் அநேகம் ஆசார்யர்கள் ஜ்ஞாநோபதேசம் செய் தவர்களாயிருந்தால், அவர்களுக்குள் மோக்ஷத்துக்கு அடுத்த உபாயமாகிய வித்யையை உபதேசம் செய்தவன் முக்யமான ஆசார்யன் என்பது 5 'ஸா க்ஷாந்மோக்ஷோபாயவித்யோபதேஷ்டா வாசிஷ்ட: குருரேவ மோக்ஷ சாஸ்த்ரேஷு ஸ ச்ரேஷ்டதமோ மத:' என்கிற வசநத்தினால் சொல்லப்பட்டது. இப்படிப்பட்ட ஆசார்யனை ஆச்ரயிப்பதே மோக்ஷத்தி ற்குக்காரணம் என்பது.

(6) வாசிஷ்ட: க்ஷத்ரபந்துச்ச புண்டரீகச்ச புண்யக்ருத்।
ஆசார்யவத்தயா முக்தௌ தஸ்மாதாசார்யவாந்பவேத்॥ "

---

(4) மனு தர்ம ஸூத்ரம் 2-50.
ஆபஸ்தம்ப தர்மஸூத்ரம் 1-1-1, 17 & 18.

குருக்களுக்குள் ஆசார்யன் ச்ரேஷ்டன்.

ஆசார்யனுடைய உபதேசத்தால்ஜ்ஞானம் உண்டாவதே இவனுக்கு ச்ரேஷ்ட மானபிறப்பு. தாய்தந்தையர்கள் சரீரத்தைமாத்திரம் உண்டுபண்ணுகிறார்கள்.

(5) மோக்ஷத்திற்கு ஸாக்ஷாத்தாகக் காரணமானவித்யைகளை எவர் உபதேசிக்கிறாரோ அவர்தான் உத்தமமான குரு என்று மோக்ஷசாஸ்திரங்களில் சொல்லப்படுகிறது.

(6) மிகவும் பாபம்செய்த க்ஷத்ரபந்துவும் புண்யம்செய்த புண்டரீகரும் ஆசார் யனையடைந்ததாலேயே மோக்ஷத்தையடைந்தார்கள். ஆகையால் ஒவ்வொருவரும் ஆசார் யனை அடையவேண்டியது.

என்று சொல்லப்பட்டிருக்கிறது என்று குருபரம்பராஸாரத்தில் ஆசார்யனால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆசார்யன் பகவானாகவே பாவிக்கப்படவேண்டும், என்பதும், ஆசார்யனைப் பகவானைப்போல் உபாஸநம் செய்ய வேண்டும் என்பதும் ச்ருதிவாக்யம் முதலியவைகளில் ப்ரஸித்தமானவை. இவ்விடத்தில்,

"பீதகவாடை பிரானார் பிரம குருவாகி வந்து", (7) ஸாக்ஷாந்நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும் । மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச்சாஸ்த்ரபாணிநா ॥" என்றிவை முதலிய ப்ரமாணங்களையும் ஆசார்ய ஸ்ரீஸூக்திகளையும் அநுஸந்திப்பது. இவ்வர்த்தங்களை எல்லாம் திருவுள்ளத்திற்கொண்டு ஸ்ரீந்யாஸவிம்ஶதியில் ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேஶிகன்

"அஜ்ஞாநத்வாந்தரோதா தகபரிஹரணா தாத்மஸாம்யாவஹத்வாத்
ஜந்மப்ரத்வம்ஸிஜந்மப்ரதகரிமதயா திவ்யத்ருஷ்டிப்ரபாவாத் ।
நிஷ்ப்ரத்யூஹாந்ருஶம்ஸ்யாந் நியதரஸதயா நித்யஶேஷித்வயோகாத்
ஆசார்ய: ஸத்பிரப்ரத்யுபகரணதியா தேவவத் ஸ்யாதுபாஸ்ய: ॥"

என்று அருளிச்செய்தார்.

அஜ்ஞானமாகிற இருட்டைப் போக்கடிப்பதினாலும், பாபங்களைப் போக்கடிப்பதினாலும், தனக்கு ஸமமாக இருக்கும் தன்மையைக் கொடுக்கிறபடியாலும், மறுபடி ஜன்மம் வராதபடி நாசம்செய்கிற வித்யா ஜன்மத்தைக் கொடுக்கிறபடியாலும், திவ்ய த்ருஷ்டியைக் கொடுக்கிறபடியாலும், தடையில்லாத தயையை உடையவனானபடியாலும், எப்பொழுதும் ஆநந்தமாய் அனுபவிக்கப்படக்கூடியவனானபடியாலும், எப்பொழுதும் நமக்கு ஸ்வாமியானபடியாலும், நாம் செய்கிறது அவன் செய்கிற ஜ்ஞானப்ரதானமாகிற உபகாரத்திற்கு ப்ரத்யுபகாரமல்ல என்கிற புத்தியுடன் (அதாவது நாம் உஜ்ஜீவிப்பதற்காகச் செய்கிறோம் என்று நினைத்து) ஆசார்யன் பகவானைப்போல் ஸத்துக்களினால் உபாஸனம் செய்யப்பட வேண்டியவன் என்று அர்த்தம். இதின்கருத்தாவது—பகவான் நமக்குச்செய்கிற உபகாரங்களை ஆசார்யனேசெய்கிறபடியால் நாம் ஆசார்யனைப்பகவானைப்போல் உபாஸிக்க வேண்டியது என்

---

(7) ஸர்வேச்வரனான நாராயணன் எல்லோரும் கண்ணால்பார்க்கக்கூடிய மநுஷ்யகத்தை (ஆசார்யரூபத்தை) எடுத்துக்கொண்டு ஸம்ஸாரக்கடலில் முழுகியிருக்கிற ஜனங்களைத் தயையினால் ஶாஸ்திரங்களாகிற கையினால் தூக்கிவிடுகிறான்.

பது. அதாவது (8) "தேஷாமேவாநுகம்பார்த்தம் அஹமஜ்ஞாநஜம் தம: । நாசயாம்யாத்மபாவஸ்தோ ஜ்ஞாநதீபேந பாஸ்வதா ॥" என்று ஸ்ரீகீதாசார்யன் நானே அஜ்ஞானத்தைப்போக்கடிக்கிறேன் என்று அருளிச்செய்திருக்கிறார். அதை நமக்கு ஆசார்யன் செய்கிறான். ஸர்வ பாபஹரணாத் -(9) 'ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' என்று அருளிச்செய்தான் ஸ்ரீகீதாசார்யன். அதை நமக்கு ஆசார்யன் செய்கிறான். ஆத்மஸாம்ய ப்ரதாநாத் -(10) 'மம ஸாதர்ம்யமாகதா:' என்று ஸ்ரீகீதாசார்யனும் அருளிச்செய்தான். உபநிஷத்துக்களிலும் 'மிகவும் ஸாம்யத்தை அடைகிறான்' என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. "தன்மை பெறுத்தித்தன் தாளிணைக்கீழ்க் கொள்ளுமப்பன்" இத்யாதியும் இங்கு அநுஸந்திக்கத் தக்கது. அந்தத் தன்னுடைய ஸாம்யத்தை ஆசார்யர்கள் நமக்குக்கொடுக்கிறார்கள். 'ஜந்ம ப்ரத்வம்ஸி ஜந்மப்ரத மஹிமதயா - "(11) மாமுபேத்ய து கௌந்தேய புநர்ஜந்ம ந வித்யதே" என்று கீதாசார்யன் தன்னை ஆச்ரயித்தவர்களுக்கு மறுஜன்மம் இல்லை என்று அருளிச்செய்திருக்கிறான். அப்படியே 'சென்மம் செய்யாமையும் கொள்ளுமே' இத்யாதி ப்ரமாணங்களும் சொல்லுகின்றன. அப்படிப்பட்ட உபகாரத்தை நமக்கு ஆசார்யர்கள் செய்கிறார்கள்.

(12) பசுர்மநுஷ்ய: பக்ஷீ வா யே ச வைஷ்ணவஸம்ச்ரயா: ।
தேநைவ தே ப்ரயாஸ்யந்தி தத்விஷ்ணோ: பரமம் பதம் ॥

---

(8) பகவத்கீதை. 10-11

அந்தப்பக்தர்களை அநுக்ரஹிப்பதற்காக நான் அவர்களுடையமனதில் இருந்துகொண்டு என்விஷயமான ஜ்ஞாநத்தை யுண்டுபண்ணி அந்த ஜ்ஞாநமாகிற தீபத்தால் ப்ராசீந கர்ம வாஸனைகளால் உண்டாகும்விஷயங்களில் ப்ரவ்ருத்தியாகிற தமஸ்ஸைப் போக்கடிக்கிறேன்.

(9) நான் மோக்ஷவிரோதியான ஸமஸ்தபாபங்களிலிருந்தும் உன்னை விடுவிக்கிறேன்.

(10) என்னுடன் ஸாம்யத்தை யடைந்தவர்கள்.

(11) பகவத்கீதா 8-16.

அர்ஜுநா, என்னை யடைந்தவர்களுக்கு மறுபடியும் இவ்வுலகில் பிறப்புகிடையாது.

(12) பசுவாயிருந்தாலும், மநுஷ்யனாயிருந்தாலும், பக்ஷியாயிருந்தாலும் இன்னும்எவர்களாயிருந்தாலும் விஷ்ணுபக்தர்களான ஆசார்யனையடைந்த மாத்திரத்தால் மோக்ஷஸாம்ராஜ்யத்தை யடைந்து விடுகிறார்கள்,

இத்யாதி ப்ரமாணங்களை இங்கே கண்டு கொள்வது. இவ்விடத்தில் வக்தவ்யாம்சங்களை நான் எழுதி இருக்கும் ஸ்ரீமத்ரஹஸ்ய ரத்நாவளீஹ்ருதயத்தின் வ்யாக்யானத்தில் விஸ்தாரமாய்க்காண்க.

𑌦𑌿𑌵𑍍𑌯𑌦𑍃𑌷𑍍𑌟𑌿 𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑌾𑌤𑍍:—(13) '𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌦𑌦𑌾𑌮𑌿 𑌤𑍇 𑌚𑌕𑍍𑌷𑍁𑌃' என்று அர்ஜுநனுக்குப் பகவானால் திவ்யசக்ஷுஸ் கொடுக்கப்பட்டது. அப்படிப்பட்ட திவ்ய சக்ஷுஸ்ஸை (கண்ணை) ஸஞ்ஜயர் "𑌵𑍍𑌯𑌾𑌸𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌚𑍍𑌛𑍍𑌰𑍁𑌤𑌵𑌾𑌨𑍍" என்று தம் ஆசார்யருடைய அனுக்ரஹத்தால் க்ருஷ்ணனுக்கும் அர்ஜ்ஜுநனுக்கும் ஸம்வாத ரூபமாய் நடந்த ஸ்ரீகீதையை நான் கேட்டேன். அர்ஜுநனுக்குக் காண்பிக்கப்பட்ட விச்வரூபத்தையும் பார்த்தேன் என்று அருளிச்செய்தார். ஆகையால் ஆசார்யர்கள் திவ்ய சக்ஷுஸ்ஸையும் கொடுக்கக்கூடியவர்கள். சிலருக்கும் கொடுத்துமிருக்கிறார்கள். பகவான் சாஸ்த்ரங்களில் மிகுந்த கருணை உடையவன் என்பது ப்ரஸித்தம் அப்படிப்பட்ட பகவானுடைய க்ருபையும் ஆசார்ய க்ருபையில்லாத பக்ஷத்தில் கார்யகரமாகாது. இதை புண்டரீகருடைய வ்ருத்தாந்தத்தில் கண்டுகொள்வது. ஆசார்யனுடைய க்ருபையோவெனில் வேறொன்றையும் எதிர் பார்க்கிறதில்லை

𑌨𑌿𑌯𑌤𑌾𑌨𑌨𑌦𑌯𑌾:— பகவானுடைய அனுபவமே ஆநந்தத்தைக்கொடுக்கக்கூடியது என்பது, இந்தப் பகவான் ஆநந்தரூபமாகையினால் அவனை அடைந்து இவனும் ஆநந்தத்தை உடையவனாகிறான் என்கிற உபநிஷத்துக்களிலும் 'கனிவார் வீட்டின்பம்' என்றிவை முதலிய ப்ரமாணங்களிலும் சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட ஆநந்தம் ஆசார்யனுடைய அனுபவத்தால் உண்டாகிறது என்று தாத்பர்யம்.

பகவத்குணானுபவங்களைக் காட்டிலும் ஆசார்யனுடைய குணானுபவம், அவனிடத்தில் பக்தி செய்தல் முதலியவைகள் குருபக்தி உடையவர்களுக்கு விசேஷமான ஆநந்தத்தைக் கொடுக்கக் கூடியனவாயிருக்கும். பகவானுக்கும் தன்னிடத்தில் நேரில் பக்திபண்ணுகிறவனை விட ஆசார்யபக்தி பண்ணுகிறவனிடத்தில் விசேஷ ப்ரீதிஉண்டு என்பது, மேல் ஸ்ரீக்ருஷ்ணனால் '𑌨𑌾𑌹𑌮𑌿𑌜𑍍𑌯𑌾' என்னும் ச்லோகத்தாலேயே அருளிச் செய்யப்படப்போகிறது. '𑌯 𑌇𑌮𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌗𑍁𑌹𑍍𑌯𑌂 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑍇𑌷𑍍𑌵𑌭𑌿𑌧𑌾𑌸𑍍𑌯𑌤𑌿'

---

(13) 𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑍈 ॥ - 8.

அப்ராக்ருதமான கண்ணை உனக்குக்கொடுக்கிறேன்.

(இன்னும்வரும்.)

திவான் பஹதூர் ஸ்ரீ. உ. வே. தி. த. ரங்காசார்யர் ஸ்வாமியின் நிர்யாணம்.

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் அத்யக்ஷராகவிருந்து, பின்னர் அதன் போஷகர்களில் ஒருவராகத் தெரிந்தெடுக்கப்பட்டும், 1915ஹூ முதல் 1921ஹூ வரை வேதாந்த தீபிகையின் பத்ராதிபராகவு மிருந்து நமது ஸபைக்குப் பரமோபகாரகராய் ஸபையை அலங்கரித்து வந்த ஸ்ரீமான் உ.வே. தி. த. ரங்காசார்யர்ஸ்வாமி திடீரென்று கபஜ்வரத்தினால் சிலநாள்கள் பீடிக்கப்பட்டுப் பரமபதமடைந்த ஸமாசாரத்தை இங்கு மிக வ்யஸநத்துடன் குறிப்பிடுகின்றோம். இந்த ஸ்வாமி லௌகிகத்தில் மிகவும் உன்னதமான பதவியை வஹித்து வந்திருந்தும் பரம ஆஸ்திகராய் வைதிக ஸம்ப்ரதாயத்தில் நிலை பெற்று அநுஷ்டாநாதிகளில் குறைவற்றிருந்தவர். மேல்நாட்டுக் கல்வியினாலும் உத்யோகங்களை வஹிப்பதினாலும் நமது பூர்விக வித்யை அநுஷ்டானம் முதலியவைகளுக்குத் தடை ஏற்படவேண்டியதில்லை என்பதை இவர் தமது வாழ்வில் நன்றாய்க் காட்டினார். ஆங்கிலம், தமிழ், ஸம்ஸ்க்ருதம், ஆகிய மூன்று பாஷைகளிலும் ஆழ்ந்த பரிசயத்தை உடையவராயிருந்ததால் தீபிகையை மிகவும் திறமையுடன் நிர்வஹித்துவந்தனர் என்பது அவரது எண்ணிறந்த வ்யாஸங்களினால் விளங்கும். சாஸ்த்ர ஸம்ப்ரதாயாதி விரோதங்களான விஷயங்களைச் சிறிதும் கூசாமல் கண்டித்தார். நமது மதத்துக்கே ப்ரளயம் ஸம்பவித்தாற்போல் கிளம்பிய 'ஹிந்துமதஸ்தாபந மசோதாவை' இவர்தான் முதன்முதலாகக் கண்டனம் செய்து அதின் விபரீதாம்சங்களைப் பல படிகளில் தீபிகையினாலும் வர்த்தமான பத்ரிகைகளினாலும் மஹாஜநங்களுக்கு எடுத்துக்காட்டினார். இங்கிருந்தநாளில் ஸ்வரூப ப்ராப்தமான ஸ்ரீவைஷ்ணவஸமூஹ கைங்கர்யத்தில் மனப்பூர்வமாக ஈடுபட்டுத் தம்மாலியன்றவளவில் அதை நிறைவேற்றி ச்ரிய:பதியின் விசேஷ கடாக்ஷத்துக்குப் பாத்ரரானார். நமது ஸமூஹம் அவரை இழந்ததே ஒழிய ப்ரபன்னர் மனோரதிக்கும் பரமாநந்தமான நித்ய பகவத்கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தை அவர் அடைந்துவிட்டார்.

அவருடைய தேஹவியோகத்தினால் வருந்தும் அவரது குடும்பத்தாருக்கு நமது ஹார்த்தமான அநுசோசனத்தை இதன்மூலமாக அறிவிக்கின்றோம்.

பத்ராதிபர்.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌹𑌯𑌗𑍍𑌰𑍀𑌵𑌾𑌯 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:— கடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர், பி. ஏ., பி. எல்.

கார்யதர்சி:— ஆர். ஸ்ரீநிவாஸ ராகவாசார்யர், எம். ஏ.

ஸம்புடம் 14.] ருதிரோத்காரி௵, மார்கழி௴. [ஸஞ்சிகை 3.

“ 𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌕𑌮𑌨𑌂 𑌤𑌮𑌾𑌲𑌵𑌰𑍍𑌣𑌂 𑌰𑌵𑌿𑌕𑌰𑌗𑍌𑌰𑌵𑌰𑌾𑌮𑍍𑌬𑌰𑌂 𑌦𑌧𑌾𑌨𑍇 ।

𑌵𑌪𑍁𑌰𑌲𑌕𑌕𑍁𑌲𑌾𑌵𑍃𑌤𑌾𑌨𑌨𑌾𑌬𑍍𑌜𑌂 𑌵𑌿𑌜𑌯𑌸𑌖𑍇 𑌰𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 𑌮𑍇𑌽𑌨𑌵𑌦𑍍𑌯𑌾 ” ॥

ஸ்ரீபாகவதம். 1-9-23.

பத்ராதிபரின் குறிப்புக்கள்.

மோக்ஷ உத்ஸவம்

பிறப்பு இறப்பு மூப்புப் பிணி முதலியவைகளையே ஸாரமாகவுடைய ஸம்ஸாரமாகிய ம்ருத்யுவைக் கடந்து, அந்தமில் பேரின்பமாகிய மோக்ஷஸாம் ராஜ்யத்தைப் பெறுவதற்கு ஜ்ஞாநமும், அதனடியாக ஸாதிக்கப்படுகிற பகவத்யோகமுமே மார்க்கமென்றும், வேறுவழி யில்லையென்றும் உபநிஷத் துக்கள் முறையிடுகின்றன. இத்தகைய யோகத்தைச் செய்வது ஸாமான்ய மாய் எல்லோருக்கும் ஸாத்யமாகாதென்பதைக் கணிசித்துப் பரமகாருணி கனான பகவான், தன்னைச் சேதனர்கள் தனது அர்ச்சையில் (ப்ரதிமையில்) ஆரா தித்து அறம், பொருள், இன்பம், வீடு என்னப்பட்ட நான்குவித புருஷார்த் தங்களையும் அடையும் ப்ரகாரங்களை ஸ்ரீப்ரச்னஸம்ஹிதை முதலிய சாஸ்த் ரங்களில் தானே உபதேசித்தான்.

இவ்வாராதன ப்ரகாரங்களில் ‘மஹோத்ஸவங்கள்’ மிகவும் விசேஷமானவை. 1 அவைகளினால் பகவானுக்கு ஸம்ஸாரிகளின் திறத்தில் மிகுந்த ப்ரீதி உண்டாகின்றது. பகவானுக்கும் ஸந்தோஷம் மேன்மேலும் வ்ருத்தியடைகின்றது. மஹோத்ஸவமென்பதற்கு இதுவே அர்த்தம். ஜனங்களுடைய க்ஷேமலாபங்களுக்காகவே இவை நடைபெறுகின்றன. இவை பெரும்பாலும் லோகஸம்ரக்ஷணத்துக்காகப் பிறப்பிலியான பகவான் தன் ஸங்கல்பத்தால் பலபிறப்பும் பிறந்து நடத்திய ரக்ஷா விசேஷங்களைக் கொண்டாடும் ப்ரகாரங்களாயிருக்கின்றன. இவற்றிலொன்றை முன் ஸஞ்சிகையில் எடுத்துரைத்தோம். மேலும் ஒன்றை இங்கு ஸங்க்ரஹிக்கின்றனம்.

முன் மஹாப்ரளயத்தின்போது ஜகத்து முழுவதும் ஓரேஸமுத்ரமாய்ப் பெருகியிருந்ததில், அதில் ஸர்வேச்வரன் ஓராலிலைமேல் ‘தாயுந்தந்தையுமில்லாததொரு தனிக்குழவி’ யென்னும்படி ‘ஒருபாலகனாய்ப்’ பெரியபிராட்டியைத் திருமார்பிற் றரித்து யோகநித்திரை செய்யுங்கால், தன் திருநாபிக்கமலத்தினின்றும் நான்முகனைத் தன் ஸங்கல்பத்தால் ஸ்ருஷ்டித்து அவனுக்கு ஸகலலோக ஹிதப்ரயோஜனமான வேதங்களையும் கொடுத்து அநுக்ரஹித்தருளினான். நான்கு முகங்களாலும் நான்கு வேதங்களையும் ஸகலசாஸ்த்ரங்களையும் அத்யயனம்பண்ணி ஸர்வஜ்ஞனாய் ஸகலஸ்ருஷ்டிகளையும் பண்ணிவந்த பிரமன் தானும் கர்மவச்யனான க்ஷேத்ரஜ்ஞன் ஆகையால், தன் அறிவும் ஸ்ருஷ்டிசக்தி முதலியவைகளும் ‘இறையவன்’ அளித்த பேறுகள் என்பதை மறந்து மதங்கொண்டவனாய், அவ்விறையவனையும் மறந்தான். அவ்வளவில் பகவானுடைய காதுகளின்றும் லோககண்டகர்களான இரண்டு அஸுரர்களுண்டாய் ப்ரும்மாவைக் கொல்ல ஆரம்பித்தார்கள். அவனும் ஒரு ஸாமான்ய மனிதனைப்போல் ரோதனம் செய்தான். ஜலத்தில் கண்வளரும் ஆதிதேவனைப் பார்த்து ஸ்தோத்திரம் செய்தான். பகவானும் கண்ணைத் திறந்து அவ்வஸுரர்களைக் கடாக்ஷித்து ‘நீங்கள்வேண்டும் வரத்தைக் கேளுங்கள்’ என்று மொழிந்தார். அஸுரர்களோவென்றால், ‘தேவேசனே எம்மிடத்தில் நீர் வரம் கேளும்’ என்றார்கள். பகவானும் நகைத்து ‘நீங்கள் என்னால் மரணமடையப் போகிறீர்கள்’ என்றார். பிறகு அவர்கள் ச்ரியஃபதியுடன் ஒருமாதம் யுத்தம்செய்து பகவான் கையினால் இறப்புண்டு சங்குசக்ரதாரிகளாய்த் தேவர்களாய்த் தங்கள் இஷ்டஸித்திகளையடைந்தார்கள். பகவானுடைய ஸ்வரூபத்தையறிந்து அவனை நமஸ்கரித்து அஞ்சலிசெய்து ‘தேவரீருடைய ஸ்வரூபத்

1. ‘மஹாப்ரீதிர் யேந மம உத்ஸவேந பவிஷ்யதி ।
உத்ஸவே ஹ்ருஷ்டிரிதி ச தஸ்மாதேஷ மஹோத்ஸவ: ॥’ –
ஸ்ரீ. ப்ர. ஸ. II. 1. 8.

தை யடைந்த நாங்கள் தேவரீருடைய லோகத்தில் நித்யவாஸம் பண்ணும் படியாக எங்களை அநுக்ரஹிக்கவேண்டும்' என்று ப்ரார்த்தித்தார்கள். அவ் வேண்டுதலுக்கு இசைந்த பகவானும் ஸத்யலோகத்துக்கும் மேலே நிற்கும் ஸ்ரீவைகுண்டத்தின் வடக்குத் திருவாசலின் வழியாய் மார்கழிமீ சுக்கில பக்ஷ ஏகாதசியன்று ஸூர்யோதயத்தில் அவர்களைக் கூட்டிக்கொண்டான். அங்கு, சுத்த ஸத்வமய த்ரவ்யத்தால் ஆகிய திருமாமணி மண்டபத்தில் நித்ய ஸூரிகள் பல்லாண்டுபாட, சேஷபர்யங்கத்தில் திவ்யாபரண பூஷிதனாய் வீற் றிருக்கும் பரவாஸுதேவனை ஸேவித்து, மயிர்க்கூச்சலடைந்து பகவானைத் துதித்து இங்ஙனே விண்ணப்பம் செய்தார்கள்:—'ஜ்ஞாநாநந்த மூர்த் தியே! ஸர்வஜ்ஞனே! நினைவுக்கெட்டாத ஆச்சர்யமான திருமேனியையுடை யவனே! நித்யாநந்தனே! ஸத்யலோகாதிகளிலிருக்கும் ப்ரும்மாதிகள் கூட இத்தகைய தேவரீருடைய ஸ்வரூபத்தை ஒருக்காலும் அறிந்திலர். அநேக கோடி ஜன்மங்க ளெடுத்து ச்ரியஃபதியான தேவரீர் க்ருபையினால் தேவ ரீரால் கர்மசரீரத்தினின்றும் விடுவிக்கப்பட்ட நாங்கள் தேவரீரைச் சரண மடைந்து ஒரு ப்ரார்த்தனை செய்கின்றோம். அதை ஸபலமாக்க வேண்டும். அதாவது, ப்ரும்மாதி ஸகல சேதனர்களும் மார்கழிமீத்தில் தேவரீரு டைய லோகம் மாதிரியாக ரதனமண்டபங்களை நிர்மாணம் செய்து தேவ ரீருக்கு ஏகாதசி உத்ஸவத்தை நடப்பிக்கட்டும். அந்த ஸமயத்தில் எவர்கள் தே வரீரை ஸேவிக்கின்றார்களோ, நமஸ்கரிக்கின்றார்களோ, தேவரீருடைய ஸந் நிதியின் வடக்குக் கோட்டைவாசலில் நுழைந்து வருகிறார்களோ, அவர்க ளெல்லாரும் ஸ்ரீவைகுண்டத்தையடைந்து நித்யஸூரிகளோடு ஸமமாய்த் தேவ ரீருடைய நித்யானந்தத்தை யனுபவிக்கும்படி அநுக்ரஹித்தருளவேண் டும்.'—என்று. பக்தவச்யரான ஸ்ரீவைகுண்டநாதன் இதைச் செவியுற்று அவர்களின் விண்ணப்பத்தை நிறைவேற்ற இசைந்தான். அது முதற் கொண்டு இவ்வுத்ஸவத்தை ஸர்வேச்வரன் ஸர்வலோகங்களிலும் கண்ட ருளி ரமிக்கிறான். இப்படி அவ்வேகாதசியில் உத்ஸவம் நடத்துகிறவர்களு க்கு மோக்ஷபலம் உண்டாகையால் இதற்கு மோக்ஷோத்ஸவம் என்று பெய ராயிற்று.

இவ்வுத்ஸவத்துக்கு உயர்ந்த சீதளமான கொட்டகை ஏற்படுவதற்குக் கார ணம், அவ்வுத்ஸவம் முதலில் அஸுரர்களால் ப்ரார்த்திக்கப்பட்டு அவர்கள் மோக்ஷமடைந்தார்களாகையால், மோக்ஷத்தை விரும்பும் மஹாந்தர்க ளான ராக்ஷஸர்களும் பலர் வந்து தினம் தினம் ஸேவிப்பதால், அவர்கள் ஸௌகர்யமாக வந்து ஸேவிப்பதற்காக, என்று சொல்லப்பட்டது. இத னால் ஆஸுர ப்ரக்ருதிகள் கூட இவ்விழாவை ஸேவித்தால் அவர்கள் நல்ல கதியை யடைவார்கள் என்றதாயிற்று.

மார்கழியீ தேவதைகளின் விடியற்காலவேளை என்று சாஸ்த்ரம் சொல்லும். விடியற்காலமானது ஸத்வகுணம் மிகுந்துள்ள காலமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். அப்பொழுது செய்யப்படும் பகவதாராதனம் ஸாத்விகமெனப்படும். பொங்கல், சர்க்கரைப் பொங்கல் முதலியவையும் ஸாத்விக ஆஹாரங்களாகும். அவைகளைக்கொண்டே அந்த ஸத்வவேளையில் ஸ்ரீவாஸுதேவனை ஆராதிக்கவேண்டும். என்று விதிக்கப்பட்டது.

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீ ராமாயண தத்வார்த்தம்.

1. ‘வேதத்தைக்காட்டிலும் மேற்பட்ட சாஸ்த்ரம் இல்லை’ என்று சபதபூர்வகமாக மஹர்ஷி அறுதியிட்ட மஹாசாஸ்த்ரத்தின் உபநிஷத்பாகத்தை விளக்குமவற்றில் இதிஹாஸ ச்ரேஷ்டமான ஸ்ரீமத் ராமாயணம் மிகவும் ப்ரபலமான ப்ரமாணமாயிற்று. பெரியோர்களாலும் மஹாஜநங்களாலும் பரிக்ரஹிக்கப்பட்டிருக்கும் பெருமை (பரிக்ரஹாதிசயம்), ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் பக்ஷபாதமில்லாமை, க்ரந்தகர்த்தா உண்மையான அர்த்தத்தை ஸாக்ஷாத்கரித்து அவ்வண்ணம் போதிக்க வல்லவனாகை, என்று மூன்று காரணங்களால் இந்தப்பெருமை இதற்குண்டானது. இதைத் தீர்க்க சரணாகதி என்று பெரியோர்கள் கொண்டாடுகிறார்கள். 2. ‘வேதங்களால் ப்ரதிபாதிக்கப்படும் பரமபுருஷன் சக்ரவர்த்தித் திருமகனாயவதரித்தவளவில், அவனுடைய குணவிபூதி சேஷ்டிதங்களை உணர்த்துவதற்காக வேதமே வால்மீகி முகாரவிந்தத்தினின்றும் ராமாயணரூபமாக மாறிப்புறப்பட்டது’ என்று ஸ்காந்தத்தில் சொல்லியிருக்கிறது. மஹாஜநங்கள் தாங்கள் கோறின புருஷார்த்தங்களை யடைவதற்காக இதைப் பாராயணம் செய்துவருகிறார்கள். புராணங்களையெல்லாம் ப்ரவர்த்தனம் செய்வித்த ப்ரும்மாவினால் லோகத்திலும், வேதத்திலுமுள்ள அநேக அர்த்தங்களை நிர்ணயிப்பதற்காக ப்ரவர்த்திக்கப்பட்டதாகையாலே இது ஒரிடத்திலும் பக்ஷபாதமில்லாத நடுவு நிலைமையை உடைத்தாயிருக்கிறது. பொதுவாய் சாஸ்த்ரார்த்தம் கேட்பதும், அதற்குக் குறிப்பிட்ட விஷயமாக ஸமாதானமுரைப்பதும் காணப்படுமிடங்களே ஒப்பத்தக்கவை. ஒன்றைக் குறித்துக்கேட்டு அதற்குப் பொதுவான ஆகாரத்தில் பதிலுரைக்கப்பட்ட விடம் ப்ரமாணமாகாது. ஸ்ரீமத் ராமாயண

---

1. ‘ந வேதாத் பரம் ஶாஸ்த்ரம்’

2. ‘வேதவேத்யே பரே பும்ஸி ஜாதே தஶரதாத்மஜே।
வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத்ராமாயணாத்மநா’ ॥

த்தில் 1. ‘இந்த லோகத்தில் குணமுள்ளவன் யார்’ என்று கேட்டதற்கு 2. ‘ஜநங்களெல்லாராலும் அறியப்பட்ட ராமனென்பவன்’ என்று ஸமாதானம் சொல்லப்பட்டதானது, இந்த க்ரந்தம் பக்ஷபாதத்துடன் ஒன்றை உபதேசிக்கப்பட்டதல்ல வென்பதைக் காட்டுகிறது. ‘லிங்கமாஹாத்ம்ய மடங்கிய புராணத்தைச் சொல்லக்கடவீர்’ என்று குறிப்பிட்டுக் கேட்டதற்கு அதைப் பெருக்கிச் சொல்லும் புராணம் போன்றவைகள் பரதத்வம் முதலியவற்றை நிஷ்கர்ஷிக்க ப்ரமாணங்களாகா.

ஸ்ரீவால்மீகிமுனி, ஸ்ரீராமவதார வ்ருத்தாந்தங்களைச் சுருக்கமாய் நாரதரிடம்கேட்டு, ப்ருஹ்மாவின் வரப்ரஸாதத்தால் எல்லா அர்த்தங்களையும் உள்ளபடி க்ரஹித்துத் தபோமஹிமையினால் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் குறைவற அவற்றை ஸாக்ஷாத்கரித்து, 3. ‘பத்து இந்திரியங்களாகிற முகங்களையுடைய பயங்கரமான ராவணனாகிய மனதை விவேகமாகிற பாண ஜாலங்களினால் அடக்கி, யோகிகளுக்கு த்யான விஷயமாகிறான். நீருண்டமேகம்போன்ற வர்ணத்தையும் செந்தாமரைக்கண்ணையும் உடைய அவனைப் பாணங்களையும் வில்லையும் கையிலேந்திய வண்ணம் த்யானிக்கவேண்டும்’ என்று ஸ்ரீ ஸாத்வத ஸம்ஹிதையிற் சொல்லியபடியே முமுக்ஷுவுக் குபகாரமாயிருக்கிற இவ்வவதார ரஹஸ்யத்தை வெளியிட்டு உலகத்தை உய்விக்கக் கருதிக் குசலவர்களைக்கொண்டு வேத உபப்ரும்ஹணமாக ஸ்ரீமத் ராமாயணத்தை ப்ரவர்த்திப்பித்தான்.

இதன் கதை எல்லோர்க்கும் தெரிந்ததே. இதில் நம்பூர்வாசார்யர்கள் ஸம்ப்ரதாயமாகச் சொல்லும் விசேஷ அர்த்தங்களை அறியவேண்டியது அவச்யம். அவைதான் இதன் தத்வார்த்தங்கள். அவை மேற்பார்வைக்குப் புலப்படாமல் மறைவாய் விஸ்தாரமாய் ராமாயணமெங்கும் கிடக்கின்றன. அவை நம் தேசிகனருளிச் செய்தபடியே, 2. ‘ஸாத்விகர்களுக்கல்லது எல்லை நிலமாகா.’ ஸதாசார்ய அநுக்ரஹமாகிற அஞ்சநத்தைக் கண்ணிலிடாதவர்களுக்கு இந்தப் புதையல் காணப்படாது. ஸ்ரீ பாஷ்யகாரரே திருமலைநம்பியிடம் பதினெட்டு முறை ராமாயணம் கேட்டது

---

1. ‘को न्वस्मिन् साम्प्रतं लोके गुणवान्’, 2. ‘रामो नाम जनैः श्रुतः’, 3. ‘दशेन्द्रियाननं घोरं

यो मनोरजनीचरम्। विवेकशरजालेन शमं नयति योगिनाम्॥ राजीवनयनं य[illegible] कराम विग्रहम्॥’

2. ‘सकृद्घोष[illegible]’

ப்ரஸித்தமன்றோ ! ஆகையால் ராமாயணார்த்தங்கள் விசிஷ்டாத்வைதக் கொள்கைக்கே பொருந்தினவையா யிருக்கும். மற்றஸித்தாந்தங்களுக்குப் பொருந்தா.

உபநிஷத்துக்களில் பரதத்வத்தை ஸித்தாந்தம் பண்ணி, ஜீவஸ்வரூபாதிகளையும் நன்றாய் விவரித்துப், பரமபுருஷார்த்தமான மோக்ஷத்தையும் பற்றிப் பேசப்பட்டிருக்கிறபடியே, ராமாயணத்திலும் தத்வஹித புருஷார்த்தங்கள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

தத்வ நிரூபணம்.

ஸ்ரீமத்ராமாயணம் விசிஷ்டாத்வைதத்தையே நிரூபிப்பது என்பது வேதாந்தங்களை நிர்ணயிக்க சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட ஆறுவிதமான அடையாள (तात्पर्यलिङ्ग) ங்களைக்கொண்டு நோக்குவதால் விளங்கும். அவை 1 ' ஆரம்பம், முடிவு, அப்யாஸம். அபூர்வதை பலம் அர்த்தவாதம் ' என்பவை.

ஒருக்ரந்தத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் ஒரேபொருள் குறிப்பிடப்பட்டிருக்குமாயின் அங்கு (उपक्रमं) உபஸம்ஹாரம் என்னும் அடையாள (लिङ्ग)ங்கள் உள. ராமாயணத்தின் ஆரம்பத்தில் தசரதன் செய்த யாகத்தில் ஹவிர்ப்பாகம் வாங்க வந்த ப்ரும்மாதி தேவதைகள் ' ஆவரார் துணை' யென்று ரக்ஷகனைத் தேடினவளவினில் 2 ' ஸர்வசேஷியான பகவான் ஸமயம் பார்த்து ரக்ஷணஸங்கல்பத்தாலுண்டான புகர் தோன்றும்படி ரக்ஷணத்துக்குவேண்டிய ஆயுதங்களோடு கட்டியுடுத்துவந்து தோன்றினான் ' என்றவிடத்தில் ஜகத்பதிঃ விஷ்ணுঃ, என்றதினால் ஜகத்காரணமான பரதத்வம் விஷ்ணுவென்று ஸித்தாந்தம் செய்யப்பட்டது. ஜகத்பதிঃ என்றதினால் பலித்த அர்த்தத்தை ஜகத்சேஷீ என்று சொல்லவே ஜகத்காரணம் என்பது அர்த்தத்தால் ஏற்படுகிறது. ப்ரும்மாவும் ருத்ரனும் ஜகத்காரணமாக மாட்டார்கள் என்பதைப் பரதேவதை இன்னாரென்று நிஷ்கர்ஷம் பண்ணும் விஷ்ணு சப்தம்காட்டுகிறது. உபஸம்ஹாரத்தில் (முடிவில்) ப்ரும்மாதனித்து ஸ்தோத்ரம் பண்ணுகையில் 3 ' விகாரமில்லாதவனும் கல்யாணகுணங்களுக்கிருப்பிடமானவனும் தேவரீரே ' என்று ஸ்ரீராமனே பரப்ரும்மம் என்றும்,

---

1. ' उपक्रमोपसंहारावभ्यासोऽपूर्वता फलम् ।
अर्थवादोपपत्ती च लिङ्गं तात्पर्यनिर्णये ॥ '

2. ' एतस्मिन्नन्तरे विष्णुरुपयातो महाद्युतिः ।
शङ्खचक्रगदापाणिः पीतवासा जगत्पतिः ॥ '

3. ' अक्षरं ब्रह्म सत्यं च '

1. ‘ மூன்றுலகங்களுக்கும் ஆதிகர்த்தாவும் தனக்குத்தானே ஈச்வரனும் தேவரீரேயன்றோ,’ என்றும் ப்ரும்ம லக்ஷணமான ஜகத்காரணத்வத்தையும், 2 ‘வாரீர் ஸ்ரீராமரூபியான பகவானே, அடியேன் தேவரீரால் ஸ்ருஷ்டிக்கப்பட்டவன்’ என்று புத்ரன் என்னும் அர்த்தத்தைச் சொல்லும் ஹ்ருதய சப்தத்தாலே தான் கார்யபூதன் (ஸ்ருஷ்டிக்கப்பட்டவன்) என்பதையும் வெளியிட்டான். 3 ‘ யாவனொருவன் ப்ரும்மாவை முற்பட ஸ்ருஷ்டிக்கிறான் ’ என்று ச்வேதாச்வதர உபநிஷத்தில் சொன்ன அர்த்தத்தை உத்தரகாண்டத்தில் 4 ‘முன் காலத்தில் தானாகவே தன் ஸங்கல்பத்தால் உலகங்களைத் தன்னுளொடுக்கி ஸமுத்ரசாயியா யிருந்ததேவரீர் ஸ்ருஷ்டிகாலம் வந்தவாறே ப்ரும்மாண்ட ஸ்ருஷ்டிக்கு முன்னமே என்னை யுண்டாக்கினீர் ’ என்று தன்வாக்யத்தால் பேசினான். 5 ‘ அப்பொழுது, ரிஷிகளும் தேவர்களும் விஷ்ணுபராக்ரமத்தால் பிளவுண்ட அந்த வில்லைப் பார்த்து ருத்ரனைக் காட்டிலும் விஷ்ணு அதிகன் என்று நிச்சயித்தார்கள், ’என்று பரசுராம வாக்யத்தாலே ருத்ரனைக் காட்டிலும் விஷ்ணுவின் பரத்வம் நிரூபிக்கப்பட்டது.

இவ்வர்த்தம் அடிக்கடி பேசப்படுவேது. (அப்யாஸம்), ராமாயணத்தில் தாரையின் ஸ்தோத்ரம், மந்தோதரியின் ஸ்தோத்ரம் முதலிய பலவிடங்களில் காணப்படும்.

அபூர்வதை யென்பது மற்ற ப்ரமாணங்களினால் அறியக்கூடாத அர்த்தத்தைப் போதித்தல்.

பலம் பகவத் ஸாலோக்யம் முதலியன.

அர்த்தவாதம் என்பது ஸ்துதியையோ நிந்தையையோ போதிப்பிக்கும் வாக்யம்.

உபபத்தி யாவது, இந்த க்ரந்தத்தில் ப்ரதிபாதிக்கப்படும் அர்த்தம் கூடும் கூடாதென்பதற்கு அனுகூலமான யுக்தி.

---

1. ‘ த்வம் த்ரயாணாம் ஹி லோகாநாம் ஆதிகர்த்தா ஸ்வயம்ப்ரபு: । ’

2. ‘ அஹம் தே ஹ்ருதயம் ராம ’,

3. ‘ யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் ’, 4. ‘ ஸம்க்ஷிப்ய ஹி புரா லோகாந் மாயயா ஸ்வயமேவ ஹி । மஹார்ணவே சயாநோ‌உப்ஸு மாம் த்வம் பூர்வமஜீஜந: ॥ ’ 5. ‘ ஜ்ரும்பிதம் தத்தநுர் த்ருஷ்ட்வா சைவம் விஷ்ணு பராக்ரமை: । அதிகம் மேநிரே விஷ்ணும் தேவா: ஸர்ஷிகணாஸ்ததா ॥ ’

இந்த ந்யாயங்களைக் கொண்டு நிர்ணயிக்குமளவில் 1. "காரணத்தையே த்யானம் செய்யவேண்டும்." என்று உபநிஷத்துக்களெல்லாம் காரணமென்றும், முமுக்ஷுக்களினால் உபாஸிக்கப்பட வேண்டியதென்றும், முக்தரால் அடையப்படுவதென்றும், கெட்டகுணங்களுக்கெல்லாம் வேறுபட்டதென்றும், கல்யாணகுணங்களுக்கெல்லாம் இருப்பிடமென்றும், ஜகத்தைச் சரீரமாகவுடையதென்றும், ஸர்வாந்தர்யாமி யென்றும், நிரூபித்த பரதத்வமான ஸ்ரீமந்நாராயணனே, ஸ்ரீராமாயணத்திலும் பரதத்வமென்று நிரூபிக்கப்பட்டான் என்றதாயிற்று.

(தொடரும்.) காடந்தேத்தி. கோபாலாசார்யர்.

ஸ்ரீ:

பஞ்சமஹாயஜ்ஞங்கள்.

2. "ஒரு ஜந்துவையும் ஹிம்ஸிக்கக்கூடாது" 3. "ஹிம்ஸை செய்யாமலிருப்பதுதான் தர்மங்களுக்குள் முக்கியமானது" 4. "ஹிம்ஸையில் விருப்பம் கூடாது" என்று வேதங்களும் ஸ்ம்ருதிகளும் முறையிடுகின்றன. நமக்கு எவ்விதமான கஷ்டங்கள் நேர்ந்தாலும் பிறருக்கு ஹிம்ஸையைச் செய்யாமலிருப்பதுதான் முக்கிய தர்மமென்று நாம் திடமான எண்ணங்கொள்ளவேண்டும். நாம் இந்த எண்ணத்துடன் வெகு ஜாக்கிரதையாக இருந்தாலும் தினந்தோறும் அவசியம் செய்யவேண்டியவைகளாக விதிக்கப்பட்ட பகவதாராதனரூபமான நித்ய கர்மங்களைச் செய்யும்போது விடமுடியாமல் சில ஜீவஹிம்ஸைகள் மத்தியில் உண்டாகின்றன. 5. அதாவது— தினந்தோறும் பகவதாராதனத்திற்காகத் தளிகைப் பண்ண அடுப்பு மூட்டுகிறோம். அந்த அடுப்பிற்குள் நம்முடைய கண்ணுக்குப் புலப்படாமல் அனேகம் எறும்பு முதலிய ஜந்துக்கள் இருக்கின்றன. நெருப்பை மூட்டினவுடன் அவைகளெல்லாம் நாசமடைகின்றன. ஒரு க்ஷணகாலத்தில் சிரமப்படாமல் நாம் எவ்வளவு ஜந்துக்களைக் கொன்றுவிடுகிறோம். இது முதலாவது. இரண்டாவது— அரைப்பதற்காக நாம் வைத்துக்கொண்டிருக்கும் அம்மி குழவி இயந்திரம் முதலியவைகளால் உண்டாகும் ஜீவஹிம்ஸை. உளுந்து பயறு முதலிய தானியங்களை பூமியில் விதைத்தால்

---

1. 'காரணம் து த்யேய:'

2. ந ஹிம்ஸ்யாத் ஸர்வா பூதானி, 3. அஹிம்ஸா பரமோ தர்ம: 4. அஹிம்ஸாரதிர க்ஷேத்ரு:, 5. பஞ்ச ஸூனா க்ருஹஸ்தஸ்ய சுல்லீ பேஷண்யுபஸ்கர: । கண்டனீ சோதகும்பஶ்ச பத்யதே யாஸ்து வாஹயன் ॥ மநு. 3-68.

அவைகள் முளை கிளம்பி வளர்கின்றனவல்லவா. எவைகள் ஜலம் காற்று முதலியவைகளால் வளர்கின்றனவோ அவைகளெல்லாம் உயிருள்ளவைகளென்று நமது கொள்கை. இவ்விதம் வளரக்கூடிய உளுந்து பயறு முதலிய தானியங்களை இயந்திரத்தில் உடைப்பதினாலோ அம்மியில் அரைப்பதினாலோ அவைகளுக்கு முளைத்து வளரும் சக்தி போய்விடுகிறது. வளரும் சக்தியை இல்லாமல் செய்வதுதான் ஹிம்ஸை என்பது. ஒருவனைக் கொலை செய்வதும் அவனுடைய தேகத்தை வளரவொட்டாமல் செய்வதுதான். இவ்விதமாக அம்மி இயந்திரம் முதலியவைகளால் அநேக விதமான ஹிம்ஸையை வெகு சுலபமாகச் செய்துவிடுகிறோம். மூன்றாவது— சுத்தம் பண்ணுவதற்காக வைத்துக்கொண்டிருக்கும் துடைப்பம் முறம் முதலியவைகளால் உண்டாகும் ஹிம்ஸை. துடைப்பத்தினால் வீட்டைச் சுத்தம் செய்யும்போதும் முறத்தினால் தானியங்களைப் புடைக்கும்போதும் அளவற்றச் சிறிய ஜந்துக்கள் அகப்பட்டுக்கொண்டு இறந்துபோகின்றன. நாம் எவ்வளவு ஜாக்கிரதையுடன் சுத்தம் செய்தாலும் நம்முடைய கண்ணுக்குத் தெரியாமலிருக்கும் கணக்கில்லாத ஜந்துக்களைக் கொன்றுவிடுகிறோம். நான்காவது— உரல், உலக்கை முதலியவற்றால் உண்டாகும் ஹிம்ஸை. தானியங்களுக்கு உள்ளும் மேலும் எவ்வளவோ ஜந்துக்கள் கண்ணுக்குத்தெரியாமல் இருக்கின்றன. தானியங்களைச் குத்திச் சுத்தம் செய்யும்போது நமக்குத்தெரியாமலே அவைகள் இறந்து விடுகின்றன. இவ்விதமாய் உரல் உலக்கை மூலமாய் அநேக ஜந்துக்களை வதைக்கிறோம். ஐந்தாவது— தண்ணீர்வைக்கும் பாத்திரத்தால் உண்டாகும் ஹிம்ஸை. நதிகளிலும் குளங்களிலும் கிணறுகளிலும் ஜலத்தில் நம்முடைய கண்ணுக்குப் புலப்படாமல் மிகவும் சிறிய ஜந்துக்கள் அநேகம் வசிக்கின்றன. குடத்தில் ஜலத்தை எடுத்தவுடன் அவைகள் இறந்து விடுகின்றன. அதற்காகவே 1. ‘பூமியில் பார்த்து அடி வைக்கவேண்டும், ஜலத்தை வஸ்திரத்தால் வடிக்கட்டிச் சாப்பிடவேண்டும்’ என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஜலத்தை வஸ்திரத்தால் வடிக்கட்டிச் சாப்பிட்டாலும் வடிக்கட்டும்போது தங்கிய ஜந்துக்கள் இறக்கவேண்டியவைகள் தானே. ஆகையால் தண்ணீர்க்குடங்களால் அநேக ஜீவஹிம்ஸையைச் செய்கிறோம். ஜீவஹிம்ஸை உண்டாகிறதென்று இவ்வைந்து கருவிகளை யுபயோகப் படுத்தாமலிருக்கமுடியாது. தினந்தோறும் அவசியம் செய்யவேண்டியதாக விதிக்கப்பட்ட பகவதாரா

---

1. दृष्टिपूतं न्यसेत्पादं वस्त्रपूतं पिबेज्जलम् ॥

மநு. 6-46.

னத்திற்குக் குறைவுவராமல் பார்க்க வேண்டியது அவசியமல்லவோ! 2 ஆகையால் இவ்வைந்துவகை ஜீவஹிம்ஸைகள் பரம ஆஸ்திகர்களாலும் தடுக்க முடியாதவைகள் என்று ஆலோசித்து அவைகளாலுண்டாகும் பாபத்தைப்போக்கவேண்டியநிமித்தம் பஞ்சமஹாயஜ்ஞங்கள் (ஐந்துவிதங்களான பெரியயாகங்கள்) ஒவ்வொரு கிருஹஸ்தனுக்கும் அவசியம் செய்யவேண்டியதாகச் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் இந்தப் பஞ்சமகாயஜ்ஞங்கள் கீழ்ச்சொன்ன ஐந்துவிதமான பாபங்களுக்கும் ப்ராயச்சித்தம் என்று ஏற்படுகிறது. இந்த யஜ்ஞங்களைத் தினந்தோறும் செய்தால் அந்தப்பாபங்கள் தொலைகின்றன. செய்யாவிட்டால் பாபங்கள் விருத்தியாகின்றன என்று ஏற்படுகிறது.

ஐந்துவிதமான யஜ்ஞங்களாவன (1) ருஷியஜ்ஞம், (2) தேவயஜ்ஞம், (3) பூதயஜ்ஞம், (4) மனுஷ்யயஜ்ஞம், (5) பித்ருயஜ்ஞம் என்பன. இவற்றுள் ருஷியஜ்ஞமாவது—தினந்தோறும் காலையில் ஸ்நாநம் ஸந்த்யாவந்தனம் முதலிய கர்மங்களைச் செய்தபிறகு சுத்தமான இடத்தில் உட்கார்ந்துகொண்டு வேதத்தை அத்யயனம் செய்வது. இதனால் வேதத்தை மிகவும் சிரமப்பட்டு ப்ரசாரணம் செய்துவந்த மகர்ஷிகளுக்குத் திருப்தியுண்டாகிறபடியால் இது ருஷியஜ்ஞமென்று சொல்லப்படுகிறது. வேதாத்யயன ரூபமானயஜ்ஞமானபடியால் இதற்கு ப்ரஹ்மயஜ்ஞம் என்றும் பெயருண்டு. ப்ரஹ்ம என்றால் வேதம். இரண்டாவதான தேவயஜ்ஞமாவது— ஔபாஸநம் முதலான கர்மங்களைச் செய்தல். இதனால் அக்னி சூரியன் முதலிய தேவர்கள் திருப்தியடைகிறபடியால் இது தேவயஜ்ஞமென்று சொல்லப்படுகிறது. மூன்றாவதான பூதயஜ்ஞமாவது— வைச்வதேவம் முதலிய கர்மங்களைச் செய்தல். இதனால் அநேகப்ராணிகள் திருப்தியடைகிறபடியால் இது பூதயஜ்ஞமென்று சொல்லப்படுகிறது. நான்காவதான மனுஷ்யயஜ்ஞமாவது— அதிதிபூஜை முதலியன. இதனால் அதிதிகள் திருப்தியடைகிறபடியால் இது மனுஷ்யயஜ்ஞமென்று சொல்லப்படுகிறது. ஐந்தாவதாகிய பித்ருயஜ்ஞமாவது —பித்ருதர்ப்பணம், நித்யச்ராத்தம் முதலியன. இதனால் பித்ருக்கள் திருப்தியடைகிறபடியால் இது பித்ருயஜ்ஞமென்று சொல்லப்படுகிறது.

கீழ்ச்சொன்ன ஐந்து யஜ்ஞங்களைச் செய்யும்போது அந்தந்த ருஷிகள் தேவர்கள், பூதங்கள், மனுஷ்யர்கள், பித்ருக்கள் இவர்களைச் சரீரமாகவுடைய

---

2. 𑌤𑌾𑌸𑌾𑌂 𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑌾𑌂 𑌨𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌮𑌹𑌰𑍍𑌷𑌿𑌭𑌿𑌃 ।
𑌪𑌞𑍍𑌚 𑌕𑍢𑌪𑍍𑌤𑌾 𑌮𑌹𑌾𑌯𑌜𑍍𑌞𑌾𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌹𑌂 𑌗𑍃𑌹𑌮𑍇𑌧𑌿𑌨𑌾𑌮𑍍 ॥ 𑌮𑌨𑍁 3-69

ஸர்வேச்வரனான ஸ்ரீமந்நாராயணனே இந்தக் கர்மங்களால் ஆராதிக்கப்படுகிறான் என்ற எண்ணத்துடன் செய்யவேண்டியதென்பதுதான் ஸமஸ்த ச்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களாலும் ஆசார்யதிவ்யஸூக்திகளாலும் நிச்சயிக்கப்பட்ட விஷயம். ஆகையால் தான் இவ்வைந்து கர்மங்களுக்கும் பொதுவாக மகாயஜ்ஞம் என்ற பெயர் வழங்குகிறது. 'யஜ' என்ற தாதுவினால் ஏற்பட்ட 'யஜ்ஞ' என்ற சப்தத்தின் அர்த்தத்தைக் கவனிக்கும்போது தேவதையைப் பூஜிக்கிற கர்மாவுக்கல்லவோ யஜ்ஞம் என்றபெயர் தகுந்ததாகும். தேவர்களல்லாத வெறும் ருஷிகளையும் பூதங்களையும் மனுஷ்யர்களையும் பித்ருக்களையும் பூஜிக்கிற கர்மங்களுக்கு யஜ்ஞம் என்றபெயர் எப்படித் தகுந்ததாகும்? அதிலும் மகாயஜ்ஞம் என்ற பெயர் எவ்விதத்திலும் ஒவ்வாது. ஆகையால் அந்தந்தச் சரீரத்துடன்கூடிய ஸர்வேச்வரனே ஆராதிக்கப்படுகிறான் என்றே அர்த்தம் கொள்ளவேண்டும்.

இந்தப் பஞ்சமகா யஜ்ஞங்களைச் செய்யும் முறைகளை அந்தந்தக் கல்பக்ரந்தங்களிலிருந்து தெரிந்து கொள்ளவும்.

இம்மாதிரி இந்த மகாயஜ்ஞங்களுக்கு ஜீவஹிம்ஸையாலுண்டாகும் பாபத்தைக் கழிப்பது பலம் என்று சொல்லியிருந்தாலும், ஸந்த்யாவந்தனாதிகளைப்போல் இவைகளும் நித்யகர்மங்கள் என்றும், பலனை எதிர்பார்க்காமல் ஒவ்வொரு கிருஹஸ்தனும் தினந்தோறும் அவசியம் செய்யவேண்டுமென்றும், செய்யாவிட்டால் கர்மங்களை விட்டுவிட்ட வ்ராத்யனாகிறானென்றும் சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. நித்ய கர்மங்களாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் ஸந்த்யாவந்தனாதிகளுக்கு 1. ப்ராஜாபத்யலோகம் முதலான பலன்களைச் சொல்லுவதுபோல, ஜீவஹிம்ஸையாலுண்டாகும் பாபத்தைக் கழித்தலைப் பலனாகச் சொல்லுவதிலும் விரோதமில்லை. இவைகள் நித்யகர்மங்களாகையால் தான் சில ஸமயங்களில் காலவ்யத்யாஸத்தாலோ தேசவ்யத்யாஸத்தாலோ கொஞ்சம் அஸௌகரியம் நேர்ந்தாலும் அடியோடு

---

* அத்யாபனம் ப்ரஹ்மயஜ்ஞ: பித்ருயஜ்ஞஸ்து தர்ப்பணம்।
ஹோமோ தைவோ பலிர்பௌதோ ந்ருயஜ்ஞோऽதிதிபூஜனம்॥
மனு 3-70.

1. ப்ராஜாபத்யம் ப்ராஹ்மணானாம் ஸ்ம்ருதம் ஸ்தானம் க்ரியாவதாம்।
விஷ்ணு பு. 1-6-94.

விட்டுவிடாமல் 2. யதாசக்தி செய்யவேண்டுமென்று சாஸ்திரங்கள் தயையுடன் மனமிரங்கிச்சொல்லுகின்றன. காம்யகர்மாவாகவிருக்கும்பக்ஷத்தில் முக்கிய பக்ஷமாகத்தான் செய்யும்படி சாஸ்திரங்கள் விதிக்கும். கொஞ்சம் குறைவு ஏற்பட்டாலும் கர்மங்கள் நஷ்டமாகப் போவதுடன் கர்த்தாவுக்கும் மகத்தான ப்ரத்யவாயங்கள் சம்பவிக்கும்.

இந்தப் பஞ்சமகாயஜ்ஞங்களைச் சரிவரச்செய்தால்தான் இவ்வுலகத்திற்கு மேன்மேல் அபிவ்ருத்தியுண்டாகிறது. 1. மந்த்ர பூர்வகமாக அக்னியில் ஹோமம் செய்யப்பட்ட ஹவிஸ்ஸானது சூரியனையடைந்து அவனிடமிருந்து மழையாக வெளிக்கிளம்புகிறது. மழையினால் பயிர்கள் விளைகின்றன. பயிர்களால் தானியங்கள் உண்டாகின்றன. தானியங்களைச் சாப்பிட்டு ப்ரஜைகள் வளர்கின்றனர். ஆகையால் உலகம்செழிப்பதற்குப் பஞ்சமகாயஜ்ஞாநுஷ்டானம் தான் முக்கிய காரணம். ஆகையால் பஞ்சமகாயஜ்ஞங்களை அநுஷ்டிப்பவன் உலகத்தைக்காப்பாற்றுகிற இறைவனாகிறான். இக்கர்மங்களைச் செய்யாவிட்டால் உயிரோடிருந்தும் உயிரில்லாதவனாகவே கருதப்படுவான் என்று நிந்தித்து கர்மங்கள் அவசியம் செய்யப்படவேண்டுமென்று சாஸ்திரங்களில் சொல்லப்படுகின்றன.

இவ்வைந்து யஜ்ஞங்களில் ஒவ்வொன்றின் ஸ்வரூபமும் மேல் ஸஞ்சிகைகளில் வரும்.

வெங்கடாத்திரியகரம். க்ருஷ்ணமாசார்யர்.

---

2. பஞ்சைதாந் யோ மஹாயஜ்ஞாந் ந ஹாபயதி ஶக்திதஃ।
ஸ க்ருஹேঽபி வஸந் நித்யம் ஸூநாதோஷைர் ந லிப்யதே ॥
மநு, 3-71.

1. ஸ்வாத்யாயே நித்யயுக்தஃ ஸ்யாத் தைவே சைவேஹ கர்மணி ॥
தைவே கர்மணி யுக்தோ ஹி பிபர்தீதம் சராசரம் ॥ மநு 3-75.
அக்நௌ ப்ராஸ்தாஹுதிஃ ஸம்யகாதித்யமுபதிஷ்டதே ।
ஆதித்யாஜ்ஜாயதே வ்ருஷ்டிர்வ்ருஷ்டேரந்நம் ததஃ ப்ரஜாஃ ॥ மநு. 3-76.
தேவதாதிதிப்ருத்யாநாம் பித்ரூணாமாத்மநஶ்ச யஃ ।
ந நிர்வபதி பஞ்சாநாமுச்ச்வஸந் ந ஸ ஜீவதி ॥ மநு. 3-72.

ஸ்ரீ:.

துளஸீ.

ஸ்ரீமதே வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகாய நம:.

ஸ்ரீமத்துளஸ்யை நம:.

திருத்துழாய் (துளஸி) என்பது விஷ்ணுபக்தர்களால் கொண்டாடக் கூடியது. அதன் பெருமையைப்பற்றிக் கொஞ்சம் எழுதுகிறேன். 1. புஷ்பங்களுக்குள் ஜாதி என மதிக்கப்படும் ஜாதி, சண்பகம், ரோஜா, மல்லிகை முதலிய எத்தனையோ பரிமளபுஷ்பங்களிருந்தும் இதிலிருக்கும் உகப்பு எம்பெருமானுக்கு மற்றொன்றில் கிடையாது. அகலகில்லேனிறையுமென்றிருக்கும் பிராட்டியைவிட்டுப் பிரிந்தாலும் பிரிவர்; இதின் பிரிவைத் தரிக்கமாட்டாதவர்போலே யெப்போதுமிதை அணிந்து கொள்வதுடன் 2. இது இருக்குமிடங்களில் பெருமாள் நித்யவாஸம் பண்ணிக்கொண்டிருப்பதாயுந் தெரிகிறது. 3. இன்னுமிந்தத் துளஸியின் தளத்தில் புஷ்கரம் முதலிய புண்யதீர்த்தங்கள், கங்கை முதலிய புண்யநதிகள், விஷ்ணு முதலிய தேவர்கள் வஸிப்பதையும், 4. துளஸியிருக்கும் வீடு புண்யஸ்தலமென்றும், அங்கு எமகிங்கரர்கள் வருவதில்லையென்றும் சொல்லியிருக்கிறது. 5. துளஸியை வைத்துப் பயிர்செய்தல், பாதுகாத்தல், அதற்குத் தண்ணீர் கொட்டுதல்,

---

1. புஷ்பேஷு ஜாதி: । 2. துளஸீகாநநம் யத்ர யத்ர ஸந்நிஹிதோ ஹரி: — 3. புஷ்கராத்யானி தீர்த்தானி கங்காத்யா: ஸரிதஸ்ததா । வாஸுதேவாதயோ தேவா வஸந்தி துளஸீதளே ॥

4. துளஸீ காநநம் யஸ்ய க்ருஹேஷு திஷ்டதி । தத்க்ருஹம் தீர்த்தபூதம் ஹி நாயாந்தி யமகிங்கரா: ।

5. ரோபணாத் பாலநாத் ஸேகாத் தர்சநாத் ஸ்பர்சநாந் ந்ருணாம் । துளஸீ தஹதே பாபம் வாங்மந: காயஸஞ்சிதம் ॥

அதைப்பார்த்தல், தொடுதல் ஆகிய இவைகளால் மனம், வாக்கு, காயம் இவைகளால் செய்யப்படும் பாபம் போய்விடும். 3. துளஸியை வைத்துப் பயிர் செய்து வேலி, மதில் கட்டிப் பாதுகாப்பவர்கள் வைகுண்டத்தை யடைகிறூர்கள். 4. துளஸியின் அடியிலிருந்து எவ்வளவு புற்களைப் பிடுங்குகிறூர்களோ, அவ்வளவு ப்ரஹ்மஹத்தி தோஷத்தைப் போக்கிக்கொள்ளுகிறூர்கள். 5. துளஸியிருக்குமிடத்திலோ, அது ஸம்பந்தமுள்ளதாயோ செய்யப்படும் சிராத்தம் அக்ஷயமாகும். 6. துளஸிக்கட்டையைத் தேய்த்துப்பூசிக்கொண்டால் பாபம் ஒட்டுகிறதில்லை. 7. துளஸி காஷ்டத்தால் விருத்தி செய்யப்பட்ட அக்னியில் ஔபாஸனம், மற்றும் வைதிக கார்யங்கள் செய்தால் மந்திராதிகளின் குறை வித்யாஸங்களாலுண்டாகும் தோஷம் போவதுடன் அக்னி ஹோத்ரம் செய்த பலனுமுண்டாகிறது. இதே அக்னியில் பாகஞ்செய்த அன்னத்தைப் பகவானுக்கு நிவேதனம் செய்தாலும் வைச்வதேவம் முதலிய செய்தாலும் அன்ன தோஷங்கள் கழிந்துவிடும். என்றிம்மாதிரியெல்லாம் இதின் ப்ரபாவம் விரிவாய் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் தான் நமது பெரியோர்களும், "துளஸியும் மணியுமில்லாமல் திருவாராதனம் செய்யக்கூடாது. முத்து ரத்நம் முதலியவைகளால் செய்யப்படுமொரு அர்ச்சனையும் துளஸி அர்ச்சனைக்கு ஈடாகாது. அவச்யம் துளஸி

---

3. வஸந்தி விஷ்ணுலோகே தே துலஸீம் ரோபயந்தி யே । த்ருணானி துலஸீமூலாத்யாவந்த்யபஹரந்தி வை ।

4. தாவதீ ப்ரஹ்மஹத்யாபி விநச்யத்யேவ ந ஸம்ஶய: ।

5. துலஸீவிபிநம் யத்ர பித்ரூணாம் தத்தமக்ஷயம் ।

6. துலஸீகாஷ்டஜம் யஸ்து சந்தநம் தாரயேந்நர: । தத்தேஹம் நஸ்ப்ருசேத்பாபம் க்ரியமாணமபீஹ யத் ॥

7. துலஸீகாஷ்டவஹ்நௌ ய: பாவகம் ஹோமகர்மஸு । தஜ்ஜ விபர்யாஸ காலு ந்யூநாதிரேகஜாந் । ஹந்தி தோஷாந்ஸமஸ்தாம்ஶ்ச துலஸீகாஷ்டபாவநம் । துலஸீகாஷ்ட ஸம்பந்நம் ந்யஸ்ய ப்ருஜ்ஜாய்ய வஹ்நிம்ஷம் । தஸ்மிந்நக்நிஹோத்ரவாஸிகா ஸ்ரௌத வஹ்நிஹோமம் ஸமஸ்து.

MADURA TAMIL SANGAM MADURA

யின் தார் தளம் இலை கொம்பு இவைகளில் எதையாவது கொண்டு பெருமானுக்கு அர்ச்சனை செய்யவேண்டும். ஒன்றுமில்லாவிடில் துளஸீ துளஸீ என்றுவது 1. பத்துத்தரம் சொல்லவேண்டும் 2. உபசாரங்களுக்கோ மற்றுமெந்தத் திரவியங்களோ இல்லாததுக்கெல்லாம் துளஸியைச் சேர்த்தால் போதுமானது'' என்கிறார்கள். என்றேனும் கட்கண்ணால் காணமுடியாத எம்பெருமானை நெஞ்சமென்னும் உட்கண்ணால் கண்டு மகிழும் ஆழ்வாராதிகளும் மற்ற வனமாலாதிகளைவிட்டுத் தண்டுழாய் மாலைமார்பன், நாற்றத்துழாய் முடியன் என்றிம்மாதிரி இதையே விசேஷமாய்ப் புகழ்ந்தும், பகவத் விச்லேஷதசையில் இதுவே தங்களுக்கு ஆச்வாஸஹேதுவாயு மருளிச்செய்திருக்கிறார்கள். உதாஹரணமாக நம்மாழ்வார் திருவிருத்தம் 53 "வாராயின முலையாளிவள்'' என்னும் பாசுரத்தில் ஓ தாய்மார்களே! இப்பெண்பிழைக்க நீங்கள் தேடும் தேவதாந்தர பஜனம் முதலியது சரியான பரிஹாரமன்று. நோய்க்கு மருந்து செய்பவர், வியாதிக்காரனுடைய பிரகிருதியையுமறிந்து செய்யவேண்டும். இவளோ பருவம் முதிர்ந்து நித்யசூரி நிர்வாஹகனையணைய ஆசை கொண்டு இப்பாடுபடுகிறாள். அவன் வராவிடினும் அவன் சம்பந்தமுள்ள திருத்துழாயின் தார் தழை வேர் ஒன்றுமில்லாவிடில் அதினடி மண்ணையாவது கொண்டு வீசினால் இவள் நோய் தணியுமென்று தோழிப்பாசுரத்தால் பகவானைப்பிரிந்த தனக்கு ஆச்வாஸமாக இத்தையே விரும்பியிருக்கிறதாய் அருளிச்செய்கிறார். இதைப்பற்றி இம்மாதிரி இதிலும், திருவாய்மொழி முதலியதிலும் பல இடமுண்டு. ஸ்ரீகுலசேகரரும் 'முகுந்தன் பாத துளஸியை முகருவதே மூக்கின் ப்ரயோஜனம்' என்றார். தர்மராஜனும் துளஸி மணிமாலை தரிப்பவனிடம் செல்லாதே அங்கு நம் ஜம்பம் பலியாதென்கிறான். இப்படிப்பட்ட மகிமையுள்ள திருத்துழாய் விஷயத்தில் நம்மவர்களின் அநாதரவு அதிகமாயிருக்கிறது. மதாந்தரத்திலுள்ளவர்கள் கிருஹத்தில் துளசிமாடம் இல்லாமலிருப்பதில்லை. ஸ்ரீபாஷ்யகாரர் நியமித்த ஐந்து கைங்கர்யங்களில், பாஷ்ய ப்ரவசனம் அருளிச்செயல்களில் எல்லாருக்குமதிகாரமில்லாவிட்டாலும் இம்மாதிரி கைங்கர்யங்கள் ப்ரபன்னர்களுக்கெல்லாம்

---

1. பிண்டாந்ந வஸ்த்ராணி ததாந்யாநி தநாநி ச ।
துளஸீ வத்ஸ பூஜாயாஃ கலௌ நார்ஹந்தி ஷோடஸீம் ।

2. ஸர்வோபசாரே துளஸீம் வா நிக்ஷிபேத் ।

பொதுவானவை. இதில் வெகுவாகத் தெரிந்தவர்களும் உபேக்ஷை செய்கிறார்கள். சாமான்யர்களுக்கு இப்பாக்கியம் கிடைக்கிறது. அவர்களுக்கும் பாவசுத்தியிருந்தும் (பாஹ்யசுத்தி வெளியாசாரம்) இருப்பதாய்த் தெரியவில்லை. பக்தியாலெதைக்கொடுத்தாலுமே கொள்ளுகிறான் என்றாலும் ஞாயிறு, வெள்ளி, செவ்வாய், துவாதசி, பர்வம், ஸங்க்ராந்தி, மத்தியானம் முதலிய நிஷித்தகாலங்களிலும் கொட்டை, எருக்கு முதலிய இலைகளிலும் அனுசாரமாயும் எடுக்கப்பட்டவும் புழு, மயிர் உள்ள துளசியை அங்கீரிக்கமாட்டான். உபய சுத்தியுடன் சமர்ப்பித்தால் ஒவ்வொரு துளஸீ தளத்தையும் ஒவ்வொரு பிராட்டி போலெண்ணி ஸ்வீகரிப்பான். இக்காலத்திலிம்மாதிரி கைங்கர்யங்களை யனுஷ்டிக்கும் முறை வெகுவாய் லுப்தமாயிருக்கிறது. நமது ஸம்பிரதாயத்தில், தொண்டரடிப்பொடி, பெரியாழ்வார் முதலியவர்களும் ஈடுபட்டு நடத்திக்காட்டியிருப்பதை மாதிரிக்கு காட்டக்கூடமனுஷ்யனகப்படுவதரிது. ஸ்ரீரங்கத்தில் தற்சமயம் பெரியாச்ரமத்தில் எழுந்தருளியிருக்கும் ஆண்டவன், தனது சிஷ்யர்களைக்கொண்டு துளஸியை வளர்த்து ஆதரவுடன் ஆசாரத்துடன் சுத்தமாய்த் தகுந்த காலத்தில் எடுக்கச்செய்து பக்திபூர்வகமாய்ச் சமர்ப்பிப்பதைக்கண்ணுற்றுப் பார்க்கும் நிர்மலஹிருதயர்கள் ஆச்சரியப்படுவார்கள். துளஸியை எடுக்கும் முன் சேவித்து, தீர்த்தம் சேர்த்துவிட்டுத் தூபதீபாதிகள் ஸமர்ப்பித்து 'த்ஐஸ்யமூஜநாவஸி' என்னும் ச்லோகத்தால் பிரார்த்தித்துவிட்டு எடுக்கவேண்டும். துளஸியை யெடுக்கும்போது வார்த்தைசொல்லக்கூடாது. துளஸியிருக்குமிடத்தில் யம கிங்கரர்கள் வருவதில்லை. அங்கு ஸர்வஸம்பத்துக்களுமிருக்கும். பக்தியுடன் துளஸியை யெடுத்தர்ச்சிப்பதாலுண்டாகும் சித்தி மற்று யாகதானதிகளாலுமுண்டாவதில்லை.

(இன்னும் வரும்)

நெடுந்தெரு, ஸ்ரீநிவாஸன்.

ஸ்ரீ:

ஸ்ரீ பெரும்பூதூர், ஆதிகேசவப்பெருமாள்.

ஸ்ரீ பெரும்பூதூரில்

“ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாமபி வர்த்ததாம்” என்று நாம் பிரதி தினம் அநுஸந்தானம் செய்து வருவதற்குக் காரணபூதராயும், நம்முடைய ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தைச் சாஶ்வதமாய் நிலைநிறுத்திவைத்த மஹாசார்யருமான ஸ்ரீ பாஷ்யகாரரது ஸந்நிதியோடுகூடியதான ஆதிகேசவப் பெருமாள் கோவில் ஒன்று இருக்கிறது. இந்தக் கோவிலிலிருக்கும் சிலா சாஸனங்களை ஆராய்ந்துபார்த்தால், நம் பூர்வாசார்யர்களாலும் ஆழ்வார்களாலும் பரமபக்தியுடன் கொண்டாடப்பட்ட கோயில், திருமலை பெருமாள் கோவில் என்று வழங்கப்படும் ஸ்ரீரங்கம், திருப்பதி, காஞ்சீபுரம் முதலிய திவ்விய ஸ்தலங்களைப்போல ப்ரசித்திபெற்ற ஸ்தலமாகக் காணப்படவில்லை. ஆனாலும் நம்முடைய மஹாசார்யன் அவதரித்த ஸ்தலத்தின் மஹிமையாலும், அந்த ஆசார்யனால் ஆராதிக்கப்பட்டவர் என்பதாலுமே இந்த ஆதிகேசவப்பெருமாளுக்கு மஹிமை உண்டாயிற்று.

இந்த ஸ்ரீ பெரும்பூதூர், பதின்மூன்றாவது நூற்றாண்டில் கைதவகைதவ சாதுர் வேதிமங்கலம் என்ற பெயரால் வழங்கப்பட்டு வந்தது. இது, அந்தக் காலத்தில் ஜயங்கொண்ட சோழமண்டலத்தில், செங்காட்டுக்கோட்டத்தில் மாகனூர் நாட்டில் அடங்கிய ஒரு கிராமமாக இருந்தது. இது, ஸ்ரீ பாஷ்யகாரர் அவதரிப்பதற்கு முன்னமேயே ஒரு அக்ரஹாரமாக இருந்திருக்கவேணும். கிரந்தங்களில் இது பூதபுரி என்று வழங்கப்பட்டு வந்தாலும் சிலா சாஸநங்களில் ஸ்ரீ பெரும்பூதூர் என்றே வ்யவஹாரம். அவ்வூரிலிருக்கும் சிவன் கோவிலிலுள்ள சிலாசாஸனங்களிலோ இது பூதபுரி என்று வ்யவஹரிக்கப்பட்டு வருகிறது.

இந்தக் கோவிலிலுள்ள சிலா சாஸனங்களில் மிகவும் ப்ராசீனமானது சகவருஷம் 1487-க்குச் சரியான க்ரோதனவருஷம் மாசிமீ 24உ (கி. பி. 1565) ஏற்பட்டுள்ளதே. இதற்குமுன் தேதியுள்ள சாஸனங்கள் வேறொன்றுமில்லை. ஆகையால் இந்தக் கோவில் 1565-கி. பி. முதல்தான் கொஞ்சம் ப்ரஸித்தி அடைய ஆரம்பித்தது என்று தெரியவருகிறது. இந்தச் சாஸனத்தில் வீர ப்ரதாப ஸதாசிவமஹாராயர், விஜயநகர ஸமஸ்தானத்தை ஆண்டுகொண்டிருந்தகாலத்தில் அவருடைய சிற்றரசரில் ஒருவர் 150-பொன் செலவுசெய்து அவ்வூர் ஏரியை மராமத்து செய்து, அதனால் உண்டாகும் வருமானத்தின் அதிகத்திலிருந்து ஆதிகேசவருக்கும், எம்பெருமானாருக்கும் சில கைங்கர்யம் செய்து தனக்கு ஏற்பட்ட ப்ரஸாதத்தை ஸேவார்த்தமாக ராமாநுஜகூடத்தில் வந்து தங்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு விநியோகம் செய்யும்படி ஏற்பாடு செய்திருந்தார். ஆகையால், அந்தக்காலத்தில் ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஸேவைக்காக அவ்வூருக்குப் போய்க்கொண்டிருந்தார்கள் என்று ஏற்படுகிறது. கோபுரத்தின் ஸமீபத்திலுள்ள ஒரு கல்லில் வெட்டப்பட்ட சாஸனத்தில், ஸ்ரீ ரங்கராயர் ஆளுகைநாளில் சகவருஷம் 1494-க்குச் சரியான ஆங்கிரஸவருஷம் ஆஷாட மாஸத்தில் ஸ்ரீ பாஷ்யகாரரால் பூஜிக்கப்பட்ட ஆதிகேசவப்பெருமாளின் பூஜை நைவேத்யத்துக்காக ஈச்சங்காடுகோட்டத்திலுள்ள சில க்ராமங்களின் வரிகள் மான்யமாக விடப்பட்டன என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்

தப் பெருமாள் ஸந்நிதி ஸ்ரீ பாஷ்யகாரர் காலத்திலோ அல்லது அவர் காலத்துக்கு முன்னமேயோ ஏற்பட்டிருக்கவேண்டும் என்பது நிச்சயம். வாஸ்தவத்தில் ஸ்ரீ பாஷ்யகாரருக்கு முன்னால் 3-தலைமுறையாக இந்தப்பெருமாளை ஆஸூரிவம்சத்தார் ஆராதித்து வந்ததாகத் தெரியவருகிறது. ஸ்ரீ பாஷ்யகாரரே இந்தப் பெருமாளை ஆராதித்தது இவருக்குத் தினம் அநுஸந்திக்கும் ஸூப்ரபாதத்தில் வ்யக்தமாய் ஏற்படுகிறது. பாஷ்யகாரர் காலம் முதல் 1565 கி. பி. வரையில் இந்தக் கோவிலுக்குப் ப்ரஸித்தி ஏற்பட்டதாகத் தெரியவில்லை. பிறகு வரவர, அதாவது (ஸதாசிவராயர், ஸ்ரீ ரங்கராயர், வெங்கடபதிதேவராயர் நாளில்) சில சிலமான்யங்கள் விடப்பட்டுவந்தன—கருடாழ்வார் மண்டபத்திலிருக்கும் சிலா சாஸனத்தில் சகஸூ 1512, விக்ருதிஸூ கன்யா சுக்லபஞ்சமிதினம் (கி-பி 1590-ல்) திருப்பரிவேட்டை உத்ஸவத்தை நடத்திவைக்க, ஸ்ரீ பெரும்பூதூர், கச்சிப்பட்டு இந்தத் தேசத்திலுள்ள ஒவ்வொரு க்ராமத்திலும் நெல் அறுத்துக் களத்தில் அடிக்கும்போது கலத்துக்குக் குறுணி நெல் கோவிலுக்குக் கொடுக்கவேண்டியது என்று விஜயநகர ராஜாவின் ஸேனாதிபதியான ராகவநாயகரால் ஏற்பாடு செய்யப்பட்டது என்றும், இரண்டாவது ப்ராகாரத்தின் கீழண்டைச் சுவரிலுள்ள சாஸனத்தில் சகஸூ 1504 (கி. பி. 1582) க்குச்சரியான சித்ரபானுஸூ ஜ்யேஷ்டமீ சுத்த சதுர்த்தசியன்று திருமலைராயரால் 500-பொன் கிராமங்களிலிருந்து வசூல் செய்து அதை வட்டிக்காகக் கொடுத்து, வருகிற வட்டியிலிருந்து சில உத்ஸவங்களை நடத்த ஏற்பாடு செய்தார் என்றும், பிறகு திருமழிசையாழ்வார், திருமங்கை ஆழ்வார் இவர்களுடைய திருநக்ஷத்ரங்களைக்கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டன என்றும் சகஸூ 1518 (கி. பி. 1596-ல்) துர்முகி விருச்சிக பஞ்சமி தினம் ஸ்ரீ பெரும்பூதூர் நகரத்தார் எல்லோரும் சேர்ந்து திருக்கச்சிநம்பி உத்ஸவம் செய்ய ஒரு பண்டு ஏற்பாடு செய்தார்கள், என்றும் தெரிகின்றது.

இந்தச் சிலா சாஸநங்களிலிருந்து இந்தக் கோவிலுக்கு ஏட்டூர்-குமார தாதாசாரியர் தர்மகர்த்தாவாக இருந்தார் என்றுந் தெரியவருகிறது. இவர் கார்யஸ்தர்களைக்கொண்டு கோவில் வேலைகளை நடத்திவந்தார். சகஸூ 1530-(கி. பி. 1608) வரை இவர் தர்மகர்த்தாவாக இருந்தார். பிறகு சகஸூ 1556-ல் (கி. பி. 1634-ல்) ஏட்டூர் - இம்மடி - திருமலை குமாரதாதாசாரியர் என்பவர் தர்மகர்த்தாவாக இருந்தார். இவர் வைத்யநாதய்யன் என்னும் ஒருவரைக் கார்யஸ்தனாக வைத்துக்கொண்டு கோவில் கார்யத்தை நடத்திவந்தார் என்றும் தெரிகின்றது.

ஆகையால் இந்த ஆதிகேசவப்பெருமாள் கோவில் 16-வது நூற்றாண்டு முதல் வரவர ப்ரஸித்தி அடைய ஆரம்பித்தது என்றும், அதற்கு ஏட்டூர் குமாரதாதாசாரியர் தர்மகர்த்தாவாக இருந்தாரென்றும் ஏற்படுகிறது. இதின் தர்மகர்த்ருத்வம் இவர்களைவிட்டு எப்பொழுது மாறிற்று என்பதற்குச் சாஸனங்களில்லை. இந்த ஊரிலிருக்கும் சிவன் கோவில் வெகுப்ராசீனமானது. அது அந்நாளில் பிரஸித்திபெற்றதாயிருந்து வரவர மாலின்யத்தை அடைந்துவிட்டது. இந்தப் பெருமாள் கோவில் முதலில் சாமான்யமாயிருந்து பிறகு ஸ்ரீ பாஷ்யகாரருடைய ஸாந்நித்யத்தால் வரவர ப்ரஸித்தி அடைந்து வருகிறது.

ஆர். ஸ்ரீனிவாஸராகவன்.

ஸ்ரீ:.

ஸ்ரீக்ருஷ்ணாயவராஹாத்மநேநம:

ஸ்ரீ பாகவத தனிச்லோகீ.

(முன் தொடர்ச்சி.)

எனக்கு என்னுடைய பக்தனிடத்தில் பக்திசெய்பவன் விஷயத்தில் அதிகமான ப்ரீதி உண்டாகும் ' என்று பொதுவசனம்' பக்தர்களுக்குள் சிறந்தவர்களாகிய ஆசார்யர்களையும் குறிக்கும்.

நித்யஶேஷிணே யோகாய:— பகவானே ஸர்வ லோகத்துக்கும் சேஷி என்பது (14) 'ஸமஸ்த சிதசிதஸ்து ஶேஷிணே ஶேஷஶாயிநே' 'வ்யாப்யம் ப்ரஹ்ம ஸமஸ்தஶேஷி பரம்' இத்யாதிகளான ஆசார்ய ஸ்ரீஸூக்திகளிலும், "எந்தை" இத்யாதி ஆழ்வார்கள் பாசுரங்களிலும், ஸர்வலோகத்திற்கும் நாராயணனே பதி என்று அர்த்தமுள்ள உபநிஷத்துக்களிலும் ப்ரஸித்தம். அப்படியிருக்க "(15) 'நாதாய நாதமுநயே அத்ர பரத்ர சாபி நித்யம் யதீயசரணௌ ஶரணம் மதீயம்' (கூறுகவர்ந்த குருக்கள் குழாங்கள் குரைகழல் கீழ்' "முத்திவழிதந்தார் மொய்கழலே அத்திவத்தில்" "ஆரமுதம் ஆருமிருநிலத்தில்" இத்யாதிகளான ஆசார்ய ஸ்ரீஸூக்திகளை அநுஸந்தித்தவர்களுக்கு ஆசார்யர்களே அந்த விபூதியிலும் நித்யவிபூதியிலும் சேஷிகள் என்பது ஸ்பஷ்டமாக ஏற்படும். இவ்வளவு பகவானை நாம் உபாஸிக்கவேண்டியதற்குக் காரணங்களான குணங்கள் ஆசார்யனிடத்திலிருப்பதினால் ஆசார்யன் பகவானைப்போல உபாஸிக்கத் தக்கவன். இது கடச்ருதியில், எவனுக்குத்தேவதையினிடத்தில் விசேஷமானபக்தியும், அந்தப்பகவானிடத்தில் போலஆசார்யனிடத்தில்பக்தியும்இருக்கிறதோ, அந்தமஹாத்மாவுக்கு கீழ்ச்சொல்லிய அர்த்தங்களெல்லாம் ப்ரகாசிக்கும் என்றுஅர்த்தமுள்ள வாக்யத்தில் சொல்லப்படுகிறது. இங்கு ஸந்தி: என்பதினால் ப்ரும்மத்தை அறிந்தவன் ஸத் என்று சொல்லப்படுகிறான் என்கிற உபநிஷத்து வாக்யத்திலேபோல, இப்படி ஆசார்யபக்தி பண்ணுகிறவன் ஸத் என்று சொல்லப்படுகிறான். இப்படி ஆசார்யபக்தி செய்யாதவன், தன்னுடைய ஜன்மத்தின் முக்யமான ப்ரயோஜனமாகிய மோக்ஷத்தை அடையமாட்டானாதலால், இல்லாததற்கு ஸமானமாவான். என்பது அபிப்ராயத்தில் கொள்ளப்படுகிறது. இவ்வர்த்தத்தை

---

(14) சித்துக்களுக்கும் அசித்துக்களுக்கும் சேஷியாயும் சேஷன்மீது பள்ளிகொண்டுள்ள ஸமஸ்தவஸ்துக்களுக்கும் சேஷியாகிய பரப்ரமஸ்வரூபனாகிய ஸ்ரீமந்நாராயணன் எல்லாவற்றிற்கும் சேஷியான பாப்ரும்மம் அடையத்தகுந்தது.

(15) எவருடைய திருவடிகள் இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் எனக்கு ரக்ஷகமோ அந்நாதமுனிகளுக்குத் தண்டன் ஸமர்ப்பிக்கிறேன்.

இந்த ஆசார்யனே மதுரகவியார் அநுஷ்டானத்தை அவர் அருளிச்செய்த கண்ணிநுண் சிறுத்தாம்பென்னும் ப்ரபந்தத்தின் தாத்பர்யங்களைக்கொண்டு நிரூபித்திருக்கும் 'இன்பத்தில்' என்கிறபாட்டிலும் காணலாம். எங்ஙனே என்னில், முதல் அஜ்ஞான இத்யாதியின் அர்த்தத்தை 'தத்துவத்தை உணர்த்துதலில்,' 'ராகம்மாற்றில்' என்கிற பதங்களால் அருளிச்செய்தார் 'ஸவைபரிஹரணாய' என்னும் தாத்பர்யத்தை 'வினைவிலக்கில்' என்பதினுல் ஸங்க்ரஹித்து அருளினர். 'ஆத்மஸாக்ஷா த்கராத்' என்பதின் தாத்பர்யத்தைத் 'தன்மை ஆக்கில்' என்பதினுலும், 'ஜந்மப்ரயுக்த' இத்யாதியின் தாத்பர்யத்தை 'இசையும் பேற்றில்' என்பதினுலும், ஶ்ரேயோந்ருஷ்டி ப்ரகாஶநாய என்பதின் அர்த்தத்தை 'தத்வத்தை உணர்த்துதலில்' என்பதினுலும், நிஷ்க்ருஷ்டஸ்வரூப இத்யாதியின் தாத்பர்யத்தைத் 'தகவொக்கத்தில்' என்பதினுலும், நியதரஸதயா என்பதின் தாத்பர்யத்தை 'இன்பத்தில்' என்பதினுலும், நித்யஶேஷத்வயோகாத் என்பதின் தாத்பர்யத்தை 'இகழாத பல்லுறவில்' என்பதினுலும் நிரூபித்தருளினர். ஆசார்ய-ஸஹிதஃ என்பதின் தாத்பர்யத்தை ஸ்ரீ மதுரகவியின் அநுஷ்டானத்தை யஃஸ்ஜேவஸ்யஃ என்கிறபடி ப்ரமாணமாகக்கொண்டு தொல்வழியே நல்வழிகள் துணிவார்கட்கே என்று கர்த்தவ்யமாக விதித்தருளினர்.

பத்ரம் புஷ்பம் ஃபலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி ।
ததஹம் பக்த்யுபஹ்ருத மஶ்நாமி ப்ரயதாத்மநஃ ॥

[ஸ்ரீபாக - தச - 10-81-4.]

[ப-ரை.] பத்ரம் - இலையையாவது, புஷ்பம் - பூவையாவது, ஃபலம் - பழத்தையாவது, தோயம் - ஜலத்தையாவது, யஃ - எவன், மே - எனக்கு, பக்த்யா - பக்தியினுல், ப்ரயச்சதி - கொடுக்கிருனே, ப்ரயதாத்மநஃ - பரிசுத்தமான மனதையுடையவனுடைய, பக்த்யுபஹ்ருதம் - பக்தியினுல் ஸமர்ப்பிக்கப்பட்ட, தத் - அந்த வஸ்துவை, அஹம் - நான், அஶ்நாமி - சாப்பிடுகிறேன். மற்ற எல்லாத்தேவதைகளை ஆராதிப்பவர்களைவிடத் தன்னை ஆராதிப்பவர்களுக்கு வஸ்துவில் வ்யத்யாஸங்களை எதிர்பாராமல் அவனுடைய பக்தியினுலே மாத்திரம் தான் விஶேஷப்ரீதியை அடைவதாக, 'அண்வப்யுபஹ்ருதம் பக்தைஃ ப்ரேம்ணா பூர்யேவ மே பவேத்' (பக்தி உடையவர்களினுல் ஸ்வல்பம் ஸமர்ப்பிக்கப்பட்டபோதிலும் அது அவர்களுடைய பக்தியினுல் எனக்

குப் பெரிதாகவே தோன்றும்), என்று கீழ்ஶ்லோகத்தில் அருளிச்செய்து, அத்தையே இந்த ஶ்லோகத்தில் விஸ்தாரமாக அருளிச்செய்கிறார். அதாவது பகவானை ஆராதிப்பதற்கு வஸ்துக்களை ஸம்பாதிப்பதும், அப்படி ஆராதனத்தை அவன் அங்கீகரிப்பதிலும் மற்றவர்களைவிட விசேஷமுண்டு என்றபடி.

1. ஈடு மிடுப்பு மிலீசன் என்றும்,

2. 'கொள்கை கொளாமை யிலாதான் எள்களிராக மிலாதான் விள்கை விள்ளாமை விரும்பி உள்கலந்தார்க் கோரமுதே' என்றும், நம்மாழ்வார் அவனுடைய ஆராதனம் ஸுகமாய்ச் செய்யமுடியும் என்று நிருபித்தருளினாரிறே.

'வஸ்த்ரம் வாஸம் ஹவும் தோயம்' என்பதினால் அந்தக்காலத்திற்குத் தகுந்தபடி ஸுலபமாய்க் கிடைக்கக்கூடிய ஏதாவது ஒன்றை ஸமர்ப்பிக்க அமையும் என்கிறார். இங்குத் தனித்தனிப் பதமாக அருளிச்செய்திருக்கிறபடியினாலும், சகாரம் முதலியது இல்லாமையினாலும் எல்லாவற்றையும் சேர்க்கவேண்டியது அவச்யமில்லை. இவைகளில் ஒரொன்றே அமையும் என்பது ஏற்படுகிறது. 3. 'அந்யத் பூர்ணாதபாம் கும்பாத் அந்யத் பாதாவநேஜநாத். அந்யத் குசலஸம்ப்ரச்நாத் நசேச்சதி ஜநார்தந:' (பகவான் ஜலம் நிறைந்த குடத்தைவிட வேறொன்றையும், அதாவது பூர்ணகும்பத்துடன் எதிர்கொண்டழைப்பதைத்தவிர வேறொன்றையும், திருவடிகளைத்துலக்குவதைத்தவிர வேறொன்றையும். குசலப்ரச்னம் பண்ணுவதைத் தவிர மற்றொன்றையும் விரும்புகிறதில்லை.) என்கிறபடியே இவைகளில் ஏதாவதொன்றைச் செய்ய அமையும் என்றல்லவோ சொல்லப்பட்டிருக்கிறது.

4. 'எது எது என்பணி என்னாததுவே ஆட்செய்யு மீடே' என்கிறபடியே நான் செய்யும் கைங்கர்யம் எப்படிப்பட்டது, அது அவனுடைய பெருமைக்குப் பொருந்தும்படி எங்ஙனே என்று விலகாமல் தனக்குச் சக்யமானவற்றில் அந்வயிப்பதே அவனுடைய கைங்கர்யத்தைச் செய்வதற்கு யோக்யதை என்னப்பட்டதிறே. இங்கு இலை முதலியவைகளைமாற்றிச் சொல்லிக்கொள்ளவேண்டும் என்று அபிப்பிராயப்படுகிறார்கள். அதாவது ஏதாவது, ஒரு பழம், அது கிடைக்காவிடில் அதைவிட ஸுலபமாய்க்கிடைக்கக் கூடிய ஏதாவது ஒருபுஷ்பம், அதுவும் எல்லாக்காலத்திலும் கிடைக்காததலால் அதை

1. திருவாய்மொழி 1-8
2. திருவாய்மொழி.
3. பாரதம்—உத்யோகபர்வம்—87-13.
4. திருவாய்மொழி.

விட ஸுலபமாய்க்கிடைக்கக்கூடிய ஏதாவது ஒரு இலை, அதுவும் மரத்தில் ஏறுவது முதலிய ச்ரமஸாத்யமாகையினால் அதிலும் ஸுலபமாய்க் கிடைக்கக் கூடிய தீர்த்தம் இவற்றை ஸமர்ப்பிக்கவும் என்றபடி.

1. 'நன்னீர் தூய்' என்றாரிறே ஆழ்வாரும்.

எல்லோருக்கும் ஸுலபமாய்க் கிடைக்கக்கூடியதாகையினால் தீர்த்தம் கடைசியில் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது என்றறியத்தக்கது. இது பணச் செலவு முதலியவைகளைச்செய்து ஸம்பாதிக்கக்கூடியதல்ல. ஆதலால் எவ்வள வேனும் ஆகிஞ்சனனாயினும் ஸமர்ப்பிக்கமுடியும் என்று திருவுள்ளம்.

இவ்வர்த்தம்,

2. '𑌪𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌪𑍁𑌷𑍍𑌪𑍇𑌷𑍁 𑌫𑌲𑍇𑌷𑍁 𑌤𑍋𑌯𑍇𑌷𑍍𑌵𑌕𑍍𑌰𑍀𑌤𑌲𑌭𑍍𑌯𑍇𑌷𑍁
𑌸𑌦𑍈𑌵 𑌸𑌤𑍍𑌸𑍁 ।
𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑍈𑌕𑌲𑌭𑍍𑌯𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑍇 𑌪𑍁𑌰𑌾𑌣𑍇 𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑍈 𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌂 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇
𑌨 𑌯𑌤𑍍𑌨𑌃 ॥'

'க்ரயம் கொடுத்து வாங்காமல் கிடைக்கக்கூடியவைகளாகிய இலைகள் புஷ்பங்கள் பழங்கள் பரிசுத்த ஜலங்கள் இவைகள் எப்பொழுதும் இருக்க, பக்தி ஒன்றினாலேயே அடையக்கூடியவனான பகவானும் எப்பொழுதும் இருக்க. மோக்ஷத்திற்காக ஏன் யத்தினம் செய்யப்படுகிறதில்லை' என்று சொல்லப் பட்டிருக்கிறது.

பகவானை ஆஶ்ரயித்தவர்கள்; அவனை விட்டுப் பிரிவாலுண்டான நோய் தீருவதற்கான அவன் ஸம்பந்தம் பெற்ற ஏதேனும் ஒன்றுகிடைத்தால் போது மென்பதை 3. 'தைவத்தண்ணந்துழாய் தாராயினும் தழையாயினும் தண் கொம்பதாயினும் கீழ்வேராயினும் நின்ற மண்ணாயினும் கொண்டு வீசுமினே'

என்று அருளிச்செய்திருப்பதுபோலே அவனும் தன் ஆஶ்ரிதர்களினால் ஸமர்ப்பிக்கப்பட்ட ஏதாவது ஒன்றை ஆசைப்பட்டிருக்கிறபடியை இங்கு இப்படி வெளியிட்டருளினாராயிற்று.

'யஃ' என்பதினால் மேலே சொல்லப்போகிற ப்ரீதி என்னும் குணமொழிய வேறொரு அதிகாரம் தேடவேண்டா, அவரவர்கள் நின்ற நிலையே அதிகாரமாகும்; அபராதம் செய்தவன் அபராதம் செய்யாதவன், மூடன் பண்

1. திருவாய்மொழி 2. கருடபுராணம், பூர்வகண்டம், 219-34 3. திருவந்தாதி.

டிதன் முதலிய வ்பத்யாஸங்களைத் தான் பார்ப்பதில்லை என்றருளிச்செய்கி ருன். ஸ்ரீ கீதையிலும் ஷ்ரீ்யொ வெஸ்யா ஷயாஸ-ஒஶூாஃ தெவி யாஷி வராமதிம் [ஊம ஹி வாய-வ்வ வாஶி, தூ் யெ விஸ்ாஃ வாவயொ தயஃ॥”

ஓ! அர்ஜுனனே! தாழ்ந்த ஜன்மத்தில் பிறந்த ஸ்திரீகள் வைஶ்யர்கள் சூத் திரர்கள் இவர்கள் என்னை ஆஶ்ரயித்து இருந்தார்களேயானல் அவர்களும் உயர்ந்த கதியை அடைவார்கள் என்னப்பட்டது. ஸ்ரீபாஞ்சராத்திர சாஸ்திரத் திலும் 'ஷ்ரா ஹூணெஃ க்ஷத்ரியெ வெஃவைஶ்ய ஶூஷ்ரஃ ஸூக்ஷ தவுக்ஷணெஃ । ஊவ-நீய ஸவெஸ்ஷு' என்னப்பட்டது. அதாவது ப்ராம் மண க்ஷத்திரிய வைச்ய சூத்திரர்கள் எல்லோராலும் ஆராதிக்கத்தக்கவன் என்னப்பட்டது.

'ஜெ' என்றது இப்படி எவர்கள் பக்தியுடன் என்னை ஆராதிக்க விரு ம்புகிருர்களோ அப்படிப்பட்ட அவர்களுடைய ஆராதனத்தை அங்கீகரிப்ப தற்காகவே தேசம் காலம் இவைகளில் அருமை இல்லாமல்

'யெயயாஊம ஷுவஷ ஜெ',

'தமருகந்த தெவ்வுருவம்',

'நெஞ்சினுல் நினைப்பான் யாவனவனுகும்',

இத்யாதிகளிற்படியே அவரவர்கள் அபிப்ராயப்படி என்னை அமைத்துக் கொண்டு வந்திருக்கிற எனக்கு என்றபடி.

1. 'நாரணனுர் நமக்காய் நல்கி நாம் தொழ நின்றனரே' இத்யாதிகளை யும் இங்கு அநுஸந்திப்பது.

அன்றிக்கே 'ஜெ' என்பது மேல் சொல்லப்போகிற பக்தி உண்டாவத ற்குக்காரணமாகிய குண விசேஷங்களையும், ஸம்பந்தங்களையும், இதற்கு முன்னுலேயே செய்திருக்கும் உபகாரங்களையும் குறிக்கிறதாகவுமாம்.

அதுவுமன்றிக்கே 'ஜெ' என்பது ஸௌலப்யத்தையும் மேல் 'சுஹம்' என்பது பரத்வத்தையும் குறிக்கிறதாகவுமாம்.

'ஷக்ஷ்ா' என்பதற்கு த்ருஷ்டாத்ருஷ்டங்களில் உண்டாகிய தோஷங் களைப் பரிஹரிப்பதற்காக என்ருவது, மற்ருெரு ப்ரயோஜனத்திற்கு இது உபாயம் என்ருவது நினைக்காமல், இதை அவனுக்கு ஸமர்ப்பிப்பதே விசே

1. தேசிகப்ரபந்தம்.

ஷமான ப்ரயோஜனமென்று எண்ணும் ப்ரீதி விசேஷத்தினால் என்று தாத்பர்யம் அதாவது கொடுத்ததற்குக் கைக்கூலிகொள்ள மடிகோலாமல் கொண்டதற்குக்கைக்கூலி கொடுக்கும்படியான ப்ரீதி விசேஷத்தைச் சொல்லுகிறது.

1. 'இன்று வந்து இத்தனையும் அமுது செய்திடப்பெறில் நான் ஒன்று நூறாயிரமாகக்கொடுத்துப் பின்னும் ஆளும் செய்வேன்' என்று ஆண்டாள் அருளிச்செய்தாளிறே. அதாவது உத்க்ருஷ்டங்களான வஸ்துக்களைக்கண்டால் அதை அவன் திருவடிகளில் ஸமர்ப்பித்தல்லது தரிக்கமாட்டாமை கையாலே அவ்விடத்தில் ஸமர்ப்பிப்பதொன்றையே ப்ரயோஜனமாக எண்ணுகிற ப்ரீதி விசேஷம் இங்கு அருளிச்செய்யப்படுகிறது என்றபடி.

ப்ரயுக்தி - 'ப்ர' என்னும் உபஸர்க்கம் கீழ் ச்லோகத்தில் 'ப்ரேம்ணா ஸம்ப்ரியேவ ஸேவேத' என்று அருளிச்செய்யப்பட்ட பக்தியினால் உண்டான விசேஷத்தைக் குறிக்கிறது. அதாவது, இராஜகுமாரர்கள் இருவர் விளையாடச்சென்ற வளவில் வஸந்த காலத்தில் சம்பகபுஷ்பத்தைத் தேடிச்செல்ல, அது காலதாமதமானபடியினாலே விற்பனைக்காகக் கொண்டுவரப்பட்ட புஷ்பங்களெல்லாம் செலவழிந்து காம்பில்லாமல் ஒரு புஷ்பம் மாத்திரம் பக்கத்தில் சிந்திக்கிடந்ததைக்கண்டு, அதில், தானே ஸமர்ப்பிக்கவேண்டும் என்று இருவருககும் ஸ்பர்த்தை உண்டாக, விசேஷ த்ரவ்யத்தைக்கொடுத்து ஒருவன் வாங்கி ஸமர்ப்பித்துவிட்டு வீட்டுக்குவந்ததும், அன்றிரவு அந்த ராஜகுமாரனுக்குப் பகவான் ஸ்வப்நத்தில் அவன் ஸமர்ப்பித்த புஷ்பம் தனக்குத் தலையில் தாங்கமுடியாமல் மிகுந்த கனமாயிருக்கிறது, ஆகையினால் அவனுக்கு வேண்டியவரத்தைக் கேட்டுக்கொள்ளும்படி நியமித்தருளினான் என்கிற வ்ருத்தாந்தத்தை இங்கு அநுஸந்திப்பது.

ப்ரயதாத்மந: - இங்கு மனதிற்குச் சுத்தியாவது ப்ரயோஜநாந்தரங்களை விரும்பாமையும், அஹங்காரமமகாரங்கள் இல்லாமையும். முதலில் பெருமாளுக்குத் திருவபிஷேகம் செய்வதற்கென்று நாள் குறித்தபோது வஸிஷ்ட மஹர்ஷி ப்ரும்ம புத்திரனாகிய நாமன்றோ நாள் வைக்கிறோம், அது தப்பும்படி எங்ஙனே என்றும், நாம் பெருமாளுக்கு அபிஷேகம் செய்யும்படியான பாக்யத்தை அடையப்போகிறோம் என்றும் அஹங்காரம் கொண்டிருந்தபடியினால் அந்தத் திருவபிஷேகத்தைப் பகவான் நடைபெறவொட்டாமல் தடுத்து, கண்டவர்களெல்லாம் வஸிஷ்டமஹர்ஷியைக் குறைவாக நினைக்கும்படி செய்தான். (இன்னும்வரும்.)

ஶ்ரீ. நரஸிம்மாசார்யர்.

---

1. நாய்ச்சியார் திருமொழி.

ஸ்ரீ:.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை.

பதின்மூன்றுவது வார்ஷிக மஹாஸங்கம்.

தினசரிக்ரமங்கள்.

ருதிரோத்காரி௵ மார்கழிமீ 9 தேதி

(24 - 12 - 23) திங்கள் கிழமை.

11 - 30 - முதல் 2 - 30 - வரை.

மஹாஸங்கம் கூடுதல்.

1. ஸ்வாகத நிவேதனம் (Welcome address)
ஸ்ரீமான் உ. வே. வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் பி-ஏ. பி-எல்.

2. அக்ராஸநாதிபதியை ப்ரார்த்தித்தல்.

3. அக்ராஸநாதிபதியின் உபந்யாஸம் :—

4. முதல் தீர்மானம்:—'சென்னை ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் உத்பத்தி முதல் அதன் ப்ரதான ப்ரவர்த்தகராயும், நெடுங் காலம் அத்யக்ஷராயும், பிறகு போஷகர்களில் ஒருவராயும், அநேக வர்ஷங்கள் வேதாந்த தீபிகையின் பத்ராதிபராயும், இருந்து ஷை ஸபைக்கு பரமோபகாரகராய் அதன் முன்னேற்றத்துக் காக வெகுப்ரீதியுடனும் ஊக்கத்துடனும் உழைத்துவந்த திவான் பஹதூர் ஸ்ரீமான் உ. வே. தி. த. ரங்காசார்யர் ஸ்வாமி பரமபத மடைந்ததைப் பற்றியும், அதனால் இந்த ஸபைக்கும், ஸ்ரீவைஷ் ணவ ஸமூஹத்துக்கும் நேரிட்டிருக்கும் மீட்க முடியாத நஷ் டத்தைப்பற்றியும் இந்த ஸபையின் மற்றொரு போஷகராயிரு ந்து இதன் மஹாஸங்கத்துக்கு உபகரித்த ஸ்ரீவைஷ்ணவ ப்ரமுக ரான ஸ்ரீமான் ஸர். கே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமியும் இதே வர்ஷத்தில் பரமபத மடைந்ததைப் பற்றியும் இம்மஹாஸங்கத் தவர்கள் தங்கள் அந்தரங்கமான துக்கத்தை இதனால் குறிப்பி ட்டுத் தங்கள் அநுசோசனத்தை அந்த ஸ்வாமிகளின் குமாரர் களுக்கும், குடும்பத்தாருக்கும் அறிவித்துக்கொள்ளுகிறார்கள்.

ப்ரேரகர்—ஸ்ரீ. உ. வே. எஸ். வாஸுதேவாசார்யர் பி-ஏ. எல்-டி.

ஆமோதகர்—ஸ்ரீ. உ. வே. எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார் பி-ஏ. பி-எல்.

5. உபந்யாஸம். உபய வேதாந்தம்— ஸ்ரீ. உ. வே. காரப்பங்காடு சிங்கப் பெருமாள் ஸ்வாமி.

6. ,, அதிகரணஸாராவளியின் கவிதை—ஸ்ரீ. உ. வே. அம்பில் கோபாலாசார்யர் எம். ஏ. பி-எல்.

3 - மணி முதல் 5 - மணி வரை.

1. உபந்யாஸம்—ஸ்ரீகீதா ஸங்க்ரஹம் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீசைலதாதாசார்யர்.

2. ,, லக்ஷ்மீதத்வம் ஸ்ரீ. உ. வே. காண்டூர் ராமாநுஜாசார்யர்.

3. ,, ஶ்ருதிப்ராமாண்யம் ஸ்ரீஉ.வே. ஸ்ரீசைலசக்ரவர்த்திஸ்வாமி பி.ஏ.

மார்கழிமீ 10உ (25 - 12 - 23) செவ்வாய்க் கிழமை.

11 - 30 மணிமுதல் 2 - 30 மணி வரையில்.

1. இரண்டாவது தீர்மானம்:— ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள், மதாபிமானத்தையும், ஸமூஹ உணர்வையும், அந்யோந்ய ஸஹோதர பாவத்தையும் அபிவ்ருத்திசெய்து ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தையும் ஸ்ரீவைஷ்ணவமத தத்வங்களையும் ஸம்ரக்ஷித்துப் பரவச்செய்யவேண்டிய ப்ரயத்னங்களைப் பல முகங்களாகச் செய்யவேண்டுமென்றும், இந்தச் சென்னை ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையையும் அதன் பத்ரிகையாகிய வேதாந்த தீபிகையையும் பலப்படுத்தி இது நமது நாட்டில் விசிஷ்டாத்வைத மதத்தையும் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தையும் ப்ரசாரம் செய்விக்க ப்ரதான ஸ்தாபநமாயிருக்கும்படி அதை ஸ்ரீவைஷ்ணவர்களனைவரும் ஆதரித்து வ்ருத்திசெய்ய வேண்டுமென்றும் சென்ற ஹூத்திய மஹாஸங்கத்தில் தீர்மானித்ததை இந்த மஹாஸங்கம் மறுபடியும் வற்புறுத்துகின்றது.

ப்ரேரகர்:—மஸூலிப்பட்டணம் ராவ்ஸாஹிப் ஸ்ரீ. உப. வே. ஸ்ரீநிவாஸராகவாசார்யர்.

ஆமோதகர்கள்:— 1. ஸ்ரீ. உ. வே. T. ராமாநுஜ அய்யங்கார்.
2. ஸ்ரீமான் வெங்கடாசலம் பிள்ளையவர்கள், பி.ஏ.,பி.எல்.

2. உபந்யாஸம்—கர்மயோகம், ஸ்ரீ.உ.வே. உழப்பாக்கம் ஸ்ரீநிவாஸாசார்யர்.

3. ,, திருவேங்கடமுடையான் விஷயத்தில் ஆழ்வாரின் ஈடுபாடு - ஸ்ரீ உ. வே. நவநீதம் க்ருஷ்ணமாசார்யர்.

4. ,, ராமாநுஜமதாபிவ்ருத்தி—ஸ்ரீ. உ. வே. தி. ஈ. சடகோபாசார்யர்

3 மணிமுதல் - 5மணி வரையில்

1. உபந்யாஸம்— ஸ்ரீ வைஷ்ணவமதமும் ஸ்ரீ பாஷ்யகாரரின் உபகாரமும், ஸ்ரீ உ. வே. மஹாவித்வான் பண்டிதரத்னம் - லக்ஷ்மீபுரம் ஸ்ரீநிவாஸாசார்யர் (மைஸூர்)

2. ,, பாஞ்சராத்ரப்ராமாண்யம் ஸ்ரீஉ.வே.திருமழிசை ராமாநுஜாசார்யர்.

3. ,, ஸர்வேச்வர ஸௌலப்யம் ஸ்ரீ உப. வே. S. வேதாந்தாசார்யர், M. A. L. T.

மார்கழி மீ 11௳ (26-12. 13) புதன்கிழமை.

11 மணிமுதல் 2-30 மணி வரையில்.

1. ஸபையின் அங்கத்தினர்களின் வார்ஷிகக்கூட்டம் (Business meeting of the Members)

2. மூன்றாவது தீர்மானம்:—

(a) ஹிந்துஸமூஹத்தினருடைய புராதனவைதிக மதக்கொள்கைகளுக்கும் ஆசாரங்களுக்கும், மதவிஷயமான மனோபாவங்களுக்கும் பெருந் தீங்கை விளைவிக்கத்தக்கதும் ஆசார்யஸ்தானங்களை வஹிக்கும் மடாதிபதிகளை அவர்களுக்கு ஸம்பந்தமில்லாத கேவல லௌகிகர்களடங்கிய போர்டின் ஆதிக்யத்துக்குட்படுத்தி அவர்களுக்கு கௌரவஹாநியை விளைவித்து அவர்களுடைய ஸொத்துபாத்யதைகளைப் பறிமுதல்செய்து, அவர்கள் நிலைமையைக் கேவலமாக்கவும், அதனால் அவர்களுடைய சிஷ்யகோடிகளுக்கு மிகுந்தமன வருத்தத்தையும், ஆத்திரத்தையும், உண்டுபண்ணக் கூடியதாய்ச் சென்னைச்சட்டஸபையில் நிர்மாணம் பண்ணப்பட்ட ஹிந்து மதஸ்தாபந மசோதாவை ஷை சபைக்குப் புனராலோசனை செய்யும்படி பெருமை தங்கிய சென்னை கவர்னரவர்கள் திருப்பிவிட்டதற்கு இம் மஹாஸங்கம் வணக்கத்துடன் தங்கள் நன்றியைத்தெரிவித்துக் கொள்கிறார்கள்.

(b) புதுச்சட்டஸபையார் இந்த நீதியற்றதும் அவச்யமற்றதுமான மசோதாவை அடியோடு நிராகரித்து விடவேண்டு மென்றும், தேவாலயங்களைப்பற்றி அவச்யமாய் சீர்திருத்தங்கள் வேண்டியிருந்தால் அதற்கு மஹாஜனங்களுடைய அபிப்பராயங்களையும் அந்தந்த ஸ்தாபநங்களைப் பற்றிய விசேஷ வ்ருத்தாந்தங்களையும் நீர விசாரித்து உசிதமான வேறொரு சட்டத்தை நிர்மாணம் செய்யவோ அல்லது பழைய சட்டத்திலேயே அவச்யமான மாறுதல்

களைச் செய்து கொள்ளவேண்டுமென்றும் இம்மஹாஸங்கம் தீர்மானிக்கிறது.

ப்ரேரகர்:—ஸ்ரீமான். வேமூர். ரங்கநாதன் செட்டிகாரு.

ஆமோதகர்:—ஸ்ரீ. உ. வே. நடாதூர். ஸ்ரீநிவாஸாசார்யர்.

3. உபந்யாஸம்—விஷ்ணுபரத்வம் - ஸ்ரீ. உ. வே. மெய்யுவையங்கார் ஸ்ரீரங்கம்.

4. ,, ராமாயண தத்வார்த்தம் - ஸ்ரீ. உப. வே - மஹாமஹோபாத்யாய கபிஸ்தலம் தேசிகாசார்யர்.

5. உபந்யாஸம்:—ஆத்மகுணபூர்த்தி ஸ்ரீ. உப. வே. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர்.

மாலை 3 - மணி முதல் 5 - மணி வரை.

1. ஸம்பாவனை:—

2. உபஸம்ஹார உபந்யாஸம்:—ஸ்ரீ. உ. வே. பண்டித பூஷணம், பகவத்விஷயம், சே. நரஸிம்மாசார்யர்.

3. அக்ராஸநரின் முடிவுரை:—

ஸ்ரீ:

நீதிச்லோகங்கள்.

𑌆𑌸𑌾 𑌮𑌹𑍋 𑌚𑌰𑌣𑌰𑍇𑌣𑍁𑌜𑍁𑌷𑌾 𑌮𑌹𑌂 𑌸𑍍𑌯𑌾𑌂
𑌵𑍃𑌨𑍍𑌦𑌾𑌵𑌨𑍇 𑌕𑌿𑌮𑌪𑌿 𑌗𑍁𑌲𑍍𑌮𑌲𑌤𑍌𑌷𑌧𑍀𑌨𑌾𑌮𑍍 ।
𑌯𑌾 𑌦𑍁𑌸𑍍𑌤𑍍𑌯𑌜𑌂 𑌸𑍍𑌵𑌜𑌨 𑌮𑌾𑌰𑍍𑌯𑌪𑌥𑌂 𑌚 𑌹𑌿𑌤𑍍𑌵𑌾
𑌭𑍇𑌜𑍁𑌰𑍍𑌮𑍁𑌕𑍁𑌨𑍍𑌦𑌪𑌦𑌵𑍀𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌭𑌿 𑌰𑍍𑌵𑌿𑌮𑍃𑌗𑍍𑌯𑌾𑌮𑍍 ।

எவர்கள் விடமுடியாத பந்து ஜனங்களையும் ஸன்மார்க்கத்தையும் விட்டு வேதங்களாலும் அறியமுடியாத பகவானுடைய திருவடிகளை அடைந்தார்களோ அப்படிப்பட்ட கோபஸ்திரீகளுடைய பாததூளி தங்கப்பெற்ற ப்ருந்தாவனத்தில் செடி கொடியாகவாவது பிறப்பேனுவென்று உத்தவர் மிகவும் ஆசைப்பட்டு வருந்தினர்.

பகவானை அடையவேண்டுமென்று எவ்வளவு ஆசை இருந்தாலும் ஜனங்களுக்கு உலகத்தில் ஸம்ஸாரத்திலிருந்து நிவ்ருத்தி வருவது மிகவும் அரிது. புருஷன், பிள்ளை, ஸகோதரர், பந்துக்கள் சொத்து முதலிய ஐச்வர்யங்கள் எல்லாவற்றையும் த்ருணமாக நினைத்து கோபஸ்திரீகள் ஸ்ரீ க்ருஷ்

ணனிடத்தில் அப்படி ஈடுபட்டு நடு நிசியில் அவரை அடைந்தார்கள். இவர்கள் பரமபுருஷனிடம் ஆசைகொண்டது லோக ரீதியில் தோஷமாகத் தோன்றினாலும் அந்த ஆசை பகவான் விஷயமானதால் பகவானை அடையும் வழியில் தோஷமும் குணமாகவே ஆகிவிடுகிறது, என்று உத்தவர் உபதேசித்தார். பக்த பரவசர்களான கோபஸ்திரீகளின் பாததூளி ஸ்பர்சம் பட்ட ப்ருந்தாவனத்திலிருக்கும் செடி, கொடி, புல், பூண்டுகளும் எவ்வளவு பாக்யத்தைப் பெற்றன! இதனால் பாகவதர்களின் பெருமை நன்றாக எடுத்துக் காட்டப்படுகிறது. பாகவத ஸேவை ஜன்மத்தை ஸார்த்தகமாகச் செய்கிறது என்று தாத்பர்யம். பகவான் ஸ்ரீ க்ருஷ்ணனாக அவதாரம் செய்து ஸகல லோகமும் உஜ்ஜீவிக்கும்படி தன்னுடைய ஸௌலப்யத்தைக் காட்டின இடம் ப்ருந்தாவனமாதலால் அது மஹா புண்ய க்ஷேத்ரமென்று எல்லா வைஷ்ணவர்களாலும் வாஸத்துக்கு ஆசைப்படத் தகுந்ததாக இருக்கிறது. இந்த ச்லோகம் வட இந்தியாவிலிருக்கும் ஒவ்வொரு வைஷ்ணவர்களாலும் ப்ரதிதினம் அநுஸந்தானம் செய்யப்பட்டு வருகிறது. ப்ருந்தாவனத்துக்கு யாத்திரைபோகும்போது ப்ரயாணிகள் இந்த ச்லோகத்தை மிகவும் பக்தியுடன் உச்சை ஸ்வரத்தில் கானம் செய்வது வழக்கம். இப்படி அநேகம் பெயர்கள் சேர்ந்து அநுஸந்தானம் பண்ணுவதினால் உண்டாகும் மதுரமான த்வனி காதில் கேழ்க்கும் எவ்வித நாஸ்திகர்களுக்கும் கூட பக்தியை உண்டாக்காமல் இருப்பதில்லை.

இப்படி பகவத் ஸான்னித்யமுள்ள விடங்களில் வஸிப்பது ச்ரேஷ்டமென்று குலசேகராழ்வாரும் திருவேங்கடமலையின் மஹிமையில் ஈடுபட்டு அவ்விடம் நித்யவாஸம் செய்யும் ஸ்ரீநிவாஸனுடைய பக்தியால் "கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே" "செண்பகமாய் நிற்கும் திருவுடையேனாவேனே", "படியாய்க்கிடந்து உன் பவளவாய் காண்பேனே" "எம்பெருமான் திருமலையில் ஏதேனும் ஆவேனே" "தம்பமாய் நிற்கும் தவமுடையேன் ஆவேனே" என்று மிகவும் ஆசைகொண்டு வருந்தினார்.

இவ்வர்த்தத்தை மனதில் வைத்துக்கொண்டு ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் தயாசதகத்தில்,

ப்ராஜாபத்ய ப்ரப்ருதி விபவம் ப்ரேக்ஷ்ய பர்யாய து:கம்
ஜன்மாகாங்க்ஷந் வ்ருஷகிரிவநே ஜங்கமஸ்தாவராத்மா |
ஆஶாஸாநா: கதிசந விபோ த்வத்பரிஷ்வங்க யோக்யம்
ஶ்ருங்காரம் க்ஷணமபி தயே ஹார்த்த த்வந்நியோஜ்யா: ||

ஹே! தயையே! உன்னுடைய ஸ்பரிசத்தால் மேன்மை பொருந்திய அதிக ப்ரீதியுடன் கூடின கடாக்ஷ வீக்ஷணங்களால் ஒரு க்ஷணகாலமாவது அங்கீகாரத்தை விரும்பி எவ்வளவோ பெயர்கள் ப்ரும்மபட்டம் முதலான எல்லா ஐச்வர்யங்களும் காலக்ரமத்தில் துக்கத்தைக் கொடுக்கிறபடியால் திருப்பதி மலையில் ஸ்தாவரமாகவாவது, ஜங்கமமாகவாவது பிறக்க ஆசைப்பட்டார்கள் என்று, திருவேங்கடமலையின் மஹிமையை எடுத்துக்காட்டியிருக்கிறார்.

ஆர். ஸ்ரீநிவாஸராகவன்.

ஸ்ரீ:

இம்மையும் மறுமையும்.

நம் பூர்வர்கள் தபோபலத்தினால் திவ்ய திருஷ்டி பெற்றவர்களாகையால் இம்மை மறுமை இரண்டுக்கும் ஏற்ப எல்லாவிதிகளையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். என்றாலும் ஒவ்வொரு விதிக்கும் காரணமாக அவரவர்கள் கொண்ட கொள்கையை வெளியிட்டிருக்கவில்லை. அதைச் சொந்தமாய் ஊஹித்து வெளியிடும் வழியில் நம்மவரைப் பெரியோர் பழக்குவதுமில்லை. விதியை மீறினால் நரகம் வருமென்கிற ஒரே கொள்கையில் பயபக்தி விச்வாஸங்களோடு நாம் அவ்வவ் விதிகளின் வழியே நடந்துவரக் கடமைப்பட்டிருக்கிறோம், நடந்தும் வருகிறோம். இக்காலத்திய மேதாவிகளோ அப்படிக் காரணம் கொள்ளாத கொள்கையைக் குருட்டு நம்பிக்கை யென்று இகழ்ந்து உபேக்ஷிக்கத் தொடங்குகிறபடியால் சிற்சில விஷயங்களைப்பற்றி நமக்குத் தோன்றிய காரணங்களையும் அவ்விரண்டு விஷயங்களின் ஒற்றுமையையும், அதாவது நம்முன்னோர்கள் சாஸ்திரமூலமாக விதித்த விஷயங்கள், தேஹநன்மை, ஸமூக முன்னேற்றம், முதலிய இம்மைச் சுகங்களுக்கு ஒத்தேயேற்படுத்தப்பட்டிருக்கிறதென்பதையும் எழுதுவோம்.

வேதமும் ஸ்ம்ருதிகளும் பகவானது ஆஜ்ஞையாகையால் அதில் விதித்தபடி நித்ய நைமித்திக கர்மங்களை அநுஷ்டிப்பவர்களுக்கு அவ்வவைகளுக்கென்று கூறப்பட்ட மறுமைப் பயன் கைக்கூடுவது திடமான விஷயமாகையால் அவற்றின் ஐஹிகமான உபயோகங்களை நாம் இங்கு எழுதப் புகுவதால், இந்த வியாஸத்திற்கு இம்மையும் மறுமையுமென்று முகப்பெழுதுவது பொருந்தாததாகாது. ஸ்வபாவத்திற்கேற்ற சாஸ்திரமும் ஆர்யதர்மமுமென்று இதற்கு முகப்பெழுதினாலும் எழுதலாம். அதைவிட இம்மையும் மறுமையும் என்கிற முகப்பே பொருத்தமுடையதென்று நினைத்து இதையே யெழுதியிருக்கிறோம்.

இப்பாத கண்டத்தில் ஒவ்வொருவருடைய எல்லா நடவடிக்கைகளும் மதத்தோடு ஸம்பந்தப்பட்டவை. அவ்வவமதத்தினர்கள் ப்ரமாணமாக அங்கீகரித்த மூல க்ரந்தங்களை அநுஸரித்து அவைகள் அநுஷ்டிக்கப்படுகின்றன. அதற்கென்று சில ஒழுங்குகளும் வரிசைகளும் மூலக்ரந்தங்களில் நியமிக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கட்டுப்பாடுகள் ஒரு சிறிதளவும் மாருது அநுஷ்டிக்கப்படவேண்டுமென்று கட்டளை யேற்பட்டு அப்படியே ஆசாரத்திலிருக்கின்றன. ஆர்யர்கள் அவ்விதம் அநுஷ்டித்து வருவதில் அதிக சிரத்தையுடையவர்கள். மற்றையோரைவிடப் பலவிதத்திலும் கட்டுக்குள்ளடங்கி நடப்பவர்கள். அதிக ஊற்றமுடையவர்கள்.

இந்தியா தவிர மற்ற தேசங்களில் கூட்ட நடவடிக்கைகளுக்கும் மதத்திற்கும் எவ்வளவும் ஸம்பந்தமில்லை. சாதாரணமாய் ராஜாவின் கட்டளையை மீறுபவர்களே மரணதண்டனைக்குள்ளாகிருர்களென்பது தெளிவாயிருக்கிறதே. ஸகல ஜகத்காரணபூதனுகிய பகவானது கட்டளையை மீறுகிறவர்கள் எவ்வித தண்டனையை யடையத் தக்கவர்களோ யோசித்துப் பார்க்கலாம். ஆகவே நமது மூல ப்ரமாணங்களில் கூறப்பட்ட முறையை எவ்வளவு பயபக்தி ச்ரத்தா விசுவாஸங்களோடு அநுசரிக்கவேண்டுமோ அவ்விஷயம் நாம் இங்கு புதிதாய் எடுத்துக் கூறவேண்டிய அவசியமில்லாதது.

நமது தர்மங்கள் வெகுகாலமாக தேசாந்தரஸ்தர்களுக்கு வழிகாட்டியாயிருந்தது. இன்னும் அப்படியே இருக்கிறது. ஆனுல் காலத்தினர் பெருமையால் அந்த நமது தர்மங்களின் மர்மங்கள் மறைந்து போகலாயின. புது மேதாவிகளுக்கு அதை அறியச் சக்தியில்லாமல் போய்விட்டது. ஆகவே அவற்றின் அநுஷ்டானமும் குறைவுபடலாயிற்று. அந்த மர்மங்களைப் பற்றியாவது அவற்றின் காரணங்களைப்பற்றியாவது நாம் இப்போது நிரூபிக்கவரவில்லை. நாம் தர்மங்களுக்கும் ஐஹிகசுகத்திற்கும் எவ்வளவு ஸம்பந்தம் இருக்கிறது என்பதைப்பற்றி நமக்குத் தெரிந்த வரையில் இங்கு கொஞ்சம் விவரிக்கிருேம். அதிலுள்ள குற்றம் குறைகளை புத்திமான்கள் எடுத்துக் காட்டவேண்டும். இவ்வழியாய் இது பூர்த்திபெற்று எல்லோருக்கும் தெரியவரும்.

நம் நாட்டு வாலிபர்களுக்கு ஆங்கிலப் பயிற்சியாலும் மேல்நாட்டு வ்யுத்பந்நர்களின் சரித்திர ஆராய்ச்சியாலும் நம்மவர்களைவிட மேனுட்டு சாஸ்திர வ்யுத்பந்நர்களே விஷயங்களை நன்ருக விவேசநம் செய்து குணமுள்ளதைப் புகழ்பவர்களென்றும் அவர்கள் சொல்வதே ப்ரமாணிகமென்றும் திடமான நம்பகம் உண்டாயிருக்கிறது. ஆகவே அந்த மேல்நாட்டு பண்டிதர்கள் நம் அநுஷ்டான விஷயமாய் தீரவிமர்சம் செய்து ஸித்தாந்தம் செய்திருக்கும் சில விஷயங்களை நம் சொந்தக்குறிப்புடன் சேர்த்து இங்கே விவரிப்போம்.

பின் மாலை (விடியற்காலத்தில்) நித்திரையைவிட்டு எழுந்திருப்பது முதல் இரவு நித்திரை செய்யும்வரையில் நடக்கவேண்டிய நீதி கால ஒழுங்காக நம்மதக் கிரந்தங்களில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. காலையெழுந்து படுக்கையைவிட்டெழுந்து தேஹ சோதநம் செய்துகொண்டு ஸ்நாநம்பண்ணி ஸந்தியாவந்தனம் செய்து ஹோமம் தேவபூஜைகளை முடித்து அதிதிகளை ஸத்கரித்து பலிபோட்டு அதன்பிறகு போஜனம் செய்யவேண்டுமென்பது பிராஹ்மணர்கள் நடந்துகொள்ளவேண்டிய முறையென்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. வீட்டை விளக்கி மெழுகிக் கோலமிட்டு அலங்கரிக்க வேண்டியதும் நம் தர்மமே. அப்படியே, ஆஹாரம் நடை முதலிய வெகு அம்சங்கள் பரிசுத்திக்கு ஹேதுவாகச் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறன. அநாதிகாலந் தொடங்கி வம்சபரம்பரையாய் வெகு ஸாவதானமாய் நடவடிக்கையில் கொண்டுவரப்பட்ட அநேகம் நற்குணங்களும் ஜாதிபேத கொள்கையும் இவ்விந்தியாவில் வேரூன்றி யிருக்கிறது.

இவ்வித நடவடிக்கை யெல்லாம் மதத்தோடு ஸம்பந்தப்பட்டதாக ஏற்படுத்தப்பட்டுப் போய்விட்டபடியால் இவ்விந்தியாவில் மாத்திரமே அவை முறை பிறழாது நடந்தேறிவருகிறது. மேனுடுகளில் இது எவ்வளவு வரையில் அநுஷ்டானத்திலிருக்கிறதோ அவ்வளவும் ஸௌகர்யத்தை அநுசரித்து நடவடிக்கையில் வருகின்றனவே யல்லது மதக்கோட்பாட்டை யநுசரித்து நடத்தப்படவில்லை. நம்பூர்வாசாரமும் மததர்மங்களும் சில சில மேலெழுந்த வாரியாய் பார்ப்பதில் பிரயோஜனமில்லாததென்று சிலர் நினைக்கும்படியாய்விட்டது. மேனாட்டு நாகரிகம் நம் தேசத்தில் அங்கங்கு துளிர்ந்தெழுந்து வளர்ந்துவிடவே நமக்குக்கூட அவ்வித எண்ணம் உண்டாகலாயிற்று.

முக்கியமான ஸம்ஸ்காரங்களைப்பற்றி நாமிங்கு சொல்ல வரவில்லை. ஆனால் சிலவை மாத்திரம் ஜன ஸமூகத்தார் ஆதரித்துவரும் வழிக்குக் கெடுதியை விளைவிக்கின்றனவென்பதில் ஸம்சயமில்லை. ஆகா! அது எவ்வளவு விபஸனகரமான விஷயம். நம்மவர்களில் எவர்கள் மகா மேதாவிகளாகத் தங்களை நினைத்துக்கொண்டு நம் பூர்வாசாரங்களை தூஷிப்பதும் தள்ளுவதும் உதாஸிப்பதும் பகைப்பதும் செய்கிறார்களோ, அவர்கள் அனைவரும் நம் ஆசாரங்களையும் தர்மங்களைம் பற்ற மேல்நாட்டுப் பண்டிதர்கள் எவ்வித அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்களென்பதை நன்றாகத் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமென்று நாம் ஸங்கோசமின்றிச் சொல்லலாம்.

அருணோதயத்திற்கு முன்னமே தூக்கத்திலிருந்து விழித்தெழுந்திருக்க வேண்டுமென்று நம் சாஸ்திரங்களில் உபதேசிக்கப்பட்டிருக்கிறதே. இப்போது அவ்விதியை அநுஸரித்து நடப்பவர் யார். அது வேண்டாம். மத்தியானம் வரையில் கூச்சமின்றி படுக்கையில் படுத்தபடியே யுறங்குகிறவர்கள் நம் ஸமூகத்தில் எத்தனையோ பெயர்கள் இருக்கிறார்களன்றோ, அவர்கள், மேனாட்டு சாஸ்திரபண்டிதர் (டாக்டர்) டைடே அவர்கள் எழுதியிருக்கும் குறிப்பை தப்படிக்கவேண்டுமென்று வற்புறுத்துகிறோம்.

இன்னும்வரும். ஸ்ரீசைல தாதாசார்யர்.

ஸ்ரீ:

சென்னை ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின்,

பதின்மூன்ருவது வருஷத்திய அறிக்கை.

1922—1923.

ஸ்ரீ:

ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தஸபை.

1922. 1923. ஷஸத்திய எக்ஸிக்யூடிவ் கமிட்டி மெம்பர்களின் பெயர்.

1. ஸ்ரீ. உப. ராவ்பகதூர் - S. ராமஸ்வாமி அய்யங்கார் - ஸபாத்யக்ஷர்.

2. „ வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், பார்க் டவுன்.
3. „ எஸ். ராஜகோபாலாசாரியார், மன்னார்குடி.
4. „ டி. கோதண்டராமய்யங்கார், தஞ்சாவூர்.
5. ஸ்ரீமான் திவான் பகதூர்-நம்பெருமாள் செட்டியார், சென்னை.

(2–5: உபஸபாத்யக்ஷர்)

6. ஸ்ரீ-உப. எஸ். கோபாலசாமி ஐயங்கார், மைலாபூர்.
7. „ ஆர். ஸ்ரீநிவாஸராகவய்யங்கார், புரசைவாக்கம்,

(6–7: கார்யதர்சிகள்.)

8. „ கோமடம் ஸ்ரீநிவாஸ அய்யங்கார், உதவி கார்யதர்சி, கோமளேச்வரன் பேட்டை.
9. „ பண்டிதபூஷணம், சே. நரஸிம்மாசாரியர், புரசைவாக்கம், ஸபை வித்வான்.
10. „ கடாதூர் ஸ்ரீநிவாஸாசாரியர், புரசைவாக்கம்.
11. „ டி. வி. நீலமேகாசாரியர், கீழ்ப்பாக்கம்.
12. „ வி. ராஜகோபாலாசாரியர், சென்னை.
13. „ தி. திருவேங்கடாசாரியர், சென்னை.
14. „ பி. ஆர். க்ருஷ்ணஸாமி அய்யங்கார், எழும்பூர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

சென்னைபட்டணம் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் பதின்மூன்றாவது வருஷத்திய அறிக்கை.

சென்ற 1922-வது௵ டிசம்பர் மாதத்தில் நடந்த 12-வது வார்ஷிக மஹா ஸங்கத்தில் ஸ்ரீ. உப. ஆர். ஸ்ரீநிவாஸராகவ அய்யங்காரையும் ஸ்ரீ. உப. S. கோபாலஸ்வாமி அய்யங்காரையும் கார்யதர்சிகளாகத் தேர்ந்தெடுத்ததின் பேரில், ஸ்ரீ. உப. ஆர். ஸ்ரீநிவாஸராகவய்யங்கார், ஸ்ரீ. உப. பி. ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமியிடம் 1923-வது௵ ஜனவரிமீ 1உ-சார்ஜ்வாங்கிக் கொண்டு வேலைபார்த்து வருகிறார்.

ஸபை:—இந்தஸபை 1909-வது௵ முதல் 1915-வது௵ வரையில் ஸ்ரீ அஹோபிலமடத்தின் மேன்மையைக் கருதிய ஸ்ரீ ஸந்நிதி சிஷ்யர்களால் ஏற்படுத்தப்பட்ட ஸபையாய் 'ஸ்ரீ அஹோபிலமட சிஷ்ய ஸபை' என்னும் பெயரால் வழங்கிவந்தது. 1915-வது௵ திருவள்ளூரில் கூடின மஹாஸங்கத்தில் இந்த ஸபையில் உண்டாகும் உபகாரத்தை ஸ்ரீ வைஷ்ணவர்கள் அனைவரும் அடைய வேண்டும் என்று கருதி, அது முதல் இந்த ஸபையின்பெயர் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை என்று மாற்றப்பட்டது. 1922-வது௵ டிசம்பர்மீத்தில் வுப்பட்டேர் ஸ்ரீமான் ஆழ்வார் செட்டியாரால் கட்டப்பட்டிருக்கும் ராமாநுஜ கூடத்தில் நடந்த பன்னிரண்டாவது மஹாஸங்கத்திலும் தென்கலை வடகலை, மடமுனித்ரய ஸம்ப்ரதாயஸ்தர்களான எல்லா ஸ்ரீ வைஷ்ணவர்களும் மனஸ்கரித்து இந்த ஸபையை நடத்தினது மிகவும் த்ருப்திகரமாக இருந்தது. ஸபையின் மூன்று தினங்களில் ததீயாராதனம் செய்வித்து ஸபையின் உபயோகத்துக்காக ராமாநுஜகூடத்தையும் விட்டு, வித்வான்களுக்கு ஏராளமாய் ஸம்மானம் கொடுத்த வுப்பட்டேர் ஸ்ரீமான் ஆழ்வார் செட்டியாருக்கும், இவ்வளவு அழகாய் நடக்கும்படி செய்து ஸகல கார்யங்களையும் நிர்வஹித்த ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமிக்கும் ஸபையோருடைய வந்தனங்கள் சொல்லவேண்டியது கடமை. இந்த ஸதஸ்ஸில் நடந்த விமர்சையையும், உபந்யாஸங்களைப்பற்றியும், ஸம்மானங்களைப் பற்றியும், தீபிகையின் 13-வது ஸம்புடம் 3-வது ஸஞ்சிகையில் விஸ்தாரமாய் எழுதப்பட்டிருக்கிறது. ஸங்கத்தின் வரவு சிலவு கணக்கு இத்துடன் அநுபந்தம் செய்யப்பட்டிருக்கிறது. (Appendix. A.) எல்லா ஸ்ரீவைஷ்ணவர்களும் ஒன்றுசேர்ந்து, ஆகவேண்டிய பெரிய கார்யங்களைச் சர்ச்சைசெய்து ஸ்ரீராமாநுஜ தர்சனத்தை உத்தரோத்தரம் அபிவ்ருத்திபண்ண யத்தனிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வேதாந்த தீபிகை. இந்த மாதாந்தத் தமிழ் பத்ரிகைக்கு இந்த புரட்டாசி மீ°த்துடன் 13 - வயஸ் பூர்த்தி ஆகிவிட்டது. நம்முடைய மதவிஷயமாயும் வேதாந்த விஷயமாயும் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் வெகுவாயும் காலமோ குறைவாயும், விக்னங்களும் அநேகமாயிருப்பதாலும், ஸரியானபடி ஸங்கதிகளைத் தெரிந்துகொள்ள ஸதாசார்யனைத் தேடிக்ரஹித்துக்கொள்ளவேண்டியதா யிருப்பதாலும், அப்படிக்குச் செய்ய எல்லா ஊரிலும் இப்பேர்க்கொத்த ஆசார்யர்களில்லாததாலும், அப்படிக்கிருந்தும் காலவசத்தால் அவர்களை நாடிக்கேட்க ஆஸக்தியும் அவகாசமும் பலருக்கு இல்லாததாலும்,மேலும் நாம் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயம் பலவும் ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களிலிருப்பதாலும், அதிக ரஹஸ்யமான விஷயம் ஆசார்யனிடமிருந்தே தெரிந்துகொள்ளவேண்டியதாயிருந்தாலும், முக்யமான மற்ற விஷயங்கள் பல தெரிந்துகொள்ளவேண்டி யிருப்பதாலும், அவைகளை எல்லோரும் தெரிந்து கொள்ளும்படி தமிழில் இந்தப் பத்ரிகை பிரசுரம் செய்யப்பட்டுவருகிறது. தீபிகைக்கு எளிதான தமிழ்நடையில் வியாஸங்களை எழுதும்படிக்கும், ப்ரமாணங்களைக் கீழ்குறிப்புக்களாகக் கொடுக்கும்படிக்கும் ஸம்ஸ்க்ருத ச்லோகங்களுக்கும் வசனங்களுக்கும் கூடவே தமிழ் மொழிபெயர்ப்பும் எழுதிவிடவேணும் என்று விஷயப்ரதானம் செய்யும் ஸ்வாமிகளுக்கு விண்ணப்பம் செய்துகொண்டு கூடியவரையில் வர வர நடையை ஸுலப மாக்கிக்கொண்டு தீபிகை நடத்திவரப்பட்டுவருகிறது. தீபிகையில் அவச்யமான உபயுக்தாம்சங்கள் ப்ரகாசிப்பிக்கப்பட்டுவருகின்றன. புராணம், இதிஹாசங்கள், ஸ்ம்ருதிகள் இவைகளிலிருக்கும் ஆசாரம், தர்மம், வ்யவஹாரங்களின் ஸ்வரூபம் ஆவச்யகதையைக் காட்டும் வியாஸங்கள், நீதியையும் தர்மத்தையுங் காட்டக்கூடிய கதைகள், குருபரம்பரையில் சில பராமர்சங்கள், இவைகளைப்பற்றின வ்யாஸங்கள் விசேஷமாய் வெளியிடப்பட்டு வருகின்றன.

தீபிகை, மெம்பர்களின் சந்தாவைக்கொண்டே நடத்தவேண்டியிருப்பதாலும், இதற்கு மூலதனமில்லாததாலும், இதற்கு விஷயப்ரதானம்செய்து வந்த ஸ்வாமிகளுக்கு இதன் ஐவீஜில் ஒன்றும் மிச்சமில்லாததாலும் ஸபையோர்களுடைய க்ருதஜ்ஞதையையே வந்தன பூர்வகமாய்த் தெரிவிக்கிறோம். இனி மெம்பர்களின் தொகை அதிகப்பட்டு வரக்கூடிய த்ரவ்யத்திலிருந்து ச்லாக்யமான வ்யாஸம் எழுதி அனுப்புகிறவர்களுக்கு ப்ரோத்ஸாஹப் படுத்துவதின் பொருட்டு யதாசக்தி ஸம்பாவனை செய்யவேண்டுமென்று ஸபையோரின் கருத்து. ஆகையால் ஸ்ரீவைஷ்ணவாபிமானிகளும் ஏராளமாய்ச் சேர்ந்து இந்த ஸமூஹகைங்கர்யத்தைச் சிறப்பாகத் தலைக்கட்டி வைக்கும்படி பிரார்த்திக்கப்படுகிறது. ஒவ்வொரு மெம்பரும் ஒருவர் இருவரையாவது சேர்த்துக்கொடுக்கிறது என்ற த்ருடாபிஸந்தியை வைத்துக்கொண்டால் ஸபை நிரம்ப முன்னுக்கு வந்துவிடும்.

தீபிகைக்குத் தெலுங்கு பாஷையில் ஸரியான தர்ஜமாய் ஒரு பிரதி பிரசுரம்செய்ய யத்னம்செய்யப்பட்டு வரப்படுகிறது. இதைப் பகவான் ஸபலமாக்கவேண்டும்.

மெம்பர்கள்.	வருஷாரம்பத்தில்.	முடிவில்.
முதல் வகுப்பினர்	58	82
இரண்டாம் வகுப்பினர்	285	401
சாச்வத மெம்பர்கள்	1	1
ஆனரெரி மெம்பர்கள்	7	7
ஆக மொத்தம்	351	491

மேல் குறிக்கப்பட்ட மெம்பர்களைத்தவிர மடாதிபதிகள் முதலியவர்களுக்கும், பாடசாலைகளுக்கும் தீபிகை இனாமாக அனுப்பப்படுகிறது. சில பத்ரிகைகளுக்கு மாறுதலாகவும் தீபிகை அனுப்பப்படுகிறது.

ஸிகர்ட்டெரி வேலையை ஒப்புக்கொண்டதும் மெம்பர்கள் நிரம்பவும் ஸ்வல்பமாயிருப்பதைக்கண்டு ஸ்நேஹிதர்களுக்கு அங்கங்கே எழுதிச்சேரும்படி ப்ரோத்ஸாஹப்படுத்தினதின்பேரில் ஸுமார் 60-பேர்களும், அவருடைய சொந்தக்கார்யமாய்த் தெற்குப்பக்கம் ஸஞ்சாரம் போன ஸமயத்தில் புதுக்கோட்டை ப்ராந்தத்தில் ஸுமார் 20-பேர்களும், ஸ்ரீரங்கத்தில் 62-பேர்களும், மெம்பர்களாகச் சேர்த்துவந்தார்.

ஸ்ரீரங்கத்தில் அவருக்கு ஸஹாயமாயிருந்து தங்களுடைய ச்ரமத்தைப்பாராமல் வீடுவீடாக அலைந்து உபகரித்த ஸ்ரீமான் S. P. விஜயராகவாசாரியர், ஸ்ரீமான் S. க்ருஷ்ணசாமி அய்யங்கார் ஸ்வாமிக்கும் ஸபையின் வந்தனம் ஸமர்ப்பிக்கப்படுகிறது. ஸ்ரீ அஹோபிலமட ஸ்வாமி ஸந்நிதிக்கும் வானமாமலை மட ஸ்வாமி ஸந்நிதிக்கும் ஒவ்வொருவரும் தங்களுடைய மடங்களுக்கும் வித்வத் ஸம்மானமாகவும் விநியோகிக்கும்படி நூறு நூறு காபிகளாவது வாங்கி உபகரிக்கும்படி ப்ரார்த்தனாபத்ரங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்த ஸந்நிதிகளிலிருந்து அனுகூலமான ஸ்ரீமுகத்தைக் கூடிய சீக்ரத்தில் எதிர் பார்க்கிறோம். ஸ்ரீரங்கத்தில் பரமஹம்ஸ பரிவ்ராஜகேத்யாதியாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீபௌண்டரீகபுரம், ஸ்ரீதேரெழுந்தூர் ஸ்வாமி ஸந்நிதிகளிலும் மெம்பர்களைச் சேர்த்துக்கொடுக்கும்படி ப்ரார்த்தித்து அவர்களும் அப்படியே ஆகட்டும் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் அங்கங்கே மெம்பர்களைச் சேர்க்க திட்டம் செய்திருக்கிறார். சேலத்தில் அநேகம்பெயர்களை மெம்பர்களாகச் சேர்த்து உதவிபுரியும் ஸ்ரீமான் வி. என். செல்லமய்யங்காருக்கும், ஸ்ரீவைகுண்டத்தில் அநேகம்பெயர்களைச் சேர்த்துக் கொடுத்துவரும் ஸ்ரீ. உப. தேசிகாசார்யர்ஸ்வாமிக்கும் ஸபையின் வந்தனம் சொல்லத்தக்கது.

ஆனரரிமெம்பர்கள்:—இந்த ஸபைக்கு ஆனரரிமெம்பர்கள் ஏழு ஸ்வாமிகள் உண்டு. இவர்களுக்குள் பண்டிதபூஷணம் சேட்டலூர் வித்வான் நரஸிம்மாசார்யஸ்வாமி, தமக்கு க்ரந்த ரசனம், பாடப்ரவசனம், காலக்ஷேபங்கள் உபந்யாஸங்கள் எவ்வளவோ இருந்தபோதிலும் தம்முடைய தேஹ ச்ரமத்தைக் கவனியாமல் அநந்ய ப்ரயோஜனராய் இந்த ஸபையின் க்ஷேமத்தை உத்தேசித்துத் தீபிகைக்கு விஷயப்ரதானம் செய்தும், ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களுக்குத் தமிழில் மொழி பெயர்த்துக்கொடுத்தும், தர்மசாஸ்த்ர சோத்யங்களுக்கு ஸமாதானங் கண்டு சொல்லியும், இன்னும் கார்யதர்சி பத்ராதிபர் இவர்களுக்கு உண்டாகும் ஸந்தேஹம், அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கும் அப்போதைக்கப்போது ஸமாதானம் சொல்லியும், நிர்வாஹ கமிட்டியில் எல்லாக்கூட்டத்துக்கும் ஆஜராகித் தன்னுடைய அபிப்ராயத்தைத்தெரிவித்து, கார்யங்களை ஒழுங்காக நடத்திவரும்படி செய்துகொண்டும் உபகரித்துவருகிறார். புத்தங்கோட்டகம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமியும், காரப்பங்காடு ஸ்ரீ. உப. சிங்கப்பெருமாள் ஸ்வாமியும் தங்களுக்கு எவ்வளவோ கார்யங்களிருந்தபோதிலும் விஷயப்ரதானம் செய்து உபகரித்துவருகிறார்கள். இஞ்சிமேடுஸ்ரீ. உப. ரங்கநாதாசார்யஸ்வாமி, மஹாமஹோபாத்யாயர் கபிஸ்தலம் ஸ்ரீ. உப. தேசிகாசார்யஸ்வாமி, கோஷ்டீபுரம் ஸ்ரீ. உப. ஸௌம்யநாராயணாசார்யஸ்வாமி, ஸ்ரீமுஷ்ணம் ஸ்வாமி இவர்கள் அநுக்ராஹகர்களாயிருந்து வருகிறார்கள். இந்தஸ்வாமிகள் எல்லோரும் நமது வார்ஷிக மஹாஸங்கத்தில் அந்வயித்து ஸபையை கௌரவப்படுத்தி வருகிறார்கள்.

நிர்வாஹ சமிட்டி. இவ்வருஷம் ஸ்ரீ. உப. வாஸுதேவாசாரியர் கமிட்டியை விட்டு விலகிக்கொண்டார். கமிட்டி இந்தவருஷத்தில் 9 கூட்டம்கூடி ஸபையின்கணக்குக்களைப் பரிசீலித்து ஸபையின் கார்யங்களின் நடத்தவேண்டிய முறைமையை யோஜித்து நடத்திவந்தார்கள்.

உபந்யாஸங்கள். பிரதி மீ சென்னையில் கடைசி சனி ஞாயிற்றுக்கிழமைகளில் ப்ரஸித்தர்களான பண்டிதர்களைக்கொண்டு உபந்யாஸம் செய்விக்க ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது. ஒவ்வொருமாஸத்திய உபந்யாஸத்துக்கு ரூ 135 ஆகும். இதைக் கொடுத்து உபகரிக்க ஸ்ரீமான் திவான்பஹதூர் நம்பெருமாள் செட்டியாரும், ஸ்ரீ.உப.வி.வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார்ஸ்வாமியும் முன்வந்து முறையே ஒவ்வொருமாதத்துக்கும் வேண்டியத்ரவ்யஸஹாயம் செய்வதாய் வாக்களித் திருக்கிறார்கள். இப்படியே இன்னும்சில ப்ரபுக்களுடைய ஸஹாயம் கிடைத்தவுடன் உபந்யாஸம் ஆரம்பிக்கப்படும்.

வெளியூர்களிலும் ஒருபண்டிதரை நியமித்து அவரை ஸஞ்சாரம் செய்யும்படி செய்து அங்கங்கு நமது மதம் ஆசாரம் முதலியவைகளின் ஸ்வரூபத்தையும் பெருமையையும் எடுத்துக்காட்டி உபந்யாஸங்களைச் செய்யும்படி ஏற்

பாடு செய்யவேணும்என்று ஸபையால் ஒரு தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு த்ரவ்ய ஸஹாயம் வேண்டியிருப்பதால் அதற்குவேண்டிய ப்ரயத்னங்கள் நடந்துவருகின்றன.

ஆச்ரமம். மேலப்பாளயம் ஸ்ரீ. உப.எம். ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார்ஸ்வாமி வைஷ்ணவ ஸித்தாந்தத்துக்கு வெகுஉதவிசெய்து வருகிறார், இவர் நமது ஸபையின்மூலமாக ஒரு ஆச்ரமத்தை ஏற்படுத்தி அதில்ஜ்ஞாநாநுஷ்டானஸம்பந்நரான ஒருஸ்வாமியை எழுந்தருளப்பண்ணி அவர் மூலமாக ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாய ப்ரவசனத்தைச் செய்விக்கவேணும் என்றும் அதற்குத்தான் ரூ 1500 மூலதனமாகக் கொடுப்பதாகவும் எழுதிஇருக்கிறார். இவருடைய அபிப்ராயம் வெகு நல்லதானாலும், அது வெகு த்ரவ்ய ஸாத்யமானதாகையால் இன்னும் இதேமாதிரி த்ரவ்யஸஹாயம் கிடைக்கும்வரையில், அந்த ஸ்வாமி ஸமர்ப்பிப்பதாகச் சொல்லும் த்ரவ்யத்தை மூலதனமாகவைத்து அதின்வருத்யம்சத்திலிருந்து ஸ்ரீபாஷ்யகாரரின் ஸம்பரதாயத்தில் அந்தந்தவருஷம் பரிச்ரமப்படுவர் என்று நிஷ்கர்ஷிக்கப்படும் ஒருஸ்வாமிக்கு அந்தத்தொகையில் ரூ 50. பாரிதோஷிகமாகவும் மீதத்தை ஒரு மெடலாக அந்த ஸ்வாமியின் பெயரால் கொடுக்கலாம் என்றும் ஸபையின் நிர்வாஹ கமிட்டியார் தீர்மானித்தார்கள். அந்த ஸ்வாமிக்கு இந்தத் தீர்மானம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ. உப. டில்லி ராவ்ஸாஹிப் ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமியின் பண்டு.

இங்கிலீஷில் பாதிரிமார்கள் தங்கள் மதக்கொள்கைகளைப் பரவச்செய்யும்பொருட்டுச் சிறு பத்ரிகைகளை அச்சிட்டு எங்கும் விநியோகித்துத் தங்கள் மதத்தைப் பரவச்செய்வதுபோல் நமது ஸபையும் ஸ்ரீவைஷ்ணவர்களின் தத்கால நிலையைச் சீர்திருத்தி அவருடைய தீனஸ்திதியை நிவிர்த்திக்கும் பொருட்டுச் சிறு சிறு பத்ரிகைகளை அச்சிட்டு எங்கும் விநியோகிக்க வேணும் என்ற அபிப்ராயத்துடன் ஒருபண்டு ஏற்படுத்தி இருக்கிறார். இதற்காகச் சென்றவருஷம் அச்சிட்ட 4000-பத்ரிகைகள் இவ்வருஷத்தில் அங்கங்கே ஆப்தர்களைக்கொண்டு தமிழ் ஜில்லாமுழுவதிலும் விநியோகிக்கப்பட்டன. அதுபோலவே இன்னும் துண்டுபத்ரிகைகளும் காலக்ரமேணபோட்டுப் பிரசுரம் செய்யப்படும்.

ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் ஸம்மானம்.

1921—22-வருஷத்திய இந்த ஸம்மானம் ரூ. 15-ம், லக்ஷ்மீதத்வத்தைப் பற்றி எழுதி அனுப்பிக்கப்பட்ட வியாஸங்களில் சிலாக்யமென்று தீர்மானிக்கப்பட்டதை எழுதின ஸ்ரீ. உப. காடந்தேத்தி கோபாலாசாரியருக்குக் கொடுப்பட்டது.

கிளைஸபைகள். சேலத்திலும் நாகப்பட்டணத்திலும் அங்கிருக்கும் ஆஸ்திகர்கள் ஒன்று கூடிக் கிளை ஸபைகளை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

வரவு செலவு கணக்கு.

வரவு.	ரூ.	அ.	பை.
சென்றவருஷ இருப்பு	563	3	6
வருஷ சந்தா வரவு	1240	6	0
மறுபதிப்பு விற்ற வரவு	5	12	0
தீபிகை சாச்வத பண்டுக்கு	39	0	0
டில்லி ஸ்ரீநிவாஸ் அய்யங்கார் பண்டுக்கு	100	0	0
வித்வத் ஸதஸ்ஸுக்கு வரவு	51	0	0
உபந்யாஸ ஸம்மானத்துக்கு	39	0	0
ஸ்டோரில் போடப்பட்டிருக்கும் பணத்துக்கு 30-6-23 முடிய வட்டிவரவு	11	15	2
சில்லரை	13	14	0
மொத்தம்	2064	2	8

செலவு.	ரூ.	அ.	பை.
அச்சிடக்கூலி	652	3	0
காகிதம்	303	14	0
தபால் சார்ஜு	159	0	6
வித்வத்ஸதஸ்ஸுக்கு	63	5	3
ஸாதல்வார்	27	6	6
சில்லரைச் செலவு	49	9	6
ஆதிவண்சடகோப ஸ்வாமி ஸம்மானம்	15	0	0
பிரயாணச்செலவு	3	0	0
மொத்தம்	1273	6	9

பாக்கி கை இருப்பு 790 11 11.

இதன்விவரம்.	ரூ.	அ.	பை.
சாச்வத பண்டு	200	0	0
டில்லி ஸ்வாமி பண்டு	172	13	0
உபந்யாஸ ஸம்மானம் பண்டு	24	0	0
தீபிகை பண்டு	393	14	11

கணக்கு பரிசோதனை. இந்த வருஷத்தின் கணக்குக்களைப் பரிசோதிக்க ஸ்ரீமான் K. R. ராமானுஜ அய்யங்காரையும், ஸ்ரீமான் N. V. ராமானுஜாசாரியரையும் கேட்டுக்கொள்ளும்படி கமிட்டியில் தீர்மானம் செய்ததின் பிரகாரம் அவ்விருவர்களையும் பிரார்த்தித்து அவர்கள் கணக்குக்களைப் பரிசோதித்து அவ்விருவர்களுடைய ரிபோர்ட்டும் இத்துடன் அச்சிடப்பட்டிருக்கிறது.

S. கோபாலஸ்வாமி அய்யங்கார்,
ஆர். ஸ்ரீநிவாஸராகவ அய்யங்கார்,
கார்யதர்சிகள்.

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் கார்யதர்சிக்கு,

ஐயா,

எக்ஸிகியூடிவ் கம்மிட்டியின் வேண்டுகோளுக்கு இணங்கிச் சென்றசெப்டம்பர்மீ 30௳ முடிந்த ஸபையின் 1922—1923 ௵த்திய கணக்கை பரிசோதித்தேன். என்னுடையஅபிப்ராயத்தை இதில் தெரிவிக்கிறேன். 1922௵ டிசம்பர்மீ முடியக் கார்யதர்சியால் வைக்கப்பட்டிருந்த க்ரெடிட் டெபிட் ஸ்லிப்களை கணக்குடன்ஒத்துப்பார்த்தேன். ஜனவரிமீ 1௳ முதல் அந்த ஸ்லிப் க்ரமமானது நிறுத்திவிடப்பட்டபடியால்,வவுச்சர்களைக்கொண்டுகணக்குக்களைப் பரிசோதித்தேன். கணக்குக்களும் வவுச்சர்களும் ஸரியாகவே வைக்கப்பட்டிருப்பதும் மீதத்தை திருவல்லிக்கேணி கோஆபரேடிவ்ஸொஸயடியில் போடப்பட்டிருப்பது எனக்கு த்ருப்திகரமாக இருக்கிறது. கோவாபரேடிவ் ஸொஸயிடியில் பணத்தைப் போட்டு வைத்திருப்பதால் ஸபைக்கு சென்ற ஜூன்மீ முடிய அரை வருஷத்துக்கு ரூ. 11—15—2 லாபம் கிடைத்திருக்கிறது. இப்படிச் செய்தது மிகவும் ஸரியானது. மேலும் ஸபையின் ஐவீஜும் பந்தோபஸ்தாய்விட்டது. கார்யதர்சி எனக்கு கணக்குக்களை பரிசீலனம் செய்வதற்கு கணக்குப் புஸ்தகம் முதலியவற்றைக் கொடுத்து வேண்டிய ஸௌகர்யம் செய்து கொடுத்ததற்கு அவருக்கு என்னுடைய வந்தனத்தை அளிக்கிறேன்.

புரசைவாக்கம்.
18—10—23. } ஒப்பம் K. R. ராமானுஜ அய்யங்கார்.

நான் முழுமையும் அங்கீகரிக்கிறேன்,

N. V. ராமானுஜாசாரியார்.

ஆடிட்டர்கள்.

Appendix A.

பன்னிரண்டாவது வார்ஷிக மஹாஸங்கத்தின்

வரவு செலவு ஜாப்தா.

RECEIPTS.

December 1922.

4	Mr. M. V. Desikachariar	10	0	0
6	Rao Bahadur T. Namberumal Chettiar	100	0	0
8	Diwan Bahadur Govinda Doss Chaturbhuja Doss	25	0	0
	Messrs. Ummidi Ramiah Chetty & Bros	10	0	0
9	Mr. D. Sundaravaradachariar	5	0	0
13	Mr. K. V. Srinivasa Raghavachariar	10	0	0
11	Mr. K. Govindachariar	10	0	0
12	Mr. R. Namberumal Chettiar	50	0	0
12	Mr. V. Rajagopalachariar	25	0	0
15	Mr. V. Alwar Chettiar, Hoe & Co.,	100	0	0
16	Mr. A Gopalasawmy Iyengar	10	0	0
	Mr. P. Balakrishna Mudaliar	10	0	0
19	Mr. V. Ranganatham Chettiar	100	0	0
	Mr. K. Narasimhachariar	10	0	0
	Sri Vijaya c/o Krishnamachariar Irulappan Street	10	0	0
20	Mr. Tatha Chellappella Chettiar	15	0	0
	Mr. Tatha Ravenesha Chettiar	10	0	0
	Mr. K. Lakshiminarayana Chettiar	10	0	0
21	Mr. T. Krishnaswami Iyengar	10	0	0
22	Mr. Puthur Ayyanna Chetti Garu	15	0	0
	Mr. Tata Nagiah Chetti Garu	25	0	0
	Mr. Reddiar of Cuddalore	25	0	0
	Mr. T. Narasimha Iyengar of Triplicane	25	0	0
	Mr. C. Kolandavelu Mudaliar	10	0	0
	Mr. C. Narayanasawmy Mudaliar of S. K. P. D.	10	0	0
	Mr. M. V. Kuppusawmi Iyengar	10	0	0
	Mr. M. A. Nathamuni Chettiar	100	0	0
24	Mr. V. V. Srinivasa Iyengar	100	0	0
	Rao Bahadur T. Rangachariar	100	0	0
25.	Mr. P. Rangiah Chetty & Sons,	50	0	0
	Mr. C. S. Venkata Chariar	25	0	0
	Mr. P. N. Krishnaswami Iyengar, Coimbatore	15	0	0
	Mess. K. M. Subbaayyar & Sons	50	0	0

	„ K. M. Subbarayalu Iyer & Sons	25	0	0
	„ T. R. N. R. Gopala ayyar & Sons	20	0	0
	„ S. A. Subba ayyar & Co	20	0	0
	Mr. P. V. K. Balakrishna Aiyar	10	0	0
	Mr. Rama Naickar	10	0	0
	Mr. Tangavelu Chettiar	5	0	0
	Mr. A. R. Chakrapani Chettiar	10	0	0
	Mr. C. Venkatarangam Chetty Garu	20	0	0
	Messrs. Krishna & Co, China Bazaar Road	10	0	0
	Mr. Gokul Doss Jamna Doss	20	0	0
	Mr. Chaturbuja Doss Paramananda Doss	25	0	0
	Mr. Sami Venkatachallam Chetty	15	0	0
	Mr. Manali Mudaliar and Bros	200	0	0
	Mr. A. R. Doraiswami Iyengar	50	0	0
	Mr. M. O. Parthasarathy Iyengar	10	0	0
	Mr. C. Doraiswami Iyengar	10	0	0
	Mr. S. Raghavachariar	10	0	0
	Mr. C. Padmanabha Iyengar, Mylapore	10	0	0
	Mr. K. S. Desikachariar H. C. V.	5	0	0
	Mr. S. Rangachariar, Vakil, Mylapore	5	0	0
	Mr. N. Rajagopalahcariar, Mylapore	5	0	0
	Mr. Gunupudi Subramanya Chetty Garu	10	0	0
	Mr. T. E. Ethiraja Mudaliar Vakil	10	0	0
	Mr. K. V. Sesha Iyengar	5	0	0
	Mr. T. E. Satagopachariar, Cuddalore	10	0	0
27	Rao Bahadur Bunchulal Ameerchand	25	0	0
	Mr. Harsook Doss Chungann Lall	25	0	0
	Mr. Giridhar Doss Narayan Doss	25	0	0
	Mr. M. Ramgopal Chaudari	10	0	0
	Mr. Murali Doss Ram Doss	10	0	0
	Mr. M. Duraiswami Iyengar	10	0	0
	Dr. N. V. Srinivasachariar	10	0	0
	Mr. Mantra Aswatha Narayana Chetti	10	0	0
	Mr. T. Udayavarulu Chetti	50	0	0
	Mesrs. Seshadriayyangar & Sons	7	0	0
	Mr. Ramanujachariar	10	0	0
	Dewan Bahadur, P. Paramkusa Naidu	25	0	0
	Dewan Bahadur. T. Vijayaraghachariar	10	0	0
	Rao Bahadur. V. T. Krishnamachariar	10	0	0
	Mr. Nath Alwar Chettiar	25	0	0
	Mr. K. T. Bhashyam Naidu	10	0	0
	Pandit. M. Duraiswami Ayyangar	5	0	0

	Mr. P. Anantachariar	10	0	0
	Mr. S. Sundararaja Ayyangar, Mylapore	5	0	0
28	Mr. T. A. Narasimhachariar	5	0	0
	Mr. V. S. Govindachariar, Vakil	10	0	0
	Mr. Seshachala Chettiar, Mylapore	10	0	0
	Mr. Ethindrulu Chetty Charities	100	0	0
	Mr. S. Varadachariar, Vakil, Mylapore	25	0	0
	Mr. B. K. Garudachariar, Bangalore	10	0	0
	From the Secretary Sri Vaishnava Siddhanta Sabha	56	0	3
	Mr. K. S. Krishnaswami Ayyangar, Triplicane	10	0	0
	Mr. A. S. Chellam Ayyangar	5	0	0
	Mr. Parthasarathy Ayyangar, Amildar	10	0	0
	Meessrs. V. Kanakiah Chetty and Co.	50	0	0
29	M. Ramanujam Chettiar	15	0	0
Feb 3	Mr. Ravaniah Chetty, Mint Street	25	0	0
6	Mr. K. Venkataraghavan, Vakil	10	0	0
	R. V. Krishnamachariar, Kumbakonam	10	0	0
9	M. G. Venkatranga Rao Triplicane	10	0	0
10	Mr. T. M. Ranganatham Naidu	5	0	0
	Mr. T. M. Gajapati Naidu Purasawalkam	25	0	0
15	Mr. C. Rangiah Chettiar	15	0	0
Feb 12.	Mr. C. T. Alwar Chettiar	10	0	0
Sale of 1.	Rice bag through Mr. N. Srinivasachariar	18	0	0
	By small Collections	46	0	0
	Mr. T. Namberumal Chettiar Prize Essay	15	0	0
	Rs	2422	0	3

EXPENDITURE.

Vidvat Sambhavana	1445	12	0
Prize Essay	15	0	0
Travelling allowance to Pandits	77	12	0
Postage Charges	30	5	0
Telegram Charges	74	10	0
Printing Charges	106	8	9
Other Expenses	369	1	9
Rs	2109	0	0

T. Tiruvenkatachariar.